# அறிவின் எல்லை

1



385

006

பெரியார் ஈ. வெ. ரா.

இரண்டாம் பதிப்பு.
நவ. 1950.

★

## இதனுள்!


| | | |
|---|---|---|
| 1. | சீர்திருத்தம் | 3 |
| 2 | இலங்கை உபந்யாசம் | 59 |
| 3. | மெட்டீரியலிஸம் | 90 |
| 4. | திராவிடர் ஆரியர் உண்மை | 154 |
| 5. | தமிழ்நாடு தமிழருக்கே | 172 |
| 6. | தமிழர்கள் | 222 |
| 7. | தமிழ் இசை | 243 |
| 8. | இனிவரும் உலகம் | 264 |
| 9. | இராமாயணப் பாத்திரங்கள் | 283 |


★

விலை I-8-0.

# அறிவின் எல்லை

★

## 1. சீர்திருத்தம்.

இஃது

26—11—28-ல் சென்னையில் நடந்த தென்னிந்திய
சீர்திருத்தக்காரர்கள் மாநாட்டில் தலைமை வகித்த
பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள்
நிகழ்த்திய தலைமைப் பேருரையும்,
முடிவுரையும், தீர்மானங்களும்,
மற்ற நடவடிக்கைகளும்
சேர்ந்தது.

★

"விடுதலை" வெளியீடு

சென்னை-2.

1949.

26—11—28-ல் நடந்த

# தென்னிந்திய சீர்திருத்த மாநாடு.

மாநாட்டுத் தலைவர்:

பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள்

வரவேற்புக் கழகத் தலைவர்:

திவான்பகதூர் எம். கே. ரெட்டி அவர்கள்

மாநாட்டுக் கொடியேற்றியவர்:

திருமதி கமலாட்சி பண்டாலே அவர்கள்

மாநாட்டைத் திறந்து வைத்தவர்:

சென்னை அரசாங்க 2-வது மந்திரி

கனம் எஸ். முத்தைய முதலியார் C. I. E. அவர்கள்

மாநாட்டுக் காரியதரிசி:

சுரேந்திரநாத் ஆரியா அவர்கள்

தலைவரைப் பிரரேபித்தவர்:

முன்னாள் முதன்மந்திரி பனகால் ராஜா K.C.I.E. அவர்கள்

ஆமோதித்தவர்:

மாஜி மந்திரியும், ஆக்டிங் கவர்னராய் இருந்தவருமான

சர் கே. வி. ரெட்டி அவர்கள்

ஆதரித்தவர்கள்:

1. முதன் மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்கள்
2. திவான்பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார் அவர்கள்
3. இந்திய கவுன்சில் மெம்பர் திவான்பகதூர் ஏ. இராமசாமி முதலியார் அவர்கள்
4. ராவ்சாகிப் என். சிவராஜ் அவர்கள்
5. ரெவரண்ட் ஜான் பிட்மன் முதலியவர்கள்.

# 1. சீர்திருத்தம்

—:o:—

## மாநாட்டுத் தலைவர்

## பெரியார் ஈ. வெ. ரா. தலைமைப் பிரசங்கம்

---

சகோதரிகளே! சகோதரர்களே!

இம்மாநாடு சீர்திருத்தக்காரர்கள் மாநாடு என்று சொல்லப்படுகிறது. எனவே இத்தகைய ஒரு மாநாட்டுக்கு சமூக சீர்திருத்தத்தில் மிகுதியும் நம்பிக்கையுள்ள ஒருவரை தலைவராக தெரிந்தெடுத்திருந்திருப்பீர்களானால் அது மிகவும் பொருத்தமுடையதாக இருந்திருக்கும் என்று நான் சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனெனில் வரவர எனக்கு சமூக சீர்திருத்தம் என்பதில் உள்ள நம்பிக்கை மறைந்துகொண்டே போகின்றது. அன்றியும் நமது நாட்டை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்பவர்களுக்கும், நமது நாட்டுப்பெரும்பான்மையான மக்களுக்கு சுயமரியாதையும், சமத்துவமும், விடுதலையும் உண்டாக்கச் செய்ய வேண்டும் என்பவர்களுக்கும் எதிரில் இருக்கும் வேலை சீர்திருத்த வேலை அல்ல என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம். மற்றென்னையெனில் உறுதியும் தைரியமும் கொண்ட அழிவு வேலையே ஆகும். அளவுக்கு மீறின பொறுமை கொண்ட யோசனையின்மீதே நான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறேன்.

உதாரணமாக ஒரு பெரிய கிணறு (குளம்) இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள்; அந்தக் கிணற்றிற்கு மிகப் பழமை

யானதும் பெருமையானதுமான ஒரு புராணம் இருப்பதாக வே வைத்துக்கொள்ளுங்கள்; அதாவது அந்த கிணற்றுத் தண்ணீரில் ஒருதுளி தண்ணீரை சாப்பிடுவதனாலோ, அல்லது மே[illegible] தெளித்துக்கொள்வதினாலோ அல்லது ஸ்நானம் செய் வத[illegible]லோ நம்முடைய எல்லா "பாவமும்" "மகா பாதகமான கரி[illegible]ம் என்று சொல்லப்பட்ட செய்கைகளைச் செய்த பாவ மும் மன்னிக்கப்படுவதுடன் "மோட்சலோகம்" என்பது கூட கிடைக்கும் என்று எழுதி இருப்பதாகவே வைத்துக் கொள்ளுங்கள். ஆனால்இப்போது அந்தக் குளத்துத் தண் ணீரில் ஒரு சிறிது சாப்பிட்டால் விஷபேதி காணக்கூடியதாக வும் அதில் ஸ்நானம் செய்தால் சரீரமெல்லாம் சொறி, சிறங்கு ஊறல் வருவதாகவும்இருந்தால் அதற்காக நாம் என்ன செய் வோம்? முதலில் "அந்தத் தண்ணீரில் விஷப்பூச்சிகள் உண் டாகி தண்ணீரைக் கெடுத்துவிட்டது" என்று கருதி அந்த விஷப் பூச்சிகள் சாகத்தக்க மருந்தை அந்தக் கிணற்றுக்குள் போடுவோம். அப்படிப்போட்ட பிறகும் அந்தத் தண்ணீரின் குணம் அப்படியே முன்போலவே இருக்குமானால் மேற் கொண்டு என்ன செய்வோம்? போட்டமருந்துக்குக் கட்டுப் படாத அளவு கெடுதி அந்தத் தண்ணீரில் உண்டாய்விட்ட தாகக் கருதி அந்தக் கிணற்றுத் தண்ணீர் முழுவதையும் இறைத்து வெளியில்கொட்டி அந்தக் கிணற்றையும் நன்றாய்க் கழுவி விடுவோம். அந்தப்படி செய்தபிறகும் மறுபடியும் அந்தத் தண்ணீரின்குணம் முன் இருந்தபடியே இருக்கு மானால் அதனுடைய காரணம் என்னமாயிருக்கும்? அந்தக் கிணற்றுக்குத் தண்ணீர் வரும் ஊற்றே விஷத்தன்மை பொருந் தியது என்றும் அதனால் அந்தக் கிணறே விஷநீர் ஊற்றுக் கிணறு என்றும்தானே ஏற்படும்?

எனவே அப்படிப்பட்ட விஷநீர் ஊற்றுக் கிணற்றை இ[illegible]லையில் நீங்கள் என்ன செய்வீர்கள்? பழைய புராணத்தை[illegible]யும் அதில் உள்ள அந்தக் கிணற்றுப் பெருமையையும் ம[illegible]ந்து, அதிலேயே குளித்து, அந்த நீரையையே சாப்பிட்டு

விஷபேதியையும், சொறி சிறங்கையும் அடைந்துகொண்டிருப்பீர்களா? அல்லது அந்தக் கிணற்றை குப்பையையும் மண்ணையும் கொட்டி மூடித் தரைமட்டப்படுத்திவிடுவீர்களா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

ஆகவே மருந்து போட்டுத் தண்ணீரை சுத்தம் செய்வதும், தண்ணீர் பூராவையும் இறைத்து கிணற்றைக் கழுவுவதும் சீர்திருத்த வேலையாகும். அடுத்தபடியாக அக்கிணற்றை மண்ணைப்போட்டு நிரவி மூடிவிடுவது என்பது அழிவு வேலையாகும். இந்த முறையில்தான் நான் ஒரு அழிவு வேலைக்காரன் என்பதாகத் தெரிவித்துக்கொண்டேன்.

ஏனெனில் நமது நாட்டைப் பொறுத்தவரையில் சமூக சீர்திருத்தம் என்பதெல்லாம் செய்து பார்த்தாய்விட்டது. நான் பார்த்தாய்விட்டது என்று சொல்வது, இப்போது நடைபெற்றுவரும் சமூக சீர்திருத்தம் என்பதைக் குறித்து மாத்திரமல்ல. ஏனெனில் இது உண்மையான சீர்திருத்தமல்ல. இப்போதைய சமூக சீர்திருத்தம் என்றுசொல்லப்படுபவைகளெல்லாம் படித்த கூட்டத்தாரும் பணக்காரர்களும் சுய நலத்தின் பொருட்டு பாமரர்களை ஏய்த்து அவர்களிடம் செல்வாக்குப் பெறுவதற்காக—தங்களில் ஒருவருக்கொருவர் போட்டி போடுவதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட அநேக சூழ்ச்சி ஆயுதங்களில் இதுவும் ஒன்றாகும். இது மேல் நாட்டாரைக்கண்டு பழகிய செய்கையாகும். இம்முறைகள் எல்லாம் சீர்திருத்தம் செய்யப்படவேண்டியவர்களுடைய நன்மையைக் கருதி கண்டுபிடிக்கப்பட்டதல்ல. சீர்திருத்தம் செய்பவர்கள் என்பவர்களுடைய சுயநலத்தை உத்தேசித்தே பெரிதும் கண்டுபிடிக்கப்பட்டவையாகும். எனினும் சீர்திருத்தம் பெறவேண்டிய மக்களும் இதை உண்மையாகவே நம்பி வந்திருக்கின்றார்கள். ஆனாலும் அதன் முடிவுகள் எல்லாம் மேலும் மேலும் மோசமான நிலைமைக்கே அதாவது இனிமேல் சுலபத்தில்

சீர்திருத்தம் செய்யமுடியாத நிலைமைக்கே சமூகத்தைக் கொண்டுபோய் விட்டுக்கொண்டிருக்கின்றன.

இதன் முக்கிய காரணம் என்னவெனில், எந்தக் கூட்டத்தாரால்—எந்த மனப்பான்மை உடையவர்களால் மக்கள் தங்களில் கெட்டு சீர்திருத்தம் அடையவேண்டிய நிலைமைக்கு வந்தார்களோ—யாருடைய எந்தக் கூட்டத்தாருடைய சுயநலத்திற்காக மக்கள் பெரிதும் நிலைகுலைந்து வாழ்வு கெட்டு வாழவேண்டியதாயிற்றோ, அந்த சுயநலக் கூட்டத்தார்களேதான் மிகுதியும் சீர்திருத்தம் செய்வது என்கின்ற துறையை உபயோகித்துப் பயன் பெற்று வந்திருக்கின்றார்கள். இனியும் அவர்களேதான் பெரும்பாலும் இத் துறையில் இருக்கின்றார்கள். ஆதலால் நான் வேறு எந்த சீர்திருத்தம் என்பதைச் சொல்லுகிறேனென்றால் சித்தர்கள் புத்தர்கள், திருவள்ளுவர், ராமானுஜர் என்கின்றவர்கள் முயற்சித்ததாகச் சொல்லப்படும் சீர்திருத்தங்களைப்பற்றியே சொல்லுகின்றேன். இவ்விரு கூட்டத்தாரின் முயற்சியாலும் தான் நான் நமது மக்களின் நிலை சீர்திருத்த முடியாத நிலையை அடைந்துவிட்டது என்று கூட சொல்லவேண்டியவனாய் இருக்கிறேன்.

## சீர்திருத்தம்

சமுதாய சீர்திருத்தம் (Social Reform) என்பது ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொரு மாதிரியாக இருக்கின்றது. உதாரணமாக மேல் நாடுகளில் எல்லாம் சமுதாய சீர்திருத்தம் என்பது அந்நாட்டில் வாழும் எல்லா மக்களையுமே பொறுத்ததாகும். அதாவது சீர்திருத்தம் செய்யப்படவேண்டிய சமூக பழக்க வழக்கம் முதலிய நடவடிக்கைகளும், அதன் பலா பலன்களும் அந்நாட்டு மக்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகவே பயன்படுபவைகளாக இருப்பவைகளாகும். நமது நாட்டிலோ அப்படிக்கு இன்றி பெரும்பாலும் சீர்திருத்

தம் செய்யப்படவேண்டியவைகள் என்று சொல்லப்படுபவை கள் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு வகையானதாகும்.

நமக்குள் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் சீர் திருத்தம் பொது மனித சமூகத்தில் மக்கள் பிறப்பின் காரண மாக உயர்வு தாழ்வு கற்பித்திருப்பதைப் பற்றியதாகும். இந்த முறை நமது இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு மோசமான கற்பனையின் மீது கையாளப்படுவதே இல்லை.

அடுத்தபடியானது வாழ்க்கையில் இருந்து வரும் பழக்க வழக்கம், மூடபக்தி, குருட்டு நம்பிக்கை ஆகியது போன்ற வகைகளைப்பற்றியதாகும். இவைகள் எல்லாம் நமது நாட் டில் விசேஷமாய் மதம், கடவுள், மோட்சம், நரகம் என்பவை களின் பெயர்களாலேயே—அவைகளை ஆதாரமாய் வைத்து நடைபெற்று வருகின்றன. என்றாலும் இவைகளை சீர் திருத்தம் செய்யவேண்டும் என்கிற கவலை வெகு காலத் திற்கு முன்னதாகவே ஏற்பட்டது என்று சொல்லலாம். அதாவது முன் குறிப்பிட்ட சித்தர், புத்தர், இராமானுஜர், திருவள்ளுவர் முதலிய பல பெரியோர்கள் காலத்திலேயே ஏற்பட்டதாகச் சொல்லலாம். ஆனாலும் மேற்கண்ட துறைகளில் அது முதல் இதுவரை சமூக சீர்திருத்தம் என்பதில் ஒரு சிறு காரியத்திலாவது வெற்றி ஏற்பட்டு அதுநமக்கு பயன்பட்டது என்று சொல்லு வதற்கு இல்லை. இப்போது எதிலாவது ஒரு சிறிதளவே னும் மாறுதல் ஏற்பட்டு இருக்கின்றது என்று யாராவது சொல்ல வருவார்களானால் அது வெளி நாடுகளில் நடை பெறும் சமூக சீர்திருத்தத்தின் சாரல் அல்லது வெளிநாட் டார் தங்கள் சுயநலத்திற்காகச் செய்யப்பட்ட திட்டங்களின் —வேலைகளின் பலன் என்றுதான் சொல்லவேண்டும். நம் நாட்டில் நம் நாட்டு மக்களால் நமது நாட்டு மக்களுக்கு வேண்டிய சமூக சீர்திருத்தம் என்பதில் இப்போதும் ஒரு சிறு அளவு கூட செய்வதற்கு சாத்தியமே

இல்லாமல் இருக்கிறது. ஏனெனில் அவற்றிற்குத் தடையாய் கடவுள் உணர்ச்சியும் மத உணர்ச்சியும் வேத சாஸ்திரங்களும் நிறுத்தப்பட்டு இருப்பதால் சுலபத்தில் முடியாததாய் இருக்கின்றது. அன்றியும் இன்றைய சமூகப்பிரிவும்—வாழ்வுமான நிலைகள் சில வகுப்பாரின் சுய நலத்துக்கு பயன் படுவதாயுமிருக்கிறது. எனவே இதுவரை செய்துவந்த சமூக சீர்திருத்த காரியங்கள் எல்லாம் பயன்படாமல் போனதற்குக் காரணம் இவைதான் என்றே சொல்லுவேன்.

இத்தடைகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் சமாதானம் சொல்ல வேண்டியவைகள் எல்லாம் சொல்லியாய் விட்டன. செய்ய வேண்டியவைகள் எல்லாம் செய்தும் ஆகிவிட்டன. அதாவது புத்தர், கபிலர், திருவள்ளுவர் சொன்னவைக்கு மேலாகவும், இராமானுஜர் செய்ததற்கு மேலாகவும் இனி ஒருவர் வந்து புதிய ஞானத்தை போதித்தோ புதிய காரியத்தைச் செய்தோ விடமுடியும் என்பது இலேசான காரியம் அல்ல. ஆகவே இவ்வளவு செய்தும் எவ்வளவோ பெரியவர்கள் முயற்சித்தும் இதுவரை ஒரு பலனும் ஏற்படாமல் போனதால்தான் இப்பொழுதும் சமூக சீர்திருத்தத்திற்கு முட்டுக்கட்டையாய் விரோதிகளாயிருப்பவர்கள் தங்களுடைய தடை வேலையில் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆனாலும் அப்போதைய நிலைமையும், சௌகரியமும், அரசாங்கமும் வேறு; இப்போதைய நிலைமையும் சௌகரியமும் அரசாங்கமும் வேறு என்பதான ஒரு சிறிய திருப்தியானது சமூக சீர்திருத்தக்காரர்களுக்கு அதிக நம்பிக்கை கொடுக்கக் கூடியதாயிருந்தாலும் கடவுள் உணர்ச்சியும், மத உணர்ச்சியும் ஒரு சிறிதும் மாறுபாடடையாமல் இருப்பதால் இந்த நிலையில் நமது நாட்டுச் சமுதாயத்திற்கு எவ்வித சீர்திருத்தம் என்பதும் முடியாதகாரியம் என்றே முடிவுகட்ட வேண்டியிருக்கிறது.

ஏனெனில் இந்த இரண்டு காரியமும் அதாவது மதம், கடவுள் என்பவைகள் மனிதனின் மூடபக்தியும், குருட்டு

நம்பிக்கையும் என்கிற அஸ்திவாரத்தின் மீதே கட்டப்பட்டிருக்கின்றன. ஏனெனில் குருட்டு நம்பிக்கையின் பயனாய் ஏற்பட்ட கடவுளிடத்தில் பொறுப்பை வைத்து பெரிதும் மூடபக்தியால் ஏற்பட்ட மத விதியை கொள்கைகளை வகுத்து வாழ்க்கையை நடத்துகின்றோம். இம்மூட பக்தியையும் குருட்டு நம்பிக்கையையும் ஒழிக்கவேண்டும் என்று சொல்லுவது சீர்திருத்த வேலையின் பாற்பட்டதாகுமா? அது ஆகவே ஆகாது. மற்றபடி மனித சமூகத்தின் நன்மைக்காக அழிக்கபடவேண்டியது ஒரு பெரிய அழிவு வேலையின் பாற்பட்டதாகும். ஏனெனில் அடியோடு அழித்து தரைமட்டமாக்கி புதுப்பிக்கவேண்டி இருக்கும் வேலை சீர்திருத்த வேலையாகாது. வேண்டுமானால் புனருத்தாரண வேலை (Reconstruction) என்று சொல்லலாம். அதாவது முதலில் அழித்து பின்னால் புதிதாய் நிர்மாணிப்பது என்பதாகும்.

இவ்வேலையில் ஈடுபடுபவர்களுக்கு மகத்தான மன உறுதியும் சந்தேகமற்ற தெளிவும் இருக்கவேண்டும். அஃதில்லாமல் ஆவேசத்தில் தலையிட்டுவிட்டால் தற்கொலையாகவே முடியும். ஏனெனில் பலமானதும், இடையறாததுமான எதிர்ப்புகளுக்கிடையே இவ்வேலை செய்யவேண்டி இருக்கிறது. காரணம் என்னவென்றால் வெகுகாலமாக மனித சமூக இருதயத்தில் கலந்து ஊறிவிட்டதும், இந்நிலை வெகு பேரினுடைய சுயநலத்திற்கு அனுகூலமாயிருப்பதும் ஆகிய இரண்டு காரணங்களாகும்.

ஆதலால் எந்த எந்தக் காரணங்களால் உண்மையான சீர்திருத்தம் வெற்றி பெறவில்லையோ, என்ன என்ன சாதனங்கள் அச் சீர்திருத்தத்திற்கு தடையோ அவைகளை வேருடன் அழிக்கத் தயாராயிருக்க வேண்டும். அவைகளில் ஒரு சிறு தாரையாவது கிளை வேரையாவது மீத்துவைத்துக் கொண்டு சீர்திருத்தம் செய்யலாமென்று எந்தவிதமான சீர்திருத்தக்காரர்கள் நினைத்தாலும் அவர்கள் ஒருக்காலமும் வெற்றிபெற மாட்டார்கள் என்பது எனதுறுதி.

நிற்க, சிலர் சொல்லுவதுபோல் சீர்திருத்தக்காரர்களுக்கு நிதானமும் சாந்தமும் அளவுக்கு மீறி வேண்டும் என்பதையும், வெறுப்பும் பிடிவாதமும் அடியோடு கூடாது என்பதையும் நான் ஒப்புக்கொள்ள முடியாது.

நான் இந்தப்படி சொல்லுவதால் அநேக "பெரியோர்"களுடைய அபிப்பிராயத்திற்கு முரண்பட்டவனாக பலருக்கு காணப்படலாம். ஆம், இவ்வித அபிப்பிராயங்களில் நான் நன்றாக முரண்பட்டவனாகத்தான் இருக்கின்றேன் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். மேற்கண்ட பெரியார்கள் என்று சொல்லப்பட்டவர்களின் பொறுமையையும் நிதானத்தையும் சாந்தத்தையும் துவேஷமற்ற தன்மையையும் நான் என் அறிவுக்கு எட்டியவரை கவனித்துப் பார்த்ததில் அவைகள் மிகுதியும் பயத்தாலும், ஒரு வித பலக்குறைவினாலும், சுய அபிமானத்தாலும் இவ்விஷயத்தில் உபயோகப்படுத்தப்பட்டவைகள் என்றே முடிவுகண்டேன்.

"அன்னியர்கள் நம்மை மதிக்கமாட்டார்களே, பழிப்பார்களே, எதிர்ப்பு பலமாய்விடுமே" என்கிற உலக அபிமானமும் பயமும் பலக்குறைவும் யாரிடத்தில் இருக்கிறதோ, அவர்கள் ஒருக்காலமும் உண்மையான சீர்திருத்தத்திற்கு உதவமாட்டார்கள். அக்குணங்களுடன் கூடியவர்களால் நடைபெறும் எவ்வித சீர்திருத்தமும் ஒரு காலமும் பயனளிக்கவே முடியாது.

மற்றும் சீர்திருத்தம் செய்பவர்கள் எவ்வித கட்டுபாட்டிற்கும் ஆளாயிருத்தல் கூடாது. சீர்திருத்தத்திற்கு விரோதமான கட்டுப்பாடுகளை எல்லாம் உடைத்தெறிவதைக் கைக்கொள்வதுதான் சீர்திருத்தத்திற்கு உண்மையான பாதையாகும். கட்டுப்பாடுகளுக்கு அடங்கிய சீர்திருத்தம் என்பது அதுவும் நம்நாட்டை பொறுத்தவரை சிறிதும் பயனற்றது.

நிதானமும், சாந்தமும், பொறுமையும் கட்டுப்பாடுங்கொண்டு வெறுப்பில்லாமலும் துவேஷமில்லாமலும் நல்லவார்த்

தையிலும், கூட்டுறவிலும் நயமாகவும், கெஞ்சியும் நமது நாட்டில் எத்தனை காலமாக சீர்திருத்த முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன? இதுவரை செய்து வந்த சீர்திருத்தங்கள் என்ன ஆயிற்று? இன்னும் எத்தனை நாளைக்கு இது போலவே பரீட்சைபார்ப்பது? என்கின்றதான விஷயங்களை யோசித்தால் மேற்கண்ட வார்த்தைகள் அதாவது நிதானம் சாந்தம் முதலியவைகள் சீர்திருத்தத்திற்கு விரோதிகளாயுள்ளவர்களிடம் மரியாதை பெறுவதற்காகவும், தங்களது சொந்த புகழுக்காகவும், பெருமைக்காகவும் பேசப்பட்ட வார்த்தைகள் அல்லது பலவீனத்தின் எதிரொலி என்றுதான் ஏற்படுமேயொழிய அவற்றில் வேறொன்றுமே யிருக்காது.

சிலர் இம்மாதிரியான நமது அபிப்பிராயத்திற்கு விரோதமாய் சில பெரியோர்கள் என்பவர்களான விவேகானந்தர், காந்தி முதலியோருடைய வார்த்தைகளை எடுத்துக் காட்டுவார்கள். இம்மாதிரியான அப் பெரியார்களுடைய வார்த்தைக்கு நான் முற்றும் முரண்பட்டவன் என்பதை நான் கண்ணியமாய் ஒப்புக்கொள்ளுகிறேன். காரணம் அவ் வார்த்தைகள் சொன்ன பெரியோர்களை சுவாமியாகவும், மகாத்மாவாகவும் மக்கள் கொண்டாடினார்கள்; கொண்டாடுகிறார்கள்; படம் வைத்து பூசிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவ்வார்த்தைகளால் சீர்திருத்தம் பெற வேண்டிய மக்கள் அடைந்த கதியென்ன? எந்த ஒரு அபிப்பிராயத்தையும் அதனால் ஏற்படும் பலனைக் கொண்டுதான் மதிக்கவேண்டுமேயொழிய வார்த்தையினுடைய இனிப்பைக் கொண்டும் செல்வாக்கைக்கொண்டும் மதிப்பது அறிவுடைமை ஆகாது என்று சொல்லுவேன்.

சீர்திருத்தம் வேண்டியவர்கள் இதுவரை காட்டின பொறுமையும், கெஞ்சின கெஞ்சும், பேசின இனிமையான வார்த்தையும், நிதானமும், சகிப்பும் போதாது என்று யாராவது சொல்ல முடியுமா? அல்லது மக்கள் படும் கஷ்டம், அவர்கள் அறிவு அடைந்த தன்மை, அதனால் நாடு கெட்ட

நிலைமை ஆகியவைகள் இப்பொறுமையினுடையவும், சாந்தத்தினுடையவும், கெஞ்சுவதனுடையவும் பரீட்சைக்கு போதாது என்றாவது யாராவது சொல்லமுடியுமா? எனவே பொறுமையும், சாந்தமும், சகிப்புத் தன்மையும் இவ் விஷயத்தில் காரியத்தின் அனுகூலத்தை உத்தேசித்து காட்டப்பட வேண்டியதே அல்லாமல், வெறும் "பொறுமைக்கும், சாந்தத்திற்கும் உருவாம்" என்கின்ற பெயர் பெறுவதற்கல்ல.

நிற்க, சிலர் "சீர்திருத்தம் செய்வதின் மூலம் பழைய சின்னங்களையும், ஓவியங்களையும், கலைகளையும் அழித்து விடாதீர்கள்" என்கின்றார்கள். இந்தக் கூட்டத்தார்கள் எந்த பழைய சின்னம், ஓவியம், கலை முதலியவைகளை மனதில் நினைத்துக்கொண்டு சொல்லுகிறார்களென்று நான் எண்ணியமாய் நினைக்கின்றேனோ, அந்தச் சின்னமும், ஓவியமும், கலைகளுமேதான் நம்மையும் நம் மக்களையும் நமது நாட்டையும் பாழாக்கியதுடன், ஒவ்வொரு அறிவாளி மனதிலும் சமுதாய சீர்திருத்தம் செய்தே தீரவேண்டும், இல்லாவிடில் வேறு எந்த விதத்திலும் நமக்கு கதி மோட்சமில்லை என்று நினைக்கும்படியான நிலைமைக்கு கொண்டுவந்து விட்டு விட்டன.

உதாரணமாக இராமானுசர், நாமத்தையும் பூணூலையும் பழைய சின்னம் என்பதாகக் கருதி, அதை வைத்துக் கொண்டு 'பறையன்' 'சக்கிலி' 'பள்ளன்' என்பவர்களையெல்லாம் பிடித்து, நாமமும் பூணூலும் போட்டு மக்களைச் சமத்துவமடையச் செய்வதென்பதான சீர்திருத்தங்களைச் செய்தார் என்பதாகச் சொல்லப்படுகின்றது. இதனால் பழைய சின்னம் காப்பாற்றப்பட்டதே தவிர, மக்களுக்கு சமத்துவம் கிடைத்ததா? சமத்துவ உணர்ச்சி உண்டாயிற்றா? நாமமும், பூணூலும் உடையவர்களுக்குள்ளாகவே உயர்வு தாழ்வும், அவைகள் இல்லாதவர்களை தாழ்மையாய் கருதுவதும் இன்றும் சூரியன் போல் துலங்குகின்றது. மற்றும்

பழைய சின்னங்கள் என்பதான கோவில்களை எடுத்துக் கொள்வோம். கோயில் என்றால் சர்வ சக்தியும், சர்வ வல்லமையும், சர்வ தயாபரத் தன்மையும் கொண்ட கடவுள் என்பவர் இருக்கும் இடம் என்றும், அவரை வணங்க வேண்டிய இடம் என்றும் சொல்லப்படுகின்றது. அவை மக்கள் சென்று வணங்கி உய்வதற்கே உண்டாக்கப்பட்ட தாகவும் சொல்லப்படுகின்றது. இப்படிச் சொல்லப்படும் கோயில்களின் நிலைமை என்ன? அதனால் மக்களுக்குப் பலன் என்ன? தற்காலம் என்ன காரியங்களின் கொடுமை கள் சகிக்கமாட்டாமல் சீர்திருத்தம் வேண்டும் என்று மக்கள் கருத இடம் கொடுத்ததோ, அந்தக் காரியங்களுக்கு எல்லாம் சர்வ சக்தியும், சர்வ வல்லமையும், சர்வ தயாபரத் தன்மை யும் கொண்டதான கடவுள் என்பது குடி இருப்பதாகச் சொல்லும் கோயில்களே காரணமாயிருக்கின்றன என்பதை யாராவது மறுக்க முடியுமா? விபசாரி குடிசையையும் கள்ளர் குகையையுமல்லவா கோவிலுக்கு ஒப்பிடப்ப டிருக்கிறது? பழைய ஓவியங்கள் என்பவைகளை எடுத்துக்கொண்டால் அவையும் உண்மையான சீர்திருத்தத்திற்கு எவ்வளவு தடை யாய் இருக்கின்றன என்பது விளங்காமல் போகாது. அது போலவே பழைய கலைகள் என்பவைகளை எடுத்துக்கொண் டால் அதுவே ஒரு பெரிய மலையாக இருக்கும்.

உதாரணமாக வேதம் என்றும், சாஸ்திரம் என்றும், புராணம் என்றும் சொல்லப்படுவனவாகிய "மனிதவர்க்கத் தின் வாழ்க்கை நலத்திற்கு இலக்காக உண்டாக்கப்பட்டது" என்று சொல்லும்படியான மத ஆதாரங்களும், அவைகளுள் முக்கிய கலைகளாகக் கொண்டாடப்படும் பல புராணங் களும், கடவுள்களின் அவதாரங்களின் நடப்புகள் என்று சொல்லப்படும் இதிகாசங்களும், இது வரை மக்களுக்கு என்ன நன்மையைக் கொடுத்து வந்திருக்கின்றன என்று யோசித்துப்பாருங்கள். அதிலும் தென்னிந்திய வாசிகளும், அவர்களுள் சிறந்த பண்டிதர்கள் என்பவர்களும், பக்தி விசு வாசத்துடனும் கலா ஞானத்துடனும் கொண்டாடும் புராணங்

கள், இதிகாசங்களாகிய பாரதம், இராமாயணம், சிவபுராணம், விஷ்ணு புராணம், பெரிய புராணம் திருவிளையாடல் புராணம் என்பவைகள் போன்ற கலைகளால் இது வரை மக்களுக்கு ஏற்பட்ட பலன் என்ன? அவைகளில் காணப்படாத மனித தத்துவத்திற்கும், ஒழுக்கத்திற்கும் விரோதமான காரியங்கள் வேறு எந்தக் கலைகளிலாவது, விஷக் கலைகள் அல்லாத வெறுக்கப்பட்ட புத்தகங்களிலாவது வெகு கீழ்த்தர மக்கள் கூட்டத்தின் நடவடிக்கையிலாவது காண்கிறோமா? என்பதைச் சற்று கவனித்துப்பாருங்கள்.

அன்றியும் எவ்வித சீர்திருத்தத்தையும் தடைசெய்யும்படியான முட்டுக்கட்டைகள் அக்கலைகள் என்பதற்குள் மலிந்து கிடக்கின்றனவா இல்லையா? என்பதையும் சற்று பொது நோக்குடன் யோசித்துப் பாருங்கள்?

இன்றைய தினம் அறிவாளிகள் வெகு கவலையுடன் செய்ய ஆசைப்படும் சீர்திருத்தங்களுக்கு எதிரிகளாயிருப்பவர்கள் தங்களுடைய அதிக பலம் பொருந்திய ஆயுதங்களாக இந்தப் பழைய சின்னங்கள், ஓவியங்கள், கலைகள் என்பவைகளையேதான் உபயோகித்துக்கொண்டு அதாவது அவைகளிலிருந்தே ஆதாரங்கள் எடுத்துக்காட்டி சீர்திருத்தக்காரர்களை எதிர்த்து தடையுத்தம் செய்கிறார்களா இல்லையா? என்பதையும் நீங்களே யோசித்துப் பாருங்கள்.

ஆனால் அச்சின்னங்களுக்கும் கலைகளுக்கும் வக்காலத்துப் பேசுபவர்களால் சீர்திருத்தக்காரர்களுக்கு அனுகூலமான ஆதாரங்களும் அவைகளில் எங்கேயோ ஒன்று இரண்டு பொதிந்து கிடைப்பதாகச் சொல்லப்படுகின்றது. அது வெறும் மயக்கம் என்பதும் நம்மை ஏமாற்றுவதற்கு உபயோகப்படுத்தக் கூடியது என்பதும் எனது அபிப்பிராயம்.

ஏனெனில் அவைகள் எல்லாம் கடவுள் தந்து நேரில் செய்ததாகவும் சொன்னதாகவும் மற்றும் நம்மால் தாங்க முடி

யாத நிபந்தனைகள் கொண்டதும், மனிதன் நம்ப முடியாத மனிதத்தன்மைக்கு மீறினதுமான சம்பவங்கள் கொண்டதாகவே இருக்கின்றனவேயன்றி, அனுபவத்தில் இருக்கின்றதாகவோ அனுபோகத்திற் கேற்றதாக இருக்கின்றதாகவோ கருதி எடுத்துக் கையாளக்கூடியது அதில் சுலபத்தில் காணக் கூடுவதில்லை. அப்படிக் காணக்கூடியது என்பதாக எதையாவது எடுத்து வியாக்கியானம் செய்யக்கூடியதாயிருந்தாலும் அதை யாரும் ஒப்புக் கொண்டாக வேண்டும் என்று நிர்ப்பந்திக்கவோ, அமுலில் கொண்டுவரச் செய்யவோ அதற்கு சக்தியுமில்லை.

உதாரணமாக பறையன், பள்ளன் என்பவர்கள் (கொடுமை செய்யப்பட்டவர்கள்) எல்லோரும் கோயிலுக்குள் போனதாகவும், கடவுள் ஏற்றுக்கொண்டு அவர்களைத் தனக்குள் ஐக்கியப்படுத்திக் கொண்டதாகவும் சொல்லப்படுவதை பழைய கலைகளாக உபயோகிக்கின்றார்கள். ஆனால் அவை இப்போது ஏன் அனுபோகத்தில் இல்லையென்றால் "அந்தப் பறையன் வேறு, இந்தப்பறையன் வேறு" என்று சொல்லி வெளியே தள்ளி விடுகின்றார்கள். அப்படியானால் அம்மாதிரியான கலைகளை எதற்காகக் காப்பாற்ற வேண்டும்? மனிதருக்குத்தான் பறையன் என்கிற வித்தியாசமிருக்குமே ஒழிய சாமிக்குகூடவா வித்தியாசம் என்றால், "கலைகளுக்கு ஆபத்து வந்து விட்டது" என்று கூப்பாடு போடுகின்றார்கள்.

ஆதலால் "இந்நாட்டிலுள்ள பழைய சின்னங்களையும் ஓவியங்களையும் கலைகளையும் காப்பாற்றிக்கொண்டு சீர்திருத்தம் செய்யவேண்டும்" என்று சொல்லுகின்றவர்கள் என்றைக்குமே வெற்றிபெற மாட்டார்கள் என்று உறுதியாகச் சொல்லுவேன். அன்றியும் இதுவரை நமது நாடு சீர்திருத்தப்பலன் அடையாததற்கு இந்த உணர்வுக்காரர்களேதான் முக்கிய காரணகர்த்தர்கள் என்றும் சொல்லுவேன். எனவே, இந்த சில உரைகளால் சீர்திருத்தம் என்பது பற்றியும் சீர்திருத்தக்காரர்கள் நிலைமையைப்பற்றியும் பேசினேன்.

## இனி சீர்திருத்தப்படவேண்டிய விஷயங்கள்

இனி சீர்திருத்தப்பட வேண்டிய விஷயங்கள் என்பதில், முதலாவதாக கடவுளும் மதமுமே முக்கியமாய் கவனிக்கப் படவேண்டிய விஷயங்களாகும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். ஏனெனில், முன்பு நான் சொன்னதுபோல் நம்முடைய எவ்வித சீர்திருத்தத்திற்கும் சீர்திருத்த எதிரிகளால் முக்கியமாய் இவ்விரண்டும்தான் விரோதமாய் உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றன.

கடவுளைப்பற்றி இங்கு நான் அதிகமாகப் பேசவரவில்லை. அதைப்பற்றி எவ்வளவு குறைவாகப் பேசுகிறோமோ அவ்வளவும் நல்லதென்றே சொல்லுவேன். ஏனெனில் அது ஓட்டைக்குடத்தில் தண்ணீர் சேந்துகிற மாதிரி இழுக்கும்போது குடம் நிறைய தண்ணீர்மொண்டு பாரமாய் வரும். மேலே வந்து சேரும்போது வெறுங்குடமாயிருக்கும். எத்தனை நாளைக்கு இதே வேலையில் இருந்தாலும் தண்ணீர்வந்து கரைசேராது. அதைப்போலவே கடவுள் என்பது வீண் தர்க்கத்திற்கேற்ற பேச்சே ஒழிய, காரியத்திற்கேற்ற பேச்சல்ல. இதுவரையில் வாதம் செய்தவர்கள் கண்ட முடிவுகளில் மிகவும் முக்கியமானது "நமது கண்ணுக்கும், மனதிற்கும், அறிவின் உணர்ச்சிக்கும் எட்டாத ஏதோவொன்று இருக்கிறது" என்றும், அதிலும் தேர்ந்த முடிவாக "நம்பினால்தான் உண்டு" என்றும் சொல்லும்படியானதுவே ஆகும். இதற்காக மனதிற்கும், கண்ணுக்கும், அறிவிற்கும், எட்டாத ஒன்றை ஏற்றுக்கொண்டு தக்க ஆதாரம் இல்லாவிட்டாலும் நம்பித்தான் ஆகவேண்டும் என்று நாம் யாரைத் தொந்திரவு செய்வது? அல்லது அம்மாதிரியான தொந்திரவினால் யாருக்குத்தான் என்ன லாபம்?

அடுத்தாற்போல் மதம் என்பதை பற்றியோவென்றால், அது ஒரு பொருளற்ற தன்மையானது. என்ன

வெனில், இதுவரை மதமானது உலகத்திற்கு எவ்விதமான பலனையும் கொடுத்திருப்பதாய் விளங்கவில்லை. எந்த மதக் காரனுக்காவது ஒரு சாந்தி ஏற்பட்டிருப்பதாய்த் தெரிய வில்லை. ஆனால் மதச் சண்டைக்கும், மதப் பிரசாரத்திற்கும் குறைவில்லை.

ஒவ்வொரு மதக்காரனும் தன் மத மூலமாகத்தான் மக்கள் முழுவதும் மோட்சத்திற்குப்போக முடியுமென்றும், தன் தன் மதத் தலைவன்தான் கடவுள் மகன் என்றும், கட வுள் தூதன் என்றும், கடவுள் அவதாரம் என்றும், அவரவர் கள் சொன்னவைகள் எல்லாம்கடவுளால் சொல்லப்பட்டவை கள்தான் என்றும் சொல்லுகின்றார்கள். இவர்களுக்குள்ளும் கிளைகள் பல இருக்கின்றன. இதில் யார் மெய்யர்களா யிருக்க முடியும் என்று கண்டு பிடிக்க முடிவதில்லை. ஒவ்வொரு மதக்காரனும் அவனவன் மதத்தை நம்பாத வனுச்குப் பாவம் என்றும், நரகம் என்றும், மோட்சமில்லை என்றும் சொல்லுகிறான். மனிதனாகப் பிறந்தவன் இந்த மதத்திற்காக எத்தனை "நரகத்" திற்குத்தான் போய் வருவது? பொதுவாக மனிதர்களை, கடவுளிடத்தில் அனுப்புவதற்கும், மனிதனின் குற்றங்களை மன்னிப்பதற்கும் கடவுளுக்கு இத் தனை ஏஜண்டுகள் வேண்டுமா? இவர்களுக்குள் இத்தனை போட்டிகள் வேண்டுமா? இந்த மனிதர்கள் கடவுளை அடைய இந்த மதத் தலைவர்களுக்கு இவ்வளவு கவலையா? என்பவை களை நிதானமாய் நடுநிலையிலிருந்து யோசித்துப் பார்ப்பீர்க ளானால் மதத்தின் அசம்பாவிதமும் ஆபாசமும், விளங்காமற் போகாது.

எப்படி ஒரு மனிதன் மக்களின் நலத்திற்காகவும், பாது காப்புக்காகவும் தான் அரசனாக வேண்டும் என்று கருதி ஒரு அரசாங்கத்தை ஸ்தாபித்து, பிறகு மக்கள் நலம் மறந்து, தன் அரசாட்சியை விஸ்தரிப்பதில் கவலை கொண்டு, கொலை முதலியவைகளைச் செய்து, அயல் நாடுகளைப் பிடிக்கும்

கவலையில் மூழ்கியிருக்கின்றானோ, அது போலவே, மக்கள் நலத்திற்கு மதம் என்று சொல்லி, மதத் தலைவனாகி, கடவுள் மகனாகி, தூதனாகி, அவதாரக்காரனாகி, உலகத்திலுள்ள மக்களை எல்லாம் தன் மதத்தில் சேர்க்கும் ஆசைகொண்டு ஆள் பிடிக்கும் கவலையில் மூழ்கி இருக்கிறான் என்பதே பல மத சம்பந்தமான எனது அபிப்பிராயமே யொழிய, மதத் தலைவர்கள் கடவுளால் அனுப்பப்பட்டவர்கள் என்றாவது, அவர்கள் சொன்னதெல்லாம் கடவுளால் சொல்லப்பட்டவைகள் என்றாவது, அவர்களிடத்தில் கடவுள் தன்மைகள் இருந்தன என்றாவது ஒப்புக்கொள்வது முடியாத காரியமாயிருக்கிறது. ஏனெனில், இவைகளையெல்லாம் ஒப்புக்கொள்வதானால் பல கடவுள்களையும், பல ஏஜண்டுகளையும் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒரு கடவுள் பாடே திண்டாட்டத்தில் இருக்கும்போது பல கட வுள்கள் சங்கதி எப்படி நிலை நிற்க முடியும்? ஆதலால் மதம் என்பதைக் கடவுள் என்பவனிடத்தில் சம்பந்தப்படுத்துவது பொருத்தமற்றதாகும்.

மற்றபடி மதம் என்பது மனித வாழ்க்கைக்கான கொள்கைகளை வகுத்து அந்தந்த நாட்டு நிலைமைக்குத் தக்கபடி ஏற்படுத்தப்பட்டது அல்லது வகுக்கப்பட்டது என்று சொல்வதானால் ஒருவாறு அதைப்பற்றி யோசிக்கலாம். அதுவும் அந்தந்த காலதேச நிலைமைக்குத்தக்கபடி கொள்கைகளை மாற்றிக்கொள்ளக் கூடிய தன்மையை உடையது என்பதால்மாத்திரம்தான் மதத்தைப் பற்றி யோசிக்கலாம். அப்படிக்கில்லாமல் "மதக்கொள்கைகள் என்பவை எல்லாம் மாற்ற முடியாதது; கடவுளின் தன்மை பொருந்தியது; அக்கொள்கைகளில் ஒரு சிறிதும் மாற்றக்கூடாது" என்று சொல்வார்களானால் அந்த மதங்களை மதங்களாகவே—ஆணவமாகவே கருதி அவற்றை அடியோடு ஒழிக்க முயற்சிக்க வேண்டியது சமுதாய சீர்திருத்தக்காரர்களின் முக்கிய கடமைகளில் முதன்மையானது என்பேன். ஏனெனில், சமுதாய சீர்திருத்தம் என்பது காலத்திற்கு ஏற்றவண்ணமும், அறிவுக்கும்

அநுபவத்திற்கும் ஏற்றவண்ணமும் மாறுபாடுகளைச் செய்ய ஒப்புக்கொள்ளுவதேயாகும். எனவே அத்தகையவர்கள் முன்னால், "எக்காலத்திலும் எந்நிலையிலும் மாற்றப்படக் கூடாது என்கின்றதான மதத் தடைகள் வந்து குறுக்கிடுமானால், எந்த விதத்தில் அவற்றை வலம் வந்து வணங்கிக்கொண்டிருக்க முடியும்? கொஞ்சமும் கலங்காது உறுதியுடனும், தைரியத்துடனும் அவைகளைத் தகர்த்தெறிய எவன் முன்னுக்கு வருகின்றானோ அவன்தான் சமுதாய சீர்திருத்தத் துறையை அணுக முடியும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். நிற்க, சமுதாய சீர்திருத்தக்காரர்கள் அடுத்தபடி கவனம் செலுத்தவேண்டியது:

## ஆண் பெண் தன்மைகள்

பொது மக்களில் பெண்கள், தீண்டாதார்கள் என்பவர்களை விட மிக மோசமாக அழுத்தப்பட்டிருக்கிறார்கள். "புலிக்கு ஆடு கடவுளால் ஏற்படுத்தப்பட்ட உணவு" என்பது போலவும், "பூனைக்கு எலி கடவுளால் ஏற்படுத்தப்பட்ட உணவு" என்பது போலவும், ஆணுக்குப் பெண் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட அடிமை என்பதாகக் கருதி நடத்தப்பட்டு வருகின்றார்கள். உண்மையிலேயே இப்படி ஒரு கடவுள் நீதி ஏற்படுத்தியிருப்பாரானால் முதலிலே அந்தக் கடவுளை ஒழித்துவிட்டுத்தான் வேறு காரியம் பார்க்க வேண்டும். ஐயோ, பாவம்! 'ஏழைக் கடவுள் மீது எத்தனை பழிகள்தான் போடுவது என்று தோன்றினாலுங் கூட, அந்தக் கடவுளுக்கு இவ்வளவையும் சகித்துக்கொண்டு "உயிர் வாழும்படியான" அவசியம் என்ன வந்தது என்பது நமக்குத் தெரியவில்லை. கஷ்டமாயிருந்தால் ஒழிந்து தொலையட்டுமே என்றுதான் தோன்றுகிறது.

# கற்பு

உலகத்தில், சிறப்பாக நமது நாட்டில் எல்லாவற்றையும் விட பெண்கள் நிலையே மோசமானது. அதிலும் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் "பதிவிரதைத் தன்மை"யை நினைக்கும்போது மனம் குமுறுகின்றது. அதாவது பதிவிரதம் என்கின்ற கற்புதான் அவர்களுடைய கடமையாம். அதுவும் எத்தகைய பதிவிரதம் என்றால் தன்னைக்கொண்டவனாகிய புருஷன் பழைய சாதம் சுடுகின்றது என்றால் விசிறி எடுத்து வீசவேண்டுமாம். தண்ணீர் சேந்தும்போது கணவன் கூப்பிட்டால் அப்படியே கயிற்றை விட்டுவிட்டு ஓடிவர வேண்டுமாம்; ஓடிவந்தால் மாத்திரம் போதாதாம்; அந்தக் கயிறும் பாத்திரமும் கிணற்றின் நடுவே ஓடினவள் திரும்பி வருமளவும் இராட்டினத்தில் தொங்கிக்கொண்டிருக்க வேண்டுமாம். இல்லாவிடில் அந்தப் பெண் கற்புடைய பதிவிரதை அல்லவாம். எனவே, சகோதரர்களே! பெண்களுடைய அடிமை நிலைமைக்கு வேறு என்ன உதாரணம் வேண்டுமென்கிறீர்கள்? அன்றியும் ஆண்கள் பிறவி மூர்க்கப் பிறவி அல்லது தூர்த்தப் பிறவி என்பதற்கு வேறு என்ன உதாரணம்வேண்டுமென்கிறீர்கள்? உங்கள் 'கடவுள்கள்' தங்கள் மனைவிகளை இப்படியா நடத்துகின்றன? தலையிலும், நாக்கிலும், மார்பிலும், தோளிலும், துடைகள் மீதும் தங்களது மனைவிகளை வைத்துக்கொண்டிருக்கிற கடவுள்களைக் கற்பித்துக் கொண்ட உங்கள் புத்தி இவ்விதம் சென்றதற்குக் காரணம் என்ன என்பது எனக்கு விளங்க வில்லை. பெண்களை அடிமைகளாக்கியதன் பலனாய் மக்கள் அடிமைகளால் வளர்க்கப்பட்டார்கள்; அடிமைகளால் வளர்க்கப்பட்டதன் பலனாய் மக்கள் சகலத்திற்கும் அடிமை களானார்கள். எனவே மக்கள் அடிமைத் தன்மை யினின்றும் நீங்கவேண்டுமானால் பெண்கள் அடிமை நீங்க வேண்டும்! பெண்கள் அடிமை நீங்கவேண்டும்!! முச்காலமும் பெண்கள் அடிமை நீங்க வேண்டும்!!!

பெண்கள் அடிமை நீங்க வேண்டுமானால் முதலாவதாக அவர்களைக் கற்பு என்னும் சங்கிலியால் கட்டிப்போட்டிருக்கும் கட்டை உடைத்தெறிய வேண்டும். கட்டுப்பாட்டிற்காகவும், நிர்ப்பந்தத்திற்காவும் கற்பு ஒருக்காலமும் கூடாது! கூடாது!! கூடவே கூடாது!!! வாழ்க்கை ஒப்பந்தத்திற்காகவும், காதல் அன்பிற்காகவும் இருவர்களையும் கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு வேண்டுமானாலும் இறுக்கிக்கட்டட்டும். அதைப் பற்றிநமக்குக் கவலையில்லை. ஒரு பிறவிக்கு ஒருநீதி என்கிற கற்பு மாத்திரம் அடிமைப்படுத்துவதில் ஆசை கொண்ட மூர்க்கத்தனமே அல்லாமல் அதில் கடுகளவு யோக்கியமும், நாணயமும், பொறுப்பும் இல்லவே இல்லை.

இந்த விஷயங்களில் பெண்களுக்கு ஆண்கள் உதவி புரிவார்கள் என்று எதிர்பார்ப்பது வீண் வேலையே ஆகும். வீரப் பெண்மணிகள் தாங்களாகவேதான் முன்வந்து உழைக்க வேண்டும் இதற்காக அரசாங்கத்திலும் அநேகம் செய்யப்பட வேண்டி இருக்கின்றன. ஆனால், பெண் அரசாட்சியால் (விக்டோரியாமகாராணி) ஆகாத காரியம் ஆண் அரசாட்சியால் ஆகுமா என்பது சிலருக்குச் சந்தேகமாயிருக்கலாம். பெண்களின் உறுதியான ஊக்கமும், உழைப்பும் இருந்தால் கண்டிப்பாய் முடியும். ஆனாலும் சமுதாய சீர்திருத்தக்காரர்கள் இதை மிகவும் முக்கியமாய்க் கருதவேண்டியது என்பதாக முன்னமேயே சொன்னேன். பழக்கத்தையோ, வழக்கத்தையோ, மதத்தையோ, வேதத்தையோ, சாஸ்திரத்தையோ கருதிக்கொண்டு பயப்பட்டு விடாதீர்கள்; கால தேச வர்த்தமானத்தைப் பாருங்கள். துருக்கியையும், ஆப்கானிஸ்தானத்தையும், சைனாவையும் பாருங்கள். துருக்கியப் பெண்களின் கண்களுக்கும் சீனப் பெண்களுடைய கால்களுக்கும் விடுதலை ஏற்பட்டு விட்டன என்பதை நினையுங்கள்.

## விதவைத் தன்மை

அடுத்த விஷயமாக உலக வாழ்க்கையில் இருந்து உயி

ருடன் பிரிக்கப்பட்ட சகோதரிகளான விதவைகள் என்பவர்களைப் பற்றிச் சில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன்.

ஜீவ சுபாவத்திற்கே பொருந்தாததான ஒரு நிபந்தனையை நமது சகோதரிகளின்மீது சுமத்திக் கொடுமைப்படுத்துவதான விதவைத் தன்மை என்பது எந்த விதத்திலாவது பொருத்தமுடையதா என்பதை ஆலோசித்துப் பாருங்கள். இந்நிலை பெண்களை அடிமைகளாய் நடத்துகின்றோம் என்பது மாத்திர மல்லாமல் நம்மைப் போன்ற மனித ஜீவன்களிடத்தில் நாம் எவ்வளவு கொடுமையாய், அறிவீனமாய் நடந்துகொள்ளும்சுபாவமுடையவர்களாய் இருக்கின்றோம் என்பதற்கு அறிகுறியுமாகும்.

பெண் தெய்வங்களையே குல தெய்வமாய்க் கொண்டாடும் உலகத்தையும், நதியையும், சக்தியையும் பெண்ணாய்க் கருதும் மக்களைக்கொண்டதும், இரண்டு பெண்டாட்டிக்குக் கம்பியில்லாததும், பெண்களைத் தலையிலும், நாக்கிலும், மார்பிலும் வைத்துக்கொண்டிருப்பதுமான கடவுள்களையுடையதும், 1000, 10,000, 60,000 பெண்டாட்டிகளைக் கட்டிக் கொண்ட ராஜாக்கள் ஆண்டதுமான இந்த நாட்டில் பெண்கள் வதைக்கப்படுகின்றார்கள்! உதைக்சப்படுகின்றார்கள் !! அதிலும் விதவைத் தன்மையால் மிகவும் வதைக்கப்படுகின்றார்கள்

பெண்கள் சம்பந்தமான வேறு எந்த காரியத்திற்காவது ஆண்கள் தங்கள் சுயநலத்தைக் கொண்டு கொடுமைப் படுத்துகிறார்கள் என்று சொல்லுவதானாலும் இந்த விதவைத் தன்மையை எதற்காகக் கற்பித்தார்கள் என்பதே நமக்கு விளங்கமாட்டேன் என்கின்றது.

இதில் எவ்வித அறிவுடைமையும் இருப்பதாக நமக்குத் தோன்றவில்லை. இதனால் யாருக்கு என்ன பிரயோஜனம் என்பதும் அறியக்கூடவில்லை. ஒரு சமயம் சந்நியாசிகளை

யும் அதிதிகளையும் உத்தேசித்து இப்படி ஒரு கூட்டம் இருக்கவேண்டும் என்பதாகக் கருதினார்களா? அல்லது பெண்கள் எண்ணிக்கை அதிகமாகி விட்டது ஆதலால் இம் மாதிரி செய்வதன் மூலம் மற்றப் பெண்களுக்கு புருஷன் கிடைக்கட்டும் என்று செய்தார்களா அல்லது வேறு என்ன காரணத்திற்காக இப்படிச் செய்தார்கள் என்பதைக் கண்டு பிடிப்பதற்கே முடியாததாயிருக்கின்றது. எப்படியிருந்தாலும் இதைப்போன்ற முட்டாள் தனமானதும், சித்திரவதைக் கொப்பான கொடுமையானதும், இனி அரைக்ஷணமும் பொறுத்துக் கொண்டிருக்க முடியாததுமான காரியம் உலகில் வேறு இல்லை என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

இந்த விதவைத்தன்மை ஒழிய வேண்டுமானால் பெண்கள் மிக்க தைரியமாக பாடுபட வேண்டும். இது விஷயத்தில் மானம் இன்னது அவமானம் இன்னது என்பதாகவோ, அவர்கள் என்ன சொல்வார்கள், இவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதாகவோ சற்றும் கருதாமல் தைரியமாய் விதவைப் பெண்கள் வெளிக்கிளம்பி விடவேண்டும்; தங்களுக்கு இஷ்டமான கணவன்மார்களைத் தாங்களே தெரிந்தெடுத்துக் கொண்டதாய் வெளிப்படுத்திவிட வேண்டும்; இவ்விஷயத்தில் சற்று சௌகரியக்குறைவு இருந்தாலும் அதை வலிமையுடன் பொறுத்துக் கொண்டால் அடுத்து வரும் சகோதரிகளுக்கு மிகுதியும் பலனளிக்கும். அநேக நாடுகளில் இவ்விதவை மணம் இருந்து வருகிறது. நமது நாட்டிலேயே சில வகுப்புக்களில் இவ்வழக்கம் நடைபெறுகின்றது. ஆகையால் இதில் இனி தாட்சண்ணியம் பார்ப்பதென்பது சற்றும் பொருந்தாதென்றே சொல்லுவேன். இதற்கு விதவைகள் அல்லாத ஸ்திரீகளும் கொடுமைப்படுத்தப்பட்ட ஸ்திரீகளுக்குப் புருஷன் சம்பாதித்துக் கொடுப்பதிலும், அவர்களுக்கு தைரியமூட்டி கொடுமைப் படுத்தப்பட்ட குடும்பங்களிலிருந்து வெளிப்படுத்தித் தனியாகவும் சுயேச்சையாகவும் வாழச்செய்யவும், தக்கவழியில் கவலை எடுத்துக்கொண்டு

உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நான் ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால், இக்கொடுமையை ஒழிக்க இது சமயம் இதைத்தவிர வேறு மார்க்கமில்லை என்று கண்டதால்தான்.

## ஜாதி வித்தியாசம்

மக்களில் ஜாதி வித்தியாசம் என்பது கற்பிக்கப்பட்டதே ஒழிய தானாக ஏற்பட்டதல்ல. வலுத்தவன் இளைத்தவனை அடக்கி வைக்கும் தர்மமே ஜாதி வித்தியாசமாகும். இது இன்னும் நிலைத்திருப்பது என்றால் இந்த நாடு மிருகப் பிராயத்தில் இருந்து மனிதப்பிராயத்திற்கு இன்னமும் வரவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. எதற்காக ஒரு மனிதன் உயர்ந்த ஜாதியாகவும் மற்றொரு மனிதன் தாழ்ந்த ஜாதியாகவும் கருதப்படுகின்றான் என்பதற்கு ஏதாவது காரணங்கள் இருக்கின்றனவா? மனிதர்களை எடுத்துக் கொண்டால் ஜாதியின் காரணமாக பிறவியிலாவது வாழ்க்கையிலாவது ஒழுக்கங்களிலாவது அறிவிலாவது வித்தியாசங்கள் காணப்படுகின்றனவா? ஒன்றுமே இல்லையே. அப்படி ஏதாவது ஒரு வழியில் இயற்கையில் பிரிந்திருந்தாலும் அதற்கு சமாதானமாவது சொல்ல முயற்சிக்கலாம். ஒரு காரணமும் இல்லாமல் இது வெறும் பிறவி மாத்திரத்தில் எதேச்சாதிகாரமாய் செய்யப்பட்ட கொடுமையாகத்தானே விளங்குகின்றது. இந்த முறை மக்களின் ஒழுக்கத்திற்கே நேர் விரோதமாக இருக்கவில்லையா?

சகோதரர்களே! இதைக் கொடுமை யென்று ஒப்புக்கொள்ளாதவர்கள் யார்? இதை ஒழிக்க வேண்டுமென்று சொல்லாதவர்கள் யார்? இந்த ஜாதிக்கொடுமையை ஒழிப்பதற்காக எத்தனை காலமாக முயற்சி செய்யப்பட்டு வருகிறது? "ஜாதி வித்தியாசம் உயர்வு தாழ்வு கூடாது, அதற்கு ஆதாரம் இல்லை" என்று சொல்லாத பெரியார் யார்? ஆயினும் இது

வரை ஏதாவது பலன் ஏற்பட்டிருக்கின்றதா? ஒரு சிறிதும் காணப்படவில்லையே. இதற்கு ஏதாவது ஒருவழி செய்து தானே ஆகவேண்டும்? எனவே இதற்கு சரியான வழி அறிவினாலோ ஞானத்தினாலோ போதனையினாலோ ஏற்பட்டு விடும் என்கிற நம்பிக்கை எனக்கு இல்லை. இது பெரிதும் இது சமயம் அரசாங்க சட்டத்தினாலும், அரசியல் வகுப்பு வாரி பிரதி நிதித்துவத்தினாலும்தான் இதை (அதாவது இந்த உயர்வு தாழ்வு வித்தியாசத்தை) ஒழிக்கமுடியும்.

ஆனாலும் இது அரசியல் கூட்டமல்ல; இங்கு நான் அரசியலைப்பற்றிப் பேசப்போவதில்லை. அரசாங்கத்தில் நமது முன்னேற்றத்திற்கு பலவித சட்டம் வேண்டும் என்று கேட்பதுபோல எல்லோருக்கும் பிரதிநிதித்துவம் வேண்டும் என்கிறோம். இதை ஏன் வேண்டும் என்கிறோம் என்றால் வலுத்தவன் இளைத்தவனை நசுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகவேதான். இப்படி கேட்பது சமுதாய சீர்திருத்தத்தின் பாற்பட்டதா இல்லையா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். இன்னும் ஒரு அவசியம் சொல்லு கிறேன். அரசியல்காரர்கள் நாம் வகுப்புவாரி பிரதிநிதித்து வம் கேட்கும்போது 'ஏதற்காக வகுப்புவித்தியாசத்தைக் கற்பிக்கவேண்டும்? எல்லோரும் சமத்துவமாக இருக்கலாமே" என்கிறார்கள். இதை நம்பி இந்தப் படியே சமுதாய வாழ்க்கையில் சமத்துவமாக இருக்கலாம் என்றாலோ, மத இயல்காரர்கள் "அதுமதத்திற்கு விரோதம்" என்கிறார்கள்; அம் மதத் தடையை நீக்க சட்டம் செய்யலாம் என்றாலோ "மத ஆச்சாரியார்கள்" "மதத்தில் சர்க்காரோ சட்டசபையோ பிரவேசிக்கக் கூடாது" என்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் ஒவ்வொரு வகுப்பும் தனித்தனியாய்ப் பாடுபட்டுப் பிரதிநிதித்துவமும் அதிகாரமும்பெற்றுதான் ஆகவேண்டும் என்பதும், அதற்கு ஒவ்வொரு வகுப்புக்கும் பிரதி நிதித்துவ உரிமை அளிக்கவேண்டியது அவசியம் என்று சொல்லுவதும் சரி என்று தோன்றவில்லையா? அடுத்தபடியாக உங்கள் கவனத்

திற்கு கொண்டுவருவது என்னவென்றால் ஜாதி வித்தியாசம் என்பதற்குள் தீண்டாமை என்பதாகும்.

## தீண்டாமை

தோழர்களே!

தீண்டாமை என்பதைப்பற்றி நான் ஏதாவது சொல்ல வேண்டும் என்பதாக நீங்கள் யாவரும் எதிர் பார்க்கமாட்டீர்கள் என்றே கருதுகிறேன். மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது, கண்ணில் படக்கூடாது, தெருவில் நடக்ககூடாது கோவிலுக்குள் போகக்கூடாது, குளத்தில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்கின்றவை போன்ற கொள்கைகள் தாண்டவமாடும் ஒரு நாட்டை பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலையின் நெருப்புக் குழம்பால் எரிக்காமலோ, சமுத்திரத்தால் மூழ்கச் செய்யாமலோ, பூமிப்பிளவில் அமிழச் செய்யாமலோ விட்டிருப்பதைப் பார்த்தபிறகுங்கூட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் நீதிமான் என்றும், சர்வ தயாபரர் என்றும் யாராவது சொல்லவந்தால் அவர்களை என்னவென்று நினைப்பது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். இம்மாதிரி கொடுமைப்படுத்தி தாழ்த்தப்பட்ட ஒரு பெரிய மக்கள் சமூகம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் பொறுமையோடும், சாந்தத்தோடும், அஹிம்சா தர்மத்தோடும் இருக்கவேண்டுமென்று விரும்புகின்றீர்கள் என்பதும், இம்மாதிரியான மக்கள் இன்னமும் ஒரு நாட்டில் இருந்துகொண்டு உயிர்வாழ்வதைவிட அவர்கள் இம்முயற்சியில் உயிர் துறப்பதை உண்மையிலேயே தப்பு என்று யாராவது நினைக்கின்றீர்களா என்பதும் எனக்கு விளங்கவில்லை.

இம்மாதிரி ஒரு பெரிய மனித சமூகத்தைக் கொடுமைப்படுத்தி அடக்கி வைத்துக் கொண்டிருக்கிற ஒரு நாடு, சுயராஜ்

யம் என்றோ அரசியல் சுதந்திரம் என்றோ பூரண விடுதலை என்றோ வாயினால் உச்சரிக்கவாவது யோக்கியதை உடையதாகுமா என்று கேட்கிறேன். சிலர் "சுயராஜ்யம் வந்து விட்டால், பூரண சுயேச்சை வந்து விட்டால் இவைகள் ஒழிந்து போகும்" என்று சமாதானம் சொல்லக்கூடும். அவர்களை நான் ஒன்று கேட்கிறேன். சுயராஜ்யம் மட்டுமல்ல "தர்மராஜ்யமும் அவதார ராஜ்யமும்" ஆகிய "ராமராஜ்யமும்" "சத்திய சந்தன்" ராஜ்யமாகிய அரிச்சந்திர ராஜ்யமும், மற்றும் கடவுளே அரசாண்டதாகச் சொல்லும் அரசாட்சிகளும் உள்ள காலத்தில்தானே தீண்டாமை முதலியவைகள் உண்டாக்கப்பட்டதாகவும் அவற்றை சரிவர பரிபாலித்து வந்ததாகவும், அக்காலத்தில் மகாக்கிரமமாக நடைபெற்று வந்ததாகவும் சொல்லப்படுகின்றது. எனவே மறுபடியும் அந்த ராஜ்யங்கள் வருமானால் இந்தக்கொடுமைகள் குறையுமா, அதிகமாகுமா என்று கேட்கிறேன். ஆதலால் இக்குற்றங்கள் நமது நாட்டை விட்டு ஒழிக்க முயற்சிக்கவேண்டியது சமுதாய சீர்திருத்தக்காரர்கள் கடமை மாத்திரமல்லாமல் அரசியல் சீர்திருத்தக்காரர்கள் என்பவர்களுடையவும் முக்கியமான கடமையுமாகும்.

## கல்வி

இனி கல்வி என்பதைப்பற்றியும் சீர்திருத்தக்காரர்கள் கவனம் செலுத்தவேண்டியது அதிகமுண்டு.

கல் என்பதற்கு அறி என்பது பொருள். கல்வி என்றால் அறிவி—தெரிவி என்பதுதான் பொருளாயிருக்க வேண்டும். எனவே எதை அறிவிப்பது என்று கவனித்தால் உலக சுபாவத்தையும் மனிதத் தன்மையையும் அறிவிப்பதே கல்வியாகும்; மற்றவைகள் வித்தையாகும். இதற்கு உதாரணமாக,

"ஒத்தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்"

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்"

என்ற வள்ளுவர் வாக்கே போதுமானது. ஆதலால் உலக நிலையையும் அதற்குத் தக்கபடி நடந்துகொள்ளத்தக்க மனிதத்தன்மையையுமே முக்கியமாய்க்கொண்டு கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இப்போதைய கல்வி என்பது மனிதத் தன்மைக்கும் அறிவுக்கும் சிறிதும் பொருத்தமானதல்ல. குடிகளிடத்தில் நம்பிக்கை இல்லாத ஒரு பொறுப்பற்ற அரசன் தனது பிரஜைகளை மூடர்களும் தேசத்துரோகிகளுமாக ஆக்கி தனது காலடியிலேயே அழுத்தி வைத்துக்கொண்டு நிரந்தரமாய் தன்னிச்சைப்படி ஆட்சி புரிய வேண்டும் என்று கருதுகின்ற ஒரு அரசாங்கத்திற்கு அனுகூலமான கல்வியாகவே இருந்து வருகிறது. அது மாத்திரமல்லாமல் ஊரார் உழைப்பில் நோகாமல் வயிறுவளர்க்கக் கருதும் அயோக்கியர்களின் ஆதிக்கத்திற்கு அனுகூலமான கல்வியே அளிக்கப்பட்டு வருகின்றது.

எனவே, இவை அடியோடு மாற்றப்பட வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் கடவுள்பக்தி, மதபக்தி, இராஜபக்தி ஆகிய அறிவுத்தடையும் அடிமைப் புத்தியும் கற்பிக்கக்கூடிய விஷயங்கள் கல்விச் சாலைகளுக்குள் தலை காட்டவே விடக்கூடாது. ஏனெனில் கடவுளிடத்திலும், மதத்தினிடத்திலும், அரசனிடத்திலும் பக்தியாய் இருக்கும்படி அவரவர்களே செய்துகொள்ள வேண்டுமே ஒழிய இதற்காக ஒரு பள்ளிக்கூடம் வைத்து மக்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பது அயோக்கியத்தனத்தின் முதல் பாகமாகும். கல்வி கற்பிக்கும் வேலை இது சமயம் முக்கியமாய் பெண்களுக்கும் தீண்டாதாராக்கப்பட்டவர்

களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குமே செய்ய வேண்டுமே ஒழிய, ஏற்கனவே கல்வியில் தேர்ச்சிபெற்றவர்கள் என்கிற சமூகத்திற்கும், பாரம்பரியமாகவே கல்வி அறிவோடு இருப்பதாகச் சொல்லப்படுபவர்களுக்கும், பிறவியிலேயே தங்களை அறிவாளிகள் என்று சொல்லிக்கொள்பவர்களுக்கும் இப்போது சிறிதும் கல்வி கற்பிக்க வேண்டியதே இல்லை. எனவே குறைந்து ஒரு பதினைந்து வருஷத்திற்காவது உயர்தரக் கலாசாலைகளையும் எல்லோருக்கும் கற்றுக் கொடுக்கும் பள்ளிக்கூடங்களையும் காலிசெய்து முன் சொன்ன கல்வியும் அறிவும் இல்லாதவர்கள் என்கின்ற கூட்டத்திற்கே பள்ளிக்கூடம் வைத்துக் கற்பிக்க வேண்டும். யோக்கியமான அரசாங்கம் இதைத்தான் முதலில் செய்யும். உண்மையான சீர்திருத்தக்காரர்களும் கல்வித் துறையில் இதைத்தான் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன்.

## மூடப் பழக்க வழக்கங்களும், சடங்குகளும்.

சீர்திருத்தக்காரர்கள் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்களில் மூடப்பழக்க வழக்கங்களையும் குருட்டு நம்பிக்கைகளையும் ஒழிப்பது என்பது எவ்வளவு முக்கியமானது என்பதைப் பற்றி நான் சொல்லவேண்டியதில்லை என்றே நினைக்கிறேன். ஏனெனில், இந்த விஷயமே இப்போது எங்கும் பேச்சாயிருக்கின்றது. இந்த மூடப் பழக்க வழக்கங்களால் பிழைக்கின்ற கூட்டம் தவிர மற்றவர்கள் எல்லோரும் இதன் அறியாமையை நன்றாய் உணர்ந்திருக்கின்றார்கள். ஆனாலும் அவர்களுடைய தைரியமற்றதன்மையினால் அதைமாற்றிக்கொள்ள முடியாதவர்களாயிருக்கின்றார்கள்.

கடவுள், மதம், பக்தி, வேதம் முதலியவைகள் மாத்திரம் அல்லாமல் உற்சவம், சுபம், அசுபம் என்பனவும் அவை சம்பந்தமான சடங்குகள், நோன்பு, விரதம், வேண்டுதல், தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலம், காணிக்கை ஆகியவைகள் போன்ற

அநேக விஷயங்களில் நாம் நடந்து கொள்ளும் நடவடிக்கைகள் முழுவதும் மூடப்பழக்க வழக்கங்கள், குருட்டு நம்பிக்கைகள் ஆகியவைகளின் பாற்பட்டதேயாகும்.

இந்த மூடப்பழக்க வழக்க குருட்டு நம்பிகையும் செய்கையும் நம்முடைய அறிவு, ஆராய்ச்சி, பணம், நேரம், முயற்சி, முற்போக்கு முதலியவைகளையெல்லாம் அடியோடு கெடுத்துவிடுகின்றன. நல்ல காரியங்களுக்குப் பணமும் அறிவும் இல்லாமல் செய்து விடுகிறது. உலகத்திலுள்ள நாடுகள் எல்லாவற்றையும்விட, இயற்கையிலேயே எல்லா வளமும் சௌகரியமும் பொருந்தியதான நமது நாடுமட்டும் உலகத்தில் உள்ள மற்றெல்லா நாடுகளையும்விட மிகவும் மோசமான நிலைமையில் என்றுமே விடுதலை அடையமுடியாத அடிமைத்தன்மையிலும் அறியாமையிலும் ஆழ்ந்துகிடப்பதற்குக் காரணமே இந்த மூடப்பழக்க வழக்கங்களுக்கு நமது மக்கள் கண்மூடித்தனமாக அடிமையாயிருப்பதுதான்.

நமது நாட்டைவிட மிகவும் பின்னணியிலிருந்த மற்ற நாடுகள் இன்றையதினம் எல்லா நாடுகளையும்விட, முன்னணியில் இருப்பதற்குக் காரணம் அந்நாட்டார்கள் மூடப்பழக்க வழக்கங்களையும் குருட்டு நம்பிக்கைகளையும் அறவே ஒழித்து அவர்களது பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுத்து ஆராய்ச்சித் துறையில் அவர்களது அறிவையும் பணத்தையும் நேரத்தையும் ஊக்கத்தையும் முயற்சியையும் செலவு செய்வதன் பலனே ஒழிய வேறில்லை.

நாம் மூடப்பழக்க வழக்கம் என்று சந்தேகமற நன்றாயறிந்த ஏதாவது ஒரு சிறு விஷயத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமானாலும் நடுங்குகின்றோம்; தைரியமாய் ஏதாவது செய்வதாயிருந்தால் அதைச் சாமியும் மதமும் ஸ்மிருதியும் புராணமும்வந்து தடைக் கல்லாய்நின்று தடுத்து விடுகின்றன. இவைகளையெல்லாம்கூட ஒரு விதத்தில் சமாளித்து விடலாம்; ஆனாலும் "பெரியவர்கள் நடந்த வழி" என்கின்ற

பொறுப்பற்றதும் அர்த்தமற்றதுமான தடை பெரிய தடையாய் விடுகின்றது. எனவே இவ்விஷயத்திலும் சிறிதும் தாட்சண்யமில்லாததும் தயங்காததுமான அழிவு வேலையே மிகவும் தேவையானது என்று மறுபடியும் மறுபடியும் சொல்லுவேன்.

மற்றும், இந்த மூடநம்பிக்கை குருட்டு பக்தி என்கின்ற துறையில் நமது மக்கள் பணம், வருஷம் ஒன்றுக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் வீணாகின்றன. நமது தென்னாட்டில் மட்டும் வருஷத்தில் ஒரு லட்சம், இரண்டு லட்சம், ஐந்து லட்சம், பத்து லட்சம், இருபது லட்சம், ரூபாய்கள் வரும்படியுள்ள கோயில்களும் ஒரு கோடி, இரண்டு கோடி, ஐந்துகோடி, பத்துக்கோடி சொத்துக்களை ஏற்கனவே உடைய கோயில்களும் பல இருக்கின்றன. வருஷத்தில் பத்து லட்சம், இருபது லட்சம், ஐம்பது லட்சம் செலவு கூட்டம்கூடி உற்சவம் நடத்தும் மூர்த்தி, தீர்த்தம், யாத்திரை ஸ்தலங்கள் நமது தேசத்தில் அநேக மிருக்கின்றன. இவைகள் யாவும் ஒரு சில கூட்டத்தாரின் சுயநலத்திற்காக வஞ்சகக் கருத்துக்கொண்டு உண்டாக்கப்பட்ட மோசடி காரியமே அல்லாமல் வேறல்ல. இதற்காக எழுதிவைத்த புராணங்களும், ஆகமங்களும், சமயாச்சாரிகள் என்பவர்களின் சரித்திரங்களும், ஸ்தலமான்மியங்கள், தீர்த்த விசேஷங்கள் என்பவைகளும், புண்ணிய தினங்கள், திதி, திவசம் என்பவைகளும் புண்ணிய சுயநலம்கொண்ட அயோக்கியர்களாலேயே பாமர மக்களை ஏமாற்றச்செய்த சூழ்ச்சியேயாகும்.

உதாரணமாக இரயில்வேக்காரர்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு நமது தெய்வங்கள் என்பவைகளினிடத்திலாவது, புண்ணியஸ்தலம், தீர்த்தம், சிரார்த்தம், புண்ணியதின ஸ்நானம், தேர், திருவிழா, உற்சவம், தீபம், மேளம் என்பவைகளிடத்திலாவது கடுகளவு நம்பிக்கையாகிலும் இருக்கிறது என்று நீங்கள் நம்புகின்றீர்களா? அல்லது

அவர்கள் உண்மையிலேயே நம்மைப்போன்ற அவ்வளவு முட்டாள்களா? ஒரு காலமும் இல்லை என்றும் அல்ல வென்றும் வெகு தைரியமாய்ச் சொல்லுவேன். ஆனால் அவர்கள் செய்யும் சூழ்ச்சியைப் பாருங்கள்.

"துலா ஸ்நானத்திற்குப் போகவில்லையா" "வைகுண்ட ஏகாதசிக்குப் போகவில்லையா" "ஆடி அமாவாசைக்கு தனுஷ்கோடிக்குப் போகவில்லையா" "கார்த்திகை தீபத்திற்கு திருவண்ணாமலைக்குப் போகவில்லையா" "கும்பமேளாவுக்கு அரித்துவாரத்திற்குப் போகவில்லையா" "மாமாங்கத்திற்குக் கும்பகோணம் போகவில்லையா" "ஆருத்திராவுக்குச் சிதம்பரம் போகவில்லையா" என்று விளம்பரம் செய்கிறார்கள் கூலி கொடுத்துப் பத்திரிகைகளில் போடச் செய்கிறார்கள், படம் எழுதி சுவர்களில் ஒட்டுகிறார்கள்; நல்ல நல்ல பெண்களின் உருவத்தைப் படத்தில் எழுதி மக்களுக்குக் கவர்ச்சி உண்டாகும்படிச் செய்கிறார்கள். இவைகளெல்லாம் எதற்காக? நாம் மோட்சமடைவதற்காகவா? நமக்குப் புண்ணியம் சம்பாதித்துக் கொடுப்பதற்காகவா? ஒருகாலமும் இல்லவே இல்லை என்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்கள். ஆனால் மற்றெதற்கு? நம்மை ஏமாற்றிப் பணம் சம்பாதிப்பதற்காக. நம்மிடத்தில் சற்றும் அன்பும் காதலும் இல்லாமல் தங்களை நன்றாய் அலங்கரித்துக்கொண்டு நம்முன் நின்று கண்ஜாடை காட்டும் கீழ்த்தர விபசாரிகளின் மனப்பான்மையை ஒத்த தான ஏமாற்றமல்லவா இது? இதன் மூலம் இரயில்வேக்காரர்களுக்குப் போகும் பணம் எவ்வளவு? இதுபோல் தானே புராணமும் ஆகமமும் ஸ்மிருதிகளும் எழுதினவர்கள் மனப்பான்மையும் இருந்திருக்கும் என்று எண்ண வேண்டியிருக்கின்றது. இல்லாவிட்டால் நம்முடைய மோட்சத்தைப்பற்றி இந்தக் கூட்டத்தாருக்கு இவ்வளவு அக்கறை எதற்கு? எனவே நமது மூடப்பழக்கம், குருட்டு நம்பிக்கையாகியவைகளின் மூலமாக நமது பணங்கள் எத்தனை கோடி பாழாய் போகின்றன என்பதைப் பாருங்கள்.

சர்க்கார் நம்மிடம் அரசாட்சியின் பேரால் வசூலிக்கும் வரி என்னும் கொள்ளையைவிட, இந்த மூட நம்பிக்கையா லும், குருட்டு பக்தியாலும் செலவிடும் பணமும் இதன் பேரால் பலர் கொள்ளையடிக்கும் பணமும் குறைந்த தொகை கொண்டதென்று கருதுகின்றீர்களா? சர்க்கார் இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை என்று கத்தும் பொருளாதார நிபுணர்கள், இந்தப் பகல் வழிப்பறி கொள்ளைக்கு ஏதாவது கவலை கொள்ளுகின்றார்களா? இதைப்பற்றி பேசவாவது அனுமதிக்கின்றார்களா? இந்தப் பக்கம் சற்று தலைவைத்தாவது படுக்கின்றார்களா? அனு கூலமான துறையில் ஒன்றும் செய்யாமலிருப்பதோடு இந்த ஒழுக்கமற்ற கொள்ளைக் கூட்டத்தாருக்கு தரகராக இருந்து நம்மைக் காட்டிக்கொடுத்து குழியில் தள்ளுவதற்கு உடந்தையாய்த்தானே இருக்கின்றார்கள்? மற்றும் இது போல் கொள்ளை அடிக்கும் மடாதிபதிகள் சங்கராச்சாரி கள் எவ்வளவு பேர்? மடங்கள் எத்தனை?

இந்தப் பணங்களும் நேரங்களும் கல்வியிலாவது ஆராய்ச் சித் துறையிலாவது செலவு செய்யப்பட்டிருக்குமானால் நமது நாட்டில் பொதுவில் 100-க்கு 93 ஆண்கள் தற்குறி களாயிருப்பார்களா? 1000-க்கு 999 பெண்கள் தற்குறிகளா யிருப்பார்களா? இவ்வளவுக்கும் பணம் கொடுக்கும் மக்களில் 100-க்கு 95 பேர் தற்குறிகளாயிருப்பார்களா? என்பவை களை யோசித்துப் பாருங்கள். நமது நாடு தரித்திரமாயிருப் பதற்குக் காரணம் விளைவில்லையா? விளைவுக்கு விலை யில்லையா? போதிய பணப்புழக்கம் இல்லையா? எல்லாப் பணமும் சாமிக்கும், மதத்திற்கும், கோயிலுக்கும், உற்சவத் திற்கும், சடங்குகட்கும், மூட நம்பிக்கைக்கும், சோம்பேறி களுக்கும், ஏமாற்றுகிறவர்களுக்கும் அழுவதற்கே செலவாகி விடுகின்றதால் நாட்டில் பயனுள்ள வேலைக்குப் பணமில்லாமல் தரித்திரமாகி விட்டது. சூதாட்டத்தில் எப்படி சீட்டு மேஜை வாங்குகிறவனுக்கே எல்லாப் பணமும் போய்ச்

சேர்ந்துவிடுகிறதோ, அதுபோல் நம்மை மூட நம்பிக்கையில் அழுத்தி வைத்திருப்பவர்களுக்கே நாட்டின் எல்லாப் பணமும் போய்ச் சேர்ந்துவிடுகின்றது.

எனவே, நமக்கு செல்வமோ, கல்வியோ, அறிவோ, ஆராய்ச்சியோ வேண்டுமானால் இந்த மூட நம்பிக்கையை அடியோடு ஒழிக்கவேண்டும். இதில் செலவாகும் பணத்தை நிறுத்தவேண்டும். இந்தத் துறையும் மற்றெல்லா துறைகளைவிட மிகுதியும் அழிவு வேலை செய்யப்பட வேண்டியதாகும். மற்றதை முடிவுரையில் சொல்லுகின்றேன்.

## பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் முடிவுரைப் பிரசங்கம்

சகோதரர்களே! சகோதரிகளே!

நமது மாநாட்டின் நடவடிக்கைகள் எல்லாம் அநேகமாய் முடிவு பெற்றுவிட்டன. மகாநாடுகளின் வழக்கப்படி பார்த்தால் மகாநாட்டுத் தலைவர் என்கின்ற முறையில் எனது முடிவுரை என்பதாக சில வார்த்தைகளையாவது நான் சொல்லியாக வேண்டும். நீங்களும் அதைக் குறிப்பாய் எதிர்ப் பார்க்கின்றீர்கள் என்பதை உணருகிறேன். மகாநாட்டு நடவடிக்கைகளின் ஆதிமுதல் இதுவரை ஊக்கத்தோடும் உணர்ச்சியோடும் இடையறாக் கவனத்தோடும் கலந்திருந்த உங்களுக்கு இனி நான் அதிகமாய் ஒன்றையும் சொல்ல வேண்டியதில்லை யென்றே நினைக்கின்றேன். ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே சீர்திருத்தம் என்பதைப்பற்றி பேசப்பட்டு வருகிறதாய் அறியக்கிடக்கின்றது. எவ்வித சீர்திருத்தத்தைப் பற்றி இதுவரை பேசப்பட்டு வந்ததாய் அறியக் கிடக்கின்றதோ, எவ்வித சீர்திருத்தத்தைப் பற்றி இப்போதும்

பேசப்பட்டு வருகிறதோ அவற்றில் ஒரு சிறிதும் காரியத்தில் வெற்றி பெறவே இல்லை.

சீர்திருத்தக்காரர்களும் தங்கள் சீர்திருத்தங்களைப் பற்றி வாயளவில் பேசிக்கொண்டு வந்திருக்கிறார்களே யொழிய காரியத்தில் கொண்டுவருவதில் வெற்றியடையவே இல்லை. ஆனாலும் இப்போதும் அம்மாதிரியாகவேதான் வாய்ப்பேச்சிலும் வெறும் தீர்மானத்திலும் சீர்திருத்தங்கள் நடைபெறுகின்றனவேயொழிய காரியத்தில் நடைபெறச்செய்யும் மார்க்கத்திற்கு கொண்டுபோய் விடும்படியான சீர்திருத்தம் செய்வதற்கு ஆட்களைக் காணோம்.

இந்த மாதிரியான வாய்ப்பேச்சு சீர்திருத்தத்திற்கும் எதிர்ப்புச் சீர்திருத்தங்கள் வெளிப்படையாயும் மறைமுகமாயும் சூழ்ச்சியாயும் நடந்து கொண்டே வந்திருக்கின்றன. இன்றைய தினமும் பல இடங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. அவைகளில் ஒன்றுதான் அரசியல் இயக்கம் என்பதும், தோழர் காந்தியின் வருணாச்சிரமப் பிரசாரம் என்பதும். மற்றும் வருணாச்சிரமதர்ம பரிபாலன மகாநாடு, பிராமண மகாநாடு, இந்து மகாநாடு, ஆரிய தர்ம பரிபாலன மகாநாடு, சைவ சித்தாந்த மகாநாடு, வைணவ சித்தாந்த மகாநாடு, ஆஸ்திகர்கள் மகாநாடு என்று சொல்லப்படுபவைகள் போன்றவைகளும், ராமாயணம், பாரதம், பாகவதம், பெரியபுராணம், திருவிளையாடல் புராணம் முதலிய புராண இதிகாச காலட்சேபங்களும், தேவ சாஸ்திரம், தேவாரப் பாடசாலைகள் முதலியவைகளும், இவைகளுக்கு அடிக்கடி பாஷியங்கள் கிளம்புவதும் முதலியவைகளுமாகும்.

ஆதலால் வெறும் சீர்திருத்தங்கள் எப்பேர்ப்பட்ட வீரர்களால் செய்யப்படினும் அவைகளை மேற்கண்ட கரையான்கள் அடியோடு அழித்துக்கொண்டேதான்

வந்துவிடுமேயொழிய ஒரு சிறு பாகத்தையும் மீதியிருக்க விடாது என்பதைத் தயவுசெய்து உணருங்கள். உண்மையான சீர்திருத்தத்தை நமது நாட்டிற்கு விரும்புபவர்கள் முதலில் மேற்கண்ட புல்லுருவிகளையும் களையான் களையும் அழிக்க தைரியமாய் முற்படவேண்டும். பழக்கம் வழக்கம் என்கின்ற பிசாசுகளை முதலில் ஓட்டிவிட வேண்டும். பழக்க வழக்கங்களை விடவேண்டுமானால் மனிதன் பகுத்தறிவுக்கு மதிப்புக்கொடுக்க தயாராயிருக்க வேண்டும்; அப்படி பகுத்தறிவுக்கு மதிப்பு கொடுப்பவர் கேள்வி மாத்திரத்திலேயே ஒன்றைநம்பி விடக்கூடாது, எழுதி வைத்திருப்பதாலேயே ஒன்றை நம்பி விடக்கூடாது; வெகுகாலமாக நடந்து வருவதாகத் தெரியவருவதினாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது; அநேகர் பின்பற்றுவதாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது; கடவுளாலோ மகாத்மாவாலோ சொல்லப்பட்டது என்பதாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது. ஏதாவதொரு விஷயம் நம்முடைய புத்திக்கு ஆச்சரியமாய் தோன்றுவதாலேயே அதை தெய்வீகமென்றோ, மந்திரசக்தி என்றோ நம்பி விடக்கூடாது. எப்படிப்பட்ட விஷயமானாலும் நடுநிலையில் இருந்து பகுத்தறிவுக்கு தாராளமாய்விட்டு ஆலோசிக்கத் தயாராயிருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் கண்மூடித்தனமான பழக்க வழக்கம் முதலியவைகளை ஒழிக்க முடியும்.

அப்படிக்கில்லாமல் எதையும் "நம்பித்தானாக வேண்டும்" "பெரியவர்கள் நடந்தபடிதான் நடக்க வேண்டும்" என்று நினைப்போமானால், எதை நம்புவது? யார் சொன்னது சரி? யார் சொன்னது தப்பு? எந்த எந்த புஸ்தகம் கடவுள் சொன்னது? அதில் எதெது மத்தியில் மனிதனால் நுழைக்கப்பட்டது? அவைகளில் அறிவாளிக்கு எழுதியது எது? புத்தியில்லாத பாமர மக்களுக்கு எழுதியது எது? பெரியவர்கள் யார்? என்

கின்றவை போன்ற சங்கைகளுக்குத் தெளிவு எங்கே இருக்கிறது? நமது சீர்திருத்த வேலையின் ஜீவநாடி இந்த இடத்தில் தான் இருக்கிறது. இங்குதான் மனிதன் தைரியமாயும் உறுதியாயுமிருக்க வேண்டும்.

தவிர சீர்திருத்தங்களைப்பற்றி பிரசாரம் செய்வதின் மூலம் மக்களுக்கு எடுத்துச்சொல்லி மேற்கண்ட முழுவதையும் சரிப்படுத்திவிடலாம் என்று எண்ணுவதும் மிகுதியும் பைத்தியக் காரத்தனமாகும்.

ஏனெனில் நமது பிரசாரத்தை செய்வதற்கு நமக்குள்ள சந்தர்ப்பத்தைக்காட்டிலும் நமது சீர்த்திருத்தத்திற்கு எதிரிகளான வைதீகர்கள், பண்டிதர்கள், சுயநலப் பார்ப்பனர்கள் அவர்களது கூலிகள் ஆகியவர்களுக்கே மிகுதியும் சந்தர்ப்பங்களும் சௌகரியங்களும் அதிகமாய் இருக்கின்றன. எப்படியெனில் கோவில்கள், புராணங்கள் சித்திரப்படங்கள் ஆகியவைகளும் அவைகளின் பண்டிகை உற்சவம், காலட்சேபம், பஜனை ஆகியவைகளும், பள்ளிக்கூடம், படிப்பு, பாடபுத்தகம் முதலியவைகள் ஆகியவைகளின் மூலம் யாருடைய பிரயத்தனமும் இல்லாமல் மக்களுக்குள் சீர்திருத்தத்திற்கு விரோதமான விஷயங்கள் புகுத்தப்பட்டு விடுகின்றன. இது தவிர கோடிக்கணக்கான ரூபாய்கள் வருவாய் கொண்ட மடங்களும் மடாதிபதிகளும் ஸ்தாபனங்களும் வெட்டி ஆட்களும் இருக்கின்றன.

அன்றியும் ஜனப்பிரதிநிதித்துவமான ஓட்டுகள் பெற்று அதன் மூலம் பிரதிநிதிகள் தெரிந்தெடுத்து அவர்களால் சட்டங்கள் செய்து முழு சீர்திருத்தங்களையும் செய்துவிடலாம் என்று எண்ணுவதும் அறியாமையே ஆகும். ஏனெனில், ஜனப்பிரதிநிதித்துவமான ஓட்டுகள் என்பவை பெரிதும் பாமர மக்களிடையே இருக்கின்றன. பிரதிநிதியாக வருபவர்களும் பெரிதும் சீர்திருத்த

விரோதிகளுக்குப் பயந்தவர்களும் சரியான சீர்திருத்த அறிவில்லாதவர்களுமாகவே இருக்கிறார்கள்.

இன்றைய சர்க்காரும் நம்முடைய இத்த கேவல நிலையினால் வாழவேண்டியவர்களாகவே இருக்கின்றார்கள். ஆதலால் உண்மையானதும் முடிவானதுமான சீர்திருத்தம் ஒருநாட்டிற்கு வரவேண்டுமானால் ஏக சக்ராதிபத்தியத்தன்மை கொண்ட ஒரு வீரனின் ஆட்சியால் தான் முடியும்.

அதாவது, "இந்தப் பொதுக் கோவிலுக்குள் எல்லோருக்கும் செல்ல உரிமை உண்டு",

என்று விளம்பரம் செய்யவேண்டும். யாராவது ஆக்ஷேபித்தால் அவர்களை சிறையிலிடவேண்டும்.

இதை பொதுஜனங்கள் கூட்டம் போட்டு கண்டிக்க ஆரம்பித்தார்களானால் உடனே அக்கோவிலை இடித்தெறிந்து விடவேண்டும்.

"ஜாதி வித்தியாசமோ உயர்வு தாழ்வோ கற்பிக்கின்ற புஸ்தகங்களைப்படிக்கக்கூடாது" என்று சொல்லிவிட வேண்டும். மீறிப்படிக்க ஆரம்பித்தால் அவற்றைப் பறிமுதல் செய்துவிட வேண்டும்.

உயர்வு தாழ்வு வித்தியாசம் முதலியவை கொண்ட மடாதிபதிகளை எல்லாம் சிறையில் அடைத்துவிட வேண்டும். பொது ஜனங்கள் கிளர்ச்சி செய்தால் மடாதிபதிகளை தீவாந்திரத்திற்கு அனுப்பிவிட வேண்டும்.

சுவாமிகளுக்கு உள்ள நகைகள், வாகனங்கள், பூமிகள் எல்லா வற்றையும் பறிமுதல் செய்து அவைகளை விற்று படிப்பில்லாதவர் களுக்குப் படிப்பும், தொழில் இல்லாதவர்

களுக்குத் தொழிலும், ஜீவனமும் ஏற்படுத்த உபயோகப் படுத்திவிட வேண்டும்.

இதுபோன்ற காரியங்கள் செய்பத்தக்க உரம் கொண்ட வீர ஆட்சிக்கு நாட்டை கொண்டுவர வேண்டும். அப்பேர்ப் பட்ட வீரர்களின் ஆட்சிக்குட்பட்ட நாடுகள்தான் இன்று சுயமரியாதையும் சீர்திருத்தமும் பொலிந்து விளங்குகின்றன.

இப்பேர்ப்பட்ட வீர ஆட்சிக்கு நாட்டைக் கொண்டு வர வேண்டுமானால், அநேக சீர்திருத்தக்காரர்கள் உயிர் துறக்கத் தயாராயிருந்து கொண்டு பாமரமக்களிடையில் உண்மையைப் பரப்ப முன்வரவேண்டும்.

நம் நாட்டுப் பார்ப்பனர்கள் நம் சீர்திருத்தங்களை எதிர்க்க வெளியில் வருவதில்லை. ஒரு விதத்தில் இப்போது அவர்கள் ஒளிந்து கொண்டார்கள். ஆனாலும் நம்மவர் களிலேயே சில கூலிகளையும் ஏமாந்த சோணகிரிகளையும் பிடித்து அவர்களை நம்மீது ஏவி விட்டு தடைவேலை செய்யச்செய்து விட்டு தங்களுக்குள் ஒற்றுமையையும் கட்டுப் பாடும் செய்து கொள்ள வர்ணாசிரம தர்மமகாநாடு, ஆரிய தர்மபரிபாலன மகாநாடு, பிராமணர்கள் மகாசபை, சநாதன தர்மிகள் மகாநாடு, வேதவித்துக்கள் மகாநாடு, புரோகிதர்கள் மகாநாடு, பண்டிதர்கள், சாஸ்திரிகள், கனபாடிகள் சம் மேளனம் ஆகிய பல மகாநாடுகள் திருட்டுத்தனமாகவும் சூழ்ச்சியாகவும் அதற்குள் பல இரகசியத் தீர்மானங்கள் செய்து இரகசிய சமாசாரப் போக்கு வரத்து மூலம் தெரி வித்துக்கொண்டு கட்டுப்பாடாய் வேலை செய்து வருகிறார் கள். இவ்வளவும் செய்துவிட்டு சீர்திருத்த இயக்கத்திற்கு நாஸ்திக இயக்கம் என்ற பெயரைக் கொடுத்து அதற்குப் பல தப்பர்த்தங்களையும் பழிப்புகளையும் கற்பித்தும் வரு கிறார்கள். இதை சில பார்ப்பனரல்லாதார்களும் நம்பிக் கொண்டு அர்த்தமில்லாமல் குற்றம் சொல்லுகிறார்கள்.

## நாஸ்திகம்

ஆனாலும் சீர்திருத்தக்காரர்கள் என்பவர்கள் நாஸ்திகம் என்கின்றபூச்சாண்டிக்குப் பயப்படக்கூடாது. நாஸ்திகம் என்ற வார்த்தை ஒரு அர்த்தமற்ற வார்த்தை. அதன் உண்மை அர்த்தமும் உண்மைப் பிரயோகமும் என்னவென்றால் "பார்ப்பனீயத்தில் அதாவது பார்ப்பனர்களுடைய வேதம், சாஸ்திரம், இதிகாசம், புராணம் ஆகியவைகளில் நம்பிக்கை இல்லாதவன்—பார்பனர்களின் புரட்டுகளைக் கண்டு பிடித்து வெளிப்படுத்து கின்றவன்" என்பதுதான். இந்நிலையில் நாம் எல்லோரும் நல்ல உறுதியான நாஸ்திகர்களே யாவோம். ஆகையால் நாம் ஒவ்வொருவரும் தைரியமாய் நம்மை நாஸ்திகர் என்றே சொல்லிக்கொள்ள வேண்டும் சீர்திருத்தக்காரர்கள் தங்களுடைய பெயரின் இறுதியில் நாஸ்திகன் என்ற பட்டத்தையே சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்போது நாஸ்திகப் பூச்சாண்டியைக் கொல்ல முடியும்.

நமக்கும் வேதத்திற்கும் என்ன சம்பந்தம்? அதை யார் உண்டாக்கினவர்கள்? யாருக்காக உண்டாக்கப் பட்டது? எப்பொழுது என்ன பாஷையில் செய்யப்பட்டது? அதில் நமது நிலைமை என்ன? என்பவைகளாகிய விஷயங்களை யோசித்துப் பார்த்தால் அதை நம்பலாமா? நாம் ஒப்புக் கொள்ளலாமா? அது நமது மக்களிடை பரவுவதற்கோ இருப்பதற்கோ இடம் கொடுக்கலாமா? என்பவைகள் விளங்கும்.

## எச்சரிக்கை

கடைசியாக சீர்திருத்தக்காரர்களுக்கு ஒரு எச்சரிக்கை செய்ய விரும்புகின்றேன்.

மதவெறியும் சமயவெறியும் பிடித்தவர்களும் பொதுவாக பார்ப்பனர்களும் சமத்துவம், சுதந்திரம், சுயமரியாதை

பகுத்தறிவு ஆகியவைகள் கொண்ட சீர்திருத்தத்திற்கு எப்போதுமே விரோதிகள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒருவர் "எங்கள் மதத்தில் மேற்கண்ட சீர் திருத்தமுண்டு" என்பார். ஆனால் எங்களைப்போல் வேஷம் போட்டுக்கொள்ள வேண்டும், எங்கள் வேதத்தை நம்பவேண் டும், எங்கள் சாமியையும் தூதனையும் வணங்க வேண்டும்" என்று சொல்லுவார்கள். மற்றொருவர் "எங்கள் சமயத்தில் சீர்திருத்தம் உண்டு; ஆனால் எங்களைப்போல் வேஷம் போட்டுக் கொண்டு எங்கள் சாமிகளையும் புராணங்களை யும் நம்பவேண்டும்" என்பார்கள். நம்பாவிட்டாலோ "நாஸ்தி கர்கள், அஞ்ஞானிகள், பாவிகள், சமயத்துவேஷிகள்" என்று சொல்லிவிடுவார்கள். இவர்கள் எல்லோரும் ஒரே இனத் தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் இவர்கள் எல்லோரும் உண்மைச் சீர்திருத்தத்திற்கு விரோதிகள் என்பதையும் மற ந்துவிடாதீர்கள்.

முக்கிய எச்சரிக்கை என்னவென்றால்' பார்ப்பனர்களில் சிலர் சீர்திருத்தக்காரர்கள் என்று சுலபத்தில் பட்டம்பெற்று புறப்பட்டுவிடுவார்கள். அதாவது கள்ளும் சாராயமும் குடித் தால் அதனாலேயே அவர் ஒரு சீர்திருத்தக்காரர் ஆகிவிடு வார்; ஒருவர் ஆடு, மாடு, பன்றி சாப்பிட்டால் அதனாலேயே அவர் ஒரு சீர்திருத்தக்காரர் ஆகிவிடுவார்; மற்றொருவர் வெட்டிச்சோறாக யார் வீட்டிலும் கிடைத்ததை யெல்லாம் சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக்கொண்டு திரிந்தால் அதனாலேயே அவர் ஒரு பெரிய சீர்திருத்தக்காரர் ஆகிவிடு வார்; மற்றொருவர் ஒழுக்கமில்லாமல் யாரையும் எந்த பெண் ணையும் கல்யாணமாகவோ, வைப்பாட்டியாகவோ, வேசியாகவோ அனுபவித்துக்கொண்டு திரிந்தால் அதனா லேயே அவர் ஒரு பெரிய சீர்திருத்தக்காரராகிவிடுவார். ஜனங்களும் முட்டாள்தனமாக அப்படிப்பட்டவர்களை வித்தியாசமற்றவரென்றும் சீர்திருத்தக்காரரென்றும் நம்பி விடுவார்கள். ஆனால் அவர்களால் சீர்திருத்தத்திற்கு மாத்தி,

மன்றியில் பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே பெரிய ஆபத்து என்பதையும் மறந்து விடாதீர்கள்.

மற்றும் எந்த ஒரு சிறிய சீர்திருத்தத்திற்கும் சாமியையும் மதத்தையும் குறுக்கே கொண்டுவந்து போட்டு விடுகின்றார்கள். ஆதலால் நீங்கள், உங்களுடைய முன்னேற்றத்திற்குத் தடையாக எந்த மதமாவது கடவுளாவது குறுக்கிட்டால் அவற்றைத் தைரியமாக எதிர்த்து எடுத்தெறிய வேண்டுமென்றே கேட்டுக்கொள்ளுகின்றேன். பார்ப்பனர்கள் மாத்திரம்தான் ஜாதி வித்தியாசம் காட்டுகிறார்கள் என்று சொல்லி விடுவதற்கில்லை. பார்ப்பனரல்லாதாருக்குள்ளும் பற்பல ஜாதிகள் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் வித்தியாசம் பாராட்டுகின்றனர். ஆதலால் 'மேல் ஜாதியார்'' களை நீங்கள் உங்களுக்குச் சமமாக இருக்க வேண்டுமென்று விரும்புவீர்களானால் உங்களுக்குக் "கீழேயுள்ள ஜாதியார்'' களுக்கும் நீங்கள் சமத்துவம் அளிக்கவேண்டும். பார்ப்பனரல்லாதாரிடமிருக்கும் கொடுமை, பார்ப்பனர்கள் காட்டும் கொடுமைகளைவிட சில விஷயங்களில் சற்று அதிகம் என்றே சொல்ல வேண்டும். ஆனால், நாம் பார்ப்பனர்களை ஏன் அதிகமாகக் குற்றம் சொல்லுகின்றோமென்றால், அவர்கள் வைத்த தீ தான் நமக்குள்ளும் பற்றிக்கொண்டது. நாம் மேல்ஜாதி என்பதோடு சண்டைசெய்து வகுப்புவாரிப் பிரதிநிதித்துவப்படி உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்ற கொள்கையில் வெற்றி பெற்றால் கீழ்ஜாதியார்களெனச் சொல்லப்படுகிறவர்களுக்கும் அவர்களுக்குரிய பங்கை நாம் கொடுக்கவேண்டும். சர்வகட்சி மகாநாட்டுத் திட்டத்தில் எல்லா வகுப்பாருக்கும் சமத்துவம் கொடுக்க வேண்டுமென்ற விஷயமே காணப்படவில்லை. பார்பனர்களுக்குப் பயந்தே எல்லோரும் அதில் கையெழுத்துப்போட்டு விடுகிறார்கள். முதலில் எல்லா வகுப்பாருக்கும் சமத்துவம் கொடுப்பதை விட வேறு என்ன சீர்திருத்தம் வேண்டுமென்று நினைக்கின்றீர்கள்? பிச்சை எடுப்பதற்கு உபயோகமாயிருக்கும்

வேத படிப்பிற்காக கொள்ளை கொள்ளையாக லாபம் சம்பாதிக்கும் நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் பார்ப்பனர்களுக்குச் சோறுப்போட்டு பாடசாலை வைத்து படிக்கும்படி செய்கிறார்கள். இம்மாதிரியான உதவி ஆதிதிராவிட பிள்ளைகளுக்கு அளிக்கப்படுமானால், அவர்களில் வயிற்றுப் பிழைப்பிற்கு வழியின்றி சிறுவயதிலேயே கூலிக்குச்செல்லும் எத்தனையோ பிள்ளைகள் பள்ளிகூடம் சென்று படித்து மந்திரி வேலைக்குத் தயாராக விருக்க மாட்டார்களா என்பதை நினைத்துப்பாருங்கள்.

இனி சிலர், வேதங்களும், புராணங்களும் பழங்கதையென்று சொல்லிக்கொண்டு பண்டிகை, திதி திவசம், கிரகணம் ஆகியவைகள் வரும்போது அவர்கள் அப்புத்தகங்களையே முதலில் திறந்து பார்ப்பார்கள். ஆனால் அவர்களைக் கேட்டால் வழக்கத்துக்கு விரோதமாக நடக்கலாமாவென்று கூறுகிறார்கள்; இவர்களை எந்தக் கூட்டத்தில் சேர்ப்பது? இப்படிப் பட்டவர்கள் பேச்சில் மயங்கி விடாதீர்கள்.

கடைசியாக சீர்திருத்தங்கள் மக்களுக்கு ஒழுக்கங்கள் கற்பிக்கவும், அறிவை விசாலப் படுத்தவும், ஜீவன்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், எல்லா மக்களிடமும் சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப் படுத்தவுமே வேண்டும். ஆகையால் நீங்களெல்லோரும் இவற்றை ஞாபகத்தில் வைத்து இம்மகாநாட்டில் நிறைவேற்றபட்ட தீர்மானங்களை தைரியமாக நடத்தையில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது முடிவுரையை இத்துடன் முடித்துவிடுகிறேன் என்று பேசினார்.

## தென் இந்திய சீர்திருத்த மகா நாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. மக்கள் பிறவியிலும் ஆண் பெண் என்கின்ற தன்மையிலும் உள்ள உயர்வு தாழ்வு என்கின்ற வித்தியாசங்கள் கண்டிப்பாய் ஒழிக்கப்பட வேண்டுமென்று இம்மகா நாடு தீர்மானிக்கின்றது.

(a) குடும்பச்சொத்தில் பெண்களுக்கு ஆண்களைப் போலவே சம உரிமை அளிக்கப்பட வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

(b) புருஷன் மரணமடைந்து விட்டால் அவன் சொத்து முழுமையும் பெண்சாதிக்கு சர்வ சுதந்தரமாய் அனுபவித்துக்கொள்ள உரிமை அளிக்கப்பட வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(c) பாகம் பிரியாத குடும்பங்களில் கணவன் இறந்து போனால் அக்கணவனுக்கு உள்ள சகல உரிமைகளும் சொத்துக்களும் அவனது மனைவிக்கு சர்வ சுதந்தரமாய் அனுபவித்துக்கொள்ள உரிமை அளிக்கப்படவேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(2) எல்லா பொதுப்பள்ளிக்கூடங்களிலும் ஆண் பெண் என்கின்ற வித்தியாசமில்லாமலும் உயர்வு தாழ்வு என்கின்ற வித்தியாசமில்லாமலும் கட்டாயப் படிப்பு கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(a) தாழ்த்தப்பட்ட மக்கள் (அதாவது தீண்டாதார் என்கின்றவர்களுக்கு இலவசக் கட்டாயக் கல்வி கற்பதில் அவர்களுக்கு இலவச சாப்பாடு போட்டு, புஸ்தகம் முதலிய கல்விச்சாதனங்களும் இலவசமாய் அளிக்கப்பட வேண்டும் என்று இம்மாநாடு பலமாய் தீர்மானிக்கின்றது.

(3) பொதுப்பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பதில் குருட்டு நம்பிக்கையும், மூடபக்தியும் கொண்ட மத விஷயங்களையும் புராணக்கதைகளையும் கற்பிக்க அனுமதிக்கக்கூடாது என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(4) தாய்ப்பாஷைகளுக்கு என்று பண்டிதர்களை உற்பத்தி செய்யும் பள்ளிக்கூடங்களின் பாடங்களில் குருட்டு நம்பிக்கையும் மூடபக்தியும் கற்பிக்க ஆதாரமான சாஸ்திரம், புராணம் முதலானவைகளைப் பாடமாக வைக்காமல், பெரிதும் அறிவு வளர்ச்சியையும் இயற்கைத் தத்துவத்தையும் போதிக்கக்கூடிய விஷயங்களைப் பாடமாக வைத்து பரீட்சிக்க வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

(5) பள்ளிக்கூடங்களில் தாய்பாஷை கற்பிக்க என்று ஏற்படுத்தும் உபாத்தியாயர்களுக்குப் பெரிதும் புராணங்களில் உள்ள அறிவையே பிரதானமாகக் கருதாமல், கூடுமானவரை இயற்கைத் தத்துவமும் விஞ்ஞான அறிவும் சரித்திர ஆராய்ச்சியும் உள்ள இலக்கண இலக்கிய பண்டிதர்களாகத் தெரிந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டும் என்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

6. பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக என்று அனுமதிக்கும் பாடபுஸ்தகங்களில் குழந்தைகளை குருட்டு நம்பிக்கையிலும் மூடபக்தியிலும் கொண்டுபோய் விட்டு அறிவின் வளர்ச்சியையும் தன்னம்பிக்கையும் தடை செய்யும்படியான எந்தவிதமான விஷயத்தையும் பாடபுஸ்தகமாக அனுமதிக்கக்கூடாது என்றும், முற்றிலும் அறிவையும் ஒழுக்கத்தையும் கற்பிக்கக்கூடியதாய் இருக்க வேண்டும் என்றும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

7. கோவிலுக்குள் போக தடைபடுத்தப்பட்டவர்களுக்கு சம உரிமை நியாயம் கிடைப்பதற்கு இடையூறாயுள்ள தடைகளை எல்லாம் நீக்கவும், கோவில்களின் உட்புறத்தில் உள்ள படிப்படியான வித்தியாசங்களை விலக்கவும் தீவிர முயற்சி செய்ய வேண்டுமென்று இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

8. பல்கலைக் கழகமாகிய யூனிவர்ஸிட்டியில் பாஷை வித்தியாசம் இருக்கக்கூடாது என்றும், நாட்டுத் தாய் மொழிக் கல்விக்குத் தாராளமான உதவி செய்யச்செய்ய வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

9. ஆங்கில துரைத்தனத்தாரும், இந்திய மன்னர் துரைத்தனத்தாரும், ஸ்தலஸ்தாபன நகராண்மை ஸ்தாபனங்களும் முக்கியமான இடங்களிலெல்லாம் மருத்துவத்திற்கும், குழந்தைகள் பாதுகாப்புக்கும் இல்லங்கள் அமைக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

10. ஒவ்வொரு மதத்தினரும் பிறமதத்தினருடன் ஒத்துவாழ வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றது.

★

## தலைவர் தேர்தலில் பிரரேபித்தவர்கள், ஆமோதித்தவர்கள், ஆதரித்தவர்கள், சொற்பொழிவுகள்

பானகல் அரசர் ராஜா சர். பி. ராமராயநிங்கார் அவர்கள் எம், ஏ., எம். எல். சி., தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களை ஷ மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று பிரரேபித்துப் பேசியதாவது:—

"சீமாட்டிகளே! சீமான்களே! தோழர் ராமசாமி நாயக்கர் அவர்கள் இக்கூட்டத்திற்கு தலைமை வகிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை பிரரேபிக்கும்படியாக என்னைக் கேட்டிருக்கின்றீர்கள். மதிப்பு வாய்ந்த எனது நண்பர் தோழர் ராமசாமி நாயக்கர் அவர்கள் தற்காலத்தில் பெரிய சமூக சீர்திருத்தக்காரராகும். அவர் சமூக சீர்திருத்தத்தை மிகவும் புனிதமானதாகக் கருதுகிறார். தன் கருத்தை நிறைவேற்றுவதில் அவர் எத்தகைய தியாகமும் செய்யத் தயாராயிருக்கிறார். எந்த ஒரு கொள்கையை தான் நேர்மையானதாக எண்ணினாரோ அதற்காக அவர் பல தடவை சிறை சென்றதும் உங்களுக்குத் தெரியும். சமூக சீர்திருத்தக் கொள்கை முற்போக்கடைய இன்னும் எத்தனை தரம் வேண்டுமானாலும் சிறைக்குப்போகவும், மற்றும் தனது உயிரையே கொடுக்கவும் அவர் தயாராயிருக்கிறார். தோழர் ஆர். கே. ஷண்முகம் அவர்கள் தெரிவித்ததுபோல் சமூக சீர்திருத்தத் துறையில் பலர் அநேக வருஷம் பாடுபட்டுப் பயன் பெறாமற்போன வேலையை சில வருஷத்தில் இவர் பயனளிக்குமாறு செய்துவிட்டார். ராஜீய சீர்திருத்தத்தைவிட சமூக சீர்திருத்தம் இன்றியமையாதது என்பதை அவரே முதலில் கண்டவர். இந்தியா சுயராஜ்யம் அடைவதற்குமுன் சமூக சீர்திருத்தம் இன்றியமையாதது.

இம்மகாநாட்டை தலைமைவகித்து நடத்துவதற்கு இவரைவிட வேறு தகுதியான ஒருவரை அடையமுடியாது. ஆகையால் நாயக்கர் அவர்கள் அக்ராசனம் வகிக்க வேண்டுமென்ற எனது பிரரேபனையை முழுமனதுடன் ஆதரிப்பீர்களென்றும் நம்புகின்றேன்."

## மாஜி மந்திரி சர் கே. வி. ரெட்டி நாயுடு

சர் கே. வி. ரெட்டிநாயுடு அவர்கள் பி. ஏ, பி. எல்., மேற்கண்ட தீர்மானத்தை ஆதரிக்குமுகத்தான் பேசியதாவது:—

தோழர் நாயக்கர் அவர்களைவிட இக்கூட்டத்திற்கு தலைமை வகிக்கத் தகுதியான ஒருவரை நீங்கள் தேர்ந் தெடுக்க முடியாது. தனக்கு ஒன்றை உரியதாக்கிக் கொண்டு அதையே தன் முழு வேலையாகவும் கொண்டு கடந்த 20 அல்லது 25—வருஷங்களாக வேலை செய்கிற ஒருவரு க்கு, இரண்டு அல்லது மூன்று விஷேச குணங்கள் அமைய வேண்டும். அவ்வித குணங்கள் அமைந்தவர்கள் இத்தென் னிந்தியா முற்றிலும் தேடினாலும் நமது நாயக்கரைத் தவிர வேறு யாரையும் கண்டுபிடிக்க முடியாது. (கேளுங்கள், கேளுங்கள்.) அத்தகைய புகழ் எவையெனில், முதலாவது தைரியமும், இரண்டாவது தியாகம், மூன்றாவது தன்னுடைய வேலையை எவ்வாறு நடத்தி அனுபவத்திற்கு கொண்டுவருவது என்பது. தோழர் ராமசாமி நாயக்கர் அவர்களின் தைரியத்தைப் பற்றி அதிகம் விஸ்தரிக்க வேண்டியதில்லை. அவர் ஒரு உண்மையான சிங்கம். சிங்கத் தின் ஹிருதயத்தைப் பெற்றிருக்கிறார். (கரகோஷம்) வாழ்க் கையில் பயம் என்பது அவருக்கு இன்னதென்றே தெரி யாது. அத்தகைய பயமின்மை இருந்தாலொழிய இத்தகைய காரியங்களில் யாரும் வேலை செய்ய முடியாது.

அவசியம் நேர்ந்தால் அவர் எவ்வித தியாகமும் செய்யத் தயாராயிருக்கிறவர். பழைய காலத்து வீரர்கள் தங்கள் ஆயுதத்தை உபயோகித்ததுபோல் தோழர் நாயக்கர் தனது பேனாவை பயமின்றி எங்கும் செலுத்துகிறவர். ஆகவே அப்பேர்ப்பட்டவர் இம்மகாநாட்டுக்குத் தலைமை வகிக்க வேண்டுமென்ற பனகால் அரசர் பிரரேபணையை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன்.

## திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியார்

திவான் பகதூர் குமாரசாமி ரெட்டியார் அவர்கள் பி. ஏ. பி. எல்., எம். எல் சி. திருநெல்வேலி ஜில்லாபோர்டு தலைவர் ஷை தீர்மானத்தை ஆதரித்துப்பேசியதாவது:—

எத்தகைய சமூக ஊழியம் நாயக்கர் அவர்கள் செய்திருக்கிறார் எனப் பேச முயல்வது பைத்தியக்காரத்தனமாகும். தோழர் நாயக்கர் அவர்கள் கபடமற்றவர். மனதில் நினைப்பதைப் பேசியும், பேசியவாறே செய்தும்காட்டுபவர். இத்தகைய பெருந் தலைவரைத் தேர்தெடுத்ததற்காக எல்லோரையும் பாராட்டுகின்றேன்.

சென்னை கார்ப்பரேஷன் தலைவர் கனம் ஏ. இராமசாமி முதலியார் அவர்கள் பி. ஏ. பீ. எல், மேற்படி தீர்மானத்தை ஆதரித்துப் பேசியதாவது:—

மகா-ள-ஸ்ரீ தலைவர் அவர்களே !சீமாட்டிகளே! சீமான்களே ! இத்தீர்மானத்தை ஆதரிக்கும்படி என்னைக் கேட்டுக்கொள்ளப்படும் என்று நான் நினைக்கவில்லை ஏனெனில் இத்தீர்மானத்திற்கு ஆமோதிப்பு அவசியமில்லை. ஆனால் கடந்த 40 வருஷ காலமாக இடைவிடாத சேவை செய்து வரும் எனது நண்பர் தோழர் நாயக்கர் அவர்களின் ஊழியத்தைப் பாராட்டிப் பேச ஒரு அரிய சந்தர்ப்பத்தை யளித்த இம்மாகாட்டுப் பெருந்தன்மைக்கு மகிழ்வெய்துகிறேன். தமிழ் நாட்டில் தோழர் ராமசாமி நாயக்கர் பெயர் எந்த வீட்டிலும் சொந்தப் பெயராகவே உச்சரிக்கப்படுகின்றது. அஃதன்றி அவரது புகழ் ஆந்திரதேசம், பம்பாய், மத்திய மாகணங்களுக்கும் பரவியிருக்கிறது. (கரகோஷம்) தமிழ் பரவியஎல்லாவிடங்களிலும் எங்கு பார்த்தாலும் அவரது பேச்சாகவே இருந்து வருவதற்கு அவரது எழுத்திலோ அல்லது பேச்சிலோ ஏதாவது ஒரு விசேஷமிருக்க வேண்டும். இவ்வளவு பிரக்யாதியடைய மற்ற சமூக சீர்திருத்தக்காரர்கள் செய்யாத வேலையை இவர் என்ன செய்திருக்கிறார் என்பதை யோசிப்போம். சுமார் 25—வருஷங்களுக்கு முன் சமூக சீர்திருத்தம் தேசிய முறையில் செய்வதா அல்லது ஆராய்ச்சிமுறையில் செய்வதா என்று நாங்கள் தர்க்கித்த நினைவு எனக்கு இருக்கின்றது. அதை நினைக்கும்போது அப்போதைய நிலைக்கும் இன்று தோழர் நாயக்கரால் சாமானிய ஜனங்கள் அடைந்திருக்கும்

அறிவு வளர்ச்சிக்கும் வித்தியாசம் தெரிகிறது. சீர்திருத்தத்திற்கு அக்காலத்தில் நாங்கள் பெரிதும் படித்த கூட்டத்தாரையே நம்பியிருந்தோம். ஆனால் தோழர் நாயக்கர், அவர்களைப் பொருட்படுத்தவேயில்லை சீர்திருத்த மடைய விரும்பாத எவரிடமும் சீர்திருத்தத்தை அவர் புகுத்த விரும்புவதில்லை. ஆனால் அவர் தன்னுடைய முழு சக்தியையும் படிப்பில்லாத பாமர மக்களிடம் செலுத்தியும் அவர்களது மனோ உணர்ச்சியை கிளப்பி விட்டும் வேலை செய்து வருவதே அவரது வெற்றிக்குக் காரணம். மூட நம்பிக்கையில் ஆழ்ந்து, அவதிப்பட்டுக்கிடந்த ஜனங்களுக்கு தெளிவைக்கொடுத்ததன்றி அவர்களது மனோ நிலையையும் மாற்றியதே அவரது வெற்றியின் இரகசியமாகும். இதை விட கண்ணியமானது வேறென்ன? விஷயங்களை எடுத்துச் சொல்லி சாமானிய மக்களை அறிந்து கொள்ளச் செய்வதை விட சுயராஜ்யபாதை வேறென்ன விருக்கிறது? இவ்வழிகளால் தாங்களே காரணகாரியங்களறிந்து ஒரு முடிவுக்கும் வர ஏதுவாகிறது? இதுதான் சமூக சீர்திருத்தத் துறையில் தோழர் ராமசாமி நாயக்கருக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வித்தியாசமும் ராமசாமி நாயக்கர் அவர்கள் செய்திருக்கும் மகத்தான சேவையுமாகும்.

எவருடைய உணர்ச்சியும் பாதிக்கப்படுமேயென்று அவர் சிறிதும் கவலை கொள்வதே கிடையாது. ஆனால் அவர் எந்த விஷயத்தையும் காரண காரியத்தோடு ஆராய்ச்சி செய்வதில் தவறுவதே கிடையாது. நமது இந்தச் சென்னை மாகாணத்திலேயே வாலிபர்களிடமும் வயோதிகர்களிடமும் தோழர் நாயக்கர் ஒரு புதிய மனோவெழுச்சியை உண்டாக்கியிருக்கிறார். தேசக்ஷேமத்தில் கருத்துக்கொண்ட ஒவ்வொருவரும் அவருக்கு வந்தனத்தைச் செலுத்துவதோடு நன்றி செலுத்தவும் கடமைப் பட்டுள்ளார்கள். ஆகையால் இத்தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரிக்கிறேன்.

## முதல் மந்திரி டாக்டர் பி. சுப்பராயன்

சென்னை அரசாங்க முதல் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஷை தீர்மானத்தை ஆதரித்துப் பேசியதாவது:—

நான் காங்கரசிலிருந்த காலம் முதற்கொண்டு நாயக்கர் அவர்களை அறிவேன். அவர் மற்றவர்களுடைய உணர்ச்சி எவ்வாறு பாதிக்கப்படுமென்பதைக் கொஞ்சமும் மதியாது தான் சரியென்றெண்ணியதையே வற்புறுத்தி வந்த ஒரு காரணத்தாலேயே அவரிடம் நான் மாறாத அன்புகொண்டேன். அத்தகைய ஒரு சிறந்த குணமே இப்போது நமது மக்களின் முற்போக்குக்கு அவசியமாயிருக்கிறது. நம்மால் கற்பிக்கப்பட்ட, மனிதனுக்கு மனிதன் உள்ள வேற்றுமையே நமது தேசத்தை நாம், ஆள்வதற்கு தகுதியற்றவர்களாகச் செய்திருக்கிறது. சுயராஜ்யம் கேட்பதால் வராது; ஆனால் நாம் அதற்கு தகுதியுடையவர்களாகச் செய்து கொள்ள வேண்டும் (கரகோஷம்) அந்த அர்த்தத்தோடுதான் இன்று நாயக்கர் அவர்கள் பிராமணரல்லாதாரியக்கத்தின் தலைவராய் விளங்குகிறார். இந்த இயக்கத்தின் முக்கிய அம்சத்தை அவர் அறிந்துவிட்டார். காலஞ்சென்ற எனது நண்பர் நாயர் பெருமான் இவ்வியக்கத்தை துவக்கும்போது சமூக சீர்திருத்தத்தையே குறிக்கொண்டிருந்தார். அத்தகைய கொள்கையையே தோழர் நாயக்கர் அவர்களும் கொண்டிருக்கிறார். இத்தகையோரே நீங்கள் செய்யப்போகும் காகிதத் தீர்மானங்களை கிரியரம்சையில் காட்டக்கூடியவர்கள். இளைஞர்கள் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் மட்டும் கவனம் செலுத்தாமல் ஊர், ஊராகச்சென்று அதையே பிரசாரம் செய்ய வேண்டுமென விரும்புகின்றேன். இம்மகாநாட்டிற்கு நாயக்கர் அவர்கள் தலைமை வகிக்கும்படி கொண்டுவந்த தீர்மானத்தை முழுமனதுடன் ஆதரிக்கின்றேன்.

## தோழர் என். சிவராஜ் அவர்கள்

பி. எ., பி. எல்., எம். எல். சி.

நாயக்கர் அவர்களுடைய சேவையைப் புகழ்ந்து பேசியதன்றி தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகச் செய்துவரும் முயற்சிகளையும் புகழ்ந்து பேசினார்.

## ரெவரண்ட் ஜான் பிட்மன்

சமூக சீர்திருத்தத்துறையில் இடைவிடாத சேவை செய்து வரும் நாயக்கர் அவர்கள் தென்னிந்தியாவிலேயே ஓர் இளைஞர் என்று பேசினார்.

## சீர்திருத்தக்காரர்கள் மகாநாட்டைப்பற்றி "குடி அரசு" 2-12-28-ந்தேதி எழுதிய

## தலையங்கம்

### சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு

தென் இந்திய சீர்திருத்தக்காரர்கள் மகாநாடு சென்னை விக்டோரியா மண்டபத்தில் தோழர் ஈ. வெ. ராமசாமிப் பெரியார் தலைமையில் நடந்தேறிய விபரமும் அவரது தலைமை உபந்யாசமும் மற்றும் பல விபரங்களும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் இத்துடன் வரும் அநுபந்தத்தில் காணலாம்.

அக்ராசனர் உபந்யாசத்தில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களில் சீர்திருத்தக்காரர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயங்களும், செய்ய வேண்டிய முறைகளும் தெளிவாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன.

முதலாவதாக, அக்ராசனர், தாம் சீர்திருத்தத்தில் நம்பிக்கையுடையவரல்ல வென்றும், அழிவு வேலையிலேயே நம்பிக்கையுடையவரென்றம், அதாவது ஒன்றை மாற்றியோ அல்லது எடுத்துவிட்டோ அந்த ஸ்தானத்தில் மற்றொன்றை வைக்க வேண்டுமென்கிற விஷயத்தில் கவலையில்லாதவரென்றும், அவசியமில்லாததும் கொடுமை விளைவிப்பதுமான விஷயங்களை அழித்துவிட வேண்டியதுதான் என்கின்ற முடிவின் பேரில் கவலை கொண்டிருக்கும் அழிவு வேலைக்காரரென்றும் சொல்லியிருக்கிறார்.

அதற்கேற்ப இப்போது சமுதாய முற்போக்குக்கும் சமத்துவத்திற்கும் விடுதலைக்கும் புதிதாக நாம் கைக்கொள்ளவேண்டியது என்ன வென்றால், அறிவு வளர்ச்சிக்கும் சமத்துவத்திற்கும் தடையாய் இருப்பவைகளை அழித்துவிட வேண்டுமென்பதேயாகும். இவ்விதம் அழிவு வேலைமூலம் தடைகளை நீக்கிவிட்டால் தானாகவே முற்போக்குக்குச் சரியானபாதை ஏற்பட்டுவிடும் என்பது அதில் நன்றாய் அறியக்கிடக்கின்றது. இந்தக் குறிப்பானது 'இருப்பதை எடுத்துவிட்டால் வேறொன்று வேண்டாமா?', என்று ஆலோசனை இல்லாமல் பிதற்றிக் கொண்டிருக்கின்ற விதண்டாவாதிகளுக்கும் பாமர மக்களை ஏய்ப்பதற்குச் சில சுயநலவாதிகள் "நாயக்கர் எல்லாவற்றையும் அடியோடு அழிக்க வேண்டு மென்கிறாரே, அப்படி அழித்துவிட்டால் மக்களுக்கு வேறு கதி யென்ன?" என்று நீலிக் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கும் பாஷாண்டிகளுக்கும் தக்க பதிலாகும்.

மற்றும் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால் நடந்துவந்த சீர்திருத்தங்கள் பலிக்காமல் தடைப்பட்டுப் போனதற்குக் காரணம், மேல் குறிப்பிட்டதான தடைகளாயிருப்பவைகளை சரியானபடி வேருடன் களைந்தெரிவதான அழிவு வேலை செய்யாததுதான் என்றும், தற்காலத்தில்

செய்யப்படுவதாய்ச் சொல்லப்படும் சீர்திருத்தம் என்பதெல்லாம் பெரிதும் புரட்டும் சுயநலமும் அடிப்படையாய்க் கொண்டதென்றும், அவை பெரிதும் சீர்திருத்தத்திற்கு விரோதிகளாய் உள்ள உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்களாலும் பழமை "சித்தாந்தக்காரர்" களாலுமே நடைபெற்று வந்ததென்றும் தெளிவாய் எடுத்துக் கூறியிருப்பதிலிருந்து நமது நாடு உண்மையான சீர்திருத்தமடையாமல் போனதற்குக் காரணம் இன்னதெனத் தெற்றென விளங்கும். மற்றும்,

"கபிலரை ஏமாற்றி விட்டோம், புத்தரை ஏமாற்றி விட்டோம், கூன்பாண்டியனை ஏமாற்றி விட்டோம். மூவேந்தர்களை அழித்து விட்டோம், மகமதிய அரசாங்கத்தை ஒழித்துவிட்டோம், நாயக்கர் அரசாங்கத்தை நசுக்கிவிட்டோம், கம்பனைக் கொண்டே எங்களைக் கடவுளாகவும் தேவர்களாகவும் செய்து கொண்டோம்; இப்படிப் பட்ட எங்களுக்கு சில பார்ப்பனரல்லாத கூலிகளைப் பிடித்தே இப்புதிய சீர்திருதத இயக்கத்தை ஒழித்து எங்கள் ஆதிக்கத்தை பழையபடி நிலை நிறுத்திக்கொள்ளச் செய்வது தானா ஒரு பிரமாதமான காரியம்?"

என்று மனப்பால் குடித்துக்கொண்டு இருமாந்து ஆணவமாய்ப் பிதற்றித்திரிபவர்களுக்கும், அக்ராசனர் உபந்யாசத்தில் "அந்தக்காலமும் சவுகரியமும் அப்போதைய அரசாங்கத்தின் யோக்கியதையும் வேறு, இந்தக் காலமும் இப்போதைய அரசாங்கமும் சீர்திருத்தம் செய்பவோ அழிவு வேலை செய்யவோ விருப்பம் கொண்டவர்களுடைய சவுகரியமும் வேறு" என்று சொல்லியிருப்பது தக்க பதிலாகும். இப்போதைய இயக்கம், அடிக்க அடிக்க எழும்பும் பந்து போலவும் வெட்ட வெட்ட தளிரும் கொடிகள் போலவும் பரவி விட்டது. கொஞ்ச காலத்திற்கு மூன் ஒருவர் எழுதியதுபோல், அதாவது "எங்களுக்கு

இச்சுயமரியாதை இயக்கம் கண்களைத் திறந்து விட்டது. இனி எவர் தடுத்தாலும், இந்த இராமசாமிப் பெரியாரே மாறிவிட்டாலும், இந்த உணர்ச்சியை அடக்கிவிட முடியாது'' என்று எழுதியது போல் இனி என்றென்றைக்கும் இவ்வியக்கமும் இந்த உணர்ச்சியும் மறையாது என்பதையும் யாராலும் அழிக்க முடியாது என்பதையும் வெள்ளிடை மலை போல் விளக்கி விட்டது.

மற்றப்படி பெண்கள் விடுதலைக்கு தடையான அர்த்தமற்ற கற்பும், சம்மதமற்ற விதவைத்தன்மையும் அழிக்கப் படத்தக்க முறைகளும், அதாவது புருஷன் என்பவன் "பழைய சாதம் சுடுகிறது, விசிறி கொண்டு வீசு'' என்றால், உடனே பெண்ஜாதி என்பவள் விசிறி கொண்டு வீசவேண்டியதுதான் கற்பு என்றும், பெண்ஜாதி என்பவள் கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கும் போது புருஷன் என்பவன் கூப்பிட்டால், திடீரென்று சேந்தும் கயிற்றை விட்டு விட்டு ஓடிவர வேண்டுமென்றும், ஓடிவந்தால் மாத்திரம் போதாது, கிணற்றில் கயிறும் பாத்திரமும் அந்தரமாய், தொங்கிக்கொண்டிருக்க வேண்டும் என்றும், அப்படி தொங்கி கொண்டிருந்தால்தான் கற்பு உள்ளவள். பதிவிரதையானவள் என்றும் சொல்வதான கற்பையும், பதிவிரதா தன்மையையும் அடியோடு ஒழித்தாக வேண்டும்' என்று குறிப்பிட்டிருப்பதும், "விதவைகளுக்கு அவர்கள் தாய் தகப்பன் மாரோ அல்லது சுற்றத்தார்களோ மறு கலியாணம் செய்து வைக்காவிட்டால், அவ்விதவைகள் தங்களுக்கு இஷ்டமான கணவரைத் தெரிந்தெடுத்துக்கொள்ள வேண்டியது என்றும், புருஷனுடன் வாழும் மற்ற பெண்களும் இதற்கு உதவிசெய்து விதவைகளைக் கணவனுடன் வாழச்செய்ய அனுகூலமாயிருக்க வேண்டும்'' என்றும் சொல்லியிருப்பது குறிபிடத்தக்கது. அதுமாத்திர மன்றி,

குறுகிய நோக்கங்கொண்டோ அல்லது விஷம புத்தி கொண்டோ, "பெண்கள் எப்படி வேண்டுமானாலும் ஒழு

க்க ஈனமாய் நடந்து கொள்ளலாமா ?" என்று கேட்பவர்களுக்கு சமாதானமாக அதாவது "கணவன் மனைவி என்பதாக இருவர் சேர்ந்து இல்வாழ்க்கை நடத்துவதற்காகச் செய்து கொண் .. ஒப் ந்தத்தின் பலனாகவோ காதலன் காதலி என்கின்ற முறையில் இவர்களின் காதல் இன்பத்தின் பயனாகவோ இருவரையும் சம நிபந்தனை கொண்ட கற்பு என்னும் சங்கிலி எவ்வளவு இருகக்கட்டினாலும் அது எவ்விதத்திலும் பெண்கள் விடுதலைக்கு இடையூறாக இருக்காது" என்று சொல்லியிருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

மற்றபடி விதவைகள் என்னும் கொடுமைப்படுத்தப்பட்டவர்கள் விஷயத்திலும் "அவாகள் தங்கள் துக்க நிவர்த்திக்கு இனி பெற்றோர்களையோ உறவினர்களையோ எதிர்பாராமல் தாங்களாகவே தக்க கணவனைத் தெரிந்தெடுத்து வெளிப்படுத்திவிட வேண்டியதுதான்" என்று குறிப்பிட்டதும், மற்றபடி "புருஷனுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களும் விதவைகளின் மேற்கண்ட முயற்சிக்கு உதவிசெய்ய வேண்டியது" என்றும் குறிப்பிட்டிருப்பதும் குறிப்பிடத் தக்கதேயாகும்.

மற்றபடி ஜாதிவித்தியாசம், தீண்டாமை, மூடப்பழக்க வழக்கங்கள் ஆகியவைகளை ஒழித்தலைப்பற்றியும் கல்வியைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருப்பவைகளும் ஊன்றிக் கவனிக்கத்தக்கவைகளாகும்.

அதாவது, பெண்கள் சுதந்திரத்திற்குப் பெரிதும் இப்போது இடையூறாயிருப்பது அவர்களுக்கு சொத்துரிமை இல்லாமையால்தான் என்பதை உணர்ந்து இனிமேல் குடும்பச்சொத்தில் பெண்களுக்கு சம உரிமையும் விதவைகள் விதவைத்தன்மையுடன் இருந்து கொண்டு கஷ்டப்பட வேண்டியதிற்கு காரணமாயிருப்பது அவர்களுக்கு புருஷன் இறந்தவுடன் மற்றவர்களிடம் ஜீவனாம்

சத்திற்கு தொங்கிக்கொண்டிருக்க வேண்டியிருப்பதால் தான் என்பதை உணர்ந்து அதுமாறும்படி புருஷன் சொத்து பாத்தியம் முழுவதும் சர்வசுதந்திரத்துடன் விதவைகளுக்கு அளிக்கப்பட்டு விடவேண்டும் என்றும் தீர்மானித்திருப்பதானது சரியான பரிகாரமாகும்.

மற்றும் தீண்டாதார்கள் என்பவர்கள் கல்வி இல்லாத காரணத்தால் முன்னேற முடியாமல் இருப்பதால், அவர்களுக்குச் சாப்பாடு போட்டு கட்டாயக் கல்வி கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்திருப்பதும், மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பதற்காகப் பள்ளிக்கூடங்களில் குருட்டு பக்தி மூடநம்பிக்கைகளுக்கு இடந்தரும் படியான கல்வி கற்பிக்கக்கூடாது என்றும், மூடநம்பிக்கையும் குருட்டு பக்தியும் உள்ள உபாத்தியாயர்களைப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளைப் படிப்பிக்கச் சேர்க்கக்கூடாது என்றும், உபாத்தியாயர்களைத் தயார்செய்யும் பள்ளிக்கூடங்களிலும் பிள்ளைகள் படிக்கும் பள்ளிகூடங்களிலும் மூடநம்பிக்கையும் குருட்டு பக்தியும் உண்டாக்கத்தக்க எந்த புஸ்தகங்களையும் பாட புஸ்தகமாக வைக்கக்கூடாதென்றும் தீர்மானிக்கப்பட்டிருப்பதும், மற்றும் சில தீர்மானங்களும், முக்கியமாக மதத்தின் பேரால் பெண்களுக்கு பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு விடும் வழகத்தை ஒழிக்கச் சட்டம் செய்ய வேண்டும் என்று ஸ்ரீமதி டாக்டர் வோகளி ஆர்யா அவர்களால் பிரேபிக்கப்பட்டு ஸ்ரீமதி அலமேலு மங்கைத் தாயாரவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் குறிப்பிடத்தக்கவை.

எனவே இவ்வளவு முக்கிய தீர்மானங்கள் செய்ததில் மகாநாட்டு பிரதிநிதிகள் காட்டிய ஆரவாரத்திற்கும் ஊக்கத்திற்கும் அளவேயில்லை. மகாநாட்டுக்கு விஜயம் செய்து தீர்மானங்களில் கலந்து கொண்ட பெரியோர்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் என்றே செல்லவேண்டும். அவர்கள் அரசாங்க இலாகா இப்போதைய மந்திரிகளும்,

மாஜி மந்திரிகளும், இனி வரப்போகும் மந்திரிகளும், சட்ட சபை பிரதிநிதிகளும், பல ஸ்தலஸ்தாபனத் தலைவர்களும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் மதசம்பந்தமான ஆராய்ச்சியுள்ளவர்களும், சீர்திருத்தத்தில் பெரிதும் கவலை கொண்டவர்களும், தக்க கல்வியும் அறிவும் உள்ள பெண் மணிகளும், பண்டிதர்களும் வாலிபர்களும், முதியோர்களும் ஆகிய பலதிரப்பட்ட தக்க பிரதிநிதிகளேயாவார்கள். அவர்களில் வெளியூர்களிலிருந்தும் அநேகர் வந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஆனாலும் மேற்கண்ட மகாநாட்டைத் திறம்படவும் சிறப்புடனும் நடத்திய பெருமை மிகுதியும் தோழர் சுரேந்திரநாத் ஆரியா அவர்களையும் ராவ்பகதூர் எம். கே. ரெட்டி அவர்களையும் சேர்ந்தது என்றே சொல்லுவோம். இதுவரை சீர்திருத்த சம்பந்தமாக எத்தனையோ மகாநாடுகள் நடந்திருந்தாலும் இதுபோன்ற பிரதிநிதித்துவமும் பலன் தரத்தக்க தீர்மானங்களும் கொண்ட மகாநாடு மிகச் சுருக்கமாகத்தானிருக்கும்.

நிற்க, தீர்மானங்கள் எவ்வளவோ முன்னேற்ற முடையவையானாலும் அவைகளை நிறைவேற்றி வைப்பதில் அரசாங்க சம்பந்தமான சட்ட உதவிகளும் தேவையாயிருப்பதால், பொதுஜனப் பிரதிநிகளைத் தெரிந்தெடுப்பதில் பொதுஜனங்கள் மேற்கண்ட அபிப்பிராயமுடைய கனவான்களையே சட்டசபை லோக்கல் போர்டு முதலிய ஸ்தாபனங்களில் போய்ச் சேரும்படி பார்க்க வேண்டியதே முக்கிய கடமையாகும் என்பதைப்பற்றி நாம் சொல்லவேண்டியதில்லை.

(முற்றுப்பெற்றது)

## ஈ. வெ. ராமசாமியின்

# இலங்கை உபந்யாசம்

......(--)......

ஐரோப்பா, ஆப்பிரிக்கா ரஷியா முதலிய தேசங்களில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு இலங்கை வழியாக இந்தியாவுக்குத் திரும்புகையில் 1932-ஹு அக்டோபர் 17-ந்தேதி கொழும்பு வந்திறங்கின பெரியார் ஈ. வெ. ராமசாமிக்கு இலங்கையில் பல இடங்களில் அதாவது கொழும்பு, கண்டி, நாவல்பட்டி, ஹட்டன் யாழ்ப்பாணம், பருத்தித்துறை முதலிய இடங்களிலும் இந்தியாவில் தூத்துக்குடி, மதுரை முதலாகிய இடங்களிலும் பலஸ்தாபனங்களின் பேரால் அளித்த சுமார் 20 வரவேற்புப் பத்திரங்களுக்குப் பதிலளிக்கையிலும், பொதுக்கூட்டங்களிலும் செய்துள்ள உபந்யாசங்களைத் திரட்டி எழுதப்பட்டது.

## பெரியார் உபந்யாசம்

தோழர்களே, கூட்டங்களில் தலைவர்களின் முன்னுரையிலும், உபசாரப் பத்திரங்களிலும், மற்றும் பேசியவர்களும் அளவுக்குமீறி என்னைப்பற்றியும், எனது சிறு தொண்டைப்பற்றியும் புகழ்ந்துகூறி இருக்கிறீகள். அப்படிப்பட்ட புகழ்ச்சிகளுக்கு நான்சிறிதும் தகுதியுடையேன் அல்லன் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன் அதோடுகூடவே இதன் மூலம் நீங்கள் எனது கொள்கைகளையும், தொண்டையும் ஆதரிக்கிறீர்கள் என்பதை உணர்ந்து மகிழ்ச்சியடைகிறேன்.

தோழர்களே! எனது அபிப்பிராயத்திற்கும், முயற்சிக்கும், குறிபிடத்தகுந்த அளவு எதிர்ப்பு இருக்கின்றது

என்பதை நானறியாமலோ, அல்லது அந்தம் அவைகளை மறைக்க முயலவோ இல்லை. யார் எவ்வளவு எதிர்த்த போதிலும், யார் எவ்வளவுக்குத் தூஷித்து விஷமப் பிரசாரம் செய்த போதிலும், யார் எவ்வளவு எனது அபிப்பிராயம் வெளியில் பரவாமல் இருக்கும்படியும் சூழ்ச்சிகள் செய்து மக்களின் கவனத்தை வேறுபக்கம் திருப்பிய போதிலும், உலகத்தின் எல்லா பாகங்களிலும் வேதபுராண—சரித்திர காலம் முதல் இன்றைய வரையிலும் மனித சமூகமானது கடவுள், ஜாதி, மதம், தேசம் என்னும் பேர்களால் பிரிவு பட்டு உயர்ந்தவன்—தாழ்ந்தவன், ஏழை—பணக்காரன், முதலாளி—தொழிலாளி, அரசன்—பிரஜைகள், அதிகாரி—குடிஜனங்கள், குரு—சிஷ்யன், முதலியனவாகிய பலதன்மையில் வகுப்பு வித்தியாசங்களுக்காளாகி மேல் கீழ்த்தரத்தோடு கட்டுப்பாடான சமுதாயக் கொடுமைகளாலும், அரசாங்க சட்டங்களாலும், கொடுமைக்குள்ளாகி வந்திருக்கின்றது-வருகின்றது என்பதை மாத்திரம் யாராலும் மறுக்கவும், மறைக்கவும் முடியாது என்று உறுதியாய்ச் சொல்லுவேன். இவ்வகுப்பு பேதங்களால் மக்கள்படும் துன்பத்தையும், அனுபவிக்கும் இழிவையும் அல்லும் பகலும் காடுகளிலும், மேடுகளிலும், தொழிற்சாலைகளிலும் கஷ்டமான வேலைகளைச் செய்தும், வயிறார கஞ்சியில்லாமலும், குடியிருக்கவீடும் மழைக்கும் வெய்யிலுக்கும் மறைவுக்கும் நிழலும், இல்லாமலும் எத்தனைபேர் அவதிப்படுகின்றார்கள் என்பதை சிந்தித்துப்பாருங்கள் அவர்களது நிலைமையை உங்கள் மனதில் உருவகப்படுத்திப்பாருங்கள். இந்தக் கொடுமைகள் எத்தனை காலமாக இருந்துவருகின்றன? இன்றா? நேற்றா? இது அந்நிய அரச ஆட்சியாலா? அல்லது சுய ஆட்சி இல்லாததாலா? தர்மதேவதை ஆட்சி, அவதார ஆட்சி, தெய்வாம்ச ஆட்சி இல்லாததாலா? என்பதையும் சிந்தித்துப்பாருங்கள். உலக சரித்திரம் கிடைத்தது முதல் உலகத்தில் எந்தப்பாகத்தில் எந்த ஆட்சியால் என்றையதினம் இந்தக்கொடுமைகள் இல்லாதிருந்தது? என்பதைச் சற்று நினைவுக்குக் கொண்டு வந்து பாருங்கள்.

## காரணம்

தோழர்களே! இனி இதற்கு அடிப்படையாகவும் அரணாகவும் இருந்துவரும் காரணங்கள் எவை என்பதை நீங்கள் சற்று நடுநிலைமையில் இருந்து சிந்தித்துப்பார்த்தீர்களானால் இக்கொடுமைகளுக்கு முக்கிய காரணம் முற்கூறிய கடவுள், மதம், ஜாதீயம், தேசியம் என்பவையாகிய மயக்க உணர்வை மக்களுக்கு ஏற்றி அதன் பயனாக பெரும்பான்மையான மனிதசமூகத்தை மடமையாக்கி ஏய்த்து, அடிமைப் படுத்தி தங்கள் சுயநலமே பிரதானமெனக்கருதி சோம்பேறிகளாய் இருந்துகொண்டு சுகம் அநுபவித்துவரும் ஒரு சிறு கூட்ட மக்களின் சூழ்ச்சியே ஒழிய வேறில்லை என்பதை தெள்ளத் தெளிய உணர்வீர்கள்.

இந்த சூழ்ச்சிகளை யாராவது வெளிப்படுத்தக் கிளம்பிவிட்டாலோ உடனே அப்படிப்பட்ட காரியத்தை நாஸ்திகம் என்றும், மதத்துரோகம் என்றும், தேசத்துரோகமென்றும், தேசியத்துக்கு விரோதமென்றும், சிலர் சொல்லி அடக்கிவிடப்பார்க்கிறார்கள். இப்படிச் சொல்லி அடக்குகின்றவர்கள் யார் என்று பார்த்தாலோ அவர்கள் பெரிதும் மேல்நிலையில் இருந்துகொண்டும்; சரீரத்தினால் சிறிதும் பாடுபடாமல் சோம்பேறி வாழ்க்கையில் இருந்துகொண்டும் அந்நியன் உழைப்பில் சுகமநுபவிக்கும் ஒரு சிறு கூட்டத்தாரும் மற்றும் அவர்களால் தங்கள் நிலைமையைக் காபாறறிக்கொள்வதற்காக என்று ஏற்படுத்தப்பட்டு இருக்கும் கூலிப்பிரசாரகர்களுமே யாவார்கள். அதோடு "ஈன ஜாதி" யாராயும்; ஏழைகளாயும் தொழிலாளர்களாயும் கூலிகளாயும் கருதப்பட்டும் கீழ் நிலையில் இருந்த வெகு காலமாய் தலைமுறை, தலைமுறையாக இழிவு படுத்தப் பட்டும் அரைப்பட்டினி கிடந்து உழலும் மக்களிலும் சிலர் அவர்களுடன் சேர்ந்துகொண்டு மேல்கண்டபடி கூப்பாடு போடுவதையும் பார்க்கலாம். இதற்கு சமாதானம் சொல்லுவ

தென்பது சிலருக்கு சற்று கஷ்டமானதாகக் காணப்பட்டா லும் கூர்ந்து கவனித்தால் மேற்கண்ட உயர்நிலையை நிரந்தர மாய்க் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்கின்ற கருத்தின் மீது செய்து கொண்டிருக்கும் ஏற்பாடுகளான கடவுள், மதம், தேசியம் தேசம், ஆகியவற்றின் ஸ்தாபனங்களும், அவற்றிற்குள்ள கவசமும், காப்பும், அவை சம்பந்தமான பிரசாரங்களுமேதான் காரணம் என்பது தெளிவாய் விளங் காமல் போகாது.

## என்ன செய்ய வேண்டும்

ஆகையால் மேற்கண்ட கஷ்டப்படும் மக்களுக்கு விடு தலையும் சமத்துவமும் வேண்டுமானால் முதலில் அக்கவசங் களையும், காப்புகளையும் உடைத்தெரிய வேண்டும். அவற் றின் பிரசாரங்களையும் முறியடித்துத்துரத்த வேண்டும். அஃதில்லாமல் வேறு எவ்வளவு பாடுபட்டபோதிலும் கஷ் டப்படும் மக்கள் ஒருநாளும் விடுதலையடைய முடியாது. இக்காரியம் செய்வது என்பது அவ்வளவு சுலபமான காரிய மல்ல. செய்பவர்களுக்கு மகத்தான உறுதியும், தன்னல மறுப்பும் வேண்டும். அநேகதுன்பங்களுக்கும், தொல்லை களுக்கும், பழிப்புகளுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாகத் தயாராயிருக்க வேண்டும். ஊரார் நம்மைப்பற்றி என்ன சொல்லுகிறார்கள்—சொல்லுவார்கள்" என்பதைப் பற்றிச் சிறிதும் சிந்திக்கக்கூடாது. போலி மானாபிமானங்களையும் கௌரவங்களையும், வசவுகளையும் துச்சமாய்க் கருத வேண் டும். பாமர மக்களால், சுயநல சூழ்ச்சிகாரர்களால் வசவு கேட்கவும், உயிர்விடவுங்கூட தயாராயும் இருக்க வேண்டும். இந்தநிலையில் உள்ளவர்களால் அல்லாமல் வேறுயாராலும் இக்காரியங்கள் ஒரு சிறிதும் செய்ய முடியாது என்பதை ஞாபகத்திலவையுங்கள்.

## தானாக ஏற்பட்டதல்ல

தோழர்களே! கடவுள், மதம், ஜாதீயம், தேசீயம் தேசாபிமானம் என்பவைகள் எல்லாம் மக்களுக்கு இயற்கையாக தானாக ஏற்பட்ட உணர்ச்சிகள் அல்ல. சகல துறைகளிலும் மேல்படியிலுள்ளவர்கள் தங்கள் நிலை நிரந்தரமாயிருக்க ஏற்படுத்திக்கொண்டிருக்கும் கட்டுப்பாடான ஸ்தாபனங்களின்மூலம் பாமர மக்களுக்குள் புகுத்தப்பட்ட உணர்ச்சிகளேயாகும். இந்தப்படி புகுத்தப்பட வேண்டிய அவசியமும், காரணமும் என்னவென்று பார்த்தால் அவை முற்றும் பொருளாதார உள் எண்ணத்தையும், அந்நியர் உழைப்பாலேயே வாழவேண்டும் என்கின்ற உள் எண்ணத்தையும் கொண்ட பேராசையும், சோம்பேறி வாழ்க்கைப் பிரியமுமேயாகும்.

## ஆதியில்

ஆதியில் மனிதர்கள் காடுகளில் தனிமையாய்—சுயேச்சையாய்த் திரிந்து—இயற்கை வாழ்க்கையிலிருந்து சமூகக் கூட்டு வாழ்க்கைக்கு வரும்போது அவனவன் தன் தனக்குவேண் வேண்டிய சகல காரியங்களையும் தானே செய்துக்கொண்டும், அவசியமான பரஸ்பர உதவிகளை வழங்கிக்கொண்டும் ஒரே சமூகமாய் சமத்துவமாய் வாழலாம் என்று எண்ணியே ஒழிய மற்றபடி மற்றொருவனை அடிமைப்படுத்தி அவனிடம் தனக்குவேண்டிய எல்லா வேலையையும் வாங்கிக்கொண்டு ஏய்த்து அவனை உலக சுகபோகங்களில் பட்டினி போட்டு, தான்மாத்திரம் சோம்பேறியாய் இருந்து வாழ்ந்து கொண்டு எல்லா சுகபோகங்களையும் தானே அனுபவித்துக்கொண்டு இருப்பதற்கோ, அல்லது மற்றவனுக்கு அடிமையாய் இருந்து கஷ்டப்பட்டு உழைத்து அவ்வுழைப்பின் பெரும்பயனை மற்றவன் அனுபவிக்க விட்டுவிட்டு தான் பட்டினி கிடப்பதற்கோ அல்ல என்பது நேர்மை

யுள்ள மனிதர் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயமாகும்.

ஆனால் நாள் ஏறஏற மக்களுக்குள் சிலருக்கு பேராசையும், பொறாமையும் சோம்பேறித் தனமும் வலுக்க வலுக்க அவற்றிலிருந்து செல்வவானும் அரசனுக்கு குருவும் ஏற்பட்டு பிறகு அவற்றை நிலைநிறுத்த ஆத்மா, கடவுள், வேதம், ரிஷிகள், மகாத்மாக்கள் ஆகியவைகளைக் கற்பித்து பிறகு அவைகள் மூலம் கடவுள் செயல், முன்ஜென்மம் பின்ஜென்மம், கர்மம், பாவம், புண்ணியம், மேல்உலகம், கீழ்உலகம், தீர்ப்புநாள், மோக்ஷம், நரகம், ஆகியவைகளும் கற்பிக்கவேண்டியதாய் விட்டது.

இந்தக் கற்பனைகளின் பயன்தான் பெரும்பான்மையான மக்கள் பாமரர்களாகவும் ஏமாற்றப்படவும், கொடுமைக்குள்ளாகவும் மற்றவர்களுக்கு அடிமையாகி உழைக்கவும் உழைத்தும், சரியான கூலி கிடைக்காமல் பட்டினிகிடந்து உழல்வதை பொறுமையுடன் பொறுத்துக்கொள்ளவுமான காரியங்கள் நடந்து வருவதுடன் அவை எங்கும், என்றும் நிலைத்தும் நிற்கின்றன. எப்படியானும் இந்த நிலை அடியோடு அழிக்கப்படவேண்டும், அதற்காக அதன்காப்புகளுக்கான மேற்குறிப்பிட்ட கடவுள், மதம், தேசியம், ஜாதியும் என்பவைகளும் அவற்றின் பேறுகளான ஆத்மா, முன்ஜென்மம், கர்மம், தீர்ப்பு மோக்ஷ நரகம், பாவ புண்ணியம், ஆகியவைகளாகிய போலி உணர்ச்சிகளும் அவற்றின் ஸ்தாபனங்களும் உடைத்தெறியப்பட வேண்டும்.

## தலைவிதி

கஷ்டப்படுகிற மனிதர்கள் தாங்கள் பாடுபட்டும் பட்டிடினி இருக்க நேருவதையும் "யோக்கியமாய்" 'நாணயமாய்'

நடக்தும் 'இழிவாய்' 'கீழ் மக்களாய்' கருதப்படுவதுமான தங்களது கொடுமையின் நிலைமைக்கு மற்றவர்களால் தாங்கள் ஏமாற்றப்படுவதுதான் காரணம் என்பதை உணராமல், தங்களுடைய முன் ஜென்ம கர்மபலன்—தலைவிதி கடவுள் செயல் என்பதாகக் கருதிக்கொண்டு சிறிதும் முன்னேறுவதற்கு முயர்சி செய்யாமலும் சூழ்ச்சியின் தன்மையை உணராமலும் இருப்பதோடு தங்கள் நிலைமையைப்பற்றி சிறிதும் அதிருப்திகூட அடையக்கூடாதென்று கருதி தங்கள் நிலைமையைப்பற்றி தாங்களே சமாதானமும் சாந்தமும் அடைந்துகொள்கிறார்கள். வெளியில் சொல்லிக்கொள்ளக்கூட வெட்கப்படுகிறார்கள். ஏனெனில் கஷ்டப்படுகின்ற மக்களுக்கு கடவுள் உணர்ச்சியும் மதமும் இதைத்தான் போதிக்கின்றது. எப்படிஎன்றால்:—

"ஓ கஷ்டப்படுகின்ற மனிதனே! கஷ்டப்பட்டும் பட்டினி கிடக்கின்ற இளைத்த ஏழை மனிதனே!! நீ உனது முன்ஜென்ம பாபகர்ம பலத்தினால்—தலைவிதியால்—கடவுள் சித்தத்தால், இம்மாதிரி துன்பத்தை அனுபவிக்கின்றாய், இந்த ஜன்மத்தில் நீ உனக்கேற்பட்ட இதே நிலைமையைப் பொறுமையுடன் ஏற்று சமாதானமும் சாந்தமும் அடைந்து இருப்பாயாகில் அடுத்த ஜன்மத்தில் சுகப்படுவாய்—மேலான பிறவி பெறுவாய்—அல்லது மேல் உலகில் மோக்ஷம் என்னும் மேன்மையை அடைவாய்—கடவுள் சன்மானம் அருளுவார்" என்கின்ற உபதேசமேயாகும்.

இந்தப் பொறுமை உபதேசமும், சாந்த உபதேசமும், சமாதான உபதேசமும், மக்களைக் கோழைகளாகவும், முற்போக்கற்றவர்களாகவும் செய்து அவர்களது கஷ்டத்திலிருந்தும் இழிவிலிருந்தும், முன்னேறமுடியாமலும் சுயமரியாதை உணர்ச்சி பெறாமலும் இருந்து உயிர்வாழும்படி செய்துவந்திருக்கிறது.

## இவ்வளவுதானா?

இவ்வளவு மாத்திரம்தானா? இந்தக் கடவுள் உணர்ச்சியும் மதமும் செல்வந்தர்களுக்கும், மிராசுதாரர்களுக்கும் மற்றும் உத்தியோகம், வியாபாரம், லேவாதேவி என்னும் பேர்களால் ஏழைகளிடமிருந்து பெரும்பணம் கொள்ளை கொண்டு மற்றவர்களைப் பட்டினிபோட்டுப் பெரும்பணம் சேர்க்கும் பணக்காரர்களுக்கும் போதிப்பது என்ன என்பதைப் பார்த்தாலோ அது,

> "ஓ பிரபுக்களே ! செல்வவான்களே !! ஏராளமாக மேலும் பணம் சேர்க்கும் பணக்காரர்களே !!! லக்ஷிமி புத்திரர்களே !!!! நீங்கள் முன் ஜென்மத்தில் செய்த புண்ணிய கர்மங்களால்—கடவுள் உங்கள்மீது வைத்த கருணையினால் இவ்வுயர் நிலையை அடைந்திருக்கிறீர்கள்— இவ்ஏராளமான பண வருவாய்கள் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இச்சுகபோகம் உங்களுக்குக் கிடைத்ததற்கு காரணம் கடவுள் சித்தமேயாகும். ஆதலால் நீங்கள் கடவுள் பக்தி உள்ளவர்களாக இருந்து கடவுளுக்குக் காணிக்கை செலுத்துவதன் மூலமும், கடவுளுக்குக் கோயில் கட்டுவதன் மூலமும் கடவுள் பக்தர்களான பாதிரி, குரு, பிராமணர் முதலியவர்களுக்கு மரியாதை செய்து சத்திரம், மடம் முதலிய உதவி அளிப்பதன் மூலமும் நன்றி செலுத்தி இந்நிலையை நிலை நிறுத்திக்கொள்ளுவதுடன் மோக்ஷலோகத்திலும் சுலபமாக இடம் சம்பாதித்துக்கொள்ளுங்கள்"

என்பதேயாகும். ஆகவே தோழர்களே! இந்தக் காரணங்களாலேயே மக்களில் உயர்வு—தாழ்வும், எஜமான்—அடிமையும், முதலாளி—தொழிலாளியும், அரசன்—குடிகளும், குரு—சிஷ்யனும் ஏற்பட்டிருக்கின்றன என்பதை இப்போதாவது உணருகிறீர்களா?

## அரசன்

உலகிற்கு அரசன், அரசாட்சி என்பதாக ஒருவகை இருந்து வருவதன் காரணமெல்லாம்கூட செல்வவான்களின் செல்வங்களைக் காப்பாற்றவும் சோம்பேறி வாழ்க்கைகளையும் அவர்களது, தத்துவங்களையும் பிறர் இகழாமல் இருக்கவுமே ஒழிய மற்றபடி மக்கள் சமூகம் துன்பப்படாமலோ, மற்றவர்களால் கொடுமைப் படுத்தப்படாமலோ சகல துறைகளிலும் உயர்வு தாழ்வு கொடுமை இல்லாமலோ, இருப்பதற்காக அல்லவே அல்ல என்பதை நீங்கள் உறுதியாய் நம்புங்கள்.

இதுபோலவேதான் முன்குறிப்பிட்ட கடவுள் மத உணர்ச்சி கற்பிக்கப்படுவதும் ஏழைகள் தாங்கள் படும் கஷ்டங்களுக்குக் காரணம் முதலாளிகளின் சூழ்ச்சியும், சோம்பேறிகளின் தத்துவங்களும் என்பதை உணராமல் இருப்பதற்காகவே ஒழிய வேறில்லை.

## உதாரணம்

உதாரணம் வேண்டுமானால்; இன்றையதினம் கஷ்டப்படுவதாகவும், இழிவுபடுத்தப்பட்டதாகவும், பட்டினி கிடந்து துன்பப்படுவதாகவும், காணப்படும் மக்களில் அநேகரை அணுகி அவர்களது இவ்வித கஷ்டநிலைக்கு காரணம் என்ன என்று கேட்டுப்பாருங்கள். உடனே அவர்கள் சற்றும் தயக்கமின்றித் தங்களின் கஷ்டநிலைக்குத் தங்கள் "தலைவிதி" என்றும் "முன் ஜன்ம கர்மபலன்" என்றும் "கடவுள் சித்தம்" என்றும் "ஆண்டவன் கட்டளை" என்றும்தான் பதில் சொல்லுவார்களேயொழிய பிற மனிதர்களால்—அரசாங்க சட்டத்தால்—செல்வவான்களின் சூழ்ச்சியால், சோம்பேறிகளின் தந்திரத்தால், தாங்கள் ஏமாற்றப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு, அவதிப்படுவதாக ஒருநாளும் சொல்லமாட்டார்கள், ஆதலால்தான்

ஏழைகளின் கஷ்டங்களை விலக்கவேண்டுமென்பவர்கள் முதலில் அதற்கு அஸ்திவாரமான காரணகாரியங்களைக் கண்டுபிடித்து அழித்தெறியவேண்டுமென்று சொல்ல வேண்டி இருக்கின்றது.

## கடவுள்

கடவுள் என்பது அருத்தமும் குறிப்பும் அற்ற வார்த்தையாய் இருந்து வந்தபோதிலும் அது மனித சமூகத்தில் 100-க்கு 99மக்களைப்பிடித்து தன்வயப்படுத்தி மடமையாக்கி ஆதிக்கம் செலுத்தி வருகிறது. கடவுள் என்ற வார்த்தை கற்பிக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஆகியிருந்தபோதிலுங்கூட கடவுள் என்பது இன்னது என்று குறிப்பாக குளறுபடி இல்லாமல்—தெளிவுபட உணர்த்தியவர்களோ, உணர்ந்தவர்களோ, இதுவரையில் காணக்கிடைக்கவில்லை. பொதுவாக அந்தப்படி ஒரு உணர்ச்சியை மக்களுக்குள் எப்படியாவது புகுத்தி அவர்களைப் பயப்படுத்தி வைக்கவேண்டும் என்கின்ற அவசியத்தினால் அதற்கு என்று வேறு ஒரு (மானச) உலகத்தையும் பாவபுண்ணிய பயனையும், மோக்ஷ நரகத்தையும், கற்பித்து அதைப் பரப்ப பலவித ஸ்தாபனங்களை உண்டாக்கி அதன் பிரசாரத்தின்பேரால் பிழைக்க ஒரு கூட்டத்தையும் ஏற்பாடுசெய்து, அக்கூட்டத்திற்கு அதிலேயே பிழைத்துத்தீரவேண்டியதான நிலைமையையும் ஏற்படுத்திவிட்டதால் வெகு சுலபமாகவும், செல்வாக்காகவும், அதன் பிரசாரம் நடக்கவும் மக்களை தன் வயப்படுத்தவுமான காரியங்கள் நடந்துகொண்டே வருவதோடு கடவுள் என்பது என்ன என்று உணருவதற்கில்லாமலும், உணரவேண்டும் என்று நினைப்பதற்கில்லாமலும் இருந்து வருகிறது.

யாராவது கடவுளைப்பற்றி நெருக்கிப்பிடித்துக் கேட்டால் அது முழுவதும் முரணான கருத்துக்களையும்

செய்கைகளையும் கொண்டிருப்பதும், ஆளுக்கு ஒருவித வியாக்கியானம் கூறுவதுமாய் இருப்பதோடல்லாமல் வேறுவிதமாய் குறிப்பான பதில் கிடைப்பது என்பது அரிதாகவே இருக்கிறது.

கடவுள் என்பது சர்வ வல்லமையும், சர்வ வியாபகமும், சர்வ சக்தியும் கொண்ட ஒரு ஒப்பற்ற தனிப் பொருளென்று சொல்லப்பட்டுவிட்டு, உடனேயே அது கண்ணுக்குத் தெரியாதது என்றும், மனத்திற்குத் தோன்றாதது என்றும் சொல்லப்படுவதோடல்லாமல், அதற்கு உருவம் இல்லை யென்றும், குணம் இல்லையென்றும் இன்ன தன்மையது என்று விளக்கமுடியாதது என்றும் சொல்லப்பட்டுவிடுகின்றது.

## ஒரு வேடிக்கை

இவற்றுள் மற்றொரு வேடிக்கை என்ன வென்றால் இப்படிப்பட்ட ஒரு கடவுள் தன்மையை அதாவது "சர்வ சக்தியும், சர்வ வியாபகமும், உடையதும், கண்ணுக்கும் மனதிற்கும் தென்படாததும்,குணமும் உருவமும் இன்ன தன்மையென்று குறிப்பிடக்கூடிய தன்மை இல்லாதது" மான ஒரு கடவுளை நிலைநிறுத்தவும் அதைப்பற்றி மக்கள் நம்பிக்கைகொள்ளவும் "கடவுளால் உண்டாக்கப் பட்ட" மக்களிலேயே பலர் வக்காலத்து பெற்றுக் கடவுளை நிரூபிக்க ஒழுங்கற்ற முறையிலும் ஒழுக்க ஈன மான முறையிலும் எவ்வளவோ பாடுபடவேண்டி யிருப்ப துமேயாகும்.

மற்றும் அப்படிப்பட்ட வக்காலத்துக்காரர் தங்கள் சொந்த நிலையில் தங்களால் செய்யப்படும் ஒவ்வொரு காரியத்தையும் தாங்களே செய்வதாகவும், தங்களால் சொல்லப்படும் ஒவ்வொரு விஷயமும் தாங்களே அறிந்து சொல்வதாகவும் நினைத்தே பேசியும் நடந்தும் வருகி

றார்கள். அதுமாத்திரமல்லாமல் மற்றவர்களால் செய்யப்படும், சொல்லப்படும் ஒவ்வொரு விஷயத்தையும் மற்றவர்கள் தங்களுக்குச் செய்வதாகவும், சொல்வதாகவும், எழுதுவதாகவும்,கருதுவதுடன் மற்றவர்கள்மீது துவேஷமும், வெறுப்பும், விருப்பும் கொண்டு அவர்களை இன்ன இன்னபடி நடவுங்கள் என்றும், தங்களுக்கு இன்ன இன்ன காரியங்களைச் செய்துகொடுங்கள் என்றும் கோருகிறார்களேயல்லாமல் "இவை எல்லாம் சர்வ வல்லமையுள்ள கடவுள்" செயலால்தான் நடக்கின்றது. நடந்துவிடும் என்ற நம்பிக்கையும் உறுதியும் தைரியமும் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள்.

## மற்றொரு சாரார்

மற்றொருசாரார் "கடவுளைப் பார்க்காவிட்டாலும், உணராவிட்டாலும், உலகப் படைப்புக்கும் நடப்புக்கும் ஏதாவது ஒரு கர்த்தாவோ காரணமோ இருக்கவேண்டாமா? அப்படிப்பட்ட கர்த்தாவோ காரணமோ தான் கடவுள்" என்று சொல்லுகிறார்கள்.

மற்றொருசாரார் "உலகத் தோற்றத்திற்கும், நடப்புக்கும் ஏதாவது ஒரு சக்தி (force) யாவது இருக்தமல்லவா? அதுதான் கடவுள் என்கிறார்கள்.

மற்றொருசாரார் "இயற்கையே—அழகே—அன்பே—சத்தியமே கடவுள்" என்றும் இன்னும் பலவாறாக சொல்லுகிறார்கள். ஆனால் நமது நாட்டைப் பொறுத்தவரை நமது மக்கள் கடவுளுக்கு மனித உருவம் கற்பித்து, சாதாரண மனித வாழ்க்கையிலுள்ள பெண்டு பிள்ளை முதலியவைகளைக் கற்பித்து, செல்வவானுக்குள்ள குணங்களையும், சுகபோகங்களையும் கற்பித்து, அதற்குக் கோயில் பூசை உற்சவம், கல்யாணம், சாந்தி முகூர்த்தம் முதலியவைகளைக் கற்பித்து வணக்கத்திற்

காக என்று கோடானுகோடி ரூபாய்களை செலவு செய்யச்செய்து மக்களை அதுவும் ஏழை மக்களை வாட்டி வளைவெடுத்து தொல்லைப்படுத்தியும் வருகிறார்கள்! இப்படியாக கடவுளைப்பற்றி இன்னும் பலவிதமாய் அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டும் காரியத்திலும் பல செய்யப்பட்டும் வருகின்றன. இந்தவிதமான கடவுளைப்பற்றி அர்த்தமற்ற—குறிப்பற்ற பரிகாசத்திற்கும் முட்டாள் தனத்திற்கும் இடமான அபிப்பிராயங்களும் மற்றும் பாமர மக்களை தந்திரக்காரர்கள் ஏமாற்றுவதற்கான முறைகள்கொண்ட கருத்துக்களும் விவகாரங்களும் இன்றோ நேற்றோ அல்லாமல் வெகு காலமாகவே இருந்து வருகின்றது. அன்றியும் இக்கருத்துக்களை மதக்கொள்கைகள் என்பவற்றின் மூலமாகவும், அரசாங்க சட்டங்களின் மூலமாகவும் மறுத்துப்பேச இடங்கொடுக்காமலும், மீறிப்பேசினால் தண்டித்தும் மதவெறியால் என்றும் கொடுமைப்படுத்தியும்தான், காப்பாற்றப்பட்டும் நிலைநிறுத்தப்பட்டும் வந்திருக்கின்றது.

## இன்றும்கூட

இன்றும்கூட நமது இயக்கப் பிரசாரங்களில் அவற்றின் கொள்கைகளைப்பற்றி ஆட்சேபிக்கக்கூடிய வகை சுலபத்தில் இல்லாமல் இருப்பதால் வேறுவழியில் தந்திரமாய் அதாவது "சு-ம இயக்கக் கொள்கைகள் எல்லாம் சரி. அது ஏழைகளுக்குத்தான் பாடுபடுகின்றது. ஏழை பணக்காரன் என்கின்ற வித்தியாசம் கூடாதென்கின்றது. ஆனால் அது கடவுள் இல்லை என்று சொல்லுகின்றது, மதத்தை அழிக்கின்றது, மக்களை நாஸ்திகராக்குகின்றது, அதுதான் எமக்குப் பிடிக்கவில்லை. ஆதலால் அதை வளரவிடக்கூடாது" என்று சொல்லுவதன் மூலம் நமக்கு எதிர்ப்பிரசாரம் செய்கின்றார்கள். மற்றும் பல இடங்களில் நாம் போகுமுன்பே நாஸ்திகன் வந்துவிட்டான், மதத்துரோகி வந்துவிட்டான் என்று விஷமப் பிர

சாரம் செய்து மக்களை நமது பிரசங்கத்தை—நான் என்ன சொல்லுகிறேன் என்பதை கேட்க அனுமதிக்கக்கூட மறுக்கின்றார்கள். மற்றும் சில இடங்களில் பலாத்கார முறையில்—காலித்தனமான முறையில் நமது பிரசாரத்தை கலைக்க முயற்சிக்கிறார்கள்.

## காரணம்

இதன் காரணம் என்னவென்று பார்க்கப்போனால் கண்டு பிடிப்பது மிகவும் சாதாரணமான விஷயமேயாகும். அதாவது அவர்களது "எங்கும் நிறைந்த" "எல்லாம் வல்ல" "அவனன்றி ஓரணுவும் அசையாததான" கடவுள் நம்பிக்கையும், அப்படிப்பட்ட கடவுளின் அவதாரங்களாலும், கடவுள் அம்சம் பெற்றவர்களாலும், கடவுள் குமாரராலும் உண்டாக்கப்பட்ட மத நம்பிக்கையும் ஒழிந்துவிடும் என்கின்ற எண்ணமேயொழிய வேறில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதன் கருத்து என்னவென்றால் எல்லாம்வல்ல, எங்கும் நிறைந்த கடவுள் உணர்ச்சியும், தத்துவமும் ஒரு சாதாரண மனிதனால் அழிக்கப்பட்டுவிடும் என்றும், கடவுள் அவதாரம், அம்சம், குமாரன், தூதன் ஆகியவர்கள் முதல் உபதேசிக்கப்பட்ட மதமானது ஒரு சாதாரண மனிதன் முயற்சியால் அழிக்கப்பட்டுவிடும் என்றும் இதனால் மனித சமூகத்தின் மேன்மை போய்விடுமென்றும் பயந்தே இம்மாதிரி விஷமப் பிரசாரம் செய்வதாயும், பலாத்கார செயல்கள்கூட செய்ய வேண்டி இருப்பதாயும் தீர்மானிக்கவேண்டி இருக்கிறது. இவ்விதமாக கடவுள் நம்பிக்கையின் பேரால் மத நம்பிக்கையின்பேரால் பலாத்காரச் செயல்—எதிர்ப்பிரசாரம்—விஷமப் பிரசாரம் ஆகியவைகள் செய்யப்படுவது பெரிதும் அறியாமையால் என்றோ, மதத்தையும் கடவுள் தன்மையும் சரிவர உணராததினால் என்றோ, அல்லது மதவெறி கடவுள் வெறி என்றோ சொல்லிவிட முடியாது. ஏனெனில் கடவுளும் மதமும் உள்ள உலகில் மக்கள் தோன்றியகாலமுதலே

அவற்றிற்கெதிரிடையான கருத்துடையவர்களையும், அவற்றை ஒப்புக்கொள்ளாதவர்களையும் அரசாங்கமும், மதஸ்தாபகக்காரர்களும் கொன்றும் சித்திரவதை செய்தும், தண்டித்தும் கொடுமை செய்தும் வந்திருப்பதானது கடவுள் மதம் சம்பந்தமான சரித்திரங்களாலும், பிரச்சார முறைகளாலும் நன்றாய் உணரலாம். இக்கொள்கையை இன்னும் சில சமயக்காரர்கள் கையாண்டு வருவதையும் நம் போன்றவர்கள் கடவுள், மதநம்பிக்கைக்காரர்கள் என்பவர்களால் நடத்தப்படுவதையும் கொண்டும் உணரலாம். ஆகவே இதன் கருத்து சுயநலமும் சோம்பேறி வாழ்க்கைப் பிரியமும் பயமுமே ஒழிய வேறில்லை.

## மதம்

மதங்கள் என்பதை "சர்வ வல்லமையும்" "சர்வ வியாபகமும்" உள்ளதாகச் சொல்லப்படும் கடவுள் உணர்ச்சியை மக்களிடம் பெருக்கவும், அதை நிலைநிறுத்தவும் ஏற்பட்ட ஸ்தாபனங்களாய் இருந்துவருகின்றனவேயொழிய மற்றபடி எந்த மதத்தாலாவது, அதைச் சேர்ந்த உலகமக்கள் வாழ்க்கையிலோ பொருளாதாரத்திலோ சுதந்தரமோ, சமத்துவமோ பெற்று கேவலம் ஜீவனத்திற்காக மற்ற மனிதனுக்கு அடிமையாகாமல் வாழ்வதற்கு இடமளித்திருப்பதாய் காணமுடியவில்லை. ஒரு மதக்காரனே தன் மதத்தைச்சேர்ந்த மற்றொருவனை அடிமை கொண்டிருக்கிறான். ஆனால் அவன் மத நம்பிக்கை யென்பது "மக்கள் யாவரும் கடவுள் பிள்ளைகள்" "எல்லோரும் சமமானவர்கள்" என்று போதிப்பதாகத்தான் சொல்லுகிறான். ஆனால் ஏழை, பணக்காரன், கூலிக்காரன், எஜமான் என்கின்ற வித்தியாசம் எப்படி ஏற்பட்டது என்பதை மாத்திரம் உணரும்போது "எல்லாம்வல்ல கடவுள் சக்தியையும், சமத்துவ மத போதனையையும்," மறந்துவிடுகிறான்.

மதம் என்பது ஒரு போதை தரும் (வெறி உண்டாக்கும்) வஸ்து என்று பல அறிஞர்கள் கூறியிருப்பது போல், மதத்தின் ஆதிக்கத்தில் கட்டுண்டு இருப்பவர்களுக்கு ஆவேசமும், வெறியும் உண்டாவதுதான் முக்கிய பலனாக இருக்கிறதேயொழிய, அது கஷ்டப்படுகின்ற, ஒருபாவமுமறியாத பாமர மக்களுக்கு காரியத்தில் இன்று என்ன நன்மை செய்திருக்கின்றது? செய்கிறது? மதத்தால் மக்களுக்கு என்ன ஒழுக்கம் ஏற்பட்டிருக்கிறது? என்ற கேள்விகளுக்கு "இது மதத்துரோகமான கேள்விகள்'' என்று சொல்லுவதல்லாமல் வேறு எவ்விதமான பதிலும் சொல்லுவதற்கு வகைகாணவில்லை.

எல்லா மதங்களும் கடவுள் அருளால், கடவுள் அம்சம் பெற்றவர்களால், கடவுளால் அனுப்பப்பட்டவர்களால் ஏற்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் ஒரு மதத்திற்கும் மற்றொரு மதத்திற்கும் நடப்பு, வேஷங்கள், சடங்குகள் ஆகியவைகளுடன் மற்றும்பல முக்கியவிஷயங்களில் பெருத்த மாறுபாடும், துவேஷமும், வெறுப்பும் பெரிதும் காணப்படுவானேன் என்பதைப் பார்த்தால் ஒன்றா? பத்து மதங்கள் இருந்தால் அதில் ஒன்று உண்மைபோகப் பாக்கி ஒன்பது மதங்கள் பொய்யாகத்தான் இருக்க வேண்டும். அல்லது ஒவ்வொரு மதமும் வெவ்வேறு கடவுள் அருளால் ஏற்பட்டதாக இருக்கவேண்டுமே ஒழிய ஒரே கடவுள் அருளால் ஏற்பட்டதாயிருக்காது. எப்படியிருந்தாலும் சர்வசக்தி, சர்வவல்லமை, சர்வவியாபகமுள்ள ஒரு கடவுள் அருளால் எந்த மதமாவது ஏற்பட்டது என்று சொல்லுவது பகுத்தறிவுக்கும், விவகாரத்துக்கும் நிற்காத காரியமேயாகும். அன்றியும் ஒரே மதத்தை அனுசரிக்கிற மக்கள் எல்லோரும் ஒரே மாதிரி நடக்கிறார்கள் என்று சொல்லுவதற்கோ அல்லது மதசக்தியானது மக்கள் யாவரும் ஒரே மாதிரி நடத்தப்படப் பயன்படுகின்றது என்று சொல்லுவதற்கோ இடமில்லாமல்தான் எல்லா மதங்களும் இருந்து வருகின்றன. ஏனெ

னில் ஊருக்கு ஒருவிதம், வகுப்புக்கு ஒருவிதம் நடப்ப துடன் வெளிப்படையாகவே ஒரே ஊரில் ஒரே மதக் கொள்கைக்குப் பலவித வியாக்யானங்களும் ஏற்பட்டு இருப்பதுடன் நடப்புகளும், எண்ணங்களும் வேறுபட் டிருக்கின்றன. ஒருசமயம் இப்படி மாறுபட்டு நடப்ப வர்கள் எல்லோரும் மூடமக்கள் என்றும், மதத்தைச் சரி வர உணராதவர்கள் என்றும் சுலபமாய்ச் சொல்லிவிட லாம். ஆனாலும் அந்த மதத்தை நம்பி அதை தலை முறை தலைமுறையாக பின்பற்றிவந்த மக்களின் கதி அதுதானா என்பதுமாவது யோசிக்கவேண்டிய முக்கிய விஷயமல்லவா என்று கேட்கிறேன்.

எது எப்படியிருந்தபோதிலும் முன் குறிப்பிட்ட அதாவது "சர்வ சக்தி, சர்வ வியாபகம், சர்வ தயாளத் தவம் கொண்ட கடவுளால்" சிருஷ்டிக்கப்பட்டவர்களா கவும் "சர்வ சமரசம் கொண்ட மதத்தைப்" பின்பற்றிய வர்களாகவும் உள்ள மக்களுக்குள் ஒருவன் ரிக்ஷாவண்டி இழுத்துக் கஷ்டப்படவும், ஒருவன் அதன் மேல் சுக மாய் உட்கார்ந்து சவாரி செய்யவும், ஒருவன் கிரீடத்தை அணிந்து பல்லக்கில் சவாரி செய்யவும் 16-பேர்கள் முக்கிமுக்கிச் சுமந்து செல்லவும், அக்கடவுளும் மதமும் எப்படி அனுமதித்தன என்ற கேள்விக்கு "அது நமக்குத் தெரியாது. சர்வ சக்தியுள்ள கடவுள் செயல்" என் பதைத் தவிர இதுவரை எந்தக் கடவுள் நம்பிக்கைக்கார ரும் மத நம்பிக்கைக்காரரும் வேறுபதில் சொன்னதாகத் தெரியவில்லை. ஒருசமயம் இச்செய்கைக்கு முறையே ஒருவனின் அதாவது "ரிக்ஷாவண்டி இழுப்பவனின் முட்டாள்தனமும், சவாரி செய்பவனின் அயோக்கியத் தனமும்" என்று பதில் சொல்லக்கூடுமானாலும் சர்வசக் தியும் சர்வ வியாபகமும் சர்வ தயாபரத்துவமும்உள்ள கட வுளுக்கும் சர்வ மனிதசமூக சமத்துவமாகிய மதத்திற்கும் தன்னை ஏற்றித்துதித்து பின்பற்றும் மக்களின் இம்மட மையையும், அயோக்கியத்தனத்தையும் நிறுத்த முடிய

வில்லை என்பதாவது விளங்குகின்றதா இல்லையா என்பதைப் பொறுமையோடு பகுத்தறிவுடன் நடுநிலையில் இருந்து யோசித்துப்பாருங்கள்.

## சற்று கவனியுங்கள்

தோழர்களே, இங்கு சற்று கவனியுங்கள். என்னவென்றால் மேற்சொன்ன கடவுள் உணர்ச்சியும், மத உணர்ச்சியும் மேலே குறிப்பிட்ட மடமையையும் அக்கிரமத்தையும் ஒழிப்பதற்குச் சிறிதும் பயன்படாமலிருப்பதோடு அம்மடமையையும், கொடுமையையும் நிலைநிறுத்துவதற்கும், அமுல் நடத்துவற்கும் பயன்பட்டு வருகின்றதா இல்லையா என்பதையாவது பரிசுத்த நிலையிலிருந்து யோசித்துப்பாருங்கள்.

கடவுள், மத உணர்ச்சியானது மக்களின் சுதந்திரத்திற்கும் சமத்துவ வாழ்விற்கும் இவ்வளவு இடையூறும் தாரதம்மியங்களும் ஏற்பட இடந்தராதிருக்குமானால் நான் அவைகளைப் பற்றி இவ்வளவு கவலை எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது என்பதோடு கடவுள் மத பிரசாரத்தின் பேரால் வயிற்றுப் பிழைப்பு நடத்தவேண்டியவர்களின் பரிதாபத்திற்காகவாவது சும்மாவிட்டுவிடுவேன் என்பதை நம்புங்கள். ஏனெனில் ஒரு மனிதன் அநாவசியமாய் அர்த்தமும் குறிப்பும் அற்ற வார்த்தைக்காக பைத்தியம் பிடித்திருந்தாலொழிய போராடிக்கொண்டிருக்க முடியாது. ஆனால் அதனால் பாமர மக்கள் சமூகத்திற்கு விளையும் கெடுதியைப் பார்க்கும் போது உண்மையான உணர்ச்சியுள்ளவன் அப்பிரச்சாரத்தை ஒழிக்கப் போராடாமல் இருக்கமுடியாது.

## கவலையில்லை

கடைசியாக "உலக உற்பத்திக்கும் இயற்கைத் தோற்றங்களுக்கும் நடப்புக்கும் ஏதாவது ஒரு காரணப் பொருள் இருக்கவேண்டாமா" என்று கேட்பதின்

மூலம் எப்படியாவது ஒரு சக்தி உண்டு என்பதையாவது ஒப்புக்கொள்ளச் செய்து, அதிலிருந்தே ஒரு கடவுளைக் கற்பிக்க முயற்சிகள் செய்யப்படுவதையும் அத்தோடேயே சர்வசக்தி — சர்வவியாபகம் உள்ள கடவுள் நம்பிக்கைக் காரர்கள் திருப்தி அடைந்து விடுவதையும், பிறகு அதை அஸ்திவாரமாக வைத்துப் பெரிய ஆகாயக் கோட்டைகள் கட்டுவதையும் பார்த்திருக்கிறேன். உலக உற்பத்திக்கும் அதில் காணப்படும் தோற்றங்களுக்கும் நடப்புகளுக்கும் விஞ்ஞானம் என்னும் சைன்சை தொடர்ந்துகொண்டே போனால் சமாதானம் கிடைக்கலாமானாலும் பிறகு "சைன்சுக்கு யார் கர்த்தா" என்கின்ற கேள்வியும் பிறக்கும். "அது இதுவரை எந்த அறிவாளிகளாலும் கண்டு பிடிக்கக்கூடியதாய் இல்லை" என்று பதில் சொன்னால் 'அதுதான் கடவுள்' என்று சொல்லி, திருப்தி அடைவார்கள். அப்படியானால் அந்தக் கடவுளுக்கு யார் கர்த்தா? அவர் எப்படி உண்டானார்? அவரின் நடவடிக் கைக்கு என்ன காரணம்? அதற்கு என்ன ஆதாரம்? என் பதான கேள்விகளை முன்னை விஷயங்களுக்கு போடப் பட்ட கேள்விகளைப் போலவே போட்டோமானால் "அப்படிப்பட்ட கேள்வி கேட்கக்கூடாது என்றும், கட வுளும் சக்தியும் தானாக உண்டானது என்றும், அதற் குக்காலவரையறை இல்லையென்றும் சொல்லுவார்கள். அச்சமாதானத்தால் நாம் திருப்தி அடையாவிட்டால் அல்லது இது உங்களுக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்டால் (அல்லது கடவுள் தானாக உண்டாகும்போது இயற்கை தானாக உண்டாகாதா என்று கேட்டால்) உடனே நம்மை நாஸ்திகன் என்று சொல்லிவிடுவார்கள். இந்தமாதிரிநிலையில்தான் ஏதோ யூகத்தின்மீது அதுவும் 'ஏதாவது ஒரு காரணம் இருக்கவேண்டும்' என்கிற யூகத்தின் மீதே 'இதுவாயிருக்கலாம் அல்லது அதுவாயி ருக்கலாம்' என்கிற பொறுப்பற்ற நிலையில் கற்பிக்கப் பட்ட ஒரு கடவுள் என்பதைப்பற்றி நாம் சிறிதும் கவ லைப்படுவதில்லை என்கிறேன்.

## பொறுப்பு ஏற்றுவது

ஆனால் அப்படிப்பட்ட கடவுளின் மீது மனித வாழ்க்கையின் பொறுப்புகளை சுமத்துவதும், அதை வணங்குவது தொழுவது, பிரார்த்தனை செய்வது என்பதும், அதை வணங்கினால் பிரார்த்தித்தால் தொழுதால் அதற்காக நேரத்தையும், அறிவையும் பணத்தையும், ஊக்கத்தையும் செலவு செய்தால் லாபம் பெறலாம் என்பதும், தகுதிக்கு மேற்பட்ட பிரதிபலன் உண்டென்பதும் பாவங்கள் மன்னிக்கப்படுமென்பதும், மற்றும் மனிதனால் தன் சுயநலத்திற்காகவும் சோம்பேறி வாழ்க்கைப் பிரியத்துக்காகவும் பிறருக்குச் செய்யப்படும் சூழ்ச்சிக்கும் அக்கிரமத்திற்கும் கடவுள் செயலே காரணம் எனச்சொல்லி ஏமாற்றுவதும் ஆகிய காரியங்களைப் பார்த்தால் அது எப்படிப்பட்ட கடவுள் உணர்ச்சியானாலும் அது எங்கிருந்த போதிலும் அதை அழித்தே தீர வேண்டியிருக்கிறது.

## திருடனுக்கும் கடவுள்

அன்றியும் திருடப்போகிற ஒரு திருடன் தான் திருடப்புறப்படுமுன் தனக்கு "நல்ல திருட்டு கிடைக்க வேண்டும்" என்று கடவுளைப் பிரார்த்தித்துவிட்டு புறப்படுகிறான். நல்ல திருட்டுக் கிடைத்தவுடன் அதில் ஒரு சிறு பாகத்தை கடவுளுக்கும் அதன் திருப்பணிகளுக்கும் செலவு செய்து கடவுள் உணர்ச்சியை அனுபவிக்கிறான். இதுபோலவே ஒரு கொலைக்காரனும் தான் விடுதலை அடையக் கடவுளைத் துதித்து விடுதலை யடைந்தவுடன் கடவுளுக்கு பூசை அபிஷேக முதலியன செய்து நன்றி செலுத்துகிறான். இதுபோலவே சொத்துக்களை வைத்திருக்கும் உடமையாளனும் தனது சொத்துக்களை திருடர்கள் கொள்ளைக்கொள்ளக்கூடாது என்று கடவுளைப் பிரார்த்தித்து நன்றி செலுத்துகிறான். இதுபோலவேதான்

கடவுள் நம்பிக்கையுள்ள மற்ற எல்லாச் சோம்பேறிகளும் செல்வவான்களும் அயோக்கியர்களும் கொள்ளை லாபம், அதிக வட்டி அனுபவிக்கும் வியாபாரிகளும் கடவுள் பிரார்த்தனையின் மீதே தங்கள் வியாபாரத்தை நடத்துகின்றார்கள்.

ஆகவே கடவுள் செயலும் கடவுள் கருணையும் எவ்வளவு ஒழுக்கக்குறைவுக்கும், அநீதிக்கும் இடம் தருகின்றது என்று பாருங்கள். ஆதலால்தான் கடவுள் உணர்ச்சியும் நம்பிக்கையும் இதைத்தவிர வேறு எதற்காவது பயன்படுகின்றதா என்று பாருங்கள் என்கிறேன்.

## மதம் என்றால் என்ன?

மதம் என்றால் என்ன? என்கிற விவகாரகாலத்தில் மதவாதிகள் "மனித சமூக வாழ்க்கை ஒழுங்காகவும் ஒரு கட்டுப்பாட்டிற்கு உட்பட்டும் நடைபெறுவதற்காக அநுபோகஸ்தர்களால் வகுக்கப்பட்ட திட்டங்களே மதம்" என்றும், 'மதக் கொள்கைகள்' என்றும் 'அவை காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றவாறு திருத்திக்கொள்ளக்கூடியது என்றும் சொல்வதுடன் அதற்கு உதாரணமாக 'அவ்வப்போது பல சீர்திருத்தவாதிகள் தோன்றி புதிய திட்டங்கள் ஏற்படுத்தி சீர்திருத்தி இருக்கிறார்கள் என்றும் ஒரு சிலர் சொல்வதோடு இதுதான் மதம் என்பதின் அர்த்தம் என்று சொல்லி அதனிடம் யாருக்கும் தகராறு இருக்கக்கூடாது என்கிறார்கள். அப்படியானால் அக்கொள்கைகளின் குணதோஷங்களைப் பொறுத்தும் அதனால் ஏற்படும் பயன்களைக் குறித்தும் யோசிக்கவும் திருத்தவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்கவேண்டும் அல்லவா? ஆம் என்றால் நமக்கு அவர்களிடம் தகராறு இல்லை.

அப்படிக்கில்லாமல் மதம் என்பது மனித சக்திக்கு மீறிய ஒரு சக்தியையுடைய "மகான்களால்" ஏற்படுத்தப்

பட்டது என்றும் அதன் கொள்கைகள் எல்லாம் எங்கும் எக்காலத்திற்கும் ஓரேமாதிரியாய் இருக்கத்தக்கது என்றும் அவைகளில் எக்காலத்திலும் எவ்வித மாற்றமும் ஏற்படுத்த எவருக்கும் உரிமையில்லை என்றும் அதனால் யாருக்கு எவ்வளவு கெடுதி இருந்தபோதிலும், பயனில்லாதபோதிலும் பின்பற்றித்தான் ஆகவேண்டும் என்றும் சொல்லப்படுமானால் அப்படிப்பட்ட மதத்தை நாம் சிறிதும் ஒப்புக்கொள்ளமுடியாது என்பதுடன் அவ்வித மூட அடக்குமுறை உணர்ச்சியைக்கொண்ட மதத்தை என்ன விலை கொடுத்தாவது அழித்தாகவேண்டும் என்றும் கூசாமல் சொல்லுகிறேன். ஏனெனில் அவை மனித சமூக ஒற்றுமைக்கும் சுதந்திரத்திற்கும் சம உரிமைக்கும் இடையூறாய் இருக்கின்றன.

மற்றும் மதத்தின் பேரால் அனேக அற்புதங்களும் இயற்கைக்கும், மனித சக்திக்கும் மீறிய அனேக காரியங்களும் பலர் செய்ததாகவும் இன்றும் செய்வதாகவும் கதைகள் கட்டி மக்கள் மூடர்களாக ஆக்கப்பட்டு வருகின்றதுடன், ஏராளமான பொருளும் முயற்சியும் நேரமும் மனித சமூக நன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் சமத்துவத்துக்கும் உபயோகப்படாமல் பாழாக்கப்படுகின்றது. அன்றியும் மக்களது அறிவும் ஆராய்ச்சியும் கட்டுப்படுத்தப்பட்டு அடிமையாக்கப்படுகின்றன. இவ்வளவு கேட்டை எப்படி சகித்துக்கொண்டிருக்கமுடியும், ஏன் சகிக்கவேண்டும் என்று யோசித்துப்பாருங்கள்.

## தேசீயம்

தேசீயம், தேசீயம் என்பதும் முற்கூறியவைகளைப் போன்ற ஒரு போலி உணர்ச்சிதான். ஏனெனில் தேசீய உணர்ச்சி என்பதானது இன்று உலகப்பொதுமக்கள், அதாவது உலகில் எங்கும் பெரும்பான்மையான மக்கள் பாமரராயும், தொழில் இன்றியும், தொழில் செய்தாலும்

ஜீவனத்திற்கும் வாழ்விற்கும் போதிய வசதிகள் இன்றியும் கஷ்டப்படும் ஒரு உண்மையை மறைப்பதற்கும் மற்றும் அப்படிப்பட்ட கஷ்டப்படும் மக்கள் ஒன்று சேர்ந்து தங்களுடைய நிலைமைக்கு பரிகாரம் தேடுவதை தடைப் படுத்தவும் ஆங்காங்குள்ள செல்வவந்தர்களாலும் அதிகாரப்பிரியர்களாலும் சோம்பேறி வாழ்க்கைச் சுபாவிகளாலும் கற்பிக்கப்பட்ட சூழ்ச்சியாகும். தேசியம் என்பதும் மனிதனுக்கு ஒரு மயக்கமும் வெறியும் உண்டாக்கும் வார்த்தையாக ஆகிவிட்டது.

## தேசம் என்றால் எது?

தேசம் என்றால் எது? உலகப்பரப்பு ஐந்து கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கண்டத்திற்கும் பல தேசங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு தேசத்திற்கும் பல மாகாணங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மாகாணத்திற்கும் பல ஜில்லாக்களும், மற்றும்பல உட்பிரிவுகளும் இருக்கின்றன. தேசம் என்பவைகளில் சில கண்டத்தைவிடப் பெரியதாகவும் பல மதங்களாகவும் பல பிறவிகளாகவும் பல மொழி, பல நாகரீகம், பல கலை ஆகவும் இருக்கின்றன. இவைதவிர ஒவ்வொரு கண்டத்திலும், தேசத்திலும், மாகாணத்திலும் பலமாதிரியான பிறவிகளும், பல ஜாதிகளும், பல பாஷைகளும், பல மதங்களும், பல உட்பிரிவுகளும், பல பழக்கவழக்கங்களும் இருக்கின்றன. இவை அவரவர்களுக்கு தெய்வ கட்டளை என்றும் மதக்கட்டளை என்றும் தேசியக் கொள்கை என்றும் தங்கள் வாழ்நாளில் எப்பொழுதும் மாற்றமுடியாது என்றும் இவைகளில் எதையும் காப்பாற்ற உயிர்விட்டாவது முயற்சிக்க வேண்டுமென்றும் கருதிக்கொண்டிருப்பவைகளாகும்.

இவற்றின் பயனாய் மக்கள் ஒருவருக்கொருவர் வேற்றுமை உணர்ச்சி கொண்டிருப்பதை நன்றாய்ப்

பார்க்கின்றோம். அன்றியும் உலகத்தில் உள்ள தேசம் முழுவதிலும் உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி ஏழை-பணக்காரன், கீழ்நிலை—மேல்நிலை, கஷ்டப்படுகின்றவன்-கஷ்டப்படுத்துகிறவன் முதலிய கொடுமைகள் இருந்தும் வருகின்றன. இவற்றுள் என்ன கொள்கைமீது எப்படிப்பட்ட மக்கள் எவ்வளவு விஸ்தீரணத்தை பிரித்துக்கொண்டு தங்களுக்கென தனித்த தேசம், தேசீயம் என்று ஒன்றைச் சொல்லிக்கொள்வது என்பது எனக்குப் புரியவில்லை. நமது தேசம் என்று எந்த விஸ்தீர்ணத்தையும் தன்மையையும் தனிப்படுத்திக்கொண்டு பேசினாலும், அதிலுள்ள தன்மைகள் என்னென்னவோ, அதிலுள்ள மனிதர்களின் நிலை என்னென்னவோ, அதுதான் மற்ற எந்தக் கண்டம் என்பதிலும் நாடு என்பதிலும் இருந்து வருகிறது. நாம் குறிப்பிடும் தேசத்தில் உள்ள பெரும்பான்மையான மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறவர்களாகவும் தாழ்மைப் படுத்தப்பட்டவர்களாகவும் இருந்து வருகிறார்களோ அவ்வளவு நிலையில்தான் மற்ற தேசத்தார் என்கின்ற மக்களும் இருந்து வருகிறார்கள். நம்முடைய தேசம் என்பதிலுள்ள எந்தவிதமான மக்களின் துயரங்களை நீக்கப் பாடுபடுகின்றோம் என்கிறோமோ அந்த விதமான துயரம்கொண்ட மக்கள் அந்நிய தேசம் என்பதிலும் இருந்துதான் வருகின்றார்கள். நம்முடைய தேசீயம் என்பதிலேயே எந்தவிதமான மக்கள் சோம்பேறிகளாகவும், சூழ்ச்சிக்காரர்களாகவும், செல்வவான்களாகவும், அரசாங்க ஆதிக்கக்காரர்களாகவும், குருமார்களாகவும் இருந்து பெரும்பான்மையான பொதுஜனங்களைப் பல சூழ்ச்சிகளால் அடக்கி ஆண்டு அடிமைகளாக்கி பட்டினி போட்டு வதைத்துத் தாங்கள் பெருஞ் செல்வம் சேர்த்து வாழ்ந்து சுகபோகம் அனுபவித்து வருகிறார்களோ அது போலத்தான் அந்நிய தேசம் என்பதிலும் சிலர் இருந்து அந்நாட்டுப் பெரும்பான்மையான மக்களைக் கொடுமைப் படுத்தி வருகின்றார்கள். ஆனால் அப்படிபட்டவர்கள், நம் நாட்டில் ஒரு பிரிவார் பிறவியின் பேரால் இருக்கிறார்

கள். இந்த நிலைமையில் என்ன கொள்கைகளைக் கொண்டு எந்த லட்சியத்தைக்கொண்டு உலகப் பரப்பில் ஒரு அளவை மாத்திரம் பிரித்துத் தேசாபிமானம் காட்டுவது என்று கேட்கிறேன்.

துருக்கி தேசத்துக்கும் இந்தியா தேசத்துக்கும் சண்டை வந்தால் இந்திய இஸ்லாமியர்களுக்கு தேசாபிமானம் இந்தியாவுக்கா? துருக்கிக்கா? ஹைதராபாத்துக்கும் மைசூருக்கும் யுத்தம் தொடங்கினால் ஹைதராபாத் இந்தியர்கள் தேசாபிமானம் மைசூருக்கா? ஹைதராபாத்துக்கா? ஆகவே தேசம் தேசாபிமானம் என்கின்ற வார்த்தைகளும் கடவுள், மதம் என்பது போன்று ஒரு வகுப்பாருடைய சுயநலத்திற்கு ஏற்ப ஒரு சூழ்ச்சி வார்த்தை என்று சொல்லவேண்டி இருப்பதைத்தவிர வேறு ஒன்றும் சொல்லமுடியவில்லை. முடிவாக கூறும் பட்சத்தில் தேசாபிமானம் என்பது ஒவ்வொரு தேச முதலாளியும் மற்றதேச முதலாளிகளுடன் சண்டைபோட்டு தங்கள் தங்கள் முதலைப் பெருக்கிக்கொள்ள ஏழை மக்களைப்—பாமரமக்களைப் பலி கொடுப்பதற்காகக் கற்பித்துக்கொண்ட தந்திர வார்த்தையாகும்.

உதாரணமாக இங்கிலாந்து தேச முதலாளிகள் அமெரிக்கா நியூயார்க் தேச முதலாளிகளுடன் சண்டை போட்டு வெற்றிபெற்று தங்கள் செல்வத்தை மேலும் மேலும் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்கின்ற ஆசை ஏற்பட்டால் அல்லது நியூயார்க் முதலாளிகள் வேறு தந்திரத்தின் மூலம் இங்கிலாந்து தேசத்து முதலாளிகளின் செல்வத்தைக் கொள்ளைகொள்ள முயற்சிப்பதாயிருந்தால் இங்கிலாந்து தேசத்து முதலாளிகள் இங்கிலாந்து தேசத்து ஏழை மக்களையும் பாமரமக்களையும் பார்த்து "ஓ இங்கிலாந்த தேசிய வீரர்களே, தேசாபிமானிகளே தேசத்துக்கு நெருக்கடி வந்துவிட்டது. இங்கிலாந்து மாதா உங்கள் கடமைகளைச் செய்ய

அழைக்கிறாள், ஓடிவாருங்கள் ஓடிவாருங்கள்" என்று கூப்பாடுபோடுவார்கள். கூலிகளை அமர்த்தியும் வயிற்றுப் பிழைப்புப் பத்திரிகைக்காரர்களுக்கு எலும்பு போட்டும் பிரச்சாரம் செய்விப்பார்கள். இதுபோலவே அமெரிக்க முதலாளியும் தன் தேசம் நெருக்கடி நிலையில் இருப்பதாகவும் அமெரிக்க மாதா அங்குள்ள பாமரர்களையும் வேலையில்லாமல் வயிற்றுக் கஞ்சிக்கு வகையில்லாமல் பட்டினிகிடக்கும் ஏழைமக்களையும் தங்கள் கடமையைச் செய்ய அழைப்பதாகவும் கூவிக்கொண்டு கூலிகொடுத்து பிரசாரம் செய்வார்கள். இரண்டுதேச ஏழை மக்களுக்கும் மற்றும் சாப்பாட்டிற்கு அறவே வேறு வழியில்லாத மக்களும் கிளர்ச்சியில் சேர்ந்தும் பட்டாளத்தில் சேர்ந்தும் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு சண்டைக்குப் போய் ஒருவரையொருவர் சுட்டுக்கொன்று கொள்ளுவார்கள். சிறைப்பிடிப்பதின் மூலம் இருதேச சிறையையும் நிரப்பிவிடுவார்கள், கணக்குப் பார்த்தால் இருகட்சியிலும் பத்து லட்சக்கணக்கான மக்கள் உயிர்விட்டிருப்பார்கள். பிறகு இருவரும் ராஜியாகப்போயோ அல்லது யாராவது ஒருவர் ஜெயித்தோ இருப்பார்கள்.

ஜெயம் பெற்றவர்களுக்கு முதலோடு முதல் சேரும், அல்லது தங்கள் முதல் என்றும் குறையாத மாதிரியில் பத்திரமேற்பட்டிருக்கும். ஆனால் சுட்டுப்பட்டு செத்தவர்களுக்கு சுடுகாடும், அவர்கள் பெண்ஜாதிகளுக்கு சிறு பிச்சையும் அல்லாமல் மற்ற ஏழை மக்களுக்கு என்ன பயன் என்பதை யோசித்துப் பாருங்கள். அமெரிக்கா குடிஅரசு நாடாவதற்கும் அந்நிய ஆட்சியைத் துரத்துவதற்கும் அமெரிக்கா ஏழை மக்கள், தொழிலாளி மக்கள் எவ்வளவு பாடுபட்டிருப்பார்கள், எவ்வளவு உயிர்ப்பலி கொடுத்திருப்பார்கள் என்பதை அமெரிக்கா விடுதலைச் சரித்திரத்தை புரட்டிப்பாருங்கள். இன்று அதன் பயனாக உலகில் அமெரிக்காவிலேயே அதிகமான செல்வவான்களும், வியாபாரிகளும், விவசாயப்பெருக்கும் இருந்து

வருகின்றன. ஆனால் ஏழைகள் படும் கஷ்டமும் வேலையில்லாத பட்டினியும் தொழிலாளிகள் அனுபவிக்கும் கொடுமையும் அமெரிக்காவில் இன்றையத்தினம் இருந்து வருவது வேறு எந்த நாட்டிற்கும் குறைந்ததல்ல.

அதுபோலவே இந்திய தேசீயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். பல ஏழைப் பாமரமக்களைத் தூண்டிவிட்டு அடிபடச்செய்து சிறையை நிரப்பி உரிமையும் பதவியும் அதிகாரமும் பெற்று முதலாளிகள் பணத்தையும் சோப்பேறி வாழ்க்கைப் பிறவிகள் உத்தியோகங்களையும் பெற்றுத் தங்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையைப் பெருக்கிக் கொண்டதைத் தவிர இந்த இந்திய தேசீயத்தால் ஏழை மக்கள், பாமர மக்கள் அடைந்த—அடையப் போகும் நன்மை என்னவென்பதைப் பாருங்கள்.

தோழர்களே! அமெரிக்கா தேசாபிமானத்தின் தன்மையையும் அதன் பயனையும் சிந்தித்துப் பாருங்கள். அமெரிக்கா அந்நிய ஆட்சியை ஒழித்ததாலும், ஒரு அரசனையே விரட்டிவிட்டு "குடிகளின் ஆட்சி" ஏற்படுத்திக் கொண்டதாலும் ஏழை மக்களுக்கு என்ன பயன் ஏற்பட்டது என்பதை மற்றொருதரம் யோசித்துப் பாருங்கள்.

இந்த இலங்கையில் இருந்துகொண்டு இந்திய தேசாபிமானம் பேசும் தேசீய வீரர்களைப்பற்றி சற்று சிந்தித்துப் பாருங்கள். அவர்கள் ஏறக்குறைய அத்தனைபேரும் 100-க்கு 90-பேர் இந்தியா முதலிய தேசத்தில் இருந்து வந்து இலங்கை தேசத்தை சுரண்டிக் கொண்டுபோக இருக்கிறவர்களும் அவர்களுக்கு உதவியாளர்களாய்—அடிமைகளாய் இருப்பவர்களுமாகும்.

லேவாதேவிக்காரர்கள் பெரிதும் மாதம் 100-க்கு 12-வரை வட்டி வாங்கி ஏழை மக்களையும் இலங்கை வாசிகளையும் பாப்பராக்கி கொள்ளை கொண்டுபோக

வந்தவர்களும், விவசாயக்காரர் பெரிதும் இலங்கை பூமிகளை ஏராளமாய் கைப்பற்றி விவசாயம் செய்து கூலிகள் வயிற்றில் அடித்து பொருள் சேர்த்து கொள்ளைகொண்டு போக வந்தவர்களும், வியாபாரிகள் கொள்ளை லாபம் அடித்து இலங்கைச் செல்வத்தைக் கொள்ளை கொண்டு போக வந்தவர்களும், உத்தியோகஸ்தர்கள் இலங்கை ஆட்சியில் வந்து புகுந்து இலங்கையர்களின் அனுபவத்தில் மண்ணைப்போட்டு பணம் சுரண்டிக் கொண்டிருக்கும் படித்த கூட்டத்தாரும் ஆணவம்பிடித்த வன்னெஞ்சப் பார்ப்பனர்களுமாகக் கூடிக்கொண்டு இந்திய தேசாபிமானக் கூப்பாடு போடுகிறார்கள்.

வெள்ளைக்காரனான அந்நியன் 100-க்கு வருஷம் 6-வட்டி கொடுத்தால் கருப்பனான அந்நியன் 100-க்கு மாதம் 6-வட்டிக்கு கொடுக்கிறான். வெள்ளையன் பணக்காரர்களிடம் வட்டி வாங்கினால் கருப்பன் ஏழைகளிடம் கூலிகளிடம் வட்டி வாங்கிக் கொடுமைப் படுத்துகிறான்.

இந்தப்படி மக்களை கசக்கி கொள்ளை அடிப்பவர்களே (வெள்ளையரிலும், கருப்பர்களிலும்) எங்கும் கடவுளபிமானம், மதாபிமானம், தேச அபிமானம் பேசுகிறார்கள்.

ஆகவே இவ்விஷயங்களை அதாவது கடவுள், மதம், தேசம் என்கின்ற விஷயங்களை இனி அறவே மறந்துவிடுங்கள். அவை ஒரு நாளும் கஷ்டப்படும் மக்களுக்கு பயனளிக்கா. மற்றபடி அவை அவை உலகில் ஏழை பணக்காரன் என்று இரண்டு வகுப்புகள் இருக்கவும் ஏழைகளை தொழிலாளிகளை பணக்காரரும், சோம்பேறிகளும் வஞ்சித்து நிரந்தரமாய் வாழவும்தான் பயன்படும்.

## முடிவு

தோழர்களே! முடிவாக ஒன்று கூறுகிறேன். சரீரத்தினால் நெற்றி வியர்வை சொட்ட கஷ்டப்படும் மக்களைப் பாருங்கள். அவர்களுக்கு கல்வி, மனிதத் தன்மை, மானம் இல்லாமல் செய்திருப்பதையும் பாருங்கள். வேலையில்லாமல் திண்டாடும் மக்களையும், அவர்களது பெண்டுபிள்ளைகளின் பட்டினியையும், கொடுமையையும் பாருங்கள். வீடு வாசல் இல்லாமல் மூட்டை முடுச்சுகளை தலையில் சுமந்துகொண்டு கஞ்சிக்கு ஊர் ஊராய்த் திரியும் கூலி மக்களைப் பாருங்கள். இவ்வித மக்கள் உலகில் எங்கெங்கு யார்யாரால் கஷ்டப்படுத்தப் படுகிறார்கள் என்பதையும் பாருங்கள். உயர்ந்தவன்—தாழ்ந்தவன், பார்ப்பான்—பறையன், முதலாளி—தொழிலாளி, குரு—சிஷ்யன், மகாத்மா—சாதாரண ஆத்மா, அரசன்—குடிகள், அதிகாரி—பிரஜை, என்பவை முதலாகிய, பாகுபாடுகளை இடித்துத்தள்ளி தரைமட்டமாக்குங்கள். அதன்மீது தேசம், மதம், ஜாதி என்கின்ற பாகுபாடு இல்லாததாகிய, மனித சமூகம் சமஉரிமை—சமநிறை என்கின்ற கட்டடத்தை கட்டுங்கள். இதைச்செய்ய நீங்கள் உலகில் உள்ள கஷ்டப்படும் எல்லா மக்களுடனும் ஜாதி, மதம், தேசம் என்கின்ற வித்தியாசம் இல்லாமல் பிரிவினைக்கு ஆளாகாமல் ஒன்று சேருங்கள்; அப்போது நீங்கள் கண்டிப்பாய் வெற்றி அடைவீர்கள்.

தேச பக்தி தேசியம் என்னும் சூழ்ச்சியானது பல வருஷங்களாக மக்களை அந்நிய நாட்டு நடப்புகளையும், அந்நிய நாட்டு மக்கள் நிலைமையையும் உணர முடியாமல் செய்து வந்த காரணமே உலக ஒற்றுமை ஏற்பட முடியாமல் இருந்து வருகின்றது.

## தெளிவாய்ச் சொல்லவேண்டுமானால்

"அந்நியஆட்சி" "சுயாட்சி" என்பதெல்லாம் அறவே ஏழை மக்களுக்கு பயனற்றதும் சூழ்ச்சி நிறைந்ததுமே

யாகும். சுயாட்சி உள்ள நாட்டிலும், சுயராஜ்யம் உள்ள ஊரிலும் ராஜாவே இல்லாத குடிஅரசு தேசத்திலும் பணக்காரன் கொடுமையும், பாதிரியின் சூழ்ச்சியும், ஏழைகளின் கஷ்டமும், பாமர மக்களின் மடமையும் இருந்து தான் வருகிறது. கடவுள் பக்தியும், மத பக்தியும் தேசாபிமானமும் நிறைந்து ததும்பும் நாடுகளிலும் இக்கொடுமைகள் இருந்துதான் வருகின்றன. கடவுளுக்காகவும், மதத்துக்காகவும் கோடானுகோடி ரூபாய் செலவழித்துப் பலி கொடுத்து பக்தி செலுத்திவரும் நாட்டிலும் மகாத்மாக்கள், ரிஷிகள், அவதாரங்கள் ஏற்பட்ட நாட்டிலும் இக்கொடுமைகள் இருந்துதான் வருகின்றன. ஆனால் கடவுள், மதம், தேசீயம் ஆகியவைகள் அழிக்கப்பட்ட அடியோடு இல்லாத இடங்களில் மாத்திரம் பணக்காரர் கொடுமையும், சோம்பேறி வாழ்க்கையும், பட்டினிக் கஷ்டமும், உயர்வு தாழ்வு நிலையும், பாதிரி ஏமாற்றமும், மகாத்மா தந்திரமும் காணப்படவில்லை. அவ்வூராருக்கு கடவுள் மத தேச அபிமானம் இல்லை. மனித சமூக சமத்துவ அபிமானம் மாத்திரமே பிரதானமாய் காணப்படுகிறது. அங்கு பணக்காரன்—ஏழை, முதலாளி—தொழிலாளி, அதிகாரி—குடிஜனங்கள் என்கின்ற வித்தியாசமே காணப்படவில்லை.

அங்குள்ள சகல சொத்திற்கும் அங்குள்ள சகல மக்களும் சம சுதந்திரமுள்ளவர்களாய் இருந்து வருகிறார்கள். எல்லா மக்களுக்கும் சரி அளவு வேலையும், போதுமான ஆகாரமும் சுக சௌகரியமும் இருந்து சமமாய் அனுபவிக்கப்பட்டு வருகிறது. "நாளைக்கு என்ன செய்வது" என்ற கவலையே இல்லாமல் என் பெண்டு பிள்ளைகளை காப்பது யார்? என்கின்ற சிந்தனையே இல்லாததால் அந்நாடு பூமிக்குள் அமிழ்ந்து போகவில்லை.

அந்நாட்டு மக்களுக்கு ஆண், பெண் அடங்கலுக்கும் ஏற்பட்ட தைரியமும், உயிருக்குத் துணிந்த வீரமும்,

சமத்துவ உணர்ச்சியும் கடவுளையும் மதத்தையும் நம்பிய தேசாபிமானமுள்ள எந்த நாட்டாரிடமும் காணமுடியாத தாயிருக்கிறது. நமது நாட்டிலோ சகல பொறுப்பையும் கடவுள்மீது போட்டுவிட்டு சோம்பேறிஞானம் பேசுபவர்களே மலிந்து இருக்கிறார்கள். நமது தலைவர்கள் என்பவர்களோ அதைச் சாதிக்கிறேன், இதைச் சாதிக்கிறேன் என்று பேசி மக்களை ஏய்த்து பயன் அடைவதும், முடியாவிட்டால் கடவுள்மீது பழிபோட்டு நழுவிக்கொள்வதுமானவர்கள். கடவுள்மீது நம்பிக்கை உள்ள நமது மக்கள் வீரமோ ஒரு சிறு உண்மைத் தியாகம் செய்ய வேண்டி ஏற்பட்டாலும் "நான் எதற்கும் தயார்தான்; ஆனால் எனக்கு ஏதாவது கஷ்டம் வந்துவிட்டால் என் பெண்டுபிள்ளைகளுக்கென்ன கதி என்று தான் யோசிக்க வேண்டியிருக்கிறது" என்ற அளவோடு நிற்கக்கூடியதாகும். கடவுளை நம்பாதவர்களும், கடவுள்மீது எவ்வித பொறுப்பும் போடாதவர்களுமாயிருக்கிறவர்களும் கடவுள் உணர்ச்சியை அடியோடு ஒழித்துக்கொண்டவர்களுமான மக்களுள்ள ரஷ்ய நாட்டில் 'நாளைக்கு என்ன கதி' என்கின்ற பேச்சே கிடையாது. ஒவ்வொருவரும் தன்னம்பிக்கை உடையவர்களாகவே தான் காணப்படுகிறார்கள்.

அந்த நிலைமைதான் "நம் நாட்டுக்கும்" மற்றும் உலகமெங்கும் வேண்டும், அதற்காகவே வாலிபர்கள் எல்லோரும் உழைக்கவேண்டும். அதுவே இப்போது நமது முன்னணியில் இருக்கும் வேலையாகும்.

புரட்சி ஓங்குக !

பொதுவுடைமை தோன்றுக !!

# மெட்டீரியலிஸம்.

## கடவுளும் மதமும்

சுயமரியாதை இயக்கம் நாட்டில் பரவ ஆரம்பித்த பிறகு, அதிலும் அவ்வியக்கம் நாட்டில் சற்று செல்வாக்குப் பெறத் தொடங்கிய பின்பு, மக்களுக்குள் தானாகவே ஒருவிதக் குழப்ப உணர்ச்சி தோன்றியிருப்பதை நாம் நன்றாய் உணர்ந்துவருகின்றோம். அதோடுகூட பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதார்களில், அரசியல் தேசியம் ஆகியவைகளின்பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர்களும், சமயம், புராணம், பிரசங்கம் ஆகியவைகளின் பேரால் பிழைக்கும் பிழைப்புக்காரர்களும் இவ்வியக்கத்தை எதிர்க்கக் கடவுளையும், மதத்தையும் பற்றிய பொதுமக்களின் குழப்பத்தைத் தங்களுக்கு ஆதாரமாய் வைத்துக்கொண்டும், மற்றும் திரித்துக் கூறிக்கொண்டும் விஷமப் பிரசாரம் செய்துவருவதனாலும், நமது இயக்கத்தில் உண்மையான பற்றுக்கொண்ட உண்மை நண்பர்களிற் சிலர், இவ்விஷமப் பிரசாரத்தைக்கண்டு பயப்படுவதாகத் தெரிவதாலும், மற்றும் சில பெரியோர்களும், சமய சம்பந்தமாக மனத் துடிப்புக்கொள்வதாலும், நமது நிலையையும், கடவுள், மதம் என்பதுபற்றி நாம் கொண்டுள்ள கருத்தின் நிலையையும் சற்று விளக்கிவிட வேண்டுமென்பதாக கருதி இதனை எழுதப் புகுந்தோம். இவைகளைப்பற்றி இதற்குமுன் பலதடவை பேசியும், எழுதியுமிருக்கின்றோம். ஆயினும் அவைகளைவிட இது சற்று தெளிவாக இருக்கலாம் என்கின்ற எண்ணத்தின் மீதே இதை எழுதுகின்றோம். வாசகர்கள் தயவுசெய்து இதைச் சற்று நிதானமாகவும், கவனமாகவும் படித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம். இந்த முதல் பகுதியானது

இதே தலைப்பின் கீழ் திருநெல்வேலி ஜில்லா இரண்டா வது சுயமரியாதை மகாநாட்டின் முடிவுரையின்போது நம்மால் எடுத்துச் சொல்லப்பட்டதை அனுசரித்தும், சில நண்பர்கள் அதை விளக்கி எழுதும்படி சொன்னதை ஆதரித்தும் எழுதப்பட்டதாகும்.

## நமது கடமை

முதலாவதாக நமக்குக் கடவுளைப் பற்றியாவது; மதத்தைப் பற்றியாவது சிறிதும் கவலை இல்லை என்ப பதாகவும் கஷ்டப்படும் மக்களின் துன்பம் நீங்கி அவர் களுக்கு அறிவு, ஆற்றல், இன்பம் ஆகியவைகளில் உள்ள கட்டுப்பாட்டை உடைத்து விடுதலையை உண்டாக்க வேண்டும் என்பதே முக்கிய கவலை என்பதாகவும் அநேக தடவைகளில் வெளியிட்டிருக்கின்றோம். அதுவும் பலர் நம்முடைய இம்முயற்சியில் கடவுளையும், மதத்தையும், கொண்டுவந்து குறுக்கே போட்டுவிட்டதால்தான் நாம் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டியதாயிற்றே யொழிய உண்மையில் கடவுளையும், மதத்தையும் பற்றிப் பேசவேண்டும் என்கின்ற அவசியத்தையோ, ஆசையை யோ கொண்டு நாம் அதில் பிரவேசிக்கவில்லை. அது போலவேதான் சைவ சமயத்தைப் பற்றியும் நாம் பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டதும் என்போம். எப்படி யெனில் சில சைவத் தலைவர்கள் நமக்கு எதிராகத் தம் மால் கூடிய சூழ்ச்சிகள் எல்லாம் செய்து பார்த்தும், ஒன்றி லும் பயன் பெறாததால் கடைசியாகச் சமயமென்றும், சமயப்பெரியாரென்றும் கூறிக்கொண்டு அவ்வார்த்தை களையே தமது ஆயுதமாகவும், சமய சம்பந்தமான சில பைத்தியக்காரர்களைத் தமக்குப் படையாகவும் வைத்துக் கொண்டு, அவர்களைத் தெருவில் இழுத்து நம்மீது உசுப் படுத்திவிட்டு சூழ்ச்சிப்போர் தொடுக்க ஆரம்பித்ததின் பலனாய், சைவசமயம் என்பதும் சமயாச்சாரிகள் என் பவர்களும் சந்திக்கு வரவேண்டியவர்களானதோடு சைவப்

பெரியார்கள் என்பவர்களின் சாயமும் வெளுக்கவேண்டிய தாய்விட்டது.

## என்ன? எப்படி? எதனால்?

இன்றையத்தினப் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், ராமாயணம், பாரதம் ஆகியவைகளிலுள்ள கதைகளை நம்பி முக்கிய கதாநாயகர்களைக் கடவுள்களாக மதித்து வணக்கம், பூஜை, உற்சவம் செய்ய எவனெவன் சம்மதிக்கின்றானோ அவன் மாத்திரமே கடவுள் நம்பிக்கையும், சமயப்பற்று கொண்டவன் என்றும், மற்றவர்கள் நாத்தீகர்கள்—சமயத் துரோகிகளெனவும் தீர்மானிக்கப்பட்டு, அதுவே முடிந்த முடிவாகவும் சொல்லப்பட்டுவிட்டது. இது எப்படி இருந்தபோதிலும், கடவுள், மதம் என்பது என்னவென்பது பற்றியும், இவை எப்படி உண்டாயிற்று என்பதுபற்றியும், இவற்றை உண்டாக்கியவர்கள் கெட்ட எண்ணத்தோடு உண்டாக்கினார்களா? அல்லது நல்ல எண்ணத்தோடு உண்டாக்கினார்களா? அல்லது அறியாமையினாலுண்டாக்கினார்களா? என்பவைகளைப்பற்றியும், இவற்றில் நமது-அதாவது மக்கள்—கடமை என்ன என்பது பற்றியும் சற்று ஆலோசித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதைப்பற்றி முதலாவதாக இந்த குணம், உருவம், பெயர் அற்ற தன்மைகளையுடைய கடவுள் என்பதைப்பற்றியும், மக்களின் வாழ்க்கை நலத்திற்காக ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள் தான் மதம் என்று சொல்லப்படும் மதத்தைப்பற்றியுமே இங்கு விவரிக்கக்கருதியுள்ளோமே தவிர, மற்றப்படி பல கடவுள்களின் தன்மையையும், மதப்பிரிவுகளான கிறிஸ்தவ, இஸ்லாமிய, ஜைன, பௌத்த, சீக்கிய, சைவ, வைணவ, ஸ்மார்த்த, சாக்கிய, வாம முதலிய பல உள் மதங்களைப்பற்றியும் நாம் இங்கு தனித் தனியாகப் பிரஸ்தாபிக்க உத்தேசமில்லை. ஏனெனில், அவற்றிற்கு ஏற்கனவே மறுப்புகள் தாராளமாய் வெளிப்பட்டு ஒருவருக்

கொருவர் பதில் சொல்ல முடியாமல் தத்துவார்த்தம் என்கின்றதற்குள் அடைக்கலம் புகுந்தும், நம்பித்தான் ஆகவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தத்திற்குள் புகுந்துமேதான், ஒவ்வொருவரும் அவரவர்கள் கடவுளையோ, கடவுள் தூதர்களையோ, அவதாரங்களையோ, சமயங்களையோ, சமயாச்சாரியார்களையோ காப்பாற்றிக்கொள்ள முடிந்ததேயொழிய அறிவின்மீதோ, நியாயத்தின்மீதோ, நிலைநிறுத்தமுடியாமற்போய்விட்ட விஷயம் உலகமறிந்ததாகும். ஆதலால் இப்பகுதியில் நாம் அவற்றில் பிரவேசிக்கவில்லை.

## சக்தி என்பது எது?

முதலாவது மக்களுக்குக் கடவுள் எப்பொழுது? எப்படி ஏற்பட்டது என்பதைப்பற்றி ஆராய்வோம். மனிதன் பிறந்து வளர்ந்து நினைக்கப்பட்ட பிறகுதான் கடவுள் என்கின்ற ஒரு வஸ்து நிச்சயம் செய்யப்பட்டு இருக்கவேண்டும். அதை யாரும் மறுக்க முடியாது. ஏனெனில் இப்போதுகூட மக்களுக்குப் பிறர் சொல்லிக்கொடுத்த பிறகுதான் கடவுள் என்கின்ற பேச்சும், நினைப்பும் ஏற்படுகின்றதே தவிர தானாக ஏற்படுவதில்லை. எப்படியெனில், சிறு குழந்தைகளை நாம் கட்கத்தில் இடுக்கிக் கொண்டு ஒரு உருவத்தையோ, வஸ்துவையோ காட்டி சாமி என்றும், அதைக்கைகூப்பிக் கும்பிடு என்றும் சொல்லிக்கொடுத்தபிறகே குழந்தை சாமியைக் கும்பிட அறிகின்றது. அதுபோல, ஆதியிலும் மனிதன் பிறந்த பிறகு தான் அவன் மனதிற்குக் கடவுள் நினைப்புத் தோன்றியிருக்கவேண்டும். அது எப்படி என்றும், எப்போதென்றும் பார்ப்போமானால் சாதாரணமாக மனிதனுக்கு அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சி வளர்ச்சியும் இல்லாத காலத்தில்தான் கடவுள் நினைப்புத்தோன்றி இருக்கவேண்டும். கடவுள் என்பது—கடவுள், ஸ்வாமி, அல்லா, காட் என்ற தமிழ், சமஸ்கிருதம், அரபி, ஆங்கிலம் முதலிய பல பாஷைகளில் பல சொற்களாக இருந்தாலும் குறியில்

—அர்த்தத்தில் உலகத்தோற்றத்திற்கும், நடப்பிற்கும், அழிவிற்கும் காரணமாகிய ஒரு சக்தியையே குறிப்பிடுவதாகவும், அதாவது சிலரால் இயற்கை என்று சொல்லப் படுமானால், அவ்வியற்கையின் இயங்குதலுக்கும், பஞ்ச பூதக்கூட்டு என்று சொல்லப்படுமானால் அக்கூட்டின் சேர்க்கைக்கும், ஏதாவது ஒரு சக்தி இருந்துதானே ஆக வேண்டும் என்பதுவும், அந்த சக்திதான் கடவுள், எல்லாம் வல்ல ஆண்டவன், அல்லா, காட் என்று சொல்லப்படுகின்றதென்று சொல்வதானாலும், அந்த சக்தி என்னும் கடவுளே எப்படி மக்கள் மனதிற்கு வந்தார் என்பது தான் இங்கு விசாரிக்கத்தக்கதாயிருக்கின்றது. ஆகவே அந்த சக்தி மனிதனுக்குத் தோன்றிய காலம் எது என்பதாகவும், அது நம் நாட்டைப் பொருத்தவரை எப்படியிருந்தது என்பதாகவும் பார்க்கவேண்டுமானால், நம்நாட்டிலுள்ள கடவுள்களைக்கொண்டுதான் அதைத் தாராளமாய் உணர முடியும். அதாவது இப்போது நமது நாட்டிலுள்ள கடவுள்கள் எவையென்றால் பூமி, மலை, காற்று, நெருப்பு, நதி, சூரியன், சந்திரன், நட்சத்திரம், மழை, இடி, மின்னல், மேகம், நோய்கள், பயங்கரமான மிருகங்கள் ஆகியவைகளெல்லாம் கடவுளாகக் கருதப்படுகின்றன. இவைகளெல்லாம், இவற்றின் உண்மையை அறிய ஆற்றல் இல்லாத காலத்தில் கடவுளென்று ஒப்புக்கொள்ளப் பட்டவைகள். அதிலும் இமயமலையே கைலையங்கிரியாகவும், அதுவும் வெள்ளிமலையாகவும், அங்கு கடவுள் இருப்பதாகவும், அங்கிருந்துவரும் நீர் அம்மலையிலுள்ள கடவுளின் தலையிலிருந்து வருவதாகவும் கருதப்பட்டதோடு, இமயமலைக்கு அப்பால் ஒரு நாடும் கண்டுபிடிக்க முடியாதிருந்ததும், மேல்நாட்டை மேல் லோகமென்றும், கீழ்நாட்டை பாதாள லோகம், நாகலோகம் என்றும், இப்படிப் பலவாறாகக் கடவுள் தன்மையைச் சொன்னதற்குக் காரணமென்னவென்று பார்க்கும்போது அவற்றின் உண்மையை அறிய முடியாததாலேயே அவைகளைக் கடவுளென்றும், அவற்றின் இயங்குதலைக் கடவுள் சக்தி

என்றும் சொல்லவேண்டிய அவசியம் தானாகவே ஏற்பட்டது. இப்போதும் மனிதன் தன்னால் முடிந்தவைகள் போகமுடியாதவைகளுக்கே கடவுள் சக்தி என்று சொல்லி விடுகின்றான். உதாரணமாக, சிறு குழந்தைகள் ஒரு ஜால வேடிக்கைக்காரனுடைய செய்கையை மந்திர சக்தி என்றும், தெய்வசக்தி என்றும், உபாசனா சக்தி என்றும் கருதுகிறார்கள். சிறுவனாயிருக்கும் பொழுது நாமும் அப்படியே கருதியிருந்தோம். இப்போது அறிவு வளர்ச்சி பெற்றபின் அந்த ஜாலவேடிக்கைகளை மந்திர சக்தி என்று எண்ணாமல் தந்திரம், கைத்திறம் என்று சொல்லுகின்றோம். மற்றும் அந்த ஜாலவேடிக்கைக்காரன்செய்யும் ஜாலத்தின் வழி இன்னதென்று நமக்குத் தெரியாவிட்டாலும்கூட நாம் அவற்றை ஒரு காலமும் மந்திர சக்தி என்றோ, தெய்வசக்தி என்றோ சொல்லாமல் "இது ஏதோ தந்திரப் தானே ஒழியவேறில்லை; ஆனால் அது இன்னது என்று கண்டுபிடிக்க நம்மால் முடியவில்லை" என்று சொல்லிவிடுகிறோம். எனவே ஒரே காரியம் நமக்கே ஒரு காலத்தில் மந்திரமாகவும், தெய்வசக்தியாகவும் தோன்றியது பிறகு அது தந்திரம் என்று தோன்றக் காரணம் என்னவென்றால், அது அறிவு வளர்ச்சியும், ஆராய்ச்சியின் பலனுமேயாகும். அதுபோலவே நமக்கு இப்போது தெய்வசக்தி, கடவுள்சக்தி என்று தோன்றுகின்ற காரியமெல்லாம் மேல்நாட்டாருக்குக் கடவுள்சக்தி என்று தோன்றுவதில்லை. உதாரணமாக, சூரிய சந்திர கிரகணம் இன்னது என்று கண்டுபிடிக்க முடியாத காலத்தில் நாம் அவைகளுக்கு ஒரு தெய்வ சக்தியைக் கண்டு பிடித்து, சூரியன் என்கின்ற தெய்வத்தை ராகு என்கின்ற பாம்பு பிடிப்பதாகவும், அது சூரியன் என்கின்ற கடவுளுக்கு ஏற்பட்ட சாபமென்றும் சொல்லி, அச்சாபம் தீர நாம் மந்திரங்கள் ஜெபித்து, அத்தோஷம்தீர ஸ்நானமும் செய்து வருகின்றோம். இது வானசாஸ்திரம் தெரியாத காலத்தில் ஏற்படுத்திக்கொண்ட கருத்தாகும். இப்போது வான்சாஸ்திரம் தெரிந்தவர்கள் பூமி, சூரியன் இவற்றின்

இயங்குதல், அதன் கால அளவு ஆகியவைகளைக் கண்டு பிடித்தபின், சூரியனைப் பாம்பு கடிப்பதில்லை என்பதையும் ஒருவாறு நன்றாய் உணருகின்றோம். அதுபோலவே எங்கிருந்து எப்படி மழைத் தண்ணீர் வருகின்றதென்பது தெரிந்தவுடன் நதிக் கடவுளும், மேகக் கடவுளும் வர்ண பகவானும் சிறிது சிறிதாக நம் மனதைவிட்டு மறையத் தொடங்கிவிட்டன. அதுபோலவே வியாதிகள்எப்படிவருகின்றன என்கின்றதான சுகாதார ஆராய்ச்சியும், உடற்கூற்று ஆராய்ச்சியும் நமக்குத் தெரிய வந்த பின்பு பேதி, மாரி, அம்மை முதலிய தெய்வங்களின் உணர்ச்சியும் மதிப்பும் சிறிது சிறிதாக மறையத் தலைப்பட்டன. இது போலவே காற்று, கருப்பு, பேய் முதலியவைகளும் மறைந்து வருகின்றன. துப்பாக்கி பீரங்கி முதலிய ஆயுதங்கள் கண்டுபிடித்தபின் யானை, புலி, சிங்கம் முதலிய தெய்வங்களைப்பற்றிய பயமும் மறைய ஆரம்பித்துவிட்டன. இந்தமுறையில் இனியும் நமக்குள் மீதி இருக்கும் கடவுள் உணர்ச்சிகள் எவை என்று பார்ப்போமேயானால், காரணகாரியம், ஆதாரம் முதலிய விபரங்கள் கண்டு பிடிக்க முடியாதவைகளையே கடவுள் செயல் என்றும், கடவுள் சக்தி என்றும் சொல்லி வருகின்றோம். இவைகளும் நாளுக்குநாள் மனிதன் அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சியும் முதிர முதிர மறைந்து கொண்டேதான் வரும். மேலும் இப்போது ஒருவருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றப்படும் காரியங்கள், மற்றொருவருக்குக் கடவுள் சக்தி என்று தோன்றப்படாமலிருப்பதையும் பார்க்கின்றோம். அது அவ்விருவருடைய அறிவு ஆராய்ச்சி ஆகியவற்றின் வித்தியாசமேயாகும்.

இப்போதும் நம் மனதிற்கு எட்டாத காரியங்களை மேனாட்டார் செய்யும்போது நாம் அதிசயப்பட்டாலும், அதை மந்திர சக்தி என்று நாம் சொல்லத் துணிவதில்லை. இந்த அளவுக்கு நாம் தைரியம் பெற்றுவிட்டோமென்றாலும், நமக்குப் பூரண அறிவும் ஆராய்ச்சி முடிவும் ஏற்படும்

வரை கடவுள் உணர்ச்சி நம்மை விட்டு விலக முடியாது. அன்றியும் வாழ்க்கையில் பக்குவமடையாதவர்களுக்குக் கடவுள் உணர்ச்சி சிறிது காலம்வரை இருந்தே தீரவேண்டியதாயுமிருக்கின்றது. அதாவது கஷ்டப்பட்டு ஏமாற்றமடைந்தவனுக்கும், ஈடு செய்ய முடியாத நஷ்டமடைந்தவனுக்கும் கடவுள் செயல் என்பதைச் சொல்லித்தான் ஆறுதலையும், திருப்தியையும் அடையச் செய்யவேண்டியிருக்கின்றது. நல்ல அறிவும் ஆராய்ச்சியும் உடையவர்களும் தங்களுக்குக் காரணகாரியம் எட்டாத இடத்திலும் ஈடு, செய்ய முடியாத இடத்திலும் கடவுள் செயல் என்பதைக் கொண்டுதான் திருப்தி அடைகின்றார்கள். அப்போது தங்கள் அறிவுக்குமேல் ஒன்று இருப்பதை எண்ணித் தீரவேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் உறுதியான பக்குவமடைந்தவர்கள், எந்த விஷயத்திற்கும் தங்களுக்குத் தெரிந்த காரணத்தைக் கொண்டு சமாதானமடைவதும், தெரியாததாயிருந்தால் நமக்கு எட்டவில்லை என்றோ, அல்லது இதுதான் இயற்கை என்றோ கருதித் திருப்தியடைவதுமாய் இருக்கின்றார்கள். எனவே சாதாரண மக்களின் கடவுளுக்கும் சற்று அறிவுடைய மக்களின் கடவுளுக்கும், ஆராய்ச்சிக்காரர்களின் கடவுளுக்கும், பக்குவமடைந்தவர்கள் எண்ணத்திற்கும் வித்தியாசங்களுண்டு. ஒருவருக்கொருவர் கடவுள் வணக்கத்திலும், கடவுள் மீது சுமத்தும் பொறுப்பிலும் வித்தியாசங்களுண்டு.

கடவுள் என்கின்ற உணர்ச்சி மக்களுக்கு எப்போது எப்படி உண்டாயிற்று என்பதைப்பற்றியும், அவ்வுணர்ச்சி மக்களுக்கு எதுவரையும் இருக்கமுடியும் என்பதைப் பற்றியும் சுருக்கமாக இதன் முன்னர் எழுதி இருந்தோம். அதாவது மனிதன் உலகத் தோற்றத்திற்கும், நடப்பிற்கும், சம்பவங்களுக்கும் காரணம் கண்டுபிடிக்க முடியாத நிலையில், கடவுள் சக்தி என்றும், கடவுள் செயல் என்

றும் நினைத்துக் கொள்வதும், உதாரணமாக, அவற்றிற்குக் காரணகாரியம் தோன்றிய பின்பு, அந்நினைப்பு கொஞ்சங் கொஞ்சமாக மாறிவிடுவதும் சகஜம் என்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறோம். இந்த முறையிலேயே தான் கொஞ்ச காலத்திற்கு முன் அநேக விஷயங்கள் கடவுள் செயல் என்று எண்ணியிருந்த மக்கள், விஞ்ஞான (சைய்ன்ஸ்) ஆராய்ச்சி ஏற்பட்ட பிறகு அவ்வெண்ணத்தை மாற்றிக்கொண்டு, அநேக விஷயங்களை மனிதன் செயல் என்று சொல்லத் தைரியம் கொண்டுவிட்டார்கள். உதாரணமாக, கம்பியில்லாத் தந்தி விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். கம்பியில்லாத் தந்தி ஏற்படுத்தியிருக்கும் விஷயமும், அது எப்படிச்செய்யப்படுவது என்கின்ற சைய்ன்ஸ் உணர்ச்சியும் நமக்குத் தெரியாமல் இருக்குமானால், நாம் இன்னமும் அதை "ஒரு தெய்வீக சக்தி" என்றும், பழைய காலத்து ரிஷிகள் பேசிக் கொண்டிருந்ததாய்ச் சொல்லப்படும் "ஞான திருஷ்டிச் சம்பாஷணை" என்றுமே சொல்லித்திருவோம். ஆதலால் மக்களுக்கு அறிவும் ஆராய்ச்சியும் வளர வளர கடவுள் உணர்ச்சியின் அளவு குறைந்து கொண்டே போகும் என்பது திண்ணம். அதுபோலவே அறிவும் ஆராய்ச்சியும் குறையக் குறையக், கடவுள் உணர்ச்சி வளர்ந்து கொண்டேவரும் என்பதும் ஒப்புக்கொண்டாக வேண்டும். இப்போதும் பகுத்தறிவு குறைந்த மக்களிடமே தான் அநேகமாக, தொட்டதற் கெல்லாம் கடவுளும், அவர் தம் செயல்களும் தாண்டமாடுவதைப் பார்க்கிறோம். அவர்கள் மேலேயே "கடவுள் வருவதை"க்கூடப் பார்க்கிறோம். காட்டுமிராண்டிப் பக்குவமுடையவர்களிடமே அநேகமாகக் கடவுளைப் பற்றிய கதைகள் என்பவைகளும் புராணங்கள் என்பவைகளும் மதிப்புப்பெற்று இருப்பதையும் பார்க்கின்றோம்.

கொஞ்ச காலத்திற்கு முன் அக்கதைகளை அப்படியே—அதாவது கடவுள் சக்தியில் நடைபெற்றது

என்று நம்பிக்கொண்டிருந்தவர்கள்கூட இப்போது அப்படியே நம்புவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டு, தங்களுக்குள்ள அறிவு வளர்ச்சியில்லாத் தன்மையை மறைத்துக்கொண்டு, சையன்சின் மூலம் அக்கதைகளை மெய்ப்பிக்க முயற்சி எடுத்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள்.

இதிலிருந்து என்ன ஏற்படுகிறது என்றால், மக்கள் வரவர இப்போது சையன்சுக்குப் பொருத்தமில்லாததை ஏற்க, மறுக்கக்கூடிய நிலைமைக்கு வந்துகொண்டிருக்கின்றார்கள் என்பது விளங்குகின்றது. மழையை வரச்செய்வதும், செத்தவனை மறுபடியும் பிழைக்கச் செய்வதும், பேச்சுகளையும் நாட்டியங்களையும் யந்திரங்களில் பிடித்துக் காட்டுவதும் போன்ற காரியங்கள் மனிதனால் செய்யக்கூடும் என்கின்ற நிலை ஏற்பட்ட பிறகு, மிக்க பாமர ஜனங்களுக்குக்கூட இவையெல்லாம், கடவுள் செயல் என்கின்ற குருட்டு நம்பிக்கை குறைந்து வருவதில் ஆச்சரியமொன்றமில்லை. எனவே ஒரு காலத்தில் அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சிக் கவலையும் இல்லாதபோது ஏற்பட்ட கடவுள் சம்பந்தமான எண்ணங்கள், இனியும் இருந்துதான் தீரவேண்டுமா? என்றால் அது இருந்துதான் வருகிறது, எப்படியும் அது ஒரு அளவுக்காவது—கொஞ்சமாவது இருந்து வரக்கூடும் என்றே சொல்லுவோம்.

ஏனெனில் மனிதன், தான் எல்லாம் அறிந்தவன் என்கின்ற ஆணவத்தை உடையவனாதலால், தன் புத்திக்கு எட்டாததைத் தனக்குத் தெரியவில்லை என்று கண்ணியமாய் ஒப்புக்கொள்ளச் சுலபத்தில் சம்மதிக்க இஷ்டப்பட மாட்டானாகையால், அங்கு—அதாவது தனக்கு அறிவு கட்டையாய்ப் போனபோது அவனுக்குக் கடவுள் நம்பிக்கையும் கடவுள் செயலும் வந்துதான் தீரும். இதை மாற்றுவது சுலபமான காரியமல்ல. பூரண அறிவு வளர்ச்சி பெற்றால்தான் முடியும். அன்றியும், சிலர் உண்

மையை அறிந்திருந்தாலும் சுயநலமோ; மூடப்பிடிவாதமோ காரணமாகத் தங்களுக்கே புரியாதவற்றைப் பேசிப் பாமர மக்களை மயக்கிக்கொண்டும் இருப்பார்கள். ஏனெனில் மக்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருப்பதாலேயே, அவர்கள் பிழைக்கக் கூடியவர்களாய் இருப்பதினால்தான், எது எப்படி இருந்தபோதிலும் உலகத்தில் கடவுள் சம்பந்தமான குருட்டு நம்பிக்கைக்கு இருந்த மதிப்பு குறைந்து விட்டதால், கடவுள் உணர்ச்சியும் எப்படியும் மக்களுக்கு வர வரக் குறைந்து கொண்டுதான் போகும் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக வருத்தப்படுவதிலோ, யார்மீதாவது குற்றம் சொல்லுவதிலோ பயனில்லை. ஆனால், அவ்விதக் குருட்டு நம்பிக்கையும் மூடப் பிடிவாதமும் ஒழிந்த காலத்தில்தான், உலகத்தில் ஒழுக்கமும், சமத்துவமும், இன்பமும் நிலைபெறும் என்பது மாத்திரம் உறுதி.

மதம் என்னும் விஷயமும் ஆராயத் தகுந்ததேயாகும். மனித வர்க்கம் விலங்குகளைப்போல் தனித்தனியே காடுகளில் வாசஞ் செய்துவந்த நிலைமை மாறி, குடிசைகள் கட்டிக் குலாவி வாழ ஆரம்பித்தபோதே அவற்றிற்குச் சில கொள்கைகள் தேவையாகிவிட்டது. எப்படி எனில், எப்படித் தனியே இருக்கும் மக்கள் ஏதாவது ஒரு பொது நன்மையை உத்தேசித்து, தங்களுக்கென்று ஒரு சங்கத்தை நிறுவினால், உடனே அதற்குக் கொள்கைகள் நிர்ணயிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறதோ, அதேபோல் மனிதர்களின் கூட்டு வாழ்க்கைக்குக் கொள்கைகளைநிர்ணயிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகின்றது. அதேபோல் மனிதர்களின் கூட்டு வாழ்க்கைக்குக் கொள்கைகளைத் தீர்மானிக்க வேண்டியதாகி விட்டது. அக்கொள்கைகள்தான் இப்போது மதம் எனப்படுவதாக இருக்கிறது. அம்மாதிரியான கொள்கை நிர்ணயங்களை மீறக்கூடாது என்பதற்கு நிபந்தனைகள் ஏற்படுத்தி, அந் நிபந்தனைகளை மீறி நடப்பவர்களைத் தண்டிக்க முடி

யாத நிலையிலோ, அல்லது தண்டிக்கவேண்டாம் என்று தோன்றிய சமயத்திலோ அல்லது சிலரின் சுயநலத்திற்காகவோ, வேறு விதத்தில் ஏமாற்றிப் பிழைப்பதற்காக வேண்டியோ, அக்கொள்கைகளைக் கடவுள் என்பவற்றுடன் சம்பந்தப்படுத்துவதனால்தான் மக்கள் ஏமாறுவார்கள் என்கின்ற எண்ணம் கொண்டோ, அவற்றைக் "கடவுள் உண்டாக்கினார்" என்றும், அவற்றிற்கு மீறி நடந்தால் "கடவுள் தண்டிப்பார்" என்றும் சொல்ல வேண்டியதாய் விட்டது. (இந்த இடந்தான் முதன் முதலாக மனிதன் தவறுசெய்த இடமாகும்.) ஆனால், இந்தக் கொள்கைகள் நிர்ணயம் செய்யப்பட்டது எப்படி? எந்த ஆதாரங்களைக் கொண்டு? என்று பார்ப்போமேயானால், அது அந்தக் காலத்திய நிலைமை, சீதோஷ்ணஸ்திதி, மக்களின் அறிவு நிலை—அதாவது பாமர மக்களின் அறிவீனம், சிலரின் சூழ்ச்சித்திறம் ஆகிய நிலையில்—அதாவது காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்பச் செய்யப்பட்டவைகள் என்றே சொல்லவேண்டும். மேலும் ஒரு குறிப்பிட்ட கொள்கை, பிற்கால தேசவர்த்தமானத்திற்கோ, சிலரின் சுயநலத்திற்கோ ஏற்றதாயில்லா விட்டால், யாராவது அறிஞர், அல்லது தந்திரக்காரர் அதை மாற்ற நினைக்கும்போது, பாமர மக்கள் மூடநம்பிக்கையின் பலனாய், தங்கள் பிடிவாதத்தைக்காட்டி மாற்றச் சம்மதிக்காத காலத்தில் பிரிந்துபோய்ப் புதிய கொள்கைகளை வகுத்து—அதாவது முன்னையதைத் திருத்தியோ, அல்லது சிலவற்றைமாற்றியோ, அல்லது சில புதியனவற்றைச் சேர்த்தோ ஏதாவது ஒன்றைச்செய்ய நேரிடும்போது அது ஒரு புதிய மதமாக ஏற்பட்டுவிடுகின்றதும் உண்டு. இதனால் பாமர மக்கள்—அதாவது குருட்டுப் பிடிவாத முள்ளவர்கள் "என் மதம் பெரிது" "உன் மதம் சிறிது" என்கின்ற மதச் சண்டைக்கு ஆளாகிவிடவும் நேரிட்டு விடுகின்றது.

இந்தச் சண்டையில்லாமல் திருத்தப்பாடு செய்யலாமா? என்று நினைத்த பெரியோர்கள், அக்கொள்கை

களை மாற்றாமல், பழைய கொள்கைகளுக்கே புதிய வியாக்கியானங்களைச் செய்து, திருப்தி செய்ய முயற்சித்து இருக்கின்றார்கள். ஆனாலும், அம்முயற்சிகளின் பலனும், முடிவில் உட்சமயங்களாகவும், சார்புச்சமயங்களாகவும் மாறிற்றேயொழிய, கொள்கைகளின் முக்கியங்கள் திருத்தப்பட முடியாமலேயே போய்விட்டன. இப்படியேதான் மதங்கள் வெகு காலமாய் மாறி மாறியும், திரிந்து திரிந்தும், பெருகிக்கொண்டும் வந்ததனாலேயே, மதங்களின் உண்மைத் தத்துவமும்,அவசியமும் அறிவதற்கில்லாமல் போனதோடு, அதை ஒரு சடங்காகவே கொள்ள வேண்டியதாகியும் விட்டது. இன்றையத்தினம் எந்த மதக்காரனையாவது கண்டு உன் மதம் என்ன? அதன் தத்துவம் என்ன? என்றால், சில சடங்குகளையும் குறிகளையும் மாத்திரந்தான் சொல்லுவானே ஒழிய அதன் உண்மைத்தத்துவம்—அதாவது எந்தக் கருத்தைக் கொண்டு ஆதியில் மதத்தை உண்டாக்கினார்களோ அதைக்கூற மாட்டான்; அறிந்திருக்கவும் மாட்டான். அதோடு அம்மூலக் கொள்கைக்கு நேர்விரோதமாக அறியாமையும் ஒழுக்க ஈனங்களும் புகுந்துவிட்டதன்றி, சிலர் அவற்றைத் தங்கள் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளும் கருவியுமாய்விட்டது. சிறப்பாக இப்போதைய முக்கிய மதங்கள் என்று சொல்லப்படுபவைகள் எல்லாம் பாமர மக்களை ஏமாற்றி—கொடுமைப்படுத்தி—பணம் பறித்து, புரோகிதக் கூட்டமும், அரசாங்கமும்,செல்வவந்தனும் பிழைக்கும் மார்க்கங்களாக இருக்கின்றனவேயன்றிப் பொதுவாக மனித வர்க்கத்திற்கு எவ்விதப் பலனும் இல்லாமற் போய்விட்டது. மற்றும் மதத்தினால் ஏற்பட்டுவரும் கெடுதிகள் என்னவென்று பார்ப்போமானால், முதலாவது, மதம், மனிதனின் அறிவையே அடியோடு கெடுத்துவிடுகிறது. எப்படியெனில் ஒவ்வொரு மதக்காரனும் தனது மதப்படி கடவுள் உண்டு என்று நினைப்பதோடு, தனது மதத்தைக் கடவுள் உண்டாக்கினார் என்று நம்புவதாகக் காணப்பட்டாலும், மற்றொரு

மதக்காரனும் அப்படித்தானே சொல்லுகிறான், ஆதலால் அவர்களுக்கு வேறு மதத்தையும், நமக்கு வேறு மதத்தையுமா கடவுள் செய்திருப்பார்? என்று சிறிதாவது யோசிக்கவோ, அல்லது நம் மதத்தை வையும்படியோ, அன்றி ஏற்காதபடியோ அவர் மற்றொரு மதத்தை உண்டாக்கி இருப்பாரா? அப்படியானால் இது ஒன்றுக்கொன்று முரண்பாடல்லவா? என்று எவருமே நினைப்பதில்லை. எவருமே என்றால் ஆச்சாரியார்கள், மத அபிமானிகள் என்பவர்கள் முதலாக எவருமே கருதுவதில்லை.

இந்த ஒரு காரணத்தாலேயே மதம் மக்களின் அறிவை எவ்வளவு தூரம் கெடுத்திருக்கின்றது என்பது விளங்கும். இரண்டாவது, மனிதர்களின் ஒற்றுமைக்குப் பதிலாக மனிதனை மனிதன் பிரித்துக் காட்டவே மதம் உதவுகிறது. மூன்றாவது, மதமானது மனிதனை வேடத்திலேயே திருப்தியடையச் செய்கின்றதேயொழிய, ஒழுக்கத்தில் சிறிதும் கவலை செலுத்த நிர்ப்பந்திப்பதில்லை. நான்காவது, எந்த மதத்திலும் பகுத்தறிவுக்குச் சிறிதும் இடமில்லை. ஏனென்றால் எவ்வளவு நல்ல மதமானாலும், முதலில் ஏதாவதொன்றை—அதாவது நமது அறிவிற்கும், பஞ்சேந்திரியத்துக்கும் எட்டாததை குருட்டுத்தனமாய் நம்பித்தானாக வேண்டுமென்று சொல்லாமலிருப்பதில்லை. அப்படியானால் அம்முறையில் ஒன்றை நம்பிவிட்டு, அதேபோன்ற மற்றொன்றை நம்பாமலிருப்பதற்குக் காரணமுமில்லை. ஐந்தாவது, மதமானது கடவுளுக்கும் நமக்கும் இடையில் தரகர்களை உண்டாக்கி, அத்தரகர்களின் நடவடிக்கையையும், வார்த்தையையும், அது எவ்வளவு அசம்பாவிதம் ஆனாலும் சொந்த அறிவை விட, பிரத்தியட்ச அனுபவத்தைவிட மேலானதாக நினைக்கச் செய்கிறது. அன்றியும் மதமானது பணச்செலவு செய்யும் அளவுக்கு மோட்சமும் பாவமன்னிப்பும் இருப்பதாகவும், எவ்வித அக்கிரமங்களுக்கும், வணக்கத்தின் மூலம் மன்னிப்பு இருப்பதாகவும், நம்பச்

செய்வதால் மனிதனை அக்கிரமம் செய்யவும், அவ்வாறு செய்வதன் மூலம் பணம் சம்பாதிக்கவும் தூண்டுகிறது. சோம்பேறிப் பிழைப்புக்குத் தாராளமாய் மதம் இடம் கொடுக்கிறது.

மதம் மக்களைக் கோழைகளாக்குகின்றது. மதத்தினால் இவ்வளவு அநீதிகள் ஏற்பட்டும், உலக சம்பவங்களின் உண்மைக்காரணகாரியங்கள் உணர்வதற்கில்லாமல், நிர்ப்பந்தமாய் மக்கள் மதத்தினால் தடுக்கப்படுகின்றார்கள். இவ்வளவும் தவிர, ஒருவனுடைய உழைப்பில் மற்றும் ஒருவனை வாழும்படி செய்கின்றது. நிற்க, உண்மைச் சைவன் என்பவன் ஒருவன் எவ்வளவு அயோக்கியனானாலும், ஒரு துளி சாம்பல் அவன்மேலே பட்டுவிட்டால், உடனே அவனுடைய சகலபாவமும் தீர்ந்து நேரே "கைலையங்கிரிக்கு"ப் போய்விடலாம் என்கின்றான். சுருக்கமாகச் சொன்னால் வக்கீல் தொழில் செய்பவனும், பொய்ப் புராணப்பிரசங்கம் செய்பவனும் விபூதி பூசிக் கொள்ளுகிற காரணத்தாலேயே தன்னை ஒரு சைவன் என்று எண்ணிக் கொண்டிருக்கிறான் பிறரும் அப்படியே எண்ண வேண்டுமென்று ஆசைப்படுகிறான் என்றால், சைவனின் யோக்கியத்திற்கும், சைவ சமயத்தின் பெருமைக்கும் வேறுசாட்சியம் தேவையா? அதுபோலவே ஒரு உண்மை வைணவன் என்பவனும் ஒரு தடவை ராமா என்று சொல்லிவிட்டால் சகல பாவமும் தீர்ந்துவிட்டது என்கிறான். ராமனைவிட உலகில் வேறு தெய்வமில்லை என்கின்றான். அதுபோலவே ஒரு உண்மைக் கிருஸ்துவன் என்கிறவனும் ஏசுவை அடைந்தால் சகல பாவமும் தீர்ந்துவிடும் என்கின்றான். அன்றியும் ஏசுவின் மூலம் அல்லாமல் பாவமன்னிப்பு என்பது கிடையவே கிடையாதென்கின்றான். அதுபோலவே ஒரு முஸ்லீமும் குர்ஆனில் சொல்லப்பட்டதெல்லாம் கடவுள் வாக்கு, அது எந்தத் தேசத்திற்கும், எந்தக்காலத்திற்கும் பொருந்தியது; அதில் உள்ள ஒரு கோடாவது மாறாமல் இஸ்லாம் மதமே

போய்விடும் என்கின்றான். இப்படியே ஒவ்வொரு மதத்திற்கும் ஒவ்வொரு பெருமையைக்கூறி அதுவேதான் உண்மையான மதம்; முறையே கடவுள் அவதாரம், கடவுள் குமாரன், கடவுள் தூதன் ஆகியவர்களால் ஏற்பட்டது என்றும் சொல்லுகின்றார்கள்.

---

# இரண்டாவது அத்தியாயம்.

## ஆத்மா

ஆத்மா, என்னும் விஷயத்தைப்பற்றி இங்கு எழுதப்பட்டிருப்பதை பார்க்கும் நமது நண்பர்கள் பலர் இது ஒரு தத்துவ விசாரணை; இதைப்பற்றி எழுதவோ, பேசவோ வேண்டிய அவசியம் சமுதாயச் சீர்திருத்தக்காரருக்கு எதற்கு? சுயமரியாதைக்காரர்கள் அனாவசியமாய்க் கண்ட கண்ட விஷயங்களிலெல்லாம் தலையிட்டுச் சீர்திருத்தத் துறையைப் பாழாக்கிக்கொள்ளுவானேன்? என்று கூசாமல் பேசுவார்கள். ஆனால் இப்படிப்பட்ட நண்பர்கள் சமுதாயம் சீர்திருத்தம் என்பது என்ன? என்பதைச் சரிவர உணராதவர்கள் என்று நினைத்துவிட்டு, நம் நோக்கப்படியே, நாம் மேலே செல்லக்கூடிய நிலையிலேயே இருக்கின்றோம்.

ஏனெனில் சமுதாயச் சீர்திருத்தம் என்றால், ஏதோ அங்கும் இங்கும் இடிந்துபோன—சுவண்டுபோன—ஆடிப்போன பாகங்களுக்குச் சுரண்டி, கூறுகுத்தி, மண்ணைக் குழைத்து, சந்து பொந்துகளை அடைத்துப் பூசி மெழுகுவது என்றுதான் அநேகர் கருதி இருக்கிறார்கள். ஆனால் நம்மை பொறுத்தவரை நாம் அம்மாதிரித் துறையில் உழைக்கும் ஒரு சமுதாயச் சீர்திருத்தக்காரரல்ல என்

பதை முதலில் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். நாம் யார் என்றால் மக்கள் சமுதாயம் (மக்கள் சமுதாயம் என்றால் உலகமக்கள் சமுதாயம்) என்ன காரணத்தினால்—ஏன் சீர்திருத்தப்படவேண்டிய நிலைமைக்கு வந்தது? என்பதை உணர்ந்து, உணர்ந்தபடி மறுபடியும் அந்நிலை ஏற்படாமலிருப்பதற்கு நம்மால் இயன்றதைச் செய்யும் முறையில், அடியோடு பேர்த்து அஸ்திவாரத்தையே புதுப்பிப்பது என்கின்றதான தொண்டை, மேற்கொண்டிருக்கின்றபடியால் சமுதாயச் சீர்திருத்தம் என்பதைப்பற்றி, மற்ற மக்கள் அனேகர் நினைத்திருந்ததற்கு, நாம் மாறுபட்ட கொள்கையையும், திட்டத்தையும், செய்கையையும் உடையவராய்க் காணப்படவேண்டிய நிலைமையில் இருக்கின்றோம்.

இதனாலேயேதான் நாம், உலகமக்கள் உண்டு என்பதை இல்லை என்றும், சரி என்பதைத் தப்பு என்றும், தேவை என்பதை தேவை இல்லை என்றும், கெட்டது என்பதை நல்லதென்றும், நல்லது என்பதைக் கெட்டது என்றும், காப்பாற்றப்பட வேண்டுமென்பதை ஒழிக்க வேண்டும் என்றும், மற்றும் பலவாறாக மாறுபட்ட அபிப்பிராயத்தைக் கூறுவோராக—செய்வோராகக் காணப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றோம். ஆனால் நம்போன்ற இப்படிப்பட்டவர்கள் உலகில் நல்ல பெயர் சம்பாதிப்பதும், மதிக்கப்படுவதும், பழிக்கப்படாமல் குற்றம் சொல்லப்படாமல் இருப்பதும் அருமை என்பது மாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரியும். உதாரணமாக இது விஷயமாய் நாயனார் தமது குறளில் "உலகத்தார் உண்டென்பதில் லென்பான் வையத் தலகையாய் வைக்கப்படும்" என்று ஒரு குறள் காணப்படுகிறது. இதன் பொருள் அக்குறளில் காண்கின்றபடி பார்த்தால் "உலகத்தாரால் உண்டு என்று சொல்லப்பட்டதை இல்லை என்று சொல்பவன் உலகில் பிசாசாக மதிக்கப்படுவான்" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இதில்இருந்து, உலகத்தார் என்பது யாரைக் குறிப்பிடுகின்றது? "உலகத்தார் என்றால் உயர்ந்தோர்" என்று சொல்லுவதானால், உயர்ந்தோர் என்பதற்கு லட்சணமென்ன? பிசாசு என்றால் அர்த்தமென்ன? வையத்தலகை என்பதற்குத் திருவள்ளுவர் கருத்தென்ன? அவர் பிசாசை நம்பி இருந்தாரா? என்பன போன்ற பல தர்க்க விவகாரங்கள், அக்குறளுக்குப் பொருள் கூறுவதில் சிலருக்கு ஏற்பட்டாலும், அதன் அதிகாரத்தின் தலைப்புப்படி அக்குறளின் கருத்து "அனேக மக்களால் உண்டு என்று கருதப்பட்ட ஒரு விஷயத்தை, இல்லைஎன்று சொல்லுபவன் அறிவில்லாதவன்" என்று பொருள்படுவதாகவே வைத்துக் கொள்ளுவோம். இப்படி இருந்தாலும் இதிலிருந்து அவன்—அதாவது உலகத்தாரால் உண்டு என்பதை இல்லையென்று சொல்லுபவன், எதனால் அறிவில்லாதவன், என்று கண்டுபிடிக்கவேண்டியது இங்கு முக்கியமாகின்றது. எவ்வாறெனில், உண்டு என்பதை இல்லை என்று சொல்லுகின்றதற்காக, அவன் கொண்ட கருத்து குற்றமுடையதா? அல்லதுபலர்—அனேகர்—மற்றவர்கள் எல்லோரும் உண்டு என்று சொல்லப்பட்ட ஒரு அபிப்பிராயத்திற்கு, அது எப்படி இருந்தாலும் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றாமல் தனது சொந்த அபிப்பிராயத்தைத் துணிந்து சொல்லவந்துவிட்டானே அந்த அடங்காத—கீழ்ப்படியாத—ஊருடன் ஒத்துப்போகாத—ஆணவமான தன்மையுடைய அந்தச் செய்கை குற்றமுடையதா? என்று யோசிக்க வேண்டியது இங்கு முக்கியமான காரியமாகும். ஆகவே உலகத்தார் உண்டு என்பதை மறுத்துக்கூறியதற்கு ஆதாரமாக, அவன் கொண்ட அபிப்பிராயம் குற்றம் என்று ஏற்படுமானால், இங்கு உலகத்தார் சொல்லுவதெல்லாம் சரியானதாய்த்தான் இருக்கும் என்று பொருள் கொண்டு நாயனார் சொல்லி இருக்கவேண்டும். அல்லது அப்படி உலகத்தார் அபிப்பிராயத்துக்கு விரோதமாக, அபிப்பிராயப் பட்டதை ஒருவன் தனித்து எடுத்துச் சொல்லுவது என்கின்ற தன்மை குற்றமானதென்று கருதி

நாயனார் சொல்லியிருந்தால், மனிதனுக்கு அவனவன் அபிப்பிராயத்திற்குச் சுதந்தரமில்லை என்று வள்ளுவர் கருதி அப்படிச் சொல்லியிருக்க வேண்டும். ஆகவே அக்குறளானது உலகமக்களில் பொதுவாகப் பெரும்பான்மையோரையோ அல்லது அறிவாளிகளாகிய பெரும்பான்மையோரையோ, யாரைக்குறிப்பில் வைத்துக்கொண்டு நாயனார் சொல்லியிருந்தாலும், அக்குறள் பொதுவில் குற்றமுடையது என்பதே நமதபிப்பிராயம்.

ஆதலால் ஆத்மா என்கிற விஷயத்தைப்பற்றி யார் என்ன சொல்லியிருந்தாலும்—உலகமே என்ன கருத்துக் கொண்டிருந்தாலும் அதை லட்சியம் செய்யாமலேயே நாம் நம்முடைய அபிப்பிராயத்தைச் சொல்லுகின்றோம்.

அதாவது, ஆத்மா என்பது ஒரு வஸ்து அல்ல, பொருள் அல்ல. அது சுதந்தரம், அறிவு, உணர்ச்சி முதலாகியவைகளை உடையதல்ல என்பதோடு, அது, ஒரு பெரிதும் அர்த்தமற்ற வார்த்தையென்றே நமக்குக் காணப்படுகின்றது. இங்கிலீஷ், தமிழ் அகராதிகளில் பார்த்தாலும் ஆத்மா என்பதற்கு இங்கிலீஷில் சோல் (Soul) என்றும், சோல் என்பதற்கு அறிவு, யோசனை, ஆசை பிறக்கும் இடம், ஊக்கம், உள்சக்தி, மனிதவர்க்கம், உயிர் என்கிற பொருள்கள் என்றும் காணப்படுகின்றன.

தமிழ் அகராதிகளிலும் அதுபோலவே ஆத்மா அல்லது ஆன்மா என்றால் காற்று, அறிவு, உடல், உயிர், பிராணன், மூளை, முயற்சி, பிரம்மன், சுபாவம் என்கின்ற பொருள்கள் காணப்படுகின்றன. இவைகளில் இருந்து அதாவது இந்த வார்த்தைகளில் இருந்து விளக்கப்பட வேண்டியது ஒரே ஒரு வார்த்தைதான் ஆகும். பிராணன் அல்லது உயிர் என்பதற்குத்தான் அர்த்தம் விளங்கவேண்டியதிருக்கின்றது. மற்ற வார்த்தைகள் எல்லாம் தானே அர்த்தம் புரியும்படியாய் இருக்கின்றன.

ஆகவே பிராணன் என்பது என்ன என்று பார்த்தால் அது ஒரு காற்று, (பிராணவாயு) ஹிருதயத்தில் இயங்கிக் கொண்டிருப்பது என்பதாகத்தான் அகராதிகளில் காணப் படுகின்றது.

இது இங்ஙனமிருக்க, இப்போது பழக்கத்தில் ஆத்மா என்றால் அது சரீரத்துக்குள் இருக்கும் ஒரு நித்திய வஸ்து வென்றும், அது சூட்சம வஸ்துவென்றும், அதற்கு பிறப்பு, இறப்பு இல்லை என்றும், அது மனிதன் இறந்த பின்பு வெளிப்பட்டு மறுபடியும் சரீரம் எடுப்பது என்றும், மற்றும் அது சரீரத்தில் இருக்கும்போது செய்த காரியங் களுக்காக அதன் பயனை, சரீரத்தை விட்டுப் பிரிந்த பின்பு கடவுள் மூலம் அனுபவிக்கின்றதென்றும், மற்றும் எத்தனையோவிதமாக அதைப்பற்றிப் பல மதங்களில் பல விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறதாய் அறிகின்றோம்.

உதாரணம் என்னவென்றால், அது மனிதனுக்குள் இருந்து மனித சரீரத்துக்கு வேறாய் "என்சரீரம்" என்று சொல்லுவதன் மூலம், சரீரத்திற்கும் அதற்கும் வேறு பட்டதென்று சொல்லுவதுபோன்ற ஏதேதோ பிரிவுகள் காட்டி, அந்த ஆத்மா சரீரம் விட்டுப் பிரிந்தபிறகு அடைய வேண்டிய—அடையக்கூடிய பலன் ஆகியவைகளைப் பிர தானமாகக் கருதி, அதற்குத் தகுந்தபடி, அதற்காகவே மனிதன் வாழவேண்டியது அவசியமென்று சொல்லப் பட்டு, அந்த மாதிரி ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையே மதங்கள் போதிக்கின்றன வென்றும், அதற்காகவே உலகத்தில் மனிதகோடிகளுக்கு மதம் அவசியமென்றும் சொல்லப்படுகின்றது.

ஆகவே இந்து, கிருஸ்து, பௌத்தம், இஸ்லாம் ஆகிய மதங்களில் பௌத்த மதம் தவிர, மற்ற 'முக்கிய மான' மூன்று மதங்களும், ஏறக்குறைய ஒரே கொள்கை யில் ஆத்மாவையும், ஆத்மாவுக்கும் கடவுளுக்கும் உள்ள

சம்பந்தத்தையும் பற்றிய விஷயங்களை வைத்துக்கொண்டிருக்கின்றன.

நிற்க, மேற்கண்ட ஆத்மா என்பதில்-1. மனித ஆத்மா மாத்திரம்தான் மேற்கண்ட மத சம்பந்தங்களுக்கு—அதாவது கடவுளுக்கும் ஆத்மாவுக்குமுள்ள சம்பந்தத்திற்காக ஏற்பட்ட மதங்களுக்குச் சேர்ந்ததா? அல்லது புல், பூண்டு, அணு, ஜெந்து, ஊர்வன, பறப்பன, நகர்வன, நீர் வாழ்வன முதலிய ஜெந்துக்களின் ஆத்மாக்கள் என்பவைகளும் அதில் சேர்ந்தவைகளா?

2. இந்தப்படி மனித ஆத்மாவுக்கும் மற்றைய ஆத்மாக்களுக்கும் வித்தியாசங்கள் உண்டா? அல்லது எல்லாம் ஒரே தன்மையானதுதானா?

3. மனித ஆத்மா, மனித சரீரத்தில் இருக்கும்போது அது செய்த வினைக்கு ஏற்ற பலனை, சரீரத்தை விட்டுப் பிரிந்தபிறகு அனுபவிக்கின்றது என்பது போலவே, மற்றப் புல், பூண்டு, ஊர்வன, பறப்பன, நடப்பன, நீர் வாழ்வன, அணு ஜந்துக்கள் முதலியவைகளின் ஆத்மாக்களும் சரீரத்தை விட்டு விலகிய பிறகு அவைகளின் வினைக்குத் தகுந்த பலனை அனுபவிக்கின்றனவா?

4. இந்த ஆத்மாக்களில், மேற்கண்ட ஜந்துக்கள் ஒவ்வொன்றுக்கும் சிறிது சிறிது வித்தியாசங்கள், குணங்கள் தன்மைகள் முதலியவைகள்—அதாவது புலன் வித்தியாசங்கள், அறிவு வித்தியாசங்கள், உள்ளதுபோலவே, மனித ஜீவனும் மற்ற ஆத்மாக்கள்போலவே இருப்பதோடு, புலன் அறிவு விஷயத்தில் சற்று கூடுதல் வித்தியாசம், மாறுதல் முதலியவைகள் உடைய ஜந்துவா?

5. உலகத்திலுள்ள மேற்கண்ட ஜந்துக்கள் எல்லாம் வேறு, மனித ஜந்து மாத்திரம் வேறு என்று சொல்லும்படியான வேறுபாட்டை உடைய ஜந்துவா மனிதன்?

எப்படியெனில் மேஜை, நாற்காலி, பெஞ்சு ஊஞ்சல் என்று சொல்லப்படுவதான வஸ்துக்கள், மரம் என்னும் ஒரே மூலப்பொருளாலும், இரும்பு என்னும் ஒரே உப மூலப்பொருளாலும் செய்யப்பட்டிருந்தாலும், தனித்தனி வடிவத்தோற்றத்தினால் தனித்தனிப் பெயரை உடைய தாகி இருப்பதுபோலவே, உலக வஸ்துக்கள் வடிவம், உருவம், சாயல், குணம், நிலை முதலாகிய பேதத்தால், பலவிதப் பெயர்களை உடையதாயிருந்து, பலப்பல காரணங்களாக அதே வஸ்துக்கள் வேறு பல பெயர்களையும் அடைந்தாலும், முடிவில் அவற்றின் மூலப்பொருள்களின் பெயர் எல்லாவற்றிற்கும் ஒரே (தாது) பெயருடைய வஸ்து வாகவேதான் இருக்கும்.

இதுபோலவேதான் ஜீவர்கள் என்கின்ற "உயிர்"ப் பிராணிகள் எல்லாம், உருவத்தில்—தோற்றத்தில் வேறு வேறு வகையாய்—பெயர்கள் சொல்லப்பட்டாலும், அவற்றின் மூலப்பொருள்கள் ஒன்றேயாகும். அதாவது மரத்தையே மூலப்பொருளாய்க் கொண்ட மேஜை, நாற்காலி, பெஞ்சு முதலிய பல பெயர்களுக்கு உருவம், தோற்றம் ஆகியவைகளே காரணமாய் இருப்பதுபோல், அணுக் கிருமி, பூச்சி, புழு, பட்சி, மிருகம், குரங்கு, மனிதன் முதலாகிய பல ஜந்துக்களுக்கும் உருவம், தோற்றம், குணம் முதலிய காரணமாய்ப் பல பெயர்கள் சொல்லப்பட்டாலும், தொட்டுக்காட்டும் பாகங்களானது எல்லா ஜீவவர்க்கத்திற்கும் ஒரேமாதிரியான—ஒரே பெயர் கொண்டதான மூலப்பொருளாகத்தான் இருக்கும். ஆகவே ஜீவவர்க்கங்கள் என்பனவாகிய சகல ஜீவப்பிராணிகளும் சாயல், உருவம், தோற்றம், குணம் முதலியவை தவிர, அவற்றின் மூலப் பொருள்களும் தத்துவமும் ஒன்றேயாகும்.

எனவே, எத்தனையோ கோடி வித ஜீவப்பிராணிகள் என்பதில், மனிதன் என்பதும் ஒருவிதமான தோற்றமுடைய உருவத்திற்குச் சொல்லப்படும் பெயரேயொழிய,

மனிதன் என்கிற ஒரு தத்துவத் தனிப்பொருள் இல்லை என்பதை இதனால் ஒருவாறு உணரலாம். ஏனெனில் மனிதன் என்று குறிப்பிடுவதற்குத் தொட்டுக் காட்டக் கூடிய ஒரு வஸ்து, மனித சரீரத்தின் எந்தப் பாகத்திலும் கிடையாது என்பதாலேயே யாகும். உதாரணமாக ஒரு மனித உருவத்தைக் காட்டி, அவனை மற்ற ஒரு மனிதனைத் தொட்டுக் காட்டச் சொன்னால், அவன் ஒரு மனிதன் என்பவனின் சரீரம் என்பதில், ஏதாவது ஒரு அவயவத்தைத்தான் தொட்டுக் காட்டுவான். அந்த அவயவத்திற்கு ஏற்கனவே பெயர் கை, கால், வயிறு, மார்பு, முதுகு, தோள் என்பன போன்ற ஏதாவது ஒரு பெயரையுடைய அவயவமாகத்தான் இருக்க முடியும். அந்தப் பெயருக்குடைய அவயவ வஸ்துவையும் கவனித்துப் பார்க்க ஆரம்பித்தால், அது தசை தோல் முதலாகிய பெயர்களுடைய பொருளாகத்தான் காணப்படும். இப்படி எல்லாம் இருந்தாலும் கூட, அப்படிக் காட்டப்பட்ட மனிதனும் இயங்குதல்-அதாவது அசைகின்ற சக்தி இருக்கும்போததான் அந்தத் தோற்றத்திற்கு மனிதன் என்கிற பெயரை உடையதாகவும்—அதாவது அசைகின்ற சக்தி இல்லாது போய்விட்டால் மனிதன் என்ற பெயரையுடைய அதே தோற்றம் பிணம் என்னும் பெயரையுடையதாக ஆகிவிடுகின்றது.

அன்றியும்,மனிதன் அசையும் சக்தியை உடைத்தாயிருக்கும் வரை, அந்தச் சரீரத்தில் எந்த பாகம்—அதாவது முன் சொல்லப்பட்ட அவயவங்களாகிய கண், காது, வாய், கால், கை முதலாகிய எப்பாகம் போய்விட்ட போதிலும் மனிதன் என்றே சொல்லப்படுகின்றது. ஆகையால் அசையும் சக்தி உள்ள ஒருவிதத் தோற்ற உருவத்திற்குத் தான் இங்கு மனிதன் என்று சொல்லப்படுவதாய் இருந்து வருவதை நாம் பார்க்கின்றோம். இந்தப்படியான மனிதன் அசையும் சக்தியை உடைத்தாய் இருக்கும்வரைதான் அவனுக்குள் உயிரோ—ஜீவனோ—ஆத்

மாவோ ஒன்று இருக்கின்றது என்று கருதுகிறார்களே ஒழிய வேறில்லை.

இந்த அசையும் சக்தி இருக்கின்ற ஜீவர்கள் எல்லா வற்றிற்குமேதான், ஆத்மா என்பதாக ஒன்று இருக்கின் றது என்பது ஆத்மவாதிகளின் கொள்கையாகும். அதா வது "சரீரத்தில் இருந்து ஆத்மா பிரிந்து விட்டால் அசைவு நின்றுவிடும்" அதாவது மனிதன் செத்துப் போவான் என்று சொல்லுவார்கள். எப்படி இருந்தா லும் "சரீரத்திற்கு அசையும் சக்தியைக் கொடுப்பதுதான் ஆத்மா" என்பது ஆத்மவாதிகளின் கொள்கையென்பதும் இதனால் புலப்படும்.

ஆகவே இந்த அசையும் சக்தி சரீரத்திற்கு எப்படி உண்டாகின்றது? இது எப்படி நின்று போகின்றது? என் பதைச் சரிவர உணர்ந்தோமானால், ஆத்மாவின் தன்மை இன்னதென்று ஒருவாறு விளங்கிவிடும்.

இதற்குமுன், நமக்கு ஆத்மாவைப்பற்றிச் சில கேள்வி கள் எழுகின்றன.

அதாவது, சரீரத்திற்குள் ஆத்மா எப்படி வந்தது? ஏன் வந்தது? சரீரத்தை விட்டுவிட்டு ஆத்மா எப்படி வெளியேறுகின்றது? அது ஏன் வெளியேறிவிடுகின்றது? எந்த மாதிரி ஆத்மா மனித சரீரத்திற்குள் வருகின்றது? எந்த மாதிரி ஆத்மா கழுதை முதலிய மிருக சரீரத்திற் குள் வருகின்றது. எந்த மாதிரி ஆத்மா அணுக்கிருமி முதலிய சரீரத்திற்குள் நுழைகின்றது? ஜீவர்களின் அசைவு, பலம், குணம் முதலிய பலவித மாறுதலான நட வடிக்கைகளுக்கு ஆத்மா காரணமா—அல்லது அதன் சரீர அமைப்பு காரணமா? என்பன போன்ற பல கேள்விகளா கும். (இவை பழைய கேள்விகளாகப் பலருக்குக் காணப்

படலாம் என்றாலும், பழைய கேள்விகள் புதிய மனிதர்களுக்குத் தோன்றக் கூடாமல் செய்வதற்குப், பழைய காலத்தில் இருந்தே யாரிடத்திலும் சக்தியில்லாமல் போய்விட்டதால், அது புதிய மனிதர்களுக்கும் தோன்றுவதற்கு யார் என்ன செய்யமுடியும்.) இவை ஒருபுறம் நிற்க, இனி எடுத்துக்கொண்ட விஷயமாகிய "நான்" என்பதைப்பற்றிக் கவனிப்போம்.

ஒரு மனிதன், தான், "நான்" என்று சொல்லுவது அந்த மனிதனுக்குள் இருக்கும் அசையும் சக்தியாகிய ஆத்மா என்பதா? அல்லது வேறு பொருளா? என்று பார்ப்பதனால், அது வேறு பொருளா அல்லவா என்பதைக் கண்டு பிடிப்பதற்கு முன்னாலேயே, ஆத்மா என்பது நான் என்று சொல்லுவதல்ல என்பதானது, சீக்கிரத்தில் கண்டு பிடிக்கக்கூடியதாக இருக்கின்றது. எப்படியெனில் ஒரு மனிதன் பேசும்போது, என் ஆத்மா என்றும், 'நான் என் ஆத்மாவை விடமாட்டேன்' என்றும்,—இந்தமாதிரி நான், என் என்பது வேறு என்றும், ஆத்மா என்பது வேறு என்றும், பிரித்துப் பேசுவதையும், பேசும்படி இருப்பதையும் பார்க்கின்றோம். ஆகவே சரீரத்தின் அசையும் சக்தி ஆத்மா என்றால், இந்த "நான்" என்பது அதைவிட்டு வேறுபட்ட மற்றொரு விஷயமாக இருக்கும் என்று கருதவேண்டியதாக இருக்கின்றது என்பது இதனால் ஒருவாறு புலப்படும்.

ஆனால் ஒரு மனித சரீரத்தில் ஆத்மா என்பதாக ஒரு வஸ்துவும், உயிர் என்பதாக ஒரு வஸ்துவும், நான் என்பதான தன்மையை உணர்த்த ஒரு வஸ்துவும் ஆக மூன்று வஸ்துக்கள் இருக்கும் என்று நினைப்பது சரியான நினைப்பாகாது என்பதோடு, அப்படி நினைத்தாலும் அவைகளில் எது மனிதனை நடத்துகின்றது—அல்லது மனிதனுடைய நடத்தைக்கு ஜவாப்தாரித்தன முடையது என்னும் விஷயம், மயக்கத்தையும் முரண்களையும்

விளக்கக்கூடியதாக ஆகிவிடும். ஆதலால் "நான்" என்று சொல்லப்படுவதும் எண்ணப்படுவதும் தனிப் பட்ட ஒரு வஸ்துவல்ல என்றுதான் எண்ணவேண்டி யிருக்கின்றது.

பின், அது என்ன விதமாகத்தான் இருக்கக்கூடும் என்ற கேள்விக்கு நமது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கின் றோம்.

அது பிசகாய் இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அந்தப் பிசகானது ஆத்மா, ஜீவாத்மா, பரமாத்மா என்று பிரித்துச் சொல்லுகின்றது போன்ற அவ்வளவுபெரிய பிச காகவும், ஆத்மாவுக்குக் குணங்கள் கற்பிக்கின்ற அளவு பிசகாகவும் இருக்காது என்பது மாத்திரம் உறுதி. திருத் துவதற்குயாவருக்கும் உரிமை கொடுத்தே நமதபிப்பிரா யத்தைத் தெரிவிக்கின்றோமே யொழிய, இதுவே சரி யான அபிப்பிராயம் என்பதாக நாம் ஒன்றும் இவ்விஷ யத்தில் சொல்லவரவில்லை.

ஆகவே, மனித சரீரத்துள்ளே ஆத்மா என்பதாகத் தனித்துப் பிரித்து உணர்த்தக்கூடிய வஸ்து ஒன்றும் இல்லை என்பது நிச்சயமாகும்.

---

# மூன்றாவது அத்தியாயம்.

## நான்

இப்போது மனிதன் தன்னை உணர்த்தும் வகை யில் "நான்" என்று சொல்லிக்கொள்வது எது என்பதே இப்போது இவ்வத்தியாயத்தில் விளக்கப்படவேண்டிய விஷயமாகும். முன் அத்தியாயத்தில் ஆத்மா என்பதைப் பற்றிச் சொன்னது போலவேதான் இப்போது "நான்" என்பதைப் பற்றியும் சொல்லவேண்டியிருக்கின்றது.

மனிதன் தன்னை நான் என்று சொல்லிக் கொள்வது எதனால்? அது எது? என்னும் ஆராய்ச்சியானது இந்து மதம் என்பதின் கடைசி—அதாவது "வேதாந்த," தத்துவமாகப் பாவிக்கப்பட்டு "அதைக் கண்டுபிடிப்பதே கடவுளைக் கண்டுபிடிப்பதாகும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உதாரணமாக "தன்னை அறிந்தவனே தலைவனை (கடவுளை) அறிந்தவனாவான்" என்றும், "தன்னைத் தான் அறிந்தால் கடவுளை அறியவேண்டியதில்லை" "தன்னையறிந்தவனே ஞானி" என்றெல்லாம் சொல்லப் படுவதை நாம் கேட்டிருக்கிறோம்.

ஆகவே இந்தப்படி சொன்னவர்கள் எல்லாம் ஒரு மனிதன் தன்னை "நான்" என்று சொல்லிக்கொள்கின்றானே அது எது? என்று கண்டு பிடிக்கும் விஷயத்தில் ஏதோ ஒரு பெரிய கஷ்டம் இருப்பதாக நினைத்தோ, அது சுலபத்தில் மனத்துக் கெட்டாதது என்று கருதியோ இப்படிச் சொல்லியிருக்கக்கூடும் என்பதாகவும், மற்றும் "நான்" என்பதைக் கண்டுபிடிக்க முயற்சி செய்து ஒருவன் அதைக் கண்டுபிடித்து விட்டானேயானால் பிறகு அவன் "ஞானியாகவும்" "துறவியாகவும்" அல்லது கடவுளைப்பற்றிக் கவலைப்படவேண்டியவனல்லாத-லட்சியம் செய்யப்பட வேண்டியவனல்லாத "நாஸ்தீகனாகவும்" ஆகிவிடக்கூடும் என்று கருதிச் சொன்னதாகவும் இருக்கக்கூடும் என்பதாக முடிவு செய்துகொள்ளவேண்டியிருக்கின்றது.

எப்படியிருந்தாலும் ஒரு மனிதன், தான் யார்? தனக்குள் இருக்கும் நான்—என்—என்று வரும் உணர்ச்சி எது? அது எப்படி உண்டாகின்றது? எதுவரையில் அவ்வுணர்ச்சி இருக்கின்றது? என்பதான உண்மையை உணர்ந்தால், அவன் நாஸ்தீக அபிப்பிராயத்தை—அதாவது

ஆத்மாவோ, கடவுளோ இருக்கிறது என்பதை நம்பாத கொள்கையையே கொள்ளவேண்டியவனாகி விடுவான் என்பதை ஒப்புக்கொள்ளுகின்றோம்.

உலகத்தில், பெயரும்—உருவமும் உள்ள வஸ்துக்கள் எல்லாம், ஒருவிதச் சேர்க்கையால் அதாவது பல கூட்டுப் பொருள்களால் சேர்ந்து இருக்கும் வடிவத்தையே பெரிதும் உணர்த்துவதாகும்.

ஏனெனில் உலகத்திலுள்ள எந்தப் பெயருக்கும் மாறுதலையடையாத ஒரு தனிவஸ்து என்பது கிடையவே கிடையாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் எந்தப் பெயரும் ஒரு தோற்றத்திற்கு அல்லது ஒரு உருவத்திற்கு அல்லது ஒரு வடிவத்திற்குத்தான் உபயோகப்பட்டு—சொல்லப்பட்டு வருகின்றதே அல்லாமல் வஸ்துவுக்குப் பெயர் சொல்லப்படுவதில்லை என்பதேயாகும்.

உதாரணமாக நாம் ஏதாவது ஒரு வஸ்து என்பதை எடுத்துக்கொண்டு அதற்குப்பெயர் என்ன? என்று ஒரு மனிதனைக் கேட்டு, அவன் சொன்ன பெயரையே திருப்பிச் சொல்லி, அந்தப் பெயருக்குண்டான வஸ்துவைத் தொட்டுக்காட்டும்படி அம்மனிதனையே கேட்டால், அந்த மனிதன் தொட்டுக்காட்டும் பாகத்தில் இருக்கும் வஸ்துவானது அந்தப் பெயரை—அதாவது அவன்முன் சொன்ன பெயரை உடையதாக அது காணப்படாததை நாம் நன்றாய்ப் பார்க்கலாம்.

அதாவது, ஒரு விளக்கு(light)—ஒரு மேஜை—ஒரு கடிகாரம்—ஒரு புஸ்தகம் என்பது போன்ற பெயர்களை உடைய வஸ்துக்கள் என்பவைகளில், ஏதாவது ஒன்றை எடுத்துக்கொண்டு அவற்றின் பெயர் என்ன என்று கேட்டால், முறையே முன்சொன்ன பெயர்களைத்தான் சொல்லுவான்.

ஆனால் ஒரு விளக்கு என்பது எது என்று தொட்டுக் காட்டச் சொன்னால், விளக்கு என்பதில் அவன் தொட்டுக்காட்டிய பாகம் ஒரு சிம்னியையோ, கண்ணாடியையோ, தகட்டையோ, கம்பியையோ, ஆணியையோ தான் தொட்டுக் காட்டப்பட்டதாகக் காணப்படும்.

அதுபோலவே ஒரு மேஜையைத் தொட்டுக்காட்டச் சொன்னால் ஒரு பலகையையோ, அல்லது காலையோ, ஆணியையோ, குமிழையோ, கைப்பிடியையோ தான் தொட்டுக் காட்டியதாய்க் காணப்படும்.

அதுபோலவே ஒரு கடிகாரம் என்பதையும் தொட்டுக் காட்டச் சொன்னால் அவன் மேல்மூடியையோ, கண்ணாடியையோ அல்லது திறந்த கடிகாரமாய் இருந்தால், ஒரு சக்கரம் என்பதையோ, ஆணி என்பதையோ, தொட்டுக் காட்டியதாகத்தான் காணப்படும்.

அதுபோலவே ஒரு புஸ்தகம் என்பதையும் தொட்டுக் காட்டச் சொன்னால் அவன் தொட்டுக் காட்டிய பாகம் காகிதமாகவோ, அட்டையாகவோ, காலிகோ துணியாகவோ, தோலாகவோ தான் காணப்படும்.

இப்படியே மற்றும் அதன் உட்பிரிவுப் பெயர்களும் அதாவது மேல் சொல்லப்பட்ட பெயர்களும் சரியான படி தொட்டுக் காட்டப்பட்டதாகவும் இருக்க முடியாது. ஏனெனில் அவன் விளக்கு (light) என்பதாகக் காட்டியது கம்பி என்பதனாலும், கம்பி என்பதாக ஒன்றைத் தொட்டுக் காட்டியதாக இல்லாமல் இரும்பைத் தொட்டுக் காட்டியதாகத்தான் காணப்படும். இரும்பு என்பதைக் காட்டும்போது ஏதோ ஒருவகையான மண்ணின் சேர்க்கையைக் காட்டியதாகத்தான் காணப்படும். இப்படியே நமக்குக் காணப்படும் வஸ்துக்கள் எல்லாம் ஏதோ ஒரு ரூப மாத்திரத்திற்கு—ஒரு உருவத்திற்கு—ஒரு

மாதிரியான தோற்றத்திற்கு—அந்தப் பெயர் சொல்லப்படு வதாகக் காணப்படுமேயன்றி அந்தப் பெயருக்கு அந்த வஸ்து கட்டுப்பட்டு அந்த வஸ்துக்கள், வேறெந்த ரூபத்தை அடைந்தாலும், வேறெந்த குணத்தை அடைந் தாலும் அந்தப்பெயரையேயுடையதாகக் காணும்படியான ஒரு வஸ்துவும் காணப்பட முடியாது என்பது இவற்றிலி ருந்து நன்றாய் உணரக்கிடக்கின்றன.

ஆகவே விளக்கு என்றதும், மற்றும் மேஜை, கடிகா ரம், புத்தகம் என்றதும் ஒருவித வடிவத்தில் காணப்படும் ஒரு தோற்றத்தின் பெயரே அல்லாமல், ஒரு வஸ்துவின் பெயர் அல்ல என்பதும் இதனால் உணரத்தகுந்த தாகும்.

எனவே இவைபோன்ற இன்னும் பல கேள்விகளும் சந்தேகங்களும் ஒருபக்கமிருக்க, மனிதன் என்றால் என்ன? என்பதையே நாம் இங்கு முதலில் ஆராய்வோம். மனிதன் என்பதின் தன்மை விளக்கம் ஆங்கிலத்தில் (Self) என்பதான தான், நான், என் என்கின்ற குறிப்பு உணர்ச்சிகளேயாகும். அக்குறிப்புகளில் ஒரு மனிதன் தன்னை நான் என்று சொல்லிக்கொள்ளும்போதும் என க்கு, என்னுடையது என்று சொல்லிக்கொள்ளும்போதும் ஏற்படுகின்ற உணர்ச்சி எப்படிப்பட்டது? அது எப்படி உண்டாகிறது? என்பதைக் கவனித்தால் ஆத்மாவின் தன்மை தானாகவே விளங்கும்.

அதாவது, ஒரு மனிதன் நான் என்பதில் அந்த மனித சரீரத்தின் எந்தப் பாகம் தனித்திருந்து நான் என் கிறது? அல்லது அந்த சரீரம் மொத்தமுமா? அல்லது சரீரமில்லாமலா? சரீரத்தில் எதுவரை நான் என்ற உணர்ச்சி இருக்கின்றது? சரீரத்தில் இருந்து எது போய் விட்டால் நான் என்கின்றது போய்விடுகிறது? என்பது போன்ற கேள்விகளுக்குச் சமாதானம் கிடைத்தா லொழிய 'நான்' என்பது விளங்காது.

இந்த முறையில் நான் என்பதைக் கவனிக்கும் போது என் சரீரம், என் உயிர், என் ஆத்மா, என் ஆவி, என் ஜீவன், என் மனம், என் அறிவு, என் புத்தி, என் எண்ணம், என் சித்தம், என் பிராணன், என் பிராண வாயு, என் சூட்சம சக்தி, என் கடவுள், என் ஆண்டவன் என்பன போன்ற—அதாவது மனிதன் அல்லது ஆத்மா—அல்லது ஜீவன் என்பவைகளாகிய எதைதை நாம் மனித னாக ஆத்மாவாக இருக்கக்கூடும் என்று கருதுகிறோமோ அவைகளையெல்லாம் தன்னில் இருந்து தனிப்படுத்தி, அவைகளோடு என் என்பதைச் சேர்த்துப் பேசுவதைப் பார்க்கிறோம். ஆகவே என் (நான்) வேறு மேற்கண்ட மற்றவைகள் எல்லாம் வேறு என்பதாக நினைக்கும்படி யாக இருக்கின்றது. ஆதலால் இவைகள் எல்லாம் மனி தனுடைய தன்மை, உணர்ச்சி ஆகிய 'நான்' என்பது அல்ல என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

இந்த நிலையில் மனிதனாகிய "நான்" என்னும் தன்மை உணர்ச்சி செய்த காரியங்களுக்காக, நான் அல் லாத அதாவது என் ஆத்மா என்பதாகிய ஒரு வஸ்துவோ ஒரு ஜீவனோ ஒரு சக்தியோ ஆகிய சூட்சம ஜீவன் என் பது எப்படி அந்தப் பயனை அனுபவிக்க முடியும்? அனு பவிப்பது தான் எப்படி நியாயமாகும்? நான் செய்த காரி யத்திற்கு என் ஆத்மாவைத் தண்டிப்பதோ, கண்டிப் பதோ, சன்மானம் ஆகியவைகளைக் கொடுப்பதோ எப் படிக் கடவுளின் நீதியாகும்? என்கின்றதான விஷயம் மிகவும் யோசிக்கத் தக்கதாகும்.

இந்தமாதிரியான பிரச்சினைகளுக்குச் சமாதானம் சொல்லுபவர்கள், பெரிதும் ஒரே சமாதானம் தான் சொல்லுவார்கள். அதென்னவென்றால் "இம்மாதிரி யான பிரச்சினை வெகு ஆயிரம் வருஷங்களுக்கு முன் னமேயே பலரால் கேட்கப்பட்டாய் விட்டது; இவை சாதாரண மனிதர்களுக்குப் புரியும்படியானவைகள் அல்ல; சொன்னாலும் உங்களைப் போன்றவர்களால்

கிரகித்துக்கொள்ள முடியாது; வேண்டுமோனால் கைவல்யம், ஞானவெட்டி, வாசிஷ்டம், கீதை, வேதாந்தசாரம், தத்துவகீதை முதலாகியவைகளைப் பாருங்கள்; அதற்கு வேறுபல பக்குவங்கள் வேண்டும், என்பது போன்ற பதிலைச் சொல்லி விடுவார்கள்.

சாதாரணமாக கிறிஸ்தவர்களும், இஸ்லாமானவர்களும் அனேகர் இந்த விஷயத்தில் கவலைப்படாமல் 'தீர்ப்புநாளை' உத்தேசித்து, தாங்கள் இந்த சரீரத்துடனேயே ஒரு காலத்தில் மறுபடியும் எழுப்பப்பட்டு ஏதோ ஒரு பலனை அடையக்கூடும் என்கின்ற அளவோடு விட்டு விட்டார்கள். ஆதலால் அவர்களிடம்அதிகச் சிக்கலோ, புரட்டோ கிடையாது. பௌத்தர்கள் ஆத்மா என்பதே கிடையாது; நித்திய வஸ்து என்பதே "கிடையாது" என்பதாக முடிவு கட்டிவிட்டார்கள். ஆதலால் அவர்களுக்குள்ளும் இம்மாதிரியான கொசமுசாக்கள் கிடையாது.

ஆனால் இந்து மதக்காரர்கள் என்பவர்கள் மாத்திரம் ஆத்மா, சூட்சம சரீரம், மோட்சலோகம், நரகலோகம், மறுபிறப்பு, அதுவும் பலவிதமாய்—அதாவது புல்லாகிப் பூண்டாகி என்று படிப்படியாய் ஏற்பட்டது என்றும், இவைகள் எல்லாவற்றையும்விட மற்றொரு விதமாய் அதாவது ஆத்மாக்கள் பிதுர்த்தேவதைகளாகிப் பிதுர்லோகம் என்பதில் இருந்து கொண்டு பிள்ளைகள், சந்ததியார்கள் முதலியவர்களால் இந்த உலகத்தில் பிராமணாளுக்குக் கொடுக்கப்படுவதை அவர்களது மந்திர சக்தியின் மூலமாய்ப்பெற்று வாழ்ந்து வருகிறார்கள் என்றும் இன்னும் பலவிதமாய்ச் சொல்லப்படுகின்றன. ஆகவே இவை தானாகவே ஒன்றுக்கொன்று முரண்பாடுள்ள கட்டுக்கதைகளாய்த் தென்படுகின்றன.

---

# நான்காவது அத்தியாயம்.

## மோட்சமும் நரகமும்.

மனிதன் உடல், உயிர், மாயை எனும் முப்பொருளாக ஆக்கப்பட்டிருக்கிறான் என்றுசைவர்களும், பிர்மமே மாயா சம்பந்தப்பட்டு இவ்வுலகில் ஜீவர்களாய்த் தோன்றியிருக்கிறது என்று ஸ்மார்த்தர்களும், 'ஆன்மா' என்றொரு பொருளை இறைவன் சிருஷ்டித்து மனித உடலுக்குள் புகுத்தியிருக்கிறான் எனச் சில மதங்களும் இவ்வாறு ஒன்றிற்கொன்று முரணாக, நாம் முன் அதிகாரங்களில் விளக்கிக் காட்டியபடி கூறி வருகின்றன. ஆனால் எல்லா மதங்களும் 'ஆன்மா' செய்த நன்மை தீமைக்குத் தருந்தவாறு மோட்சமும் நரகமும் எய்துமென்பதை அபிப்பிராய பேதமின்றி ஒத்துக்கொள்கின்றன. ஆனால் மோட்சமும் நரகமும் எவ்வாறு இருக்கும் என்றால், ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு விதமாகவே வர்ணிக்கின்றது. எந்த நாட்டான் நரகத்தைப்பற்றி எழுதியிருந்தாலும், தத்தம் நாட்டிலுள்ள கொடிய பிராணிகளும், பயங்கர உருவங்களும், கஷ்டமான அனுபவங்களும் தான் நரகத்திலே யிருப்பதாகவும், அவ்வாறே மோட்சத்திலும் தத்தம் நாட்டிலுள்ள உயர்ந்த பிராணிகளும், மரஞ்செடி, கொடி, பழவர்க்கம், உணவு, பெண்கள், முதலிய போக போக்கியங்களு மிருப்பதாகவே எழுதி வைத்திருக்கின்றான்.

நரகமும் மோட்சமும் பணம் பறிப்பதற்குப் புரோகிதர்களால் கட்டப்பட்ட ஓர் கற்பனை உலகம் என்றே யாம் கருதுகிறோம். சிறுபிள்ளைகளை அய்ந்து கண்ணன் வருகிறான், பூச்சாண்டி வருகிறான், அழாதே! அப்படிச் செய்யாதே! இப்படி நடவாதே! என்று ஏமாற்றுவது போலவே, மனிதர்களை நரகத்தைக் காட்டிப் புரோ

கிதர்கள் மிரட்டுவதும், சிறுபிள்ளைகளுக்கு மிட்டாய், சாக்லெட் முதலியவைகளைக் காட்டி தத்தம் வழிக்குத் திரும்புவதுபோல மக்களிடம் மோட்சத்தைக் காட்டி பணம் பறித்து வருகிறார்கள். மேலும் முதலாளிகள் தொழிலாளிகளையும், அரசன் குடிகளையும் விழித்து ஜாக்கிரதை! நீ எஜமானத் துரோகம், ராஜத் துரோகம் செய்தால் என்றும் மீளாத கொடுநரகிலே வீழ்ந்து என்றும் துன்புறுவாய் என்று மிரட்டி, அவர்களுக்குத் தங்களின் நியாயமான உரிமைகளைப் பெறவேண்டும் என்ற எண்ணம் உதிக்காமலே ஏமாற்றி விடுவதற்குத்தக்க போராயுதமாய் நரகம் விளங்கி வருகிறது.

பொதுவாக எம்மதத்தை உற்று நோக்கினாலும் மோட்சத்தை, பணம், சாப்பல் (விபூதி) சிலுவை, குருபக்தி, பிரார்த்தனை முதலியவைகளினால் எளிதில் பெற வழி காணலாம்.

மக்களுலகில் வறுமையும் ஏமாற்றும் அக்கிரமங்களும் இந்த மோட்ச—நரகப் பைத்தியத்தினாலும், பிராயச்சித்தம் என்னும் பித்தலாட்டத்தாலும் பெருகி வளர்ந்து வருகிறது என்பது மறக்க முடியா உண்மையாகும்.

மோட்சமும் சுவர்க்கமும் கள்ளுச் சாராயக் கடைகளைவிட, தாசி வேசிகள் வீடுகளைவிட மோசமானது என்பதை மக்கள் உணரும்படி செய்யவேண்டும். மோட்ச நரகம் என்பது எப்படித் திருடர்கள் பிரயாணிகளை வழிப்பறி செய்வதற்குத் தனிவழியில் ஆள் அடையாளம் தெரியாமல் வேஷம் போட்டுக் கொண்டு வந்து வழி மறித்து பண்டையை உடைக்க, தடிக் கம்பையும் ஈட்டியையும் ஆயுதமாகக் கொண்டு பொருள் பறித்துச் செல்லுகிறார்களோ, அதுபோலவே பகல் வழிப்பறிக்காரர்கள் மக்களின் வாழ்க்கைப் பிரயாணத்தில் வழிமறித்துப் பொருள் பறித்துப் போகச்செய்து கொண்ட ஆயுதங்களேயாகும்.

ஆகையால் அதை மனிதன் முதலில் மறந்தாகவேண்டும். இந்த உலகவாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் மக்களுக்கு உதவி செய்வதையும் தனது அளவுக்கும் தேவைக்கும் மேற்பட்டதை அடைய ஆசைப்படாமலிருக்க வேண்டியதையே மோட்சம் என்று மக்கள் கருதவேண்டும். இந்தப்படி அளவுக்கும் தேவைக்கும் மேல், மக்களை அடையச் செய்யாமல் பார்த்துக்கொள்வதையே மக்களை மோட்சத்திற்கு அனுப்பும் வேலையென்று நாம் கருதவேண்டும். மனிதன் இந்த நாட்டில் எப்படித் தனது தேவைக்கும், அளவுக்கும், தகுதிக்கும் மேல் அடைய ஆசைப்படுகின்றானோ, அதற்கு ஆதரவாய் இருப்பதற்காகவே மூடர்களுக்கு மேல் உலகத்தில் அவர்களது தகுதிக்கும், அளவுக்கும், தேவைக்கும் மேலாக அனுபவிக்க ஆசைகாட்டி இங்கு தட்டிப் பிடுங்கிக்கொள்ளுகிறார்கள். மூடர்களும் பேராசைக்காரர்களும் தான் மோட்சத்தை விரும்புவதை நாம் பல உதாரணங்களால் காணலாம். மோட்சத்தையும் தேவலோகத்தையும் பற்றிப் பாமர மக்களுக்குச் சொல்லப்படும் கருத்துக்களைச் சற்று கவனித்துப்பாருங்கள். மனிதனுக்கு எதெதில் சாதாரணமாய் ஆசை வரக்கூடுமோ அதையேதான் மோட்சத்தில் சிருஷ்டித்து இருக்கிறார்கள்.

அதாவது இங்குள்ள மனிதனுக்குப் பொருள் வேண்டும், பெண் வேண்டும், தேவையானசெல்லாம் நினைத்த மாத்திரத்தில் கிடைக்கவேண்டும், நல்ல வாலிபப் பருவம் வேண்டும், சதா இடைவிடாத போக்கியம் பெறவேண்டும், சாகாமலிருக்கவேண்டும். இந்த விஷயங்கள் மனிதனுக்குச் சாகும்வரையிலும், செத்தபிறகும் அனுபவிக்கக் கூடியதாய் ஆசைப்படக்கூடியதாய் இருக்கிறது என்பது யாரும் அறிந்ததாகும்.

ஆகவே இந்தக் காரியங்களையே மேல் உலகத்தில் இருப்பதாகவும் அதை அடையக்கூடும் என்றும் ஆசை

உண்டாகும்படி; அதாவது மேல் உலகத்தில் எங்கு பார்த்தாலும் பொன்னும், ரத்னங்களும் நிறைந்து கிடக்குமென்றும், உலகமே பொன்னுலகமென்றும், அங்கு அரம்பை ஊர்வசி முதலாகிய தேவ கன்னிகைகள் என்பவர்கள் என்றைக்கும் வாலிபமாய் நம் பக்கத்தில் இருந்துகொண்டு நமக்கு சதா போகங் கொடுத்துக்கொண்டிருப்பார்களென்றும், காமதேனு கற்பகவிருட்சங்கள் நமக்கு எது தேவையோ அதை உடனேயே கொண்டுவந்து கொடுக்குமென்றும், நரை, திரை, மூப்பில்லையென்றும், நாம் சாகாமல் சிரஞ்சீவியாய் இருப்போமென்றும் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டதால், அவைகளை மனிதன் நித்தியமாய் நம்பி இந்த உலகத்தையும், இங்குள்ள போகபோக்கியங்களையும் அநித்தியமாய் எண்ணி, கஷ்டப்பட்டு சம்பாதித்த பொருள்களையெல்லாம் இந்த மோட்சத்திற்கு என்றே செலவு செய்வதுடன் நில்லாது, இதற்காகவென்று பல விதமான அக்கிரமமான வழிகளிலும், மற்ற மக்களை வஞ்சித்தும், பட்டினி போட்டும் பொருள் பறித்தும்கூட இதற்காக செலவு செய்யவேண்டியிருக்கின்றது. உதாரணமாக ஏழை மக்கள் கஞ்சிக்கு அலையும்போது குடம் குடமாய்ப் பால் குடங்களைத் தினமும் கல்லின் தலையில் கொட்டி அவற்றை நாறவைப்பதின் கருத்து என்ன என்று பாருங்கள். குடியிருக்க நிழல் இல்லாமல் மக்கள் திரியும்போது மலைகளையும், பாறைகளையும் உடைத்துக் கோட்டைகள் போல்—சந்திரகாந்த மண்டபங்கள்போல், மக்கள் கோவில்கள் கட்டுவதின் கருத்து என்னவென்று பாருங்கள். எவ்விதத் தொழிலும் செய்வதற்கு மூலதனம் இல்லாமலும், தொழிலில்லாமலும் மக்கள் வயிறுவளர்க்கக் கப்பலேறி வேற்று நாட்டிற்குக் கூலிகளாய்ப்போய் சொத்துப் பொத்தென்று மாண்டு மடிந்து கொண்டிருக்கும்போது, பொம்மைகளை வைத்து உற்சவம் செய்வதும், அவற்றிற்குப்பத்து லக்ஷம், ஒரு கோடி பத்துக்கோடிக் கணக்காக நகைகளும், பாத்திரங்களும், வாகனங்களும், துணிகளும், சொத்துக்களும் சேர்த்து வைப்பதின் கருத்தென்ன

வென்றபாருங்கள். நாளுக்குநாள் வாழ்க்கை துன்பகரமாய்மாறி, ஏழைகள் மலிந்து வரும்போது ஆயிரக்கணக்காய்—ஏன்—லட்சக் கணக்காய் ரூபாய் செலவு செய்து, கும்பாபிஷேகங்கள் செய்வதின் கருத்து என்னவென்று யோசித்துப்பாருங்கள். பூமியை உழுது கஷ்டப்பட்டு பயிர் செய்யும் குடியானவர்கள் அரை வயிற்றுக்குக்கூட போதுமான ஆகாரமில்லாமல் கஷ்டப்படும்போது, குழவிக் கல்லுக்கும், செம்பு, பித்தளை பொம்மைகளுக்கும் தினம் பத்து மூட்டை, இருபது மூட்டை, முப்பது மூட்டை போன்ற அரிசிகள் போட்டுப் பொங்கி நைவேத்தியம் செய்து பாடுபடாத சோம்பேறிகளுக்குக் குடும்பத்துடன் போட்டுக்கொண்டிருக்கும் கருத்து என்ன என்று எண்ணிப்பாருங்கள். மக்களில் நூற்றுக்கு 10-பேர்களுக்குக்கூட அதாவது சராசரி படிப்பு-எழுத்து வாசனைகூட இல்லாமல் இருக்கும்போது வேத பாடசாலை, தேவாரப் பாடசாலை முதலியவைகளுக்கும், கல்லுகள், பொம்மைகள் பின்னால் நின்றுகொண்டு ஆயிரத்திற்கு ஒருவருக்குக் கூடப்புரியாத வேதபாராயணம் முதலியவைகள் செய்யப் படுவதற்கும் லட்சக்கணக்காய் செலவு செய்ததையும், செய்யப்படுவதின் நோக்கம் என்ன என்பதையும் யோசித்துப்பாருங்கள். இப்படியாக நமது நாட்டில், இதுபோலவே எவ்வளவு காரியங்கள் நடைபெறுகின்றது என்பதைநோக்கினால், மற்ற மக்களை எவ்வளவு பாடுபடுத்தியாவது, அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலாவது சிறிதும் லட்சியம் செய்யாது—நாம் மோட்சத்திற்குப் போகவேண்டும்; நாம்பிரபுவாய் இருக்கவேண்டும்; லட்சுமி புத்திரராய்—ராஜாவாய்—நிரந்தர செல்வனாய்—சிரஞ்சீவியாய் இருக்கவேண்டும் என்கிற பேராசையல்லாமல், வேறு தத்துவம் அதில்என்ன இருக்கிறது என்பதை யோசித்துப் பாருங்கள். இந்தமாதிரி மோட்சம் கற்பிக்கப்பட்டு அதை அடைவதே மனிதனின் முக்கிய லட்சியம் என்று போதிக்கப்பட்டிருக்கின்ற பேராசையுள்ள ஜனங்கள் மலிந்திருக்கும் இந்த நாட்டில், இந்த உணர்ச்சியை அழிக்காமல்

என்ன காரியம் நம்மால் செய்ய முடியும் என்பதை யோசித்துப்பாருங்கள். ஆதலால்தான் முதலில் மோட்ச உணர்ச்சி ஒழிக்கப்படவேண்டியது அவசியம் என்று கருதுகிறோம்.

சகோதரர்களே! இந்த மோட்ச உணர்ச்சி ஒழிக்கப்படவேண்டியதைப்போலவே நரக உணர்ச்சியும் அழிக்கப்படவேண்டும். மோட்ச உணர்ச்சி எப்படிப் பேராசையின் பிரதி பிம்பமோ அதுபோலவே நரக உணர்ச்சியும், அடிமைத் தனத்தினுடையவும்; பயங்காளித் தனத்தினுடையவும், பிரதி பிம்பமாகும். நரகத்திற்கு பயப்படுவதாலேயே அநீதிகளுக்கு மனிதன் ஆளாகிறான்; தைரியமில்லாத கோழையாயிருக்கின்றான். இவைகளையெல்லாம் விட மனிதன் சிறிதாவது முற்போக்கடைய வேண்டுமானால், சிறிதாவது இயற்கையின் இன்பத்தை நுகரவேண்டுமானால் எல்லாவற்றையும்விட மனிதனுக்கு விதி, கர்ம பலன் என்கின்றதான உணர்ச்சிகள் கண்டிப்பாய் ஒழிய வேண்டும். விதி, கர்மபலன் என்கின்றவைகளான உணர்ச்சி இந்திய நாட்டிற்கு ஏற்பட்டிருக்கவில்லையானால், இன்றையத் தினம் இந்நாடு அனேக விஷயங்களில் ருஷியர்களுக்கு—ஏன்—இந்த உலகத்தில் உள்ள மற்ற எந்த நாட்டு மக்களின் நிலைமைக்கும் மேலாக இருந்து அநேகமாக உலக மக்களுக்கே சமத்துவத்தையும், சம இன்பத்தையும், இயற்கை இன்ப நுகர்ச்சியையும் கொடுத்து சர்வ சுதந்தரத்துடன் வாழச் செய்திருக்கும் என்று தைரியமாய்ச் சொல்லுவேன். ஆகையால் இந்த கர்மபலனின் உணர்ச்சி, மோட்ச நரக நம்பிக்கைகள் மனிதத் தன்மைக்கு மிகவும் கேடான எதிரி என்பதை நீங்கள் நன்றாய் ஞாபகத்தில் வைக்கவேண்டும். நான் மேலே காட்டிய இந்தக் காரணங்கள்தான் இந்த உலகத்தில் நமது நாட்டை மாத்திரம் இந்த இழிவான நிலையிலும், மீளா அடிமைத்தனத்திலும் வைத்திருக்கின்றன. இவைகள் ஒழிந்தால் தாமாகவே இந்நாடு சுயமரியாதை பெற்றுவிடும்; சுதந்தரம் பெற்றுவிடும்; மனிதத்தன்மை அடைந்துவிடும். ஆகையால் சகோ

தரர்களே! நீங்கள் இந்த நாட்டின் முற்போக்கிற்கும், உண்மை விடுதலைக்கும் மனிதத் தன்மைக்கும் பாடுபட வேண்டுமானால், மேற்கண்ட காரியங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

# அய்ந்தாவது அத்தியாயம்,

---

## தர்மமும்—பாவபுண்யமும்,

உலகிலுள்ள எல்லா மதங்களையும்விட இந்து மதத்தில்தான் தர்மம் என்பது இது இது என்று தெளிவாய் வரையறுத்துக் கற்பிக்கப்பட்டிருப்பதினால், கண்மூடித்தனமான செய்கைகள் இன்னும் செழித்து வருவதற்கிடமாயிருக்கின்றன. இது சம்பந்தமாக இந்து மதமும், கோட்பாடுகளும், தர்மமும் ஒரு எல்லை ஏற்படுத்தியிருப்பதனால், அவ்வளவுக்குச் செய்யத்தான் யாருக்கும் மனம் வருமே தவிர அதைத் தாண்டிப்போக யாருக்கும் மனம் வராது. ஒரு அடியாருக்கு அன்னமளித்தால் இவ்வளவு புண்ணியம் என்று கணக்குவாரியாக—அதன் பலனாய் இவ்வளவு காலத்திற்கு மோட்சத்திலிருக்கலாமென்று வருத்தெழுதி வைத்திருக்கிறார்கள். இதைக்கேட்ட பிறகுதான் இத்தகைய தர்மசம்பந்தமான எண்ணம் வருகிறதே தவிர வேறல்ல. இம்மாதிரியான காரியங்களினால் உண்மையான பரோபகாரமான காரியங்களுக்குக் குந்தகமேற்படுகின்றதென்பதை நீங்கள் நன்றாய்க் கவனிக்கவேண்டும். இவற்றால்தான் நாடு முன்னுக்கு வருங் காரியங்கள் தடைப்படுகின்றன. எந்தத் தேசத்திலும் தர்மமில்லாமலிருக்கவில்லை. வெள்ளைக்கார தேசத்தின் தர்மம் நம் நாட்டுத் தர்மத்தைவிட பன்மடங்கு உத்தமமாயும், தேசத்திற்கும், சமூகத்திற்கும் உண்மையான நன்மை

யளிப்பதாயுமிருக்கின்றது. வெள்ளைக்கார நாட்டுத் தர்மம், கிணறு நிரம்பி வழிவதுபோல, அவன் ராஜ்யம் நிரம்பி நம் நாட்டிலும் வழிந்தோடுகின்றது.

அத்தகைய தர்மம் நிறைந்த நாட்டில் என்ன வழக்கமென்றால், ஒருவன் தெருவில் பிச்சைக்கு வந்தால் உடனே போலீஸ்காரன் பிடித்துக்கொண்டு போவான். அங்கு பிச்சையிடுவது சோம்பேறிகளை வளர்க்கும் முறை என்பதை நன்கறிந்து கொண்டார்கள். வெள்ளைக்கார நாட்டில் படிக்காதவன் என்றால் அவன் வெட்கித் தலை குனிந்துவிடுவான். நம் நாட்டிலோ தர்மம் என்று வந்தால் நமக்கென்ன, நம்மாலான சாப்பாடுபோட்டு விடுவோம், பிறகு அவன் தலைவிதி போலாகிறது; சரஸ்வதி நாக்கிலிருந்தால் எப்படியும் படித்து விடுவான் என்ற தர்மம்தான் நமக்குக் கற்பிக்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் முன்னேறும்போது நாம் இக்கதிக்களாகியிருக்கக் காரணமென்ன? நமது மதங்கள் தர்மங்கள் என்ற பல தத்துவங்கள்தான் நம்மை இந்நிலையில் வைத்திருக்கின்றன. அவர்கள் முன்னேற்றத்திற்குப் பலமும் பீரங்கியும் மட்டும் காரணமல்ல. சென்னை மாகாணத்தில் உயர்ந்த குஷ்டரோக, க்ஷயரோக, மருத்துவ ஆஸ்பத்திரிகளும், உயர்ந்த கலாசாலைகளும், கல்லூரிகளும் அவர்களுடையதாகத் தானிருக்கக் காண்கிறோம். தப்பான வழிகளில் பிள்ளைகளைப்பெற்று கள்ளியில் போட்டு விட்டால், அவற்றை எடுத்து வளர்த்து சம்ரக்ஷிக்கும் அனாதை ஆஸ்ரமங்களும் அவர்களுடையதாகத்தானிருக்கின்றன. தெருவிலும் நடக்கக்கூடாது, அருகிலும் வரக்கூடாதென்று மிருகங்களிலும் கேவலமாய் நம்மால் நடத்தப்படுபவர்களையும், அவர்கள் சேர்த்துக் கல்வியளித்துச் சமத்துவம் பாராட்டி, மாக்களெனக் கருதப்பட்டவர்களையும் அவர்கள் மக்களாக்கி வருவதைக்காண்கிறோம். இவற்றை எல்லாம் நாம் எளிதில் மறக்க முடியாது; அல்லது மறைக்கவும் முடி

யாது. அவர்கள் நொண்டியை, முடத்தை, குருடர்களைக் கொன்று விடுகிறார்களா? அத்தகையவர்களுக்கும் தம் சுய உதவியினால் எவ்வளவுக்கு ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்ள முடியுமோ அவ்வளவுக்கு உதவி புரிந்து வழிகாட்டி வருகின்றார்கள். இதனால் வெள்ளைக்காரன் தான் புத்திசாலியா? நமது முன்னோர்கள் என்ன முட்டாள்களா? என்ற கேள்வியும் கிளம்பக்கூடும். இதற்காக நாம் நமது முன்னோர்கள் பேரிலும் சுலபமாகக் குற்றம் சொல்லிவிடமுடியாது. எந்தக்கொள்கையும், நீதியும், தர்மமும் காலத்திற்கும் இடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறுதானிருக்கும். ராமேஸ்வரத்தில் ஒரு செட்டியார் தர்மம் செய்வதற்காகச் சாணியும், பாலும், சுக்கும் மட்டும் கொடுக்கிறார் என்றால், அதுபோல நாமும் இங்கு சாணியைக் குவியலாய்க் கொட்டிக்கொண்டு வாரிக்கொடுப்பது தகுதியாகுமா? அந்தவிடத்திற்கு அவசியத்திற்கேற்றவாறு அது முக்கிய தர்மமாக விருக்கலாம். அதற்காக நாம் அந்த செட்டியார்மீது குறை சொல்லமுடியுமா? முன்னூறு நானூறு வருடங்களுக்கு முந்திய காலத்து தர்மமென்ற காரியங்கள் இப்போது செய்ய முடியாதவைகளாகத்தானிருக்கும். அப்போது அவை அவசியமாகச் செய்யவேண்டியவைகளாகத்தானிருந்திருக்கும். அக்காலத்தில் தற்போதிருப்பது போன்று துரிதமான போக்குவரத்துச் சாதனங்களோ மற்ற வசதிகளோ கிடையாது. அந்தந்தநாட்டு மக்களுக்கு அந்தந்த ஊரே சுவர்க்கம். அக்காலத்தில் அவர்கள் கிணற்றுத் தவளைகளைப் போலத்தானிருந்திருக்க முடியும். அப்பேர்ப்பட்டவர்களுக்கு விளைச்சலும் அபரிமிதமாய் விளைந்து கொண்டிருந்தது. அக்காலத்திலும் மழைபெய்வதற்கு அவசியமான காடு முதலியவை அடர்ந்திருந்ததால் பருவமழைகள் தப்புவதில்லை. இதனால் உழுதாலும் உழாமல் விட்டாலும் அறுவடைக்கு குறைவில்லை. அப்போது அதிகமாக விளைந்தாலும் தற்போதைப்போல விளைந்த தானியம் முழுதையும் வெளி ஊருக்குக் கொண்டுபோகப்படா

மல் பெரும் குழிகள் வெட்டி அவற்றில் புதைத்து வைப்பதும் வழக்கமாயிருந்து வந்தது. அன்றியும் அக்காலத்தில் பிச்சைக்காரர்களும் மிக அரிதென்றே சொல்லலாம். எவ்வளவு விளைந்தாலும் வாரி வெளி நாட்டுக்கு அனுப்புவது என்றமுறை அக்காலத்தில் கிடையாது. அதற்குச் சாதனமும் கிடையாது. அதனால்தான் இவ்வளவு பேருக்கு அன்னமிட்டால் இவ்வளவு புண்ணியமென்றும் எழுதிவைக்க இடமிருந்தது. அதனால் நம்நாட்டில் காலக்கிரமத்தில் பிச்சை எடுக்கும் ஜாதிகளென்றே பல ஜாதிகளும் தோன்றிவிட்டன. ஏதோ சாம்பலையும் மண்ணையும் பூசிக்கொண்டு வந்தாலும், சாமி என்று விழுந்து கும்பிடும் முட்டாள்கள் அதிகமிருக்கிறார்கள் என்பதை யறிந்துதான் பிச்சைக்காரர்களும் நாளுக்குநாள் விருத்தியாகிக் கொண்டு வருகின்றனர். இத்தனை கோயிலிருக்கையில் இன்னும் புதிதாகக் கோயில் கட்டுவது அவசியமாவென்று கேட்டால், "பாவி தடுக்கிறான் அவன் சொல்லைக் கேட்ட காதை லோஷன் போட்டுக் கழுவவேண்டும்" என்கிறார்கள். அக்காலத்தில் செல்வமிகுதியினால் செலவிடுவதற்கு வழியின்றி இவ்வாறெல்லாம் செய்துகொண்டிருந்தார்கள். தங்கள் விளைபொருள்களுக்குச் செலவுவேண்டுமென்ற முறையில் ஒருவரோடொருவர் போட்டிபோட்டுக் கொண்டு மேன்மேலும் தர்மம் என்னும் பெயரால் பலவாறு செலவிட்டு வந்தார்கள். அக்காலத்தில் எத்தனை கடவுளிருந்தாலும் பூசைபோட்டு, எவ்வளவு பேர் வந்தாலும் சோறுபோடும் செல்வமும் செழிப்புமிருந்தது. அதனால்தான் இவ்வளவு கடவுள்களும் அடியார்களும் ஏற்பட இடமிருந்தது. ஆனால் இப்போதைய கொள்கையும் மதக்கோட்பாடுகளும் காலதேச வர்த்தமானத்திற்கு ஏற்றபடியும் மனிதன் அறிவுக்கும் தன்மைக்கும் ஏற்றவாறு மிருக்கவேண்டும். முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், இந்துக்களும் எல்லா மதஸ்தர்களுந்தான் பாவம் செய்யக் கூடாதென்கிறார்கள். ஆனால் பாவம், சுத்தம் முதலான தத்துவங்களுக்கு அந்தந்த மதத்தினருக்கு

அர்த்தம் வேறாகத் தானிருக்கின்றது. பாலைவனத்தில் தோன்றிய இஸ்லாம் மதத்தில், சுத்தமென்றால் மூன்று வேளையும் குளிப்பதுதான் சுத்தமென்று எழுதிவைக்க முடியாது. அங்கு மணலை உடம்பில் தேய்த்துக்கொண்டாலும் குளித்துச் சுத்தமாவதற்கு ஒப்பாகத்தான் கருதப்படக்கூடும். அதனால் அந்தச்சுத்தம் தப்பு என்று சொல்லிவிட முடியாது. நமக்குள் வெளிக்குப்போனால் நான்கு செம்பு தண்ணீர்விட்டு கழுவுபவர்களும், போதாக்குறைக்குத் தலை முழுகுபவர்களுமிருக்கிறார்கள். அவ்வாறு செய்தால்தான் அதனைச் சுத்தமெனக் கருதப்படுகிறது. ஆனால் இவர்களைவிட பன்மடங்கு கடுமையான சுகாதாரமுடைய வெள்ளைக்காரன் காகிதத்தில் பாதியும் கால் சராயில் பாதியுமாகத்துடைத்துவிட்டுப்போகிறான். அவன் காட்டில் அவ்வளவுதான் வசதி. இங்கு குளிக்காவிட்டால் பாவி என்கிறார்கள். அங்கு குளித்தாயாவென்று கேட்பதே மரியாதையல்லவெனக் கருதப்படுகிறது. இங்கு வியர்வையினால் குளிக்கவேண்டிய அவசியமுண்டு. அங்கு குளிரினால் அத்தகைய அவசியமில்லை. அவ்வாறே இந்து மதத்தில் எறும்பை மிதித்துவிட்டாலும் பாவம்; அவன் சங்கதியோ அதைப்பற்றிக் கவலையேயில்லை. இங்கு நாம் பசுவை அடித்தாலும் மகா பாவமென்கிறோம். அங்கு அவன் அதைக் கொன்று தின்னாவிடில் வேறு மார்க்கமில்லை. ஒருவன் சிற்றப்பன் மகளைக் கட்டலாமென்கிறான். மற்றவன் அதைப் பாவமென்கிறான். இப்படிச் சௌகரியத்திற்கும் பழக்கத்திற்கும் ஏற்றவாறுதான் கொள்கைகளும் கோட்பாடுகளுமிருக்கக்கூடும். ஆதலால் அனைத்தும் காலதேச வர்த்தமானத்திற் கேற்றவாறிருக்க வேண்டுமென்பது நன்கு விளங்கும். அன்றியும் அந்தந்தக் காலத்தில் திறமைக்கேற்றவாறு ஏமாற்ற ஏதேதோ எழுதி வைத்திருக்கலாம். அவற்றைக் குறித்து இப்போது கவலையில்லை. ஆனால், நாம் முக்கியமாய் கவனிக்கவேண்டியது, இன்றைய நிலைமையில் எப்படியிருக்கவேண்டு மென்பதேயாகும். அதிலிருந்து தப்ப வழி

புண்டாவென்றும் பார்க்கவேண்டும். நாம், நமது செல்வம், அறிவு, ஒழுக்கம் முதலியவை பியோஜனமான வழியில் செலவிடப்படவேண்டுமென்பதனால், அது தர்மத்திற்கு விரோதமானதென்று சொல்லமுடியாது. இப்போது நாமிருக்கும் நிலையில் தர்மத்தின் பெயரால் சத்திரமும், சாவடிகளும் கட்டிக்கொண்டு போவோமானால் நம் சமூகத்தின் கதி என்னவாகும்? நமது நாட்டின் நிலைக்கும் மக்களின் தேவைக்கும் ஏற்றவாறுதான் எந்தத் தர்மமும் ஏற்பாடு செய்யப்படவேண்டும். இனி நமக்குப் புதிதாகச் சாமிகள் வேண்டியதில்லை. இப்போது நமது நாட்டில் 22 கோடி இந்துக்களிருக்கின்றனர். இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடவுள்களோ புராணங்களின் கணக்குப்படி 33-கோடி கடவுள்களாயிருக்கின்றன. இதனைப் பங்கிட்டால் ஒரு ஆசாமிக்கு ஒன்றரைக் கடவுள் வீதம் வரும். உலகிலே மக்களைவிட கடவுள்கள்தான் அதிகமாயிருக்கிறது. இவ்வளவு கடவுள்களை நாம் காப்பாற்றினால் போதும். நாட்டின் பெருமையை வளர்க்க, மக்கள் கஷ்டத்தைப்போக்க, அறிவை வளர்க்க கல்வி அத்தியாவசியம். அவர்கள் சுயமரியாதையுடனும் சுகமாயும் வாழ்வதற்குத் தொழிலபிவிருத்தி அவசியம். எந்தத் தேசத்திலும் இவையிரண்டும் இன்றியமையாத அவசியமான அம்சங்கள். நம் நாட்டிலோ நூற்றுக்கு 93-பேர் படிப்பில்லாத தற்குறிகளாயிருக்கிறார்கள். இதைவிட அவமானமான காரியம் ஒரு தேசத்திற்கு வேறு என்ன இருக்கிறது? அதுபோலவே சாப்பாட்டுக்கு கஷ்டப்பட்டு வெளி நாடுகளுக்குப் பிழைப்புக்காகத் துறைமுகங்கள்தோறும், கப்பல்தோறும், ஆயிரக்கணக்கான ஜனங்கள் பெண்டு பிள்ளைகளுடன் ஏற்றுமதி செய்யப்படுவதான கோரக் காட்சியைத் துறைமுகங்களுக்குச்சென்று பார்த்தால் தெரியும். இவ்வாறு பிழைப்பின்றியும், சாப்பாட்டுக்கு வகையின்றியும் கடல் கடந்து ஜீவிக்கச்செல்லும் ஏழை மக்கள் தொகைகளை, இச்சென்னை மாகாணத்தில் மட்டும் மாதமொன்றுக்கு லட்சத்திற்கு அதிகமாகக்

காணலாம். இவர்கள் குழந்தைகுட்டிகளுடனும் வயோதிகர்கள் கர்ப்பிணிகளுடனும் செல்வதான பரிதாபத்தை என்னவென்று சொல்லுவது. இங்குள்ள கஷ்டத்தைவிட அங்கு போய்ச் சாகலாமென்றுதான் மனம் முறிந்து போகிறார்கள். இக்கொடுமைகளைக் கவனித்து பரிகாரம் தேடப்படுவதில்லை. இத்தகைய நாட்டில் நடக்கும் விஷயங்களோ விபரீதமாகத்தானிருக்கின்றன.

இந்த சாமிகளுக்கும் சடங்குகளுக்கும் உற்சவ வேடிக்கைகளுக்கும் சதுர் ஆட்டங்களுக்கும் லட்சக்கணக்காகத்தான் செலவிடப்படுகின்றன. திருப்பதி முதலிய தேவஸ்தானங்களுக்கும், முக்கியமான மடங்களுக்கும் சுமார் 20 லட்சத்திற்கு அதிகமாக மாதாமாதம் வருமானம் கிடைக்கிறது. ஒரு சாமிக்கு ஒரு வேளைச் சாப்பாடாகிய சட்டி அரணைப் பூசைக்குச் சுமார் 20 ரூபாய்க்கு அதிகம் செலவிடப்படுகிறது. இவ்வாறிருக்க அச்சாமியின் பிள்ளைகள், சாமியே கதியென இருக்கும் மக்கள், கஞ்சிக்கலைந்து கொண்டு பிழைக்க வழியில்லாது ஆயிரக்கணக்காகக் கப்பலேறி வெளிநாடு சென்று துன்புறுகிறார்கள். இவையிரண்டினையும் சேர்த்துப் பார்த்தால், அந்த சாமிக்குத்தான் அதிக அவமானமென்பது நன்கு விளங்கும். அத்தகைய சாமிகளுக்கு இருக்கும் சொத்துக்களுக்கும் ஆடம்பரங்களுக்கும், வாண வேடிக்கைகளுக்கும், சதுர் கச்சேரிகளுக்கும் ஒருவிதமான அளவில்லை. ராஜாவுக்குக்கூட அவ்வளவு ஆடம்பரமில்லை. ராஜாவாயினும் கொடுங்கோன்மையினால் அந்த சுகங்களை, ஜனங்கள்படும் கஷ்டத்தைப் பாராமல் அனுபவிக்கிறான் என்று சொல்லலாம். ஆனால், கருணை வள்ளல் என்ற கடவுள் இப்படி வீணாக்குவதற்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கலாமா? இதனால் நாம் கடவுள் மீது குற்றம் சொல்லவில்லை. அது என்ன செய்யும். இன்றைக்கு யாராவது தங்கக்காரை போட்டால், பேசாமல் போட்டுக் கொள்ளுகிறது. யாராவது கழற்றிக் கொண்டு

போனாலும் கல்லுப்போல் பேசாமல் சும்மா இருக்கிறது. சமீபத்தில் ஆண்டாள் தாலியையும் யாரோ கழற்றிக் கொண்டு போய்விட்டதாயும் பத்திரிகையில் வாசித்திருப் பீர்கள். ஏன் இந்த நாட்டில் நூற்றுக்கு 93 வீதமானவர் கள் தற்குறிகளாயிருக்க வேண்டும்? இதற்கும் வறுமைக் கும் காரணமென்ன? ஆனால், நான் உங்களைச் சந் தோஷப்படுத்த ஒரு வார்த்தையில் பதில் சொல்லிவிட லாம். "வெள்ளைக்கார நீச அரசாங்கத்தார் நம் பணத் தைக் கொள்ளையிட்டுப் போவதாகச் சிலர் கூச்சலிட் டனர். அந்த நீச அரசாங்கத்தால்தான் சரஸ்வதியும் நம் நாட்டைவிட்டு ஓடிவிட்டாள்" என்றனர், மற்றும் சிலர். ஆனால் நம் நாட்டைவிட்டோடிய சரஸ்வதி அந்த நீச நாட்டுக்குத்தான் போய்ச் சேர்ந்திருக்கிறாள். வெள் ளைக்காரன் கொள்ளையிட்டுப் போவதையும், சாமிகளுக் கும், சடங்குகளுக்கும் செலவிடுவதையும் கணக்குப் பார்த் தால், சாமிகளுக்குச் செலவாவதுதான் பன்மடங்கு அதிக மாகும். சாமிகள், மதம், சடங்குகள் முதலியவற்றின் பேரால் செலவாகும் பணமும், கஷ்டநஷ்டமும், அசௌ கரியங்களும் கணக்கிட முடியாது. பணம் சம்பாதிப்பதில் எத்தனையோ தந்திரமும் சூழ்ச்சியும் செய்யும் அறிவாளி களுங்கூட இவ்வாறு செலவிடுவதில் அந்தத் தந்திர மொன்றுமில்லாமல் முட்டாள்களாகத்தான் நடந்து கொள்கின்றனர். அபிஷேகத்தில் 150 ரூபாய் கொடுத் தாலென்ன? 10 ரூபாய் கொடுத்தாலென்ன? வித்தியாச மென்னவென்று யாராவது சிந்திப்பதுண்டா? சென்னை மாகாண சர்க்காரின் கணக்குப்படி சாமிகளுக்கு வரு மானம் 2 கோடிக்கு அதிகமாகிறது. இது தவிர, கணக்கில் வராத கொள்ளைகளும் போக்குவரத்துத் தரகர் செலவும் சொல்லவேண்டியதில்லை. கணக்குப் பார்த்தால் சாமி களுக்கு நாம் கொடுப்பது சர்க்கார் வருமான வரியைவிட அதிகமாகுமேயன்றி ஒருவிதத்திலும் குறையாது. தர்ம மென்றால் சாப்பாடு போடுவதுதானாவென்று கேட்டால், அப்படிக் கேட்பது பாவம் என்ற தர்ம முறையைத்தான்

நமக்குக் கற்பிக்கப்படுகிறது. இத்தகைய வீணுக்குச் செலவாகும் பணம் மூன்று ஜில்லாவுக்குச் சாப்பாட்டுடன் கல்வி போதிக்கப் போதுமானதாகும். இந்த மாதிரி சுமார் 25-வருடங்களுக்கு நம் சாமிகள் சிறிது வயிற்றை இழுத்துக் கட்டிக்கொண்டு சும்மா இருந்தால், பிறகு நம் நாட்டில் ஒருவன்கூட மருந்துக்கும் தற்குறியாயிருக்கக் காண முடியாதென்பது திண்ணம். உள்ளதுள்ளபடி உண்மையைச் சொன்னால் அவன் தப்பு சொன்னான்; இவன் நாஸ்தீகப் பேச்சு பேசுகிறான் என்று வீண் கூச்சலிடும் கூட்டத்தாருக்குக் குறைவில்லை. மேடை மீதேறி வெள்ளைக்காரர்களைத் துரத்திவிடுவோமென்று பயமுறுத்தலாம். மிரட்டினாலும் அர்த்தத்தோடல்லவா மிரட்ட வேண்டும்? ஜோசியில் எலிக்குஞ்சு இருக்கிறது எடுத்துவிட்டால் செத்துப்போவாய் என்றால் எவன் பயப்படுவான்? எடுத்துவிடு ஒரு கை பார்ப்போமென்றுதான் சொல்லுவான். மார்க்கத்துக்கும், தகுந்த வழிக்கும் நமது அறிவையும் செல்வத்தையும் செலவிடாமல் நாம் யாரையும் வெல்லமுடியாது. ஒரு கூட்டத்தார் நம்மைத் தாழ்ந்த நிலையிலேயே அடக்கி வைத்துக்கொண்டிருக்க முயல்வது சரித்திரபூர்வமாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மதவிஷயத்திலும் மற்ற விஷயங்களிலும் வெள்ளைக்காரன் நம்மைவிடக் கேவலமாக இருந்திருப்பதை அவர்கள் தேசச் சரித்திரமே நன்கு விளக்குகிறது. அங்கிருந்த புரோகிதமும் சாமிகளும் இப்போது எங்கு போயின? எல்லாம் இங்கு வந்து சேர்ந்தன. அவர்கள் எல்லாவற்றையும் இங்கு மூட்டை கட்டியனுப்பிச் செலவுக்குப் பணமும் கொடுத்துவிட்டு அங்கு விஞ்ஞான ஆராய்ச்சியிலிறங்கியிருப்பதால் நாளுக்குநாள், அந்நாட்டார் முன்னேற்றமடைந்து வருகிறார்கள். அவர்கள் சாமிக்கு உற்சவமில்லை, தேர் இல்லை, திருவிழா இல்லை. அப்படியிருந்தும் அந்தச் சாமி அவர்கள் பல அற்புதங்கள் கண்டுபிடிக்க வழியாயிருக்க, நம் சாமிகளுக்கு லட்சக்கணக்கான பணம் செலவிட்டு தேர், திருவிழா நடத்தியும் நா

இந்தக் கதியிலிருக்கிறோம். நம் நாட்டுப் பொருள்கள் வெளிநாட்டுக்குப் போகின்றன என்று கூச்சலிடுவதனால் பயன் என்ன? கடுகளவாவது நாம் முன்னேற முயற்சி செய்வதில்லை. அண்மையில் ருஷியாவில் செத்தவர்களைப் பிழைக்கவைக்கும் நூதனமுறையை ஒருவர் கண்டுபிடித்ததாகப் பத்திரிக்கையில் படித்திருப்பீர்கள், இத்தனைக்கும் அது நாஸ்தீகம் நிறைந்த நாடு. நாஸ்தீகருக்கு நரகம் வேண்டுமானால் ருஷியாவிலிருப்பவர்களுக்கே இருப்பிடம் சரியாய்ப் போய்விடும். ஆதலால் வேறு எந்த நாஸ்தீகர்களுக்கும் நரகத்திலிடமிராது. அவ்வளவு நாஸ்தீகமாயிருக்கும் ஊரில், செத்தவனைப் பிழைக்க வைத்து சாமியோடு போட்டி போடுகிறார்கள். வெள்ளைக்காரன் நாட்டில் சாமிக்கு முக்கால் துட்டுக்கூட செலவில்லை. முஸ்லீமும் அப்படித்தான். வெள்ளைக்காரன் கோயிலுக்குப்போனால் துணி அழுக்கை வெளுப்பதற்குச் செலவிடுவதைவிட வேறு செலவில்லை. விவசாயத்திலும் அவர்கள் எந்தப்பழத்தை, எந்த நிறத்துடன், எந்தச் சுவையில் பயிரிடவேண்டுமென்று ஆராய்ச்சி செய்து, அதற்குத் திராவகங்கள் ஊற்றிப் பயிரிட்டு வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். நாம் உழவு கட்டவேண்டுமானாலும் பார்ப்பானைக் கூப்பிட்டு நல்ல வேளை பார்த்து, அந்தந்த எருக்கும் மாட்டுக்கும் பூசைபோட்டு, உழுவதனால்தான் இக்கதியிலிருக்கிறோம். நமக்கு இவ்வளவு கோடிச் சாமிகளும் பணச்செலவும் மிகுந்தும், நாம் கடுகளவாவது முன்னேற முடியாதிருக்கிறோம். பூகோள சாஸ்திரம் போதிக்கும் ஆசிரியரின் தகப்பனும், கிரகணத்தன்று தர்ப்பையை எடுத்துக்கொண்டு சமுத்திரக்கரைக்குத் தர்ப்பணம் செய்துவைக்க வந்துவிடுகிறான். இவன் பேச்சைக்கேட்டுக் குளிக்கப்போனால் நம்மை முதலை இழுத்துக்கொண்டு போய்விடுகிறது. கிரகண ஸ்நானத்துக்குப் போவோமென்று சொல்லும் எம். ஏக்களும், பி. ஏக்களும் இன்னுமில்லாமல் போகவில்லை. இக்காலத்திலும் சந்திர சூரியனை ராகு கேது

வென்ற பாம்புகள் விழுங்கும் கதைகளும், அதன் மூலமான புரட்டுகளும், பணம் பறிக்கும் சூழ்ச்சிகளும் ஒழிந்தபாடில்லை. தேச முன்னேற்றத்திற்கோ, அறிவு வளர்ச்சிக்கோ, ஒழுக்கத்திற்கோ முட்டுக்கட்டையா யிருக்கும் எவற்றையும் ஒழிக்க முயலவேண்டும். அம் மாதிரி செய்யும் தேசமும், மதமும், சமூகமும்தான் முன்னுக்குவரும். கிலாபத் மதப்பித்துப் பிடித்திருந்த துருக்கி, தற்போது அதனை இருந்தவிடம் தெரியாமல் மூட்டைகட்டி யனுப்பிவிட்டு, முன்னேற்றத்துக்கு வழி தேடியதனால்தான் தற்போது அய்ரோப்பாவில் மற்றைய நாடுகளைப்போல நல்ல நிலைமையை யடைந்துவருகிறது. நாம் தர்மம் வேண்டாமென்று சொல்லவில்லை. நம்மதத் திலுள்ள அர்த்தமற்ற தத்துவங்களை ஒழித்து, பிறருக்கு எவ்விதத்தில் உபகாரமோ அதைச் செய்து, மக்களுக் குள் சமத்துவமும், சகோதரத்துவமும், சத்தியமும், ஜீவகாருண்யமும் பரவச்செய்வதற்கு வழி தேடவேண்டு மென்றுதான் சொல்லுகிறோம். வீண் செலவிடும் பணங் களை உண்மையாகக் கஷ்டப்படுகிறவர்களுக்குக் கொடுத்து உபகாரம் செய்வதில், செலவிடுங்கள் என்று தான் சொல்லுகிறோம். பழைய குருட்டு நம்பிக்கை களைத் தம் சூழ்ச்சிகளுக்கு ஆதாரமாகக்கொண்டு சுகமாயிருந்த கூட்டத்தார், இப்போது கூலிகளையும் குறும்புப் பிரசாரத்தில் ஏவி விடுகின்றனர். எந்தக் காலத் திலும் நன்மைக்கும் பரோபகாரத்திற்கும் விரோதமாக நம் நாட்டில் ஒரு கூட்டத்தார் இருந்திருப்பது சரித்திர மூலமாகவும் நன்கறியப்படும். அர்த்தமற்ற கொள்கை களை ஒழித்து, ஒழுக்கமே பிரதானமென்று சீர்திருத்தி, மற்றவனுக்கு உபகாரஞ்செய்வதுதான் மோட்சமென்று புகட்டவேண்டுவது அவசியம். கஷ்டப்படுபவர்களுக்கு உதவியளித்துத் திருப்தி செய்வதுதான் மேலான புண்ணியம். இவற்றைச் சொன்னால் என்ன நாத்திகம் வந்துவிட்டது? வீணாக மக்களைக் குழப்பி அவர்கள் அறிவைக் கட்டிப்போட்டு நான் சொல்வதை நம்பு,

இல்லாவிட்டால் பாவம் என்று நான் சொல்லவில்லை. எதிலும் உண்மையைக் கண்டுபிடிக்கவேண்டும். அப்போது தான் நம் நாடு முன்னேற்றமடையுமேயன்றி, என் பாட்டன், முப்பாட்டன் போனவழி போகிறேன் என்ற மூடக்கொள்கைகளால் நாடு நாளுக்குநாள் நாசமடைவது திண்ணம். என் புத்திக்கு எட்டியதை எடுத்துக் காட்டினேன். அதில் சரி எனத் தோன்றியதை ஒப்புக் கொண்டு அதன்படி நடக்கும்படி கேட்டுக்கொள்ளு கிறேன். நான் சொல்வதில் பிசகிருந்தால் என் அறியாமைக்குப் பரிதாபப்படும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

---

# ஆறாம் அத்தியாயம்.

## ஒழுக்கம்.

உலகில் கற்பு, காதல் என்பனபோன்ற வார்த்தைகள் எப்படிப் பெண்மக்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆளவென்று ஏற்படுத்திப்பயன்படுத்தப்பட்டுவருகின்றனவோ, அதுபோலவேதான் ஒழுக்கம் என்னும் வார்த்தையும் எளியோரையும் பாமரமக்களையும் ஏமாற்றிமற்றவர்கள்வாழப் பயன்படுத்திவரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல்லாமல், அதில் உண்மையோ, சத்தோ ஒன்றுமே கிடையாது. கற்பு, காதல், சத்தியம், நீதி, ஒழுக்கம் என்பனவெல்லாம் ஒரே தாயின் பிள்ளைகள். அதாவது குழந்தைகளைப் பயமுறுத்தப் பெரியவர்கள் "பூச்சாண்டி" "பூச்சாண்டி" என்பதுபோல், இவை எளியோரையும் பாமர மக்களையும், வலுத்தவர்களும், தந்திரக்காரர்களும் ஏமாற்றச் செய்த ஒரு பெரும் சூழ்ச்சியேயாகும்.

எப்படிக் குழந்தைப்பருவம் உள்ளமட்டும் பூச்சாண்டிக்கு மக்கள் பயப்பட வேண்டியிருக்கிறதோ, அதுபோலவேதான் அறிவும் சக்தியும் மக்களுக்கு ஏற்படும்வரை

மேற்கண்ட ஒழுக்கம் முதலிய பூச்சாண்டிகளுக்கு அவர்கள் பயப்பட்டுத் தீரவேண்டியதிருக்கிறது.

உலகில் ஒழுக்கமான காரியம் அல்லது ஒழுக்க ஈனமான காரியம் என்பனவெல்லாம் அவைகளைச் செய்கிற ஆட்களின் வலிமையையும், அறிவையும்கொண்டு மதிக்கப்படுகிறதே யல்லாமல், வெறும் காரியத்தைப்பற்றி மாத்திரம் முடிவு செய்யப்படுவதில்லை.

சாதாரணமாக உலகில் "விபசாரம்" "பொய்" "களவு" "ஏமாற்றம்" முதலிய காரியங்களை ஒழுக்கங்கெட்ட காரியங்கள் என்று சொல்லப்படுகிறது என்றாலும், இந்தக் காரியங்கள் யாவையுமோ அல்லது ஏதாவது ஒன்றையோ இல்லாத மனிதர் எவரையும் இதுவரையில் உலகத்தில் காண முடியவே இல்லை.

ஒருசமயம் நம் கண்ணுக்குத் தென்படவில்லை என்று சொல்லுவதானால், அப்படிச் சொல்லும் மக்கள் ஒவ்வொருவரும் முதலில் தங்களைப்பற்றியே நினைத்துப் பார்த்து தங்களுடைய சிறு பிராயம் முதல் இன்றையவரை உள்ள பல பக்குவ வாழ்நாளில் மேற்கண்ட "ஒழுக்கங்கெட்ட" காரியங்கள் என்பவைகளில் எதையாவதொன்றை, மனோவாக்குக் காயங்களால் செய்யாமல் இருந்திருக்க முடிந்ததா, அல்லது செய்யாமல் இருக்கிறார்களா என்று நினைத்துப் பார்த்தால் உண்மை விளங்கிவிடும்.

(குறிப்பு:— மற்றும் தங்களுடைய சுற்றத்தார், நண்பர், சுற்றியுள்ள அறிமுகமான ஜனங்கள், நன்றாய்த் தெரிந்த அன்னியர் முதலாகியவர்களில் யாராவது ஒழுக்கத்துடன், கற்புடன் நடந்து வந்ததுண்டா என்று சிந்தித்துப் பாருங்கள். இந்த இருவித முடிவைக் கண்டுகொண்ட பிறகு உலகத்தை நினைத்துப் பாருங்கள்.)

மற்றும் உலகில் மக்கள் வாழ்க்கைக்கென்று இருந்து வருகிற தொழில்களில் முக்கியமானவைகளாகக் காணப்படுவது விவசாயம், வியாபாரம், கைத்தொழில், கூலி, வக்கீல், உத்தியோகம், வைத்தியம், விலைமாதர் தொழில் ஆகியவை முதல், குருத்துவம், சன்னியாசம், துரைத்தனம், தேசியம், ஈறாகவுள்ள அனேக துறைகள் ஆகும். இவற்றின் மூலமே மக்கள் பெரும்பாலும் விழுகின்றார்கள் என்பதை நாம் பிரத்தியட்சத்தில் பார்க்கின்றோம். இந்த மக்களில் யாராவது ஒருவர் ஒழுக்கமாக நடந்து கொள்வதை நாம் பார்க்கின்றோமா? ஒழுக்கம் என்றால் என்ன? அது எது என்கின்ற விஷயத்தில் நாம் இப்போது பிரவேசிக்கவில்லை. அதற்கு இந்த வியாசத்தில் இடம் வைக்கவுமில்லை. மற்றபடி நாம் ஒழுக்கம் என்பதாக உலகவழக்கில் எதை எடுத்துக்கொண்டு பேசுகின்றோமோ மேற்கண்ட வாழ்க்கைத் துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் அந்தந்தத் துறைக்கும் எதையெதை ஒழுக்கம் என்று அவர்களாகவே சொல்லிக்கொள்கிறார்களோ அதையும், அவரவர்கள் மற்றவர்களைப்பார்த்து எதையெதை ஒழுக்கம்கெட்ட காரியம் என்று சொல்லுகிறார்களோ அதையும் மாத்திரமே இங்கு ஒழுக்கம் என்பதாக வைத்துக் கொண்டு, யாரிடமாவது இந்த ஒழுக்கத்தைக் கண்டு பிடிக்க முடிகிறதா என்றுதான் கேட்கிறோம்.

ஒரு வேலைக்காரன் செய்யும் ஒழுக்கங்கெட்ட காரியத்தை அந்த வேலைக்காரன் முன்னிலையிலேயே எஜமான் செய்துவிட்டு, வேலைக்காரனை மாத்திரம் ஒழுக்கங்கெட்டவன் என்று சொல்லுகிறான்.

ஒரு குமாஸ்தா செய்யும் ஒழுக்கங்கெட்ட காரியத்தை மேல் அதிகாரி அந்த குமாஸ்தா முன்னிலையிலேயே பலதடவை செய்துவிட்டு, குமாஸ்தாவை ஒழுக்கங்கெட்டவன் என்று கூறுகிறான். (குறிப்பு:—ஒரு மகன் செய்யும் ஒழுக்கங்கெட்ட காரியத்தைத் தகப்பன் செய்து

விட்டு, மகனை ஒழுக்கங்கெட்டவன் என்று சொல்லு கிறான்.)

இதுபோலவே, எல்லாத் தொழில் துறையிலுமுள்ள மக்களும், அவரவர்கள் வாழ்நாட்களில் ஒழுக்கயீனமாக நடந்துகொண்டே மற்றவர்களை ஒழுக்கயீனர்கள் என்று சொல்லி வருகிறார்கள். இவை நாம் குறிப்பிட்ட ஒரு சிலரிடம் மாத்திரம் இருப்பதாகச் சொல்லவரவில்லை. "ஒழுக்கமாய்" மக்கள் யாராலும் நடக்கமுடியாது என்றும், ஒழுக்கம் என்பதாக ஒரு குறிபிட்ட குணமோ, செயலோ இல்லை என்றும், ஒழுக்கம் என்று சொல்லி வருவ தெல்லாம் எளியோரையும், பாமர மக்களையும் அடிமைத் தனத்தில் இருத்திவரப்பபன் படுத்தக்கூடிய சூழ்ச்சி ஆயுதமே தவிர, மற்றபடி அது மக்கள் சமதர்மத்துக்குப் பயன்படக்கூடியது அல்லவென்றும்சொல்லுவதற்காகவே எடுத்துக்காட்டுகிறோம்.

உண்மையிலேயே ஒழுக்கஈனம் என்பது ஒன்று உண் டென்றும், அது திருட்டு, பொய், ஏமாற்றம் போன்ற தாகிய குணங்கள்தான் என்றும் சொல்லுவதாய் இருந் தால், அந்தக் குணங்கள் பெரிதும் நிலையாய்க் குடி கொண்டு இருக்கும் இடங்கள், அரசர்கள், குருமார்கள், வியாபாரிகள் வக்கில்கள், தேசியவாதிகள் போன்ற கூட்டத் தார்களிடமே ஆகும்.

மனிதர்களுக்குத் துன்பமிழைத்து, அவர்களது அமரிக்கையைக் கெடுத்து ஏமாற்றி வஞ்சித்துவாழும் கூட்டங்கள் மேற்கண்ட கூட்டங்களேயாகும்.

இது அந்தந்தத் துறையைக் கைக்கொண்ட ஆட் களைமாத்திரமல்லாமல், அந்தந்தத் துறைகளுக்கே ரத்த மும், சதையும், எலும்பும்போலக் கலந்திருக்கும் காரியங் களுமாகும்.

இந்தக் கூட்டத்தாரைக்கண்டு எந்த மகனும் அருசைப் படுவதேயில்லை. இவர்களிடத்தில் மக்கள் வெறுப்புக்காட்டுவதுமில்லை. அதற்குப் பதிலாக, இந்தக் கூட்டத்தாருக்குத்தான் நாட்டிலே மக்களிடம் செல்வாக்கும், மதிப்பும் இருந்துவருகின்றது. மனித சமூகத்திற்கு எலும்புருக்கி வியாதிபோன்ற இந்தக்கூட்டம் மக்களிடம் ஆதிக்கம் செலுத்தி வருவது என்பது மக்களின் அறிவீனத்தையும் பலமற்ற தன்மையையும் காட்டுவதல்லாமல் வேறில்லை.

வாழ்க்கைத்துறையின் ஒழுக்கம்தான் இம்மாதிரி இருக்கிறதென்றால் மற்றபடி, பக்தி, பரமார்த்தீகம் ஆத்மார்த்தம், ஆசாரத்துவம், மகாத்மாத்துவம் என்பவை முதலான துறைகளிலாவது ஒழுக்கம் என்பதைக் காண முடிகின்றதா என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அவையும் இப்படித்தான் இருக்கின்றன என்பதே நமது அபிப்பிராயம்.

---

# ஏழாம் அத்தியாயம்.

---

## நாஸ்தீகம்.

உலகத்திலேயே நாஸ்தீகம் என்று சொல்லப்படும் வார்த்தையானது அநேகமாய், பெரும்பான்மையான மக்களால் வெறுக்கப்படக்கூடியதாக இருந்து வருகின்றது. காரணம் என்னவென்று பார்ப்போமானால், அவ்வார்த்தையில் கடவுள் என்பது இல்லை என்கின்ற பொருள் அடங்கியிருப்பதாகக் கொள்வதேயாகும். மக்கள் கடவுள் இல்லை என்று சொல்லப்படுவதைப்பற்றி மாத்திரமே ஆத்திரப்படவும், வெறுப்புக்கொள்ளவும்

புரோகிதர்கள், பாதிரிகள், மௌல்விகள், பண்டிதர்கள் என்பவர்களால் சற்பிக்கப்பட்டு விட்டார்களே தவிர, கடவுள் என்பதைப்பற்றிய விளக்கம் யாருக்கும் தெளிவாக்கப்படாமல் இருப்பதோடு அது (கடவுள் என்பது) மனத்திற்கும், புத்திக்கும் எட்டாதது என்பதாகவும், அப்படிப்பட்ட ஒன்றை நம்பித்தானாகவேண்டும் என்றும் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டுவிட்டது. இப்படி இருந்த போதிலும் என்றையத்தினம் கடவுள் என்கின்ற ஒரு வஸ்து உண்டு என்று கற்பிக்கப்பட்டதோ அன்றுமுதலே கடவுள் இல்லை என்கின்ற வாதமும் ஏற்பட்டு, வெகு காலமாகவே இவ்வாதப் பிரதிவாதம் நடந்து வருவதோடு நாளிதுவரை முடிவுபெற முடியாமலே இருந்து வருகின்றது.

கடவுள் இல்லை என்று சொல்லும்படியான பல மதங்களும்கூட உலகில் உள்ளன. உதாரணமாக சூனிய மதம், நிரீஸ்வர மதம், உலகாயுதமதம் (Materialism) நாஸ்தீகமதம் என்பனபோன்ற பல உண்டு என்றாலும் கடவுளென்பதாக ஒன்று இல்லை என்கின்ற ஒரு கிளர்ச்சி வலுத்து அதை அமுலுக்குக் கொண்டுவந்து மற்றும் உலகமெங்கும் அக்கொள்கையைப் பரப்ப பிரசாரமும் செய்ய ஏற்பாடுகள் சாதாரணமாக இந்த இருபதாவது நூற்றாண்டில்தான் தைரியமாகவும், பலமாகவும் செய்ய முடிந்து வருகின்றதென்பதாகவும் தெரியவருகின்றது.

ஏனெனில் இதுவரையில் உலகத்தில் எந்த நாடும் பெரிதும் புரோகிதக்கூட்டத்தாரின் ஆதிக்கத்திலும், கடவுள் பிரசாரத்தின்பேரால் கௌரவமும், வயிற்றுப் பிழைப்பும் நடத்திவந்தவர்களின் ஆதிக்கத்திலும் இருந்து வந்ததாலும், உலகத்திலுள்ள அரசாங்கங்களும் மதத்துடனும்,கடவுளுடனும்பிணைக்கப்பட்டே இருந்ததாலும் கடவுளை மறுக்கும் அபிப்பிராயத்துக்கோ, கூட்டத்

திற்கோ நாட்டில் ஆதரவு இல்லாமல் போனதோடு, அவர்கள்மீது தோஷமும் கற்பிக்கப்பட்டு அந்த அபிப் பிராயம் வலுக்கமுடியாமலும், பரவ முடியாமலும் போய் விட்டது. ஆனால் இந்த நூற்றாண்டில் கடவுள் மறுப்பு என்பது பாமர மக்களுக்குள் ஒருவித வெறுப்பும், அதி ருப்தியும் தரக்கூடியதாயிருந்தாலும் மற்றும் கடவுள் பேரால் அல்லது கடவுள் சம்பந்தமான மோட்சம், சாஸ் திரம், கதை, புராணம், பிரசாரம் ஆகியவைகளின் பேரால் வாழ்வை ஏற்படுத்திக்கொண்டவர்களுக்கு மிகுதியும் ஆத் திரத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தாலும் நடுநிலையுள்ள அறிஞர்களால் இவ்விஷயம் ஆராய்ச்சி செய்யத்தொடங்கி ஆலோசிக்கப்பட்டு வருவதும், அவ்வித அபிப்பிராயக் காரர்களைப் பெரிதும் அறிவாளிகள் என்றும் ஞான வான்கள் என்றும் சொல்லுவதும் மதிப்பதுமாய் இருந்து வருகின்றன. மேல்நாட்டு அறிவாளிகள் என்று சொல்லப் படுபவர்களுக்குள் இன்றும் அநேகர் நாஸ்தீகர்களாகத் தான் இருந்து வருகிறார்கள். அதுமாத்திரமல்லாமல் இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி, ருஷியா, சைனா முதலாகிய இடங்களின் முக்கிய பட்டணங்களில் கட வுளை நிலைப்படுத்தும் மதங்களை எதிர்க்கவும், நாஸ்தீ கத்தைப் பரப்பவும் என்றே பல ஸ்தாபனங்கள் ஏற்படுத் தப்பட்டு அவற்றிற்காகப் பத்திரிகைகள் துண்டுப் பிரசுரங் கள் முதலியவைகள் செய்யப்பட்டும் வருகின்றன.

குறிப்பாக அமெரிக்காவில் நியூயார்க் என்கின்ற பட்டணத்தில் "நாஸ்தீகத்தை உலகமெங்கும் வியாபிக்கச் செய்வதற்கான சங்கம்" என்னும் பெயரால் ஒரு ஸ்தாப னத்தை ஏற்பாடு செய்து அதன் மூலம் 25, 30 வருஷங் களாக நல்ல வேலைகள் மும்முரமாய் செய்யப்பட்டு வரு கின்றன. அங்கிருந்து நமக்கு அனுப்பப்பட்டிருக்கும் அறிக்கையின்படி அச்சங்கமானது பிரசாரத்திற்காகவும், துண்டுப்பிரசுர வினியோகத்திற்காகவும் வருஷம்ஒன்றுக்கு

அய்ம்பது ஆயிரம் ரூபாய்க்கு மேலாகவே செலவுசெய்து வந்திருக்கின்றது. "கிறிஸ்துமதம் வெடிப்புக் கண்டுவிட்டது" என்கின்ற பேராலும், "மதம் என்றால் என்ன?" "கடவுள் என்றால் என்ன" "கடவுள் இல்லாத முற்போக்கு" ஆகிய இவைபோன்ற தலைப்புகளில் பல லட்சக் கணக்கான துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியாக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுகிறது. சங்க அங்கத்தினர்கள் வருஷத்திற்கு வருஷம் 100-க்கு 50 வீதம் உயர்ந்துகொண்டு வருவதுடன், பல இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் ஏற்பட்டு வெளிநாடுகளிலுங்கூட பிரசாரங்கள் செய்யப்பட்டுவருவதாகக் காணப்படுகிறது. வேறு பாஷைகள் மூலமும் சைனா முதலிய இடங்களுக்கு ஆட்களை அனுப்பி இதுபோன்ற பிரசாரமும் துண்டுப் பிரசுரங்களும் நடைபெற்று வந்திருப்பதாகவும் காணப்படுவதோடு ஒவ்வொரு கனவானும் ஒவ்வொரு வேலையை ஏற்றுக்கொண்டு திருப்திதரத்தக்க அளவு பிரசாரம் செய்திருப்பதாகவும் காணப்படுகின்றது. இதன் தலைமைக் காரியாலயம் அமெரிக்காவிலுள்ள நியூயார்க் பட்டணத்தில் 14-வது வீதி 307 E நெம்பர் கட்டிடத்தில் நிறுவப்பட்டிருக்கின்றது. இதில் சேரவிரும்பும் அங்கத்தினர்க்கு வருடச் சந்தா ஒரு டாலர் அல்லது மூன்று ரூபாயாகும் ஏன்பதாகவும் காணப்படுகிறது.

இப்படியே லண்டன் பட்டணத்தில் சில ஸ்தாபனங்கள் அதாவது "தாராள நினைப்புக்காரர்கள் சங்கம்" என்றும், "அறிவாளிகள் சங்கம்" என்றும், "உண்மை நாடுவோர் சங்கம்" என்றும் பல சங்கங்கள் ஏற்படுத்தி அது போலவே பிரசாரமும் செய்யப்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் சிலவற்றின் வயது 60, 70க்கு மேல் ஆகியிருந்த போதிலும் அவைகள் இப்போதுதான் மிக்க பிரபலமாயும், செல்வாக்காயும் நடைபெற்று வருகின்றதாக அறிவிக்கப்படுகின்றன.

இவற்றில் கலந்துள்ள நபர்களில் உலகத்திலேயே மிக்க அறிவாளிகள், ராஜதந்திரிகள் என்று சொல்லப்பட்ட பெரியோர்களே அதிகமாயிருக்கின்றார்கள். ஆகவே நாஸ்தீகப் பிரசாரம் உலகில் சகஜமாகவும் செல்வாக்காகவும் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவிக்கவே இவற்றை மேற்கோள்களாகக் குறிப்பிட்டோம்.

இனி அதனால் ஏற்படும் கெடுதி என்ன? நன்மை என்ன? என்பவைகளைப்பற்றி யோசிப்போம். சாதாரணமாக மனிதன் நாஸ்தீகனாயிருந்தால் அதாவது கடவுள் நம்பிக்கை இல்லாதவனாயிருந்தால் ஒரு கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்கமாட்டான் என்றும், திருடு, பொய், மோசம், சூது, ஒருவன் சொத்தை ஒருவன் அபகரித்தல், முறை தவறிக் கலத்தல், மக்களை இம்சித்தல் முதலாகிய காரியங்களைச் செய்யப் பயப்படமாட்டான் என்றும் சொல்லப்படுகின்றது. இதைப்பற்றிக் கவனிக்குமுன்பு, உண்மையான கருத்தில் இந்தக் கடவுள் நம்பிக்கையுள்ள மனிதன் எவனாவது உலகில் இருக்கின்றானா? என்பதை முதலில் யோசிப்போம்.

சாதாரணமாக, கடவுள் என்கிற பதத்திற்கு மக்களில் பெரும்பான்மையோர்கள் கருதிக் கொண்டிருக்கும் கருத்து என்னவெனில் சர்வ சக்தியும்—அதாவது உலகம் உலகத்திலுள்ள ஜீவராசிகள் புல், பூண்டு, தாவரங்கள் முதலிய யாவும் தனது இச்சையால் உண்டாக்கப்பட்டு தனது சக்தியால் இயங்கச் செய்யப்படுகின்றதானதும், எங்கும் வியாபித்திருப்பதானதும், சர்வ ஜீவராசிகளையும் ரட்சிக்கும் தன்மையுடையதானதும், எல்லாவற்றையும் சமமாய்ப் பார்ப்பதானதும், சுருக்கமாய்ச் சொல்வதானால் அவனன்றி (அக்கடவுள் சித்தம் அன்றி) ஒரு அணுவும் அசையாததான சக்தியுடையதானது என்பதாகக்கருதிக்கொண்டிருக்கிறார்கள். இக்கருத்துசரியா, தப்பா என்று யோசிப்பதற்கு முன்னும், இப்படி ஒரு வஸ்து இருக்கின்றதா

இல்லையா என்று முடிவு செய்வதற்கு முன்னும், இப்படி மக்கள் எண்ணிக்கொண்டிருப்பதானது உலகத்திற்கு நன்மையா? தீமையா? என்று முடிவு செய்வதற்கு முன்னும், இந்தப்படி உலகத்தில் எந்த மனிதனாவது உண்மையில் நம்பி இருக்கின்றானா? அந்தப்படி நம்பி இருப்பதற்குத் தகுந்தபடி அவனது மனம், மெய், மொழி ஆகியவைகளால் ஏற்படும் நடவடிக்கைகள் காணப்படுகின்றனவா? அதாவது எந்த மனிதனுடைய நடவடிக்கையில் இருந்தாவது மேற்கண்ட சக்தியும், குணமும் கொண்ட ஒரு வஸ்துவை, நம்பி நடக்கின்ற மனிதனின் நடவடிக்கைகள் இவையென்று கருதும்படியாக இருக்கின்றனவா? என்பதை யோசிப்போமானால், இதுவரை ஒரு மனிதனை யாவது அம்மாதிரி நம்பிக்கையின்மீது நடக்கிறான் என்பதாகக் கண்டு பிடிக்கமுடியவில்லை என்றும், அந்தப்படி ஒரு கடவுள் இருப்பதாக ஒரு மனிதன்கூடத் தனது வாழ்க்கையில் எண்ணி இருக்க முடிவதில்லை என்றும் தான் சொல்லவேண்டி இருக்கிறதே தவிர வேறில்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.

அதாவது, அப்படிச் சொல்லுவதானது சாதாரண மக்களிடையே மாத்திரமல்லாமல் கடவுள் பிரசாரம் செய்பவர்களிலாவது, கடவுளைக்கண்டவர்களாகச் சொல்லப்பட்டவர்களிலாவது, கடவுளுக்குச் சமமாகக் கருதும் சமயாச்சாரிகள், மதத்தைக் காப்பாற்றும் ஸ்தாபனத் தலைவர்கள் முதலாகியவர்களுக்குள்ளாவது நாஸ்தீகத்தைக் கண்டு பயந்து நடுநடுங்கித்துயரப்பட்டுக் கண்ணீர் வடிக்கும் ஆஸ்தீகப் பண்டிதர்கள், சாஸ்திரிகள், வைதீகர்கள் முதலாகியவர்களுக்குள்ளாவது மற்றும் மகாத்மாக்கள், வேதாந்திகள், பெரியோர்கள் முதலியவர்களுக்குள்ளாவது இதுவரை ஒருவராவது இருந்ததாகவோ இருப்பதாகவோ சொல்லுவதற்கில்லை.

ஒவ்வொரு மனிதனும் தன்னை ஒரு தனி மனிதனென்றும், தனக்காக, தான் செய்யவேண்டிய காரியம்.

பல உண்டு என்றும், அவற்றைத் தினமும் செய்வதாகவும், அவனவன் இஷ்டப்பட்டபடி செய்துகொண்டும், அதன் பலனை அடைந்துகொண்டும், அதுபோலவே மற்றவர்களையும் செய்யும்படி தூண்டிக்கொண்டும், மற்றவர்கள் செய்வதில் குணதோஷம் கற்பித்துச் சொல்லிக்கொண்டும், அதற்காக விருப்பு வெறுப்புக் காட்டிக்கொண்டும், இன்பதுன்ப துக்கமடைந்து கொண்டுந்தான் இருக்கின்றானே ஒழிய, கடவுளின் சர்வ சக்தியைப்பற்றியோ, சர்வ வியாகபத்தைப்பற்றியோ, சர்வ தயாபரத்தைப் பற்றியோ, சர்வ சமத்துவத்தைப்பற்றியோ நம்பி இருப்பவன் ஒருவனும் இல்லையென்றுதான் சொல்லவேண்டும்.

ஆகவே இதிலிருந்து அப்படிப்பட்ட ஒரு வஸ்து இல்லை என்றும், இருப்பதாகவும் யாரும் நம்பியிருக்கவில்லை என்றுந்தான் முடிவு கட்டவேண்டியிருக்கின்றதென்பது ஒரு பக்கமிருந்தாலும், அப்படி ஒன்று இருப்பதாகக் கற்பித்து நம்பச் செய்வதினாலாகிலும், காரியத்தில் ஏதாவது-அதாவது கடவுள் நம்பிக்கையினால் ஏற்படக்கூடும் என்று கருதிகின்ற முன் சொன்ன காரியங்களாவது நடக்கின்றதா? என்று பார்த்தால் திருடாதவன், பொய் சொல்லாதவன், பிறர் பொருளை வஞ்சிக்காதவன், முறைதவறிக் கலவி செய்யாதவன், பிறருக்கு இம்சை கொடுக்காதவன் முதலான காரியங்கள் செய்யாதவன் என்பவன் என்கிற ஒருவனைக்கூட காணமுடியவதில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. அன்றியும், திருட்டு வஞ்சகம், பொய், முறைதவறிக் கலத்தல் முதலாகிய காரியங்கள் எவை என்று தீர்மானிப்பதே கஷ்டமான காரியமாயிருக்கிறது என்றாலும் மக்கள் எதை எதை மேற்கண்டமாதிரி குணங்கள் என்று கருதுகின்றார்களோ அதைச் செய்யாமல் இருக்க இந்த எண்ணத்தையும் நம்பிக்கையும் உண்டாக்குவதாலோ, நிலைநிறுத்துவதாலோ முடிகின்றதா? என்பதுதான் இங்கு யோசிக்கத் தக்கதாகும்.

இது ஒருபுறமிருக்க, மேற்கண்ட-அதாவது கடவுள் என்பதற்குக் கற்பிக்கப்பட்ட குணங்கள் உடையதான ஒரு கடவுள் என்பது இல்லை என்றும், அல்லது இருக்க முடியாது என்றும் கருதுகின்றவர்களிடத்திலாவது, அந்தப்படி கருதிக்கொண்டிருக்கின்றார்கள் என்று பிறரால் கருதப்படுகின்றவர்களிடத்திலாவது, முன் சொல்லப்பட்ட திருடு, பொய், வஞ்சகம், பிறரை இம்சிப்பது முதலிய குணங்கள், கடவுள் நம்பிக்கைக்காரர்களைவிட (ஆஸ்தீகர்களைவிட) அதிகமாய் இருப்பதாகவாவது அல்லது பிறமக்களுக்கு ஆஸ்தீகர்களைப் போன்ற நன்மை செய்யவில்லை என்றாவது சொல்ல முடியுமா என்று பார்த்தால், அதுவும் முடியாத காரியமாய்த்தான் காணப்படுகின்றதே ஒழிய வேறில்லை.

மக்களில் பலருக்கு ஆராய்ச்சி முயற்சியும், பகுத்தறிவும் இல்லாத காரணத்தால் கடவுள் என்னும் விஷயத்தில், மேற்கண்டவிதமான காரியங்களைப்பற்றி யெல்லாம் யோசனை செய்து பார்ப்பதை விட்டு விட்டு, தனக்கே புரியாதபடி ஒன்றை நினைத்துக்கொண்டு "கடவுள் உண்டா இல்லையா" என்று கேட்பதும்,

"கடவுளை ஒப்புக்கொள்ளுகின்றாயா இல்லையா" என்று கேட்பதும்,

"கடவுள் இல்லாமலிருந்தால் மக்களில் ஒருவருக்கொருவர் என் வித்தியாசமாயிருக்கவேண்டும்?"

"ஒருவர், பணக்காரனாகவும் ஒருவர் ஏழையாகவும் என் இருக்கவேண்டும்?"

"ஒருவன் கூன், குருடு, நொண்டி, குஷ்டரோகி முதலியவனாயும் ஒருவன் நல்ல திடசரீரியாகவும் ஏன் இருக்க வேண்டும்?"

"ஒருவனுக்கு ஏன் பத்துப்பிள்ளை, ஒருவனுக்கு ஏன் நாலுபிள்ளை, ஒருவனுக்கு ஏன் பிள்ளை இல்லை?" என்றும்,

"இருவர் ஒரேகாலத்தில் தனித்தனியாக வியாபாரம் ஆரம்பித்தால் ஒருவர் நஷ்டமும், ஒருவர் லாபமும் ஏன் அடையவேண்டும்?" என்பது போன்ற கேள்விகள்கேட்டு, அதன்மூலம் மேற்கண்ட குணங்கள் கொண்ட கடவுள் என்பதாக ஒன்று உண்டு என்று மெய்ப்பிக்க முயற்சி செய்கிறார்கள். இம்மாதிரி கேள்விக்காரர்களைப் பகுத்தறிவு இல்லாதவர்கள், ஆராய்ச்சிச் சக்தி இல்லாதவர்கள் என்றுதான் சொல்லவேண்டுமே தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை.

இப்படிப்பட்ட கேள்வி கேட்பவர்களை ஒரே ஒரு பதிலில் வாயடைக்கவேண்டுமானால், "இம்மாதிரியாகத் தோற்றங்களில் ஒன்றுக்கொன்று வித்தியாசங்கள் காணப்படுவதாலேயே (மேற்கண்ட குணமுடைய)கடவுள் என்பதாக ஒன்று இல்லையென்று சொல்லிவிடலாம்.

எப்படியெனில் சர்வ சக்தியுடைய கடவுள் ஒருவர் இருந்து, சர்வத்திலும் புகுந்து, சர்வத்தையும் ஒன்று போலப் பார்ப்பவராயிருந்தால், சர்வத்தையும் ஒன்று போலவே சிருஷ்டித்திருக்கலாமன்றோ? வேறுவேறாகக் காணப்படுவதாலேயே சர்வ சக்தியும், சர்வ வியாபகமும், சமத்துவமும் கொண்ட கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்பதுதான் பதிலாகும்.

ஏனெனில், நொண்டிக்கும், முடவனுக்கும், நல்லவனுக்கும், கஷ்டப்படுபவனுக்கும், கஷ்டப்படுத்துகிறவனுக்கும் "கடவுளே" காரணஸ்தனாயிருந்தால், கடவுளைச் சர்வ தயாபரத்துவமுடையவனென்றும் பாரபட்சமில்லாத சர்வ சமத்துவ குணமுடையவனென்றும், எப்படிச்

சொல்லமுடியும்? இந்தப்படி பகுத்தறிவைக்கொண்டு சொல்லக்கூடிய சமாதானங்கள் ஒருபுறமிருக்க, ஆராய்ச்சியைக்கொண்டு அறியக்கூடிய சமாதானங்களைப்பற்றி சற்று கவனிப்போம். ஒரே கையால் கைநிறைய அரிசியை அள்ளி அள்ளி வேறாய் வைத்து, ஒவ்வொரு தடவை அள்ளிய அரிசியைத் தனித்தனியாய் எண்ணிப் பார்த்தால், அவற்றுள் ஒன்றுக்கொன்று எண்ணிக்கை வித்தியாசமிருப்பானேன்? அதே மனிதன் அதே கையால் அதே நிமிஷத்தில் அதே குவியலிலிருந்து அள்ளினவைகள் ஏன் வித்தியாசப்படுகின்றது? ஒரே பூமியில் ஒரே வினாடியில் விதைக்கும் ஒரே மாதிரி விதைகள், சில முளைத்தும் சில முளைக்காமலும், முளைத்தவைகளில் சில வளராமல் கூளையாகவும், சில அதிக உயரமாகவும், சில அதிகமான மணிகள் கொண்ட கதிராகவும் சில குறைவான மணிகள் (தானியங்கள்) கொண்ட கதிராகவும், சில முளைத்து நன்றாய்த் தழைத்தும் ஒரு மணிகூட இல்லாத வெறும் கதிராகவும் இருக்கக் காரணம் என்ன? ஒரு வினாடியில் ஒரு பூமியில்நட்ட செடிகள் ஒன்று பல கிளைகளுடனும், ஒன்று சுவல்ப கிளைகளுடனும் வளருவதும், ஒன்று பதினாயிரக்கணக்காகக் காய்ப்பதும், ஒன்று நூற்றுக்கணக்காய்க் காய்ப்பதும், ஒன்று பூ விட்டு எல்லாம் கருகி உதிர்ந்து விடுவதும், ஒன்று பூ விடாமலும் பிஞ்சு விடாமலும் வறட்டாயிருப்பதும் என்ன காரணம்? கடவுள் ஒருவர் இருந்தால் இவைகள் எல்லாம் அதனதன் இனத்தில் ஏன் ஒன்றுபோல் இருக்கக்கூடாது?

ஒரு சமயம் கடவுளே இந்தப்படி செய்திருப்பார் என்று சொல்வதானால் அம்மரம், செடி, தானியம் முதலியவைகள் இப்படிப் பலன் அடைவதற்குக் காரணம் என்ன? என்பது போன்ற கேள்விகளுக்கு என்ன சமாதானமோ அதுதான் மனிதர்கள் சம்மந்தமான கேள்விகளுக்கும் சமாதானம் என்பது தானாகவே புலப்படும்.

---

## முடிவுரை.

கடவுள், மதம் ஆத்மா, நான், பாவ-புண்ணியம், மோட்ச-நரகம், ஒழுக்கம், என்பனவெல்லாம் மனிதனால் கற்பனை செய்யப்பட்ட ஓர் கட்டுக் கதையே யொழிய வேறல்ல. இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமானால் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள ஒரு சில சுயநலக் கூட்டத்தார்—ஊரார் உழைப்பில் உடல் நோவாது உண்டு வாழ வேண்டுமென்று விரும்பும் மனிதப் புல்லுருவிகள்-புரோகிதர்கள் இத்தகைய கற்பனைகளைச் செய்து மக்களை மூடர்களாக்கி-அறிவிற்குப் பகைவர்களாக்கி-தன் நம்பிக்கையையிழக்கும்படி செய்து—இவ்வுலக வாழ்க்கையின் இன்பத்தை மக்கள் வெறுக்கும்படி தூண்டி, தாங்கள் இவ்வுலகவாழ்க்கையில் பூரண இன்பந்துய்த்துக்கொண்டு, மற்ற மக்களுக்கு மறு உலக வாழ்க்கையில் மோகங்கொள்ளும்படி செய்துவிட்டனர். எனவே பகுத்தறிவு வாதிகள்—மனித ஜீவ அபிமானிகள் தங்கள் பகுத்தறிவினால் சுயநலப் புரோகிதர்களால் கட்டப்பட்ட இந்த மறு உலக நம்பிக்கைகளைத் தகர்த்தெறிந்து, மக்களை இவ்வுலக வாழ்க்கையில் பற்றுள்ளவர்களாகச் செய்யவேண்டும். விஞ்ஞான அறிவு நாளடைவில் லோகாயதவாதிகளுக்கு (Materialist) அனுகூலமாக வளர்ந்து கொண்டே வருகிறது. விஞ்ஞான வளர்ச்சி என்னும் சம்மட்டியினால் கடவுள், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் என்னும் கற்பனைகள் நீர்த்தூளி செய்யப்பட்டுக் கொண்டேதான் வருகிறது. ஆனாலும் நாம் ஒவ்வொருவரும் இவ்விஞ்ஞான முறையைக் கைக்கொண்டு சுயநலப்புரோகிதர்களால் நிறுவிய மறு உலக வாழ்க்கையின் நம்பிக்கையை விரைவில் உலகைவிட்டோட்டி, இவ்வுலக வாழ்க்கையை இன்பகரமாய்ச் செய்ய முயலுவோமாக.

# திராவிடர் ஆரியர் உண்மை.

## (பெரியார் ஈ. வெ. ரா. பேச்சு.)

தமிழ்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்தில் திருச்சி, சேலம் முதலிய பல இடங்களில் பெரியாருக்கு வர வேற்பும், பணமுடிப்பும் அளிக்கப்பட்ட கூட்டங்களில் வரவேற்புகளுக்கும் பணமுடிப்புகளுக்கும் 'பெரியார்' அளித்த பதிலின் தொகுப்பு வருமாறு:

தோழர்களே, நான் இந்த ஊர்களுக்குப் பலதடவை வந்திருக்கிறேன். எத்தனையோ தடவை பொதுக் கூட்டங்களிலும் பேசி இருக்கிறேன். பல தடவை இந்த ஊர்த்தெருக்களில் நடந்திருக்கிறேன். அந்தக்காலத்திலெல்லாம் இல்லாதமாதிரி இப்பொழுது மாத்திரம் எனக்கு ஏன் இவ்வளவு ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமும் ஆன வரவேற்பு நடக்கவேண்டும்? நான் உங்களுக்குப் புதியவனா? வெளிநாட்டிலிருந்து விளம்பரப்படுத்திக் கொண்டு வரப்பட்டவனா? அல்லது உங்களுக்கு இது செய்கிறேன், அது செய்கிறேன், மழையை வரவழைக்கிறேன், தரித்திரத்தையும் நோயையும் ஓட்டுகிறேன், வெள்ளையனை விரட்டுகிறேன், 8-நாள் 10-நாட்களில் சுயராஜ்யம் கொண்டு வருகிறேன் என்று ஏதாவது உங்களுக்கு ஆசை வார்த்தைகூறி மயக்கினவனா? ஒன்றும் இல்லையே.

### சுயராஜ்யம் என்பது அர்த்தமற்ற பேச்சு

உங்களில் பலர் அதிருப்தி அடையும்படியும் அரசியல், சமூக இயல் ஆகியவைகளில் உங்களுடைய பழக்க

வழக்க நம்பிக்கைகளுக்கு மாறாகவும் பேசுகிறேன், சுய ராஜ்யம் என்பது அர்த்தமற்ற பேச்சு என்கிறேன், இந்தியா என்பது கற்பனை என்றும் சொல்லுகின்றேன், காங்கரஸ் என்பதும் தேசியம் என்பதும் ஆரியர்க்கு அரண் என்றும் சொல்லுகிறேன், இந்து மதம் என்பதாக ஒரு மதமே இல்லை என்றும் அப்படிச் சொல்வது தமிழர்க்கு இழிவு என்றும்கூட சொல்லுகிறேன், இன்னமும் பல உங்களுக்கு புதிதாயிருக்கும்படியாகவும், காதுக்கு இனிப்பைக் கொடுக்கக்கூடியதாக இல்லாததாகவும் பேசுகின்றேன்.

இப்படியெல்லாம் பேசுகிற ஒருவனை, நான் சொல்வதை அப்படியே ஒப்புக்கொள்ளத் தயங்குகிற நீங்கள் இவ்வளவு ஆடம்பரத்துடன் உற்சாகத்துடன் வரவேற்பதை நான் எனக்காக என்று எண்ணமுடியுமா? ஒரு நாளும் அப்படி நான் நினைக்கவில்லை. இந்த ஆடம்பர வரவேற்புகள் எனக்காக அல்ல, அல்லவே அல்ல என்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆதலால் இவ்வரவேற்புகளால் நான் பெருமை அடையவில்லை.

## ஆத்திரமடைந்து ஆடும் வெறியாட்டம்

ஆனால் பின்னை யாருக்கு? எதற்காக? என்பதை நான் சொல்லவேண்டாமா? அதைச்சொன்னால்தானே என்னை உண்மையை அறிந்தவன் என்று நீங்கள் கருத முடியும். அதென்னவென்றால் பார்ப்பனர்கள் தேசியத்தின் பேரால், சுயராஜ்யத்தின் பேரால், காங்கரசின்பேரால் காந்தியைக்காட்டி உங்களிடம் ஓட்டுபெற்று மந்திரிப் பதவி அடைந்த இந்த 25-மாதத்தில், அவர்கள் உங்களுக்குச் செய்த கொடுமையையும் அட்டூழியங்களையும் பொறுக்கமாட்டாமல், உங்களுடைய வயிறு எரிந்து நெஞ்சம் குமுறி ரத்தம் கொதித்து ஆத்திரமடைந்து ஆடும் வெறியாட்டம் என்றே கருதுகிறேன்.

இந்த வெறியாட்டம் என்னை வைத்து நீங்கள் ஆடுவதற்குக் காரணம் நான் அந்தக் காலத்தில் அதாவது நீங்கள் பார்ப்பனப் புரட்டுக்கு மயங்கி மஞ்சள் பெட்டிக்கு ஓட்டு கொடுக்கப்போகும் காலத்தில் அவர்கள் (காங்கரஸ்காரர்கள்) உங்கள் ஓட்டுகளைப்பெற்றால் இப்படியெல்லாம் செய்வார்கள் என்று புட்டுப்புட்டு விளக்கமாக விளக்கிய காலத்தில், நீங்கள் வேசியின் மையலில் மயங்கிய மைனர்களுக்குச் சொல்லும் புத்திமதி அடையும் கதி போல் அவற்றை அலட்சியப்படுத்திவிட்டு கண்மூடித்தனமாய் நடந்துகொண்டதை தவறு என்று என்னிடம் ஒப்புக்கொள்ளும் பாவனையாய் என்னை முன்னிறுத்தி ஆத்திரம் கொண்டாடுகிறீர்கள் என்றுதான் கருதுகிறேன்.

இந்த ஆத்திரக் கொண்டாட்டத்தில் மஞ்சள் பெட்டிக்கு மக்களின் தரம் தெரியாமல் ஓட்டளித்த உங்களில் அநேகரை வெட்கப்படச் செய்திருக்கிறது என்பதையும் நான் உணருகிறேன்.

தோழர்களே, உலகத்தில் இவ்வளவு பெரும்பான்மையான மெஜாரிட்டியாரின் ஆதரவுடன் அதிகாரம்பெற்றவர்கள் இவ்வளவு சீக்கிரத்தில் பொதுமக்களின் மனக்கொதிப்புக்கு ஆளாகி பொதுஜன ஆதரவிழந்து வீழ்ச்சியடைந்ததாக சரித்திரத்தில்கூட பார்ப்பது அரிதாகும்.

## ஆணவம் எங்கே?

இன்று அவர்களுடைய, காங்கரஸ்காரர்களுடைய, பார்ப்பனர்களுடைய ஆணவம் எங்கே? அகம்பாவம் எங்கே? சட்டசபைகளில் நம் தலைவர்களை சிறிதுகூட மதிக்காமல் "எங்களை அனுப்பிய பொதுஜனங்களைப் போய்க் கேளுங்கள்" என்று அவர்கள் கூறிய திமிரான பேச்சு எங்கே? இன்றைய வீழ்ச்சி எங்கே? என்று பாருங்கள்.

என்ன வீழ்ச்சி என்று யாராவது தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறீர்களா? சொல்லுகிறேன் கேளுங்கள்.

தமிழ்நாட்டுத் தலைவரென்றவரும், காங்கரஸ் முதல் மந்திரியும், காந்தியாரின் அடுத்த பதவியில் இருப்பவருமான தோழர் கனம் ராஜகோபாலாச்சாரியார் செல்லுமிடங்களிலெல்லாம் பல நூற்றுக்கணக்கான கறுப்புக் கொடியும், போலீசு உதவியில்லாமல் நடக்கமுடியாத நிலையும், காவலோடு காரிலிருந்து இறக்கி காவலோடு காரில் ஏற்றி, முட்டாக்குபோட்டு காரை ஓட்டவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டு இருப்பதும்-காங்காசுக்கு எதிரி, தேசத்துக்கு எதிரி, மனித சமூகத்துக்கு எதிரி, காந்தீயத்துக்கு எதிரி என்று தப்பட்டைமூலம் பறை அறிவிக்கப்பட்ட எனக்கு இப்படி 50-ஆயிரம் பேர், லக்ஷம்பேர், வரை கூடி ஊர்வலம் செய்வதும், வானம் இடிபட வாழ்த்தக் கூறுவதும், நூற்றுக்கணக்கான வரவேற்புப் பத்திரங்கள் வாசித்தளிப்பதும், அய்நூற்றுக் கணக்கான மாலைகள் போடுவதும், ஆயிரக்கணக்கான ரூபாய்கள் கொடுப்பதுமான இந்தக் காரியங்கள் காங்கரஸ் வீழ்ச்சிக்கும் பார்ப்பனீய வீழ்ச்சிக்கும் அறிகுறியல்லவா என்று கேட்கின்றேன்.

## எதைக்குறிக்கிறது?

நீங்கள் வாசித்தளிக்கும் வரவேற்பின் ஒவ்வொரு எழுத்தும், புள்ளியும், கமா குறியும் எதைக்குறிக்கின்றன? "இந்தப் பார்ப்பன ஆதிக்கத்தை, காங்கரசை, காந்தி புரட்டை உடையுங்கள்; அழியுங்கள்; அழித்துக் கொளுத்திப் புதையுங்கள்" என்று கட்டளை இடுகிறது போலல்லவா காணப்படுகின்றன. நீங்கள் அளிக்கும் ஒவ்வொரு ரூபாயும் காசும் என்ன கூறுகின்றன? அய்யனே இந்தப் பார்ப்பனீயக் கொடுமையிலிருந்து எங்களை விடுதலை செய்து, மனிதத்தன்மையோடு வாழ்வதற்கு

வகைசெப்புங்கள்" என்று கெஞ்சி அபயம் கொள்ளுவது போலல்லவா வந்து குவிகின்றன.

உங்கள் வாழ்த்துப் பேரொலிகள் எதைக் குறிப்பிடுகின்றன? என்னை வாழ்த்துக் கூறுவதன் மூலமே உங்கள் எதிரிகள் ஒழிந்தே போய்விட்டதாகக் கருதி வெற்றி முழக்கம் செய்வது போலவே காணப்படுகின்றன.

இவைகளுக்காக நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய பதில் என்ன?

தோழர்களே, இந்த 15-வருஷகாலமாக நான் கூறி வந்ததை இப்பொழுதாவது நீங்கள் மெய் என்றும் சரி என்றும் கருதுவதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டதே என்கின்ற மகிழ்ச்சிப் பெருக்கோடு உங்களுடைய ஆசைக்கும், எதிர்நோக்கிற்கும் ஒரு உண்மையான—மெய்யான தொண்டனாக இருந்து நீங்கள் சிறிதும் மனக்குறை அடையாத வண்ணம் என்னாலான தொண்டைச் செய்கிறேன் என்று வாக்களிப்பதுதான் என்று கருதுகிறேன்.

## நம்மை மிருகமாய் நடத்தக் காரணமென்ன?

தோழர்களே, இன்று நாம் அதாவது இந்நாட்டுப் பழங்குடி மக்களாகிய நாம், இந்நாட்டை ஆண்டுவந்த அரச பின் வழியாகிய நாம், உலகத்தில் எந்த நாட்டினர்க்கும் பின்வாங்காத வீரம், மானம், அறிவு, ஆற்றல், கலை, நாகரீகம் ஆகியவைகளில் சிறந்த மக்களாகிய நாம், இன்று ஒரு சிறு கூட்டத்தாராகிய, அதுவும் இந்நாட்டுக்கு மலைக் காடுகளில் இருந்து கால்நடைகளுடன் பிழைக்கவந்த கூட்டமாகிய, பாடுபடாத வர்க்கத்தாராகிய ஆரியர்களாலும் பிறராலும் ஆயிரக்கணக்கான வருஷங்களாக அடிமைப்படுத்தப்பட்டு அடக்கி ஒடுக்கி மிருகமாய் நடத்தப்படுகிற காரணம் என்ன என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

வெள்ளையர் நம்மை அரசியலில் ஆளுகிறார் என்றால் அதற்காவது ஏதோ ஒரு காரணம் இருக்கலாம். அதாவது இந்த சூழ்ச்சியால் நாம் தமிழர்கள்—திராவிடர்கள் பல்வேறு சமயமாகவும், பல்வேறு மேல் கீழ் சாதி வகுப்புகளாகவும் பல்வேறு லட்சியமுடையவர்களாகவும் ஆக்கப்பட்டு கல்வி இல்லாமல் தன் முயற்சி இல்லாமல் நசுக்கப்பட்டு விட்டபடியால் கத்தி துப்பாக்கி உள்ளவருக்கெல்லாம் பயந்து அடிமையாகி ஆரியரால் நம்நாட்டிற்கு கூட்டி வரப்படுபவருக்கெல்லாம் குடி ஆகி அல்லல்பட்டு வருகிறோம்.

ஆனால் கத்தி இல்லாத—துப்பாக்கி இல்லாத—உடல் வலிகூட இல்லாத இந்த ஆரியர்களுக்கு, அரசியல் சமூக இயல், சமய இயல், பொருளாதார இயல், ஞான இயல் முதலாகியவைகளுக்கெல்லாம் நாம் உரிமை இல்லாமல் அடிமைப்பட்டு உழல்வதற்குக் காரணம் கண்டு பிடிக்க வேண்டாமா என்று உங்களைக் கேட்கிறேன். அல்லது நம் நிலை தமிழ்நாடு தோன்றியதுமுதல் தமிழர் தோன்றியதுமுதல் இப்படித்தான் இருந்ததா என்று கேட்கிறேன்.

## உண்மையைப் பாருங்கள்

சரித்திரத்தைப் பாருங்கள். ஆராய்ச்சியாளர் கூறுவதின் உண்மையைப் பாருங்கள். உலகிலேயே முதல் முதல் தோன்றிய நாடு தமிழ்நாடு என்றும், உலகிலேயே மனிதவர்க்கம் தோன்றிய இடம் நம் தென்னாடு என்றும் கூறப்படவில்லையா? இந்தமாதிரி பூர்வீகப்பெருமைகளால்,பழங்கதைகளால் நமக்கு ஆவது ஒன்றும் இல்லை என்றாலும் இப்படிப்பட்ட தமிழர்கள் ஏன் உலகில் இவ்வளவு கீழான நிலையிலும், இழிவான தன்மையிலும் இருக்கவேண்டும் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டாமா என்பதற்காகவே இவற்றைக் கூறினேன்.

தமிழன் தன்னை இந்தியன் என்று கருதியதால் தமிழ்நாட்டையும் தமிழர் வீரத்தையும் கலையையும் நாகரீகத்தையும் மறந்தான். தமிழன் தன்னை இந்து என்று கருதியதால் தனது மானத்தையும் ஞானத்தையும் பகுத்தறிவையும் உரிமையையும் இழந்தான்.

இப்போது தமிழன் தன்னை இந்தியன் என்பதையும் இந்து என்பதையும் மறப்பதாலேயே அக்கட்டுகளிலிருந்தும் கூட்டுகளிலிருந்தும் விடுபட்டு விலகுவதாலேயே தன்னை ஒரு மனிதன் என்றும், ஞானத்துக்கும், வீரத்துக்கும், பகுத்தறிவுக்கும், மானத்துக்கும் உரிமை உடையவன் என்றும் இவைகளுக்கு ஒரு காலத்தில் உறைவிடமாக இருந்தவன் என்றும் உணருவானாவான்.

இந்த உணர்ச்சி ஆரியர்களுக்கு விரோதமாக காணப்படுவதில் ஆச்சரியமில்லை. அவர்களது கூலிகளில் பலர் இவ்வுணர்ச்சிகளை பரிகசிப்பவர்கள்போல் நடிப்பதில் அதிசயமில்லை. ஆனாலும் அதைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை.

நான் கூறி வந்தவைகளுக்கும் இப்போது கூறுவனவற்றிற்கும் ஆதாரமாக சரித்திரமும் அரிய ஆராய்ச்சி ஞானம்பெற்ற சரித்திராசிரியர்களும் கூறி இருப்பதில் சிலவற்றை மாத்திரம் எடுத்துக்காட்டிவிட்டு இதுபற்றிய என் பேச்சை முடிக்கிறேன். மற்றவைகளை பிறிதொரு சமயம் பார்த்துக்கொள்ளுகிறேன்.

## ஆராய்ச்சியாளர் அபிப்பிராயம்

"தென்னிந்தியாவில் வசித்துவந்த ஆரியரல்லாதார்களையே குரங்குகள் என்றும், அசுரர்கள் என்றும் ராமாயணக் கதையில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது"

இது ரோமேஸ் சந்திரடட் C. I. E. I. C. S. எழுதிய "புராதன இந்தியா" என்னும் புத்தகத்தில் 52-வது பக்கத்தில் இருக்கிறது.

"திராவிடர்கள் தங்கள்மீது படைஎடுத்துவந்த ஆரியர்களோடு கடும்போர் புரியவேண்டி இருந்தது. இந்த விஷயம் ரிக் வேதத்திலேயே அநேக சுலோகங்களாக இருக்கின்றன."

இது டாக்டர் ரோமேஷ் சந்திர மஜூம்தார் எம். ஏ. யின் "பூர்வீக இந்திய சரித்திரமும் நாகரீகமும்" என்னும் புத்தகத்தின் 22-வது பக்கத்தில் இருக்கிறது.

"ராமாயணக்கதை என்பது ஆரியர்கள் தென்இந்திய தஸ்யூக்கள் அல்லது திராவிடர்கள்மீது படையெடுத்து வெற்றிபெற்றதை சித்தரித்துக் காட்டுவதாகும்."

இது பி. சிதம்பரம்பிள்ளை எழுதிய "திராவிடரும் ஆரியரும்" என்னும் புத்தகத்தின் 24-வது பக்கத்தில் இருக்கிறது.

"ராமாயணக்கதையானது புரோகித வகுப்பாருக்கும் யுத்த வீரர்களுக்கும் நடந்த போரைக் குறிப்பதாகும். ராமாயணத்தில் குறிக்கப்பட்டுள்ள குரங்குகள், கரடிகள் என்பவை தென் இந்தியாவில் உள்ளவர்களை—ஆரியால்லாதவர்களை குறிப்பதாகும்."

இது ரோமேஷ் சந்திரடட் எழுதிய "பண்டைய இந்தியாவின் நாகரீகம்" என்ற புத்தகத்தின்139-141வது பக்கங்களில் இருக்கிறது.

"தென்னிந்தியாவில் இருந்த மக்களேதான் ராமாயணத்தில் குரங்குகள் என்றும், அரக்கர்கள் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்."

இது "சுவாமி விவேகானந்தா அவர்களது சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்" என்ற புத்தகத்தில் 'ராமாயணம்' என்னும் தலைப்பில் 587-589 பக்கங்களில் இருக்கின்றது.

"ஆரியன் என்கின்ற பதம் இந்தியாவின் புராதன குடிமக்களிடமிருந்து தங்களை பிரித்துக் காட்டுவதற்காக ஆரியர் ஏற்படுத்திக்கொண்ட பதம்."

தஸ்யூக்கள் என்பது இந்திய புராதன குடிமக்களுக்கு அவர்கள் (ஆரியர்கள்) கொடுத்த பெயராகும்.

இது 1922-ம் வருஷம் பிரசுரிக்கப்பட்ட கேம்ரிட்ஜ் "பழைய இந்தியாவின் சரித்திரம்" என்னும் புத்தகத்தில் இருக்கிறது.

## பகைமைக்குக் காரணம்

"ஆரியரல்லாதவர்களை ரிக் வேதத்தில் தாசர் (சூத்திரர்)கள் என்றும், தஸ்யூக்கள் அசுரர்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆரியருக்கும் ஆரியால்லாதாருக்கும் இருந்துகொண்டிருந்த அடிப்படையான பகைமையைப் பற்றி ரிக் வேதத்தில் பல இடங்களில் காணலாம். இரு வகுப்பாருக்கும் இருந்த கலை வேற்றுமையும் அரசியல் வேற்றுமையுமே இந்தப் பகைமைக்குக் காரணமாகும்."

இது டாக்டர் ராதா குமுத் மூக்கர்ஜீ எம். ஏ. பி. எச். டி. எழுதிய "இந்து நாகரீகம்" என்னும் புத்தகத்தில் 69-வது பக்கத்தில் இருக்கிறது.

"ராமாயணக் கதையின் உள்பொருள் என்னவென்றால் ஆரிய நாகரீகத்திற்கும் ஆரியரல்லாத நாகரீகத்திற்கும் (அவற்றின் தலைவர்களான ராமன் ராவணன் ஆகியவர்களால்) நடத்தப்பட்ட போராகும்."

இது ராதா குமுத் மூக்கர்ஜீ எழுதிய "இந்து நாகரீகம்" என்னும் புத்தகத்தின் 141-வது பக்கத்தில் இருக்கிறது.

"தமிழர்கள் என்பவர்கள் இந்தியாவின் தென்கிழக்கிலும், லங்கையின் சில பாகத்திலும் வசிக்கும் ஆரியால்

லாத திராவிடமக்கள் ஆவார்கள். தமிழ் என்பது மேற்படியார்களால் பேசும் பாஷை.''

> இது சர் ஜேம்ஸ்மர்ரே எழுதிய புதிய இங்கிலீஷ் அகராதியின் பக்கம் 67 டி-யில் இருக்கிறது.

"ஆரியர்கள் தங்கள் மொழியை ஆரியரல்லாதாருக்குள் புகுத்த முயற்சித்து முடியாமல் போனதால் ஆரியரல்லாதாருடைய பாஷைகளை கற்றுக்கொண்டு அவர்களது நாகரீகத்தையும் பின்பற்றவேண்டி வந்தன''

> இது பண்டார்காரின் கட்டுரைகள் வால்யம்-3, பக்கம் 10ல் இருக்கிறது.

"தமிழர்கள் ஆரியர்களை வடவர், வடநாட்டார் என்று அழைத்தார்கள். ஏனெனில் ஆரியர்கள் வடக்கே இருந்து வந்தவர்களானதால்.''

> இது டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார் எம். ஏ., பி. எச். டி. அவர்கள் எழுதிய "தென் இந்தியாவும் இந்திய கலையும்'' என்ற புத்தகத்தின் 3-வது பக்கத்தில் இருக்கிறது.

"ராமாயணத்தில் தென்னிந்தியா (திராவிட தேசம்) தஸ்யூக்கள் என்ற ராக்ஷதர்களுக்குச் சொந்தமாக இருந்தது.

இவர்கள் (தென் இந்தியர்கள்) வட இந்தியாவில் இருந்துவந்த ஆரியர்களைப்போலவே நாகரீகமடைந்தவர்களாய் இருந்தார்கள்''

> இது பி. டி. சீனிவாசய்யங்கார் எழுதிய இந்திய சரித்திரம் முதல் பாகம் என்னும் புத்தகத்தில் 10-வது பக்கத்தில் இருக்கிறது.

"திராவிடர்களை ஆரியர்கள் வென்றுவிட்ட அகங்காரத்தால் குரங்குகள் என்றும் காடிகள் என்றும் ராக்ஷ

சர்கள் என்றும் எழுதிவைத்தார்கள். ஆனால் இந்தப்படி இழிவு படுத்தப்பட்ட வகுப்பாரிடமிருந்தே (திராவிடர்களிடமிருந்தே) பல நாகரீகங்களை இந்த பிராமணர்கள் கற்றுக்கொண்டார்கள்''

இது ஷோஷி சந்தர்டட் எழுதிய ''இந்தியா அன்றும் இன்றும்'' என்னும் புத்தகத்தில் 15-வது பக்கத்தில் இருக்கிறது.

## அசுரர்கள் யார்?

''ஆரிய கடவுள்களாகிய இந்திரனையும் இதர கடவுள்களையும் பூசித்தவர்களும் அவர்களைப் பின்பற்றியவர்களும் தேவர்கள் என்று சொல்லிக்கொண்டார்கள். இந்த ஆரியக் கடவுள்கள் வணக்கத்தை எதிர்த்தவர்களை அசுரர்கள் என்று அழைத்தார்கள். இந்த இரு கூட்டத்தாருக்கும் விடாப்பகை இருந்துகொண்டே வந்தது''

இது ஏ. வி. தாஸ் எம். ஏ. பி. எல்., எழுதிய ''ரிக் வேதகாலத்து இந்தியா'' என்னும் புத்தகத்தில் 151-வது பச்கத்தில் இருக்கிறது.

''ஆரியர்கள் தங்களால் தோற்கடிக்கப்பட்ட எதிரிகளாகிய திராவிடர்களை தங்களுடைய புத்தகங்களில் திராவிடர்கள் தஸ்யூக்கள் என்றும், தானவர்கள் என்றும், ராக்ஷதர்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

''ஆரியக் கவிகள் திராவிடர்கள்மீது கொண்டிருந்த வெறுப்பை இது காட்டுகிறது. ஏனெனில் ஆரியர்கள் திராவிடநாட்டில் சிறுகச்சிறுக நுழைந்து ஆதிக்கம் பெறுவதில் அடைந்த கஷ்டத்தினால் இப்படி எழுதினார்கள்''

இது C. S. சீனிவாசாச்சாரி M. A., & M. S. ராமசாமி அய்யங்கார் M. A. ஆகிய சரித்திர போதகர்கள் எழுதிய ''இந்திய சரித்திரம் முதல் பாகம்'' என்னும் புத்தகத்தில் ''இந்து இந்தியா'' என்னும் தலைப்பில் 16, 17-வது பக்கங்களில் இருக்கிறது.

"ஆரியர்களில் சமஸ்கிருதம் பேசியவர்கள் மட்டும் இந்தியாவின் மேற்குக் கணவாய் வழியாக நுழைந்து வட இந்தியாவை அடைந்தார்கள். அங்கு தங்களைவிட முன்னேற்றமான திராவிடர்களைக்கண்டு அவர்களிடமிருந்து பல நாகரீகங்களைக் கற்றுக்கொண்டார்கள்."

இது H. G. வேல்ஸ் எழுதிய "உலகத்தின் சிறு சரித்திரம்" என்னும் புத்தகத்தின் 105-வது பக்கத்தில் இருக்கிறது.

"ஜாதிப் பிரிவுகள் நான்கில் அதாவது பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்பவர்களில் முதல் மூன்று பிரிவினர்கள் ஆரிய சம்பந்தப்பட்டவர்கள். கடைசி வகுப்பார் (சூத்திரர்கள்) இந்தியாவின் புராதனக் குடிகள்."

இது "New Age Encycolpedia" (நியூ எஜ் என்சைக்ளோபீடியா) Vol. II. (1925) பக்கம் 273-ல் இருக்கிறது.

## ராமாயணம் எதைக் காட்டுகிறது?

"ராமாயணம், தென்னிந்தியாவில் ஆரியர் பரவியதையும் அதைக் கைப்பற்றியதையும் உணர்த்தும் நூல்."

இது முன்பு கல்வி மந்திரியாய் இருந்த கனம் C. J. வர்க்கி M. A. எழுதிய "இந்திய சரித்திர பாகுபாடு" என்னும் புத்தகத்தின் 15வது பக்கத்தில் இருக்கிறது.

"சுருங்கக் கூறவேண்டுமானால் பிராமணர்கள் கல்வியைத் தங்களுக்கே சொந்தமாக ஆக்கிக்கொண்டு அந்த நிலைமையைத் துஷ்பிரயோகப்படுத்தித் தங்கள் இஷ்டம்போல் எல்லாம் தங்களுக்கு அநுகூலமான சகல விஷயங்களையும் உட்படுத்திக் கட்டுக்கதைகளை எழுதிவைத்துக் கொண்டார்கள். இந்தக் கற்பனைக் கதைகள் அனைத்தும் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன் சாமர்த்திய

மாய்ப் பிறரை அழுத்தி அடிமைப்படுத்தித் தங்களுடைய நிலையை உயர்த்திக்கொள்வதற்காகவே எழுதப்பட்டவைகளாகும்.''

இது ''பார்ப்பன துவேஷி' ராமசாமியால் எழுதப்பட்டதல்ல. பிரபல சரித்திர ஆசியரான ஹென்ரி பெரிட்ஜ் என்பவர் 1865 ல் எழுதின ''விரிவான இந்திய சரித்திரம் முதற் பாகம்'' என்னும் புத்தகத்தில் 15-வது பக்கத்தில் இருக்கிறது.

''விஷ்ணு என்கின்ற கடவுள் ஆரியக்கூட்டத்தாருக்கு வெற்றி தேடிக்கொடுக்கவும், யோசனை கூறவும் அடிக்கடி அவதாரம் செய்வதாக கருதப்பட்டது.''

இது இ. பி. ஹாவெல் 1918ல் எழுதிய ''இந்தியாவில் ஆரியர் ஆட்சியின் சரித்திரம்'' என்னும் புத்தகத்தின் 32-வது பக்கத்தில் இருக்கிறது.

''பாரத ராமாயணங்கள் முதலிய இதிகாசங்களில் காட்டு மிராண்டிகளும், அசுரர்களும், ராக்ஷதர்களும், தஸ்யூக்களும் வசிக்கும் நெருக்கமான காடுகள்கொண்ட நாடு என்று குறிப்பிடப்பட்டிருப்பதெல்லாம் தென்னிந்தியாவை (திராவிட நாட்டை)ப் பற்றியேயாகும்''

இது ஜி. எச். ராபின்சன் சி. ஐ. ஈ. யால் எழுதின ''இந்தியா'' என்னும் புத்தகத்தின் 155வது பக்கத்தில் இருக்கிறது.

## வட இந்திய திராவிட கலை.

''வட இந்தியாவில் இருந்த திராவிடக் கலை, நாகரீகம் முதலியவை யாவும் ஆரியர்களால் அழிக்கப்பட்டுவிட்டன. ஆனால் தென்னிந்தியாவில் அவ்விதம் நடக்கவில்லை''.

இது தமிழ்ப் பேராசிரியர் கே. என். சிவராஜ பிள்ளை பி. ஏ. எழுதிய 'பண்டைத் தமிழர்களின் வரலாறு'' என்னும் புத்தகத்தின் 4-ம் பக்கத்தில் இருக்கிறது.

"பாரதத்தில் இடும்பி என்ற ஒரு ஆரியரல்லாத பெண்மணியைப்பற்றி எழுதிய பார்ப்பனக் கவி தனக்குள்ள ஜாதித் துவேஷத்தால் ராக்ஷஸி என்று எழுதி இருக்கிறான். ராக்ஷதர் என்கிற பயங்கர புரளி வார்த்தை வைதீகப் பார்ப்பனனின் மூளையில் தோன்றிய கற்பனையேயாகும்".

இது நாகேந்திரநாத் கோஷ் பி. ஏ. பி. எல்., எழுதிய "இந்திய ஆரியரின் இலக்கியமும் கலையும்" என்ற புத்தகத்தின் 194-வது பக்கம்.

"ராமாயணத்தில் குடிகாரர்களை சுரர்கள் என்றும் குடியை வெறுத்தவர்களை அசுரர்கள் என்றும் பிரித்துக் கூறப்பட்டிருக்கிறது"

இது ஹென்றி ஸ்மித் வில்லியம் எல். எல். டி. எழுதிய "சரித்திரக்காரர்களின் உலக சரித்திரம்" வால்யூம் 2-ல் பக்கம் 521-ல் இருக்கிறது.

"இந்தியாவின் தென்பாகத்திலுள்ள நாடுகளைப் போல பிராமணர்கள் வெற்றியோடு வரும்போது ஆந்திரர், சேரர், சோழர், பாண்டியர் ஆகிய நாடுகள் மிக்க நாகரீகமான நிலையில் இருப்பதைக் கண்டார்கள்."

இது வின்சென்ட் ஏ. ஸ்மித் ஆக்ஸ்போர்ட் எழுதிய "இந்திய சரித்திரம்" 14-வது பக்கத்தில் இருக்கிறது.

"இந்தியாவிலுள்ள ஆரியர்களிடம் மனிதனைக் கொன்று யாகம் செய்யும் வழக்கம் இருந்திருக்கிறதென்று நிச்சயமாகச் சொல்லலாம்"

இது இம்பீரியல் இந்தியன் கெஜட்டியர் 1909-ம் வருஷத்திய பதிப்பு வால்யூம் 1-ல் 405-வது பக்கத்தில் இருக்கிறது.

## ஆரியரல்லாதார் பட்டபாடு.

"ஆரியரல்லாத இந்நாட்டு பழங்குடி மக்கள் ஆரியர்களால் காடுகளுக்குத் துரத்தப்பட்டார்கள். இதுவும் போதாதென்று அவர்களை ராக்ஷதர்கள், அசுரர்கள் என்றும் ஆரியர்களும் ஆரியபுரோகிதர்களும் நூல் எழுதி வைத்தார்கள். ஆரியரல்லாதார்களுக்கு இவர்கள் ஆதியில் இட்ட தஸ்யூ; ஆரிய எதிரி என்ற பெயர்கள்தான் நாளடைவில் பிசாசு, பூதம், ராக்ஷசன் என்ற பெயர்களாக மாறிவிட்டன"

> இது சர் வில்லியம் வில்சன் ஹண்டர் K. C. S. I. C. I. E., M- A ஆகஸ்ன் L. L. T. எழுதிய "இந்திய மக்களின் சரித்திரம்" என்னும் நூலின் 41-வது பக்கத்தில் இருக்கிறது.

"ராமாயணக் கதையானது ஆரியர்களை மேன்மையாகக் கூறவும் திராவிடர்களை இழிவுபடுத்திக் காட்டவும் எழுதப்பட்ட நூலாகும்"

> இது பண்டிதர் டி. பொன்னம்பலம் பிள்ளையால் எழுதப்பட்ட "மலபார் குவார்டர்லி ரிவ்யூ" என்னும் புத்தகத்தில் இருக்கிறது.

"நம்மைச்சுற்றி நாலு பக்கங்களிலும் தஸ்யூக்கூட்டத்தார் (திராவிடர்கள்) இருக்கிறார்கள். அவர்கள் யாகங்களைச் செய்வதில்லை, ஒன்றையுமே நம்புவதில்லை, அவர்களுடைய பழக்கவழக்கங்களே வேறாக இருக்கின்றன. ஓ இந்திரனே! அவர்களைக் கொல்லு. தாசர் வம்சத்தை அழித்துவிடுவாயாக."

> இது "ரிக்வேதம்" அதிகாரம் 10 சுலோகம் 22...8ல் இருக்கிறது.

"ஆரியர்களின் ஒழுக்கமான காரியங்களில் எல்லாம் சிறந்த காரியங்கள் மதுவருந்துவதும் சூதாடுவது

மாகும். ரிக்வேதத்தில் இதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன.''

> இது ராகோசின் எழுதின ''வேதகால இந்தியா'' என்னும் புத்தகத்தில் இருக்கிறது.

''இந்திய அய்ரோப்பியர்களால் (அதாவது ஆரியர்களால்) தோற்கடிக்கப்பட்ட கருப்பு மனிதர்களை (திராவிடர்களை) தஸ்யூக்கள் என்றும் கொள்ளைக்காரர்கள் என்றும் அடிக்கடி பிசாசுகளாக மாறக்கூடியவர்கள் என்றும் வேத இலக்கியங்களில் கூறப்பட்டிருக்கின்றது.''

> இது பால்மாசின் அவர் செல் எழுதிய ''புராதன இந்தியாவும் இந்தியாவின் நாகரீகமும்'' என்ற புத்தகத்தில் 19-வது பக்கத்தில் இருக்கிறது.

''மேற்கு திபேத்தையும் ஆப்கானிஸ்தானத்தையும் தாண்டி முதல் முதல் இந்தியாவிற்குள் வந்த ஆரியர்கள் சமஸ்கிருதத்தைப்போன்ற ஒரு பாஷையைப் பேசினார்கள். இந்தியாவிற்குள் ஆதியில் நுழைந்த இவ்வெள்ளையர்கள் தங்கள் கொள்கைகள், பழக்க வழக்கங்கள் கவிதைகள், மத நம்பிக்கைகள் முதலியவைகளை அப்பாஷையிலேயே எழுதி வைத்துக்கொண்டார்கள்''.

> இது சர் ஹென்றி ஜான்ஸ்ட்டன் ஜி. சி. எம். ஜி., கெ. சி. பி. 1913ல் எழுதிய ''இந்தியாவில் அன்னியர்கள்'' என்ற புத்தகத்தின் 19-வது பக்கத்தில் இருக்கிறது.

## நிச்சயம்

தோழர்களே, இந்த மாதிரியாகவே ஆரியர் வேறு, தமிழர் வேறு என்பதற்கும், இந்தியா வென்பதற்கும் தமிழ் நாட்டிற்கும் சம்பந்தமில்லை என்பதற்கும், ஆரியர் சமயத்திற்கும் மதத்திற்கும் அவர்களது கடவுள்; வேதம்,

புராணம், இதிகாசம், ஸ்மிருதி, சாஸ்திரங்களுக்கும் அவர்களது பழக்க வழக்க நாகரீகம் ஆகியவைகளுக்கும் தமிழர்களுடைய சமயம், கலை, பழக்க வழக்க நாகரீகம் முதலியவற்றிற்கும் சம்பந்தமும் ஒற்றுமையும் இல்லை என்பதற்கும் ஆரியர்கள் தமிழ்மக்களாகிய திராவிடமக்களை இழித்து தாழ்த்தி அடக்கி ஆதிக்கம் செய்து வந்தார்கள், வருகிறார்கள் என்பதற்கும், தமிழர் பழக்க வழக்கங்கள் வீரமெல்லாம் ஆரியரால் அழிக்கப்பட்டு விட்டன என்பதற்கும் இனியும் இவைபோன்ற ஆயிரக்கணக்கான ஆதாரங்களையும் ஆராய்ச்சியாளர் கருத்துக்களையும் சரித்திர சான்றுகளையும் ஏராளமாக எடுத்துக் காட்டக்கூடும். இவைகளை பொய் என்றோ, மாறுபடுத்தியோ திருத்தியோ கூறப்பட்டவை என்றும் சொல்லுவதற்கோ மெய்ப்பிப்பதற்கோ நாளிதுவரை எந்த ஆராய்ச்சியாளரும் எந்தப் பார்ப்பனரும் முன் வந்தவர்கள் அல்ல என்பதோடு நாம் மேலே எடுத்துக்காட்டிய அனேக விஷயங்களை ஆதரிக்க, மெய்ப்பிக்க இன்றும் ஆரிய பார்ப்பனர்களாலேயே எழுதப்பட்டு பள்ளி மாணவர்களுக்கு பாடமாக வைக்கப்பட்ட சரித்திர புத்தகங்கள் ஏராளமாய் இருக்கின்றன வென்றும் அவைகள் இன்றும் முதல் பாரம் முதல் காலேஜ் வகுப்புகள் ஈறாக பாடமாக வைக்கப்பட்டு பிள்ளைகள் படிப்பிக்கப்படுகிறார்கள் என்றும் துணிவோடு கூறுவேன். ஆனால் இவைகளை நான் கூறும்போது மாத்திரம்தான் நம் எதிரிகளுக்கு வகுப்பு துவேஷமாயும், ஜாதி துவேஷமாயும் காணப்படுவதுடன் நம் தமிழர்களுக்கும்கூட ஏதோ வெறும் குற்றம் குறை கூறுபவனாகவும் காணப்படுகிறேன். அவர்கள் நடுநிலைமையில் இருந்து ஆராய்ந்து பார்ப்பார்களேயானால் தங்கள் தவறுதல்களை உணர்வார்கள் என்ற நிச்சயம் எனக்கு உண்டு."

நான் ஏன் இவைகளை எடுத்துக் காட்டுகிறேன் என்பதை எனது தமிழ் மக்கள் யோசித்துப் பார்க்கவேண்டும்.

நான் கூறுவதெல்லாம் இந்தியா, இந்துமதம், இந்தியர்கள் என்பது நம் நாடும் நம் சமயமும் நம் சமூகமும் அல்லவென்பதற்கும், ஆரியர் வேறு தமிழர் வேறு இவ்விருவர்களுடைய நலனும் லக்ஷ்யமும் வேறு வேறு என்பதற்கும் ஆகவே இவற்றை இவ்வளவு வலியுறுத்திக் கூறுகிறேன். இவற்றை இன்று மாத்திரம் நான் கூறவரவில்லை. 1926-ம் வருஷம் முதல் "குடி அரசில்" வால்யூம் வால்யூமாக எழுதி வந்திருக்கிறேன். மேடைகளிலும் கூறி வந்திருக்கிறேன்.

இந்த விஷயங்கள் தெளிவுபட்டு ஒரு நிலை ஏற்பட்டாலொழிய தமிழனுக்கு விடுதலை இல்லை, உரிமை இல்லை, மானம் இல்லை என்பதை உண்மையாக உணர்த்துகிறேன். ஆதலாலேயே இவற்றை கூர்ந்து கவனிக்கும்படி உங்களை வேண்டுகிறேன்.

---

# "தமிழ்நாடு தமிழருக்கே"

## (திராவிடநாடு திராவிடருக்கே)

### I

தமிழ் நாடு தமிழருக்கே என்று இப்போது நடைபெற்று வரும் பிரசாரத்தைப்பற்றி தமிழ் நாட்டில் எங்கும் பேசப்பட்டு வருகிறது. நம் எதிரிகளும், தங்கள் சுய நலத்திற்கு ஆகவே நம் கூட்டத்தில் இருக்கும் சில வேஷ தாரிகளும் இதை திரித்துக் கூறுவதும், இதைப்பற்றி விஷமப் பிரசாரம் செய்வதும், இதற்கு எதிரான ஒரு கிளர்ச்சியை உண்டாக்க சூழ்ச்சி செய்வதுமான காரியங்களைப் பற்றி நாம் கேள்விப்படுவதோடு சில விஷயங்களை நேரிலும் பார்க்கிறோம்.

இது விஷயமாய் பெரியார் தூத்துக்குடியில் பேசிய பேச்சை வைத்து மெயில் பத்திரிக்கை எழுதிய ஒரு கண்டனத்திற்கு பெரியார் சென்னை மெமோரியல் ஆலில் சொன்ன சமாதானம் சமீபத்தில் நம் பத்திரிகையில் வரக் கூடும். ஆனாலும் மெயில் பத்திரிகைக்கு பெரியார் எழுதி அனுப்பிய விளக்கம் 20-ந்தேதி மெயிலில் பிரசுரிக் கப்பட்டிருப்பதுடன் அதன் தமிழ்க் கருத்து பின்னால் அநுபந்தமாய் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

என்றாலும், இனி அப்பிரசாரம் தீவிரமாக செய் யப்பட வேண்டியிருக்கிறபடியால், அதைப் பற்றிய விளக் கத்தை தொடர்ந்து தலையங்கமாக எழுதுகிறோம்.

### குறிச்சொல் தோற்றம்.

தமிழ்நாடு தமிழருக்கே என்ற அபிப்பிராயம் சென்ற வருஷம் டிசம்பரில் சென்னையில் நடந்த தென்னிந்திய

நல உரிமைச் சங்க (ஜஸ்டிஸ் கட்சி) மாநாட்டிலே வாசிக்கப்பட்ட பெரியார் தலைமை பிரசங்கத்திலேயே குறிப்பு காட்டப்பட்டிருக்கிறது. மற்றும் அதற்கு முதல் நாள் வேலூரில் நடந்த தமிழர் மாநாட்டில் தலைமை வகித்த தோழர் சர். ஏ. டி. பன்னீர்செல்வம் அவர்களும் தமது தலைமைப் பேருரையில் விளக்கி இருக்கிறார்கள்.

மற்றும் அதுபற்றியே பெரிதும் தமிழ்நாடு தமிழருக்கே என்னும் சொல்இன்று தமிழ் நாடெங்கும் தமிழ் மக்களது லட்சியக் குறிச்சொல்லாக தமிழ் மக்களால் ஒலிக்கப்படுகிறது. அன்றியும் தமிழ்நாடு தமிழருக்கு என்பதில் யாருக்காவது அதிருப்தியோ, அபிப்பிராய பேதமோ இருப்பதாக இதுவரையும் நமக்கு எவ்விதத் தகவலோ, மறுப்போ வந்ததும் கிடையாது.

## விஷமிகள் கூச்சல்

பார்ப்பனப் பத்திரிகைகள் சிலவற்றிலும், அவர்கள் கூலிகளது வாய்கள் சிலவற்றிலும் ஏதோ பொருத்தமற்ற கூப்பாடுகள் இரண்டொன்றைக் காணவும், கேட்கவும் நேர்ந்தது என்றாலும் அதுவும் எங்கும் மறுமுறை கிளம்பினதாகத் தெரியவில்லை.

ஒரு பார்ப்பனப் பத்திரிகை மாத்திரம் 'தமிழ் நாடு தமிழருக்கே' என்றால் 'எலி வளை எலிகளுக்கே' என்று எழுதிற்று. மற்றொரு பார்ப்பனக் கூலியின்வாய் 'தமிழ் நாடு தமிழருக்கே என்றால், கர்நாடகனுக்குத் தமிழ் நாட்டில் என்ன வேலை என்று கூவிற்று. உள்ளே இருந்தே உலை வைக்கக் கருதி இருக்கும் ஒரு தோழர் "தமிழ்நாடு தமிழருக்கே என்றால் ஆந்திர மலையாளி கதி என்ன ஆவது" என்று விஷமப் பிரசாரம் செய்தார். இவை தவிர வேறு விதமான எதிர்ப்புகளோ, அதிருப்திகளோ வந்ததாக நமக்குத் தெரியவில்லை. எப்படி இருந்தாலும் சரி,

அந்த லட்சியமே இன்று தமிழ் மக்களின் குறிக்கோளாய் இருப்பதால் அதை விளக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

## நாஸ்திகமல்ல

தமிழ்நாடு தமிழருக்கே என்பதில் நாஸ்திகமோ, மதமொழிப்போ, வகுப்பு துவேஷமோ தொக்கி இருக்கிறது என்று யாராவது சொல்ல வருவார்களேயானால் அவர்கள் ஒன்றா விஷயம் அறியாதவர்கள், அல்லது வேண்டுமென்றே விஷமப்பிரசாரம் செய்யும் அயோக்கியர்களே யாவார்கள். ஏன் என்றால் தமிழ்நாடு தமிழருக்கே என்று சொல்லும் தோழர்கள் சர் பன்னீர் செல்வம் குமார ராஜா அவர்கள் முதலாகிய தலைவர்கள் நாஸ்திகர்களோ மதமொழிக்கும் உணர்ச்சி உடையவர்களோ அல்ல. மேலே குறிப்பிட்ட ஜஸ்டிஸ் மாநாட்டில் வாசிக்கப்பட்ட பெரியாருடைய தமிழ் தலைமை பிரசங்கத்தில் 12-வது பக்கத்தில் 2-வது பாராவில் 15-வது வரியில் இருந்து,

"வங்காளிகளிடமிருந்தும், குஜராத்திகளிடமிருந்தும், காஷ்மீர்களிடமிருந்தும், சிந்தியர்களிடமிருந்தும் தமிழ்நாட்டினர், ஆந்திர நாட்டினர், மலையாள கன்னட நாட்டினர் பிரிந்துபோக வேண்டுமென்று எண்ணுவது தேசீயத்திற்கு விரோதமாகுமா? அதேபோல் ஆரியர்கள் இடமிருந்து திராவிடர்கள் பிரிந்துபோக நினைப்பது தேசீயத்திற்கு விரோதமாகுமா? 'வெள்ளையர் ஆட்சியின் கீழ் இல்லாவிட்டால் நம்மைக் காத்துக்கொள்ள முடியாது" என்றால் சிலோன்' பர்மா இவைகளைப் போலவோ ஆஸ்ட்டிரேலியா, கனடா இவைகளைப் போலவோ தமிழ் நாடோ—திராவிட நாடோ பிரிந்திருக்கலாமல்லவா." என்று இருக்கிறது.

இந்தப் பிரசங்கம் படித்தபிறகே பெரியார் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார். அவரது தலை

மையை ஒப்புக்கொண்டு ஆரவாரம் செய்து பதினாயிரக் கணக்கான மக்கள் அதைப் பின்பற்றுவதாய் உறுதி கூறி அமர்ந்தார்கள் ஆதலால் அக்கருத்து ஜஸ்டிஸ் கட்சியினருக்கோ, தமிழர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கோ திடீரென்று புகுத்தப்பட்டதென்று சொல்ல முடியாததாதலால் அதைப்பற்றி யாரும் எவ்வித விஷமப் பிரசாரமும் செய்வதற்கு இடமில்லை என்பதற்கு ஆகவே இதை எடுத்துக் காட்டுகிறோம். மற்றும் அதே பிரசங்கத்தில் இக்கருத்துக்கு அவசியமான காரணங்களும் மிக மிக விளக்கமாக கூறப்பட்டிருப்பதால் தமிழ் மக்கள் மற்றொரு முறையும் அப்பிரசங்க முழுமையும் படித்துப் பார்க்க விரும்புகிறோம்.

## தமிழ்நாடு என்றால் திராவிடமே

தமிழ் நாடு என்று இதுகாறும் பேசியும், எழுதியும் வருவதெல்லாம் தமிழ் நாடு என்பதற்கு திராவிட நாடு என்ற பொருளோடே யல்லாமல் தமிழ் நாடு பிரிவினையையே கருத்தில் அல்ல என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஏனெனில் தமிழ்நாடு என்றால் திராவிட நாடு என்றும், திராவிட நாடு என்றால் தமிழ்நாடு என்றும் நாம் எடுத்துக் காட்டவேண்டிய அவசியம் சிறிதுமில்லாமல் எத்தனையோ ஆதாரங்கள் இருக்கின்றன. அன்றியும் "திராவிடமே தமிழ் என்று மாறிற்று" என்றும், "தமிழே திராவிடம் என்று மாறிற்று" என்றும் சரித்திராசிரியர்கள் முடிவு கண்டதாக குறிக்கப்பட்ட ஆதாரங்கள் ஏராளமாக இருக்கின்றன. பழங்காலத்து அகராதிகளும் அப்படியே சொல்லுகின்றன.

உதாரணமாக 1926-ல் டி. எ. சுவாமிநாதமய்யரால் பிரசுரிக்கப்பட்ட ஜெம் (Gem) டிக்ஷனரியில் 340-ம் பக்கம் 5-வது வரியில் (Draveda) "திராவிட" என்பதற்கு "தமிழ் நாடு" என்று தமிழில் அருத்தம் போட்டிருக்கிறது.

சேம்பர்ஸ் 20-வது நூற்றாண்டு டிக்ஷனரியில் 282-வதுபக்கம் 2-வது கலம் 5-வது வார்த்தை.

"திராவிடன் (Dravedan) என்கின்ற பதத்திற்கு ஆரியர்கள் அல்லாதாராகிய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசும் தென் இந்திய மக்கள்" என்றும் "திராவிடம் என்பதற்கு தென்னிந்தியாவிலுள்ள ஒரு பழமையான மாகாணம்" என்றும் பொருள் சொல்லப் பட்டிருக்கிறது.

1904-ல் லண்டனில் பெயர்போன ஒரு ஆசிரியரால் பிரசுரிக்கப்பட்ட டிக்ஷனரியாக, டிக்ஷனரி ஆப் இங்கிலீஸ் லாங்வேஜ் என்ற பெரிய டிக்ஷனரி அதாவது இப்போது உலகிலுள்ள எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் வழங்கும்படியான பெரிப புஸ்தகத்தின் 257-வது பக்கம் முதல்கலம் 4-வது வார்த்தையாக இருக்கும் திராவிடன் என்கின்ற வார்த்தைக்கு அர்த்தம் எழுதும்போது "திராவிடம்—ஆரியரல்லாத மக்களைக் கொண்ட ஒரு பழமையான மாகாணம் என்றும், தமிழன்—(தமிழகம்)—ஆரியருக்கு முன்பிருந்த மக்கள், ஆரிய பாஷை அல்லாததைப் பேசுபவர்கள்" என்றும் எழுதியிருப்பதோடல்லாமல் இலங்கையும் திராவிடம் என்று எழுதி இருக்கிறது.

மற்றும் அனேக அகராதிகளும், ஆராய்ச்சிநூல்களும் தமிழ்நாடு என்றாலும், தமிழர்கள் என்றாலும் முறையே திராவிடம் திராவிடர்கள் என்றுதான் கருதப் பட்டு வந்திருக்கிறதே ஒழிய வேறில்லை. இதில் தமிழ் நாடு என்பதும் தமிழர் என்பதும் காங்கரஸ்காரர்கள் பிரித்திருப்பதுபோல் ஒரு தனி இடத்தையும் ஒரு தனி பாஷையையும்தான் குறிக்கின்றது என்று யாராவது கருதுவார்களேயானால் அல்லது அந்தப்படி தான் கருத நேரிடும் என்று சொல்லப்படுமேயானாலும் தமிழ் நாடு

தமிழருக்கே என்பதற்கு பதிலாக **திராவிட நாடு திரா விடர்களுக்கே** என்று லட்சியக் குறிக்கோள் வைத்துக் கொள்வதில் ஆக்ஷேபணை இல்லை என்பதையும் தெரி வித்துக் கொள்வதோடு இனி அப்படியே வைத்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## விலகட்டும் இன்றேல் வாதம் புரியட்டும்

ஆந்திர நாட்டில் சில ஜமீன்தாரர்கள் தங்களை திரா விடர் என்று ஒப்புக்கொள்ள சம்மதிக்க வில்லை என்றும் தன்னைப் பொறுத்தவரை திராவிடனே என்றும் ஒரு ஆந்திரப் பெரியார் தெரிவித்திருக்கிறார். இதில் நமக்கு அதிசயம் தோன்ற வில்லை. ஏனெனில் இங்கு தமிழர்கள் என்று சொல்லிக் கொள்வர்களில் சிலரே சதா சர்வ காலம் தமிழன் ஆரியன் என்ற விவகாரம் பேசி தமிழ் மக்களுக்குள் விளம்பரம் பெற்றுக் கொண்டவர்களே ஆரிய புராணங்களை ஆரியக் கடவுள்களின் புராணக் கதைகளை அதிலும் இழிவும், அவமானமும் ஆன ஆபாசக் கதையைப் பற்றி ஏதாவது கூறினால், கடவுளுக் குப் பெண்டுபிள்ளை, தாசி வேசி ஏதய்யா என்று கேட் டால் கோபித்துக்கொண்டு ஆரிய கதைகளுக்கும் கூத்து களுக்கும் தத்துவார்த்தம் பேசவரும் போது இவற்றை அறியாத ஒரு மனிதன் தன்னை திராவிடன் அல்ல என்று சொல்லுவதில் அதிசய மிருக்கக் காரணம் இல்லை.

ஆகவே அப்படிப்பட்ட விவகாரக்காரர்கள் ஒன்றா விலகிக் கொள்ளட்டும்; அல்லது ஆண்மையுடன் வெளி யில் வந்து வாதப்பிரதிவாதம் செய்யட்டும். இரண்டும் கெட்ட விதமாய் தங்கள் பிழைப்பும் வாழ்வும் இதில் சிக் கிக்கொண்டு விட்டதே என்பதற்கு ஆக விஷமப் பிரசாரம் வேண்டாம் என்று தான் பணிவோடு வேண்டிக் கொள்ளு கிறோம்.

நிற்க, இந்த தேவைக்கு இப்போது என்ன அவசியம் என்று சிலர் கேட்கலாம். அதை விளக்க வேண்டியது மிகவும் அவசரமான காரியம் என்பதை நாம் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

## அடிமை வாழ்வு அகல!

இந்தத் தேவையை நாம் வெறும் அரசியல் ஆதிக் கத்தை குறிவைத்தே குறிப்பிடவில்லை. திராவிட மக் களின் அரசியல், சமுதாய இயல், பொருளாதார இயல், விஞ்ஞான இயல், தற்காப்பு இயல், பொது முன்னேற்ற இயல் ஆகியவைகளைக் கருதியே குறிப்பிடுகிறோம். ஏனெனில் உலகத்திலேயே தொன்றுதொட்டு சிறப்பாக இருந்துவந்த திராவிடநாடு இன்று அடியோடுமறைந்து போய் அது ஆரியத்திற்கு அடியோடு அடிமைப்பட்டு ஆரியநாடாகவே ஆகிவிட்ட நாடுகளுக்கு ஆக்கமளித்தும் ஒரு அடிமை நாடாக ஆரியர் ஆதிக்கத்தில் இருந்து கொண்டு திராவிடமக்கள் என்றால் உலகினோர் காட்டு மிராண்டிகள் என்று மதிக்கும்படியாகவும் இருந்து திரா விடர்கள் அரசியல், பொருளாதாரம் சமுதாயம், சமயம் முதலிய துறைகளில் அடிமைகளாய் அதாவது ஆரியர்கள் நன்மைக்கும், மேன்மைக்கும் மாத்திரமே வாழுகிறவர் களாய் இருப்பதாலேயே அதை மாற்றவேண்டும் என் பதற்காகவே இப்போது இது மிகவும் அவசரமான காரி யம் என்று சொல்லுகிறோம்.

## இன்றைய நிலை

இன்று திராவிடத்தில் உள்ள திராவிடர் சற்றேறக் குறைய 5 கோடி மக்களாவார்கள். ஆனால் அவர்களது நிலை என்ன? தமிழன், தெலுங்கன், கன்னடியன், மலை யாளி, தொளுவன், இலங்கையன், கிறித்துவன், துருக் கன், ஆதிதிராவிட, ஆதிஆந்திர, ஆதிகர்னாடக, அதிக்

இதரஜாதி என்பனவாகிய பல ஜாதி வகுப்பு சமயங்களாகப் பிரிந்து ஆரியனுக்குப் பயந்து பாதுகாப்பும் கேட்கப்படவேண்டிய நிலையில் இருக்கிறோம். அரசியல், சமய இயல், சமுதாய இயல் முதலியவற்றில் திராவிடர்கள் ஆரியர்களையே எஜமானர்களாக தலைவர்களாக, குருக்களாக, மேல்வகுப்பாராகக் கொண்டிருக்கிறோம்.

எவ்வளவுதான் ஆராய்ச்சி அறிவு மான உணர்ச்சி இருக்கிறது என்று சொல்லிக்கொண்டாலும், ஆரியன் கடவுளையே ஆரியன் சமயத்தையே ஆரியன் ஆதிக்க புராணங்களையே பிரதானமாய்க்கொண்டு அவற்றின் பயனாய் அவன் அனுபவித்து மீந்த எச்சிலையைக் கொண்டு பயனடைய ஆசைப்படுகிறோம்.

## ஆரிய சமயத்தால் இலாபம் யாருக்கு?

ஆரியர் சமயம், ஆரியர் கடவுள் என்று ஏன் சொல்லவேண்டுமென்று சிலர் கருதலாம். ஆனால் அக் கடவுள்களால் யார் பிழைக்கிறார்கள்? யார் மேன்மையடைகிறார்கள்? யார் மேன்மையை விளக்க அக்கடவுள்கள் உருவம் பெற்று இருக்கிறது? அக்கடவுள்கள் சம்பந்தமான கதைகளில் யாருடைய ஆதிக்கமும், பெருமையும் பிரசாரம் செய்து நிலை நிறுத்தப்படுகிறது? என்பனவாகியவைகளை கவனித்தால் நாம் ஏன் அவற்றை பிரித்து காட்டுகிறோம் என்பதோடு, அவைகளை பகிஷ்கரிக்கச் சொல்லுவதன் உட்கருத்தும் விளங்காமல் போகாது.

ஒருவன் "நான் மனுதர்ம சாஸ்திரத்தில் பண்டிதனாகி மனுதர்ம சாஸ்திரத்திற்கு விரிவுரை வியாக்கியானம் எழுதி பதினாயிரம் புத்தகம் அச்சுப் போட்டுவிட்டேன்; இப்பொழுது மனுதர்ம சாஸ்திரத்தையும் அதில் கற்பிக்கப்பட்டிருக்கும் கடவுள்களையும் குற்றம் சொல்லுகிறார்களே என் கதி என்னாவது? நான் இதை

எதிர்த்து ஒருகை பார்க்காமல் இருக்கமாட்டேன்" என்று ஒரு கூட்டத்தை சேர்த்துக்கொண்டு நம்மோடு வாதாடினால் நாம் இந்த சாஸ்திரப் பிரசார வயிறு வளர்ப்புக் கூட்டத்திற்குப்பயந்து கொள்வதா என்று சிந்தித்துப் பார்ப்போமானால் அப்படிப் பட்டவர்களின் எதிர்ப்பை நாம் எவ்வளவு மதிக்கவேண்டும் என்பது நன்றாய் விளங்கி விடும்.

## ஆரியரே தலைவராயினர்

மனுதர்ம சாஸ்திரத்திற்கும் ராமாயாணம் முதலிய ஆரிய புராண இதிகாசங்களுக்கும் இன்று எவ்விதத்தில் பேதம் கற்பிக்க முடியும்?

இதைப்பற்றிய விவகாரத்தை மற்றொரு சமயம் வைத்துக் கொள்வோம்.

ஆனால் நாம் இந்தியா பூராவும் ஒரு நாடு என்றும், நம்மை இந்தியன் என்றும் அதனால் இந்து சமயத்தவன் என்றும் சொல்லிக்கொண்டு பெரும் பரப்பில் இதுவரை இருந்து அரசியல் கிளர்ச்சியும் சமயக் கிளர்ச்சியும் செய்து வந்ததில் என்ன பலனடைந்திருக்கிறோம்?

இன்று நம்முடைய எல்லா இந்திய அரசியல் தலைவர்கள் காந்தியாரும்—ஜவஹர்லால் பண்டிதரும்—நம் மாகாணத்திற்கு தோழர்கள் ராஜகோபாலாச்சாரியாரும் சத்தியமூர்த்தி சாஸ்திரியாருமாய் இருக்கிறார்கள்—ஆச்சாரியார் சாஸ்திரியார்கள் அரசியல் தலைமைவகித்து இந்த 30-ஸ்ரீ காலத்தில் நமக்கு செய்த காரியங்கள் என்ன என்பதை அனுபவத்தில் பார்த்ததோடு அனுபவித்தும் வந்திருக்கிறோம்.

ஆச்சாரியார் நமக்கு இம்மாதிரி சுய நிர்ணய முயற்சி என்றென்றும் வரமுடியாமல் இருக்கும்படி செய்ய நமது

கலைகளையும், பாஷைகளையும் அடியோடு ஒழிப்பதற்கு ஆரிய பாஷையை திராவிட மக்களுக்குள் குழந்தைப் பருவத்தில் கட்டாயமாகப் புகுத்தினார். எதிர்த்தவர்களை ஆண், பெண் அடங்கலும் தமிழர்களின் ஸ்தாபனங்களின் தலைவர்கள் உள்பட அடக்குமுறை சட்டத்தினால் பல வருஷக்கணக்காய் தண்டித்து பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் அபராதம் போட்டு சொத்துக்களைப் பறிமுதல்செய்தார்.

## திருப்பதியில் ஆரியப்பள்ளி.

ஆரிய புராணக் கதைகளை ஆதாரமாய்க்கொண்ட கல்விகளை கற்பிக்க திருப்பதியில் பனிரண்டு லக்ஷரூபாய் செலவில் கல்லூரி வைத்து ஆரியர்களையே உபாத்தியாயர்களாய் போட்டு திராவிடம் ஆரியன் என்கின்ற உணர்ச்சியே அற்று ஆரியமயமாக வேலை செய்துவிட்டார்.

பள்ளிகூட புத்தகங்களில் ஆரியர்—திராவிடர் என்கின்ற வார்த்தைகளே வரக்கூடாதென்று தடுத்து புதிய முறையில் புத்தகங்கள் எழுதச் செய்தார். அதுபோலவே இப்போது புதிய இந்துதேச சரித்திரங்கள் எழுதப்பட்டு அதில் ஆரியன் எப்போது இந்தியாவுக்கு வந்தான் என்கின்ற விஷயங்களையே மறைத்து அலக்சாந்தர் வந்த காலத்திலிருந்தே சரித்திரங்கள், பாடங்கள் துவக்கி எழுதப்படுகின்றன.

தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் சமஸ்கிருதத்தைக் கட்டாய பாடமாக்க திட்டங்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்.

படிப்பை வருணாச்சிரம முறையாக்கி 4-ம் வகுப்பாருக்கு கைத்தொழிலில் மாத்திரம் ஜீவனமும், அறிவும் இருக்கவேண்டுமே ஒழிய மற்றவை தேவையில்லை

என்று வார்தா திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறையில் வந்துகொண்டிருக்கிறது.

அரசியல் பதவியில், உத்தியோகத்தில் ஆரியரல்லாத அதாவது திராவிட மக்கள் அமர்ந்திருந்ததை ஒழிக்க சூழ்ச்சி செய்து இன்னும் ஐந்து வருஷகாலத்தில் சகல இலாக்காக்களிலும் ஆரியர்களே மாகாண ஜில்லா தலைமை உத்தியோகத்தில் இருக்கும்படியாகச் செய்யப்பட்டாய் விட்டது.

இந்திய அரசியல் தலைவர் காந்தியாரே ராமராஜ்யத்திற்காகவும் வர்ணாச்சிரமப் புனருத்தாரணத்திற்காகவும் பாடுபடுகின்றனர். அதுதான் காங்கரஸ் கேட்கும் சுயராஜ்யத்தின் தத்துவமென்று பச்சையாய்ச் சொல்லி விட்டார்.

எந்தக் காரணத்தைக்கொண்டும் சுயபுத்தியோ சுயமரியாதையோ உள்ள திராவிட மகன் எந்தத் துறையிலும் தலைவராக இருக்க யோக்கியதை இல்லாமல் செய்யப்பட்டாய் விட்டது. ஆரியர்களைக் கண்டால் திராவிட மக்கள் நடுங்கி சரணடையும்படியான கொடுங்கோன்மை முறையே நல்லாட்சி என்பதாகக் கூறப்பட்டு வருகிறது.

## ஆச்சாரி கேட்டவரம்.

காங்கரசின் சார்பாக பலதலைவர்களை வைசிராய் கூப்பிட்டார். ஒரு திராவிடனையாவது கூப்பிட்டுப் பேசினாரா? கூப்பிடத் தகுந்த தகுதி உண்டாக்கப்பட்டதா என்று பார்த்தால் அரசியலில் யார் ஆதிக்கம் செலுத்துகின்றார்கள் என்பது விளங்கும். ஆனால் வைசிராய்க்கு காங்கரஸ் உதவி செய்வதாக வாக்குறுதி கொடுத்து மறுபடியும் பதவி ஏற்று, சண்டைக்கு காங்காஸ் உதவி செய்வதானால் பணம் கொடுப்பவர்கள் யார்? ஏராளமாக

சண்டைக்குப் பதிவுசெய்துகொண்டுபோய் உயிர்கொடுப்பவர்கள்யார் என்று பார்த்தால் அத்தனைபேரும் திராவிட மக்களாகவே இருப்பார்கள் என்பது விளங்கும்.

தோழர் ஆச்சாரியார் சண்டைக்கு உதவி செய்ய வைசிராயை ஒரு நிபந்தனை கேட்டார். அதாவது வாலியைக்கொன்று சுக்ரீவனுக்கு பட்டம் கட்டினால் பிறகு சுக்ரீவன் உதவி செய்வான் என்று கூறினார். இதில் வாலி என்று தோழர் ஆச்சாரியார் குறிப்பிட்டிருப்பது திராவிடர்களை. அதாவது ஜஸ்டிஸ் கக்ஷியாரையும் அதோடுகூட அநாரியர்களான 'மிலேச்சர்' என்று அவர்களால் சொல்லப்படும் முஸ்லீம்களையும் கொன்று சுக்ரீவர்களான அதாவது சகோதரத் துரோகிகளான எப்படியெனில் தங்களது நாட்டிலேயே தங்களுக்கு முன்பே ஆட்சியில் இருந்துவந்தவர்களான சகோதரர்களைக் கொல்வதற்காக எதிரிகளுடன் சேர நிபந்தனை கேட்கும் துரோகியான காங்கரசுக்கு பட்டம் கட்டவேண்டும் என்று நிபந்தனை கேட்கிறார். இதிலிருந்தே ஆரியருடன் கூடவோ, அல்லது ஆரியருக்கு பூரணமாய் அடிமைப்பட்ட மாகாணத்தார்களுடன் கூடவோ திராவிடரும் சேர்ந்திருந்தால் முன்னுக்குவர முடியுமா? மானத்துடன் வாழ முடியுமா என்று சிந்தித்து பார்க்க வாசகர்களை வேண்டுகிறோம்.

## II

நேற்று இத்தலைப்பின் கீழ் எழுதிய தலையங்கத்தில் தமிழ்நாடு தமிழருக்கே என்பது திராவிடம் திராவிடருக்கே என்ற கருத்துக்கொண்டதென்றும், திராவிடம் என்றாலும் தமிழ்நாடு என்றாலும் பழய திராவிட எல்லையையும் திராவிட பாஷைகளையுமே குறிப்பது என்றும். திராவிடம் திராவிடருக்கே என்பதின் கருத்து, "இந்தியா"வின் பிணைப்பில் இருந்து திராவிடத்தைப் பிரித்து அதை ஒரு தனி நாடாக ஆக்கி, வேண்டுமானால்

திராவிட பாஷைப்படி உள்ள பாகங்களை திராவிட தேசத்திற்குள் உள் மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனிப்பிரதிநிதித்துவமோ, அல்லது சட்ட சபையோ ஏற்பாடு செய்து முக்கிய அதாவது எல்லா மாகாணங்களையும் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு பொது பாதுகாப்பு, எல்லா மாகாணத்திற்கும் சம்பந்தப்பட்ட தபால், தந்தி, ரயில், மின்சாரம், பொதுத்தேவை, தொழிற்சாலை ஆகிய விஷயங்களில் தலை அரசாங்கத்திற்குச் சம்பந்தமும் அதிகாரமும் கொடுத்துவிட்டு மற்றவைகளை அந்தந்த மாகாணமே முழுவதும் பார்த்துக்கொள்ளும்படியாகவும், கூடுமான வரை அந்தந்த மாகாண உத்தியோகம் பொருளாதாரம் முதலாகியவை பற்றிய நிர்வாக அதிகாரம் அந்தந்த மாகாணத்திற்கே அவரவர் எண்ணிக்கைப்படி அளிக்கக் கூடியதாகவும் செய்து கொள்வது என்ற கருத்திலும்.

## பிணைந்திருந்து பயன் என்ன?

இப்படிச் செய்வதானது எவ்விதத்திலும் நாஸ்திகமென்றோ, மதமொழிப்பு என்றோ சொல்வதாகாது என்றும், மற்றும் இதானது உலகிலோ 'இந்தியா'விலோ உள்ள மற்ற மக்களுடன் துவேஷம் கொண்டதாக ஆகாதென்றும், 'இந்தியா' உடன் ஒன்றாய் இருந்ததால் இது வரை எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டுவிடவில்லை என்றும், அதற்கு மாறாகப் பல கெடுதிகள் ஏற்பட்டனவென்றும் முன்னேற்றம் அடையாமல் நிலைமை தேங்கிவிட்டதோடல்லாமல் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு பின்னாலும் போயிருக்கிறோமென்றும், நாம் தனித்து நின்று நம் காரியத்தையே நாம் கவனிப்பதற்கு 'இந்தியா' என்னும் பெரும் கசாகூளத்தில் இருந்து விலகிக்கொள்ளாவிட்டால் இனியும் கேடடைவோம் என்றும், சமுதாயத்துறையில் நாம் பைத்தியக்காரர்களாக ஆகிவிட்டோம் என்றும், சமயத்

துறையில் கீழ்மக்களாகவும், நாலாம் ஜாதியாகிய பிறவி அடிமைமக்களாகவும் ஆய்விட்டதோடு, உலகத்தின் முன் காட்டுமிராண்டிகளாகக் கருதப்பட்டுவிட்டோமென்றும், மற்றும் நாம் ஆரியர்களாலும், அவர்கள் நம்மை நசுக்க உதவி அளிக்கும் வடநாட்டாராலும் முறையே நாம் எவ்வளவு காட்டிக்கொடுக்கப்பட்டும், சுரண்டப்பட்டும் தலை தூக்கமுடியாத நிலையில் ஆழ்ந்தவிட்டோம் என்றும் இத்தியாதி காரியங்களால் நாம் இனி "இந்தியா" என்ற போலிக்கூட்டு சம்பந்தமில்லாமல் விலகிக்கொண்டு திராவிட எல்லை மாத்திரம் கொண்ட திராவிடம் என்கின்ற ஒரு தேசத்தை தனி தேசமாக ஆக்கிக்கொண்டு பூரண சக்தி ஏற்படும்வரை பிரிட்டிஷ் பாதுகாப்பு உதவியில் இருந்து வந்து பிறகு உலகில் உள்ள மற்ற பூரண சுயேச்சை தனி நாடுகளில் ஒன்றாக விளங்கவேண்டும் என்பது ஆகவும் எழுதி இருந்தோம்.

மற்றும் இதைப்பற்றி மெயில் பத்திரிகைக்கு ஏற்பட்ட சந்தேகத்துக்கும் பதில் கூறி அதன் கண்டனங்களுக்கும் சமாதானம் கூறி அப்பத்திரிகைக்கு அனுப்பிய சேதியை மொழி பெயர்த்த கருத்தையும் நேற்று வேறு பக்கத்தில் பிரசுரித்துமிருந்தோம்.

என்றாலும் நேற்றைய தலையங்கத்தின் முடிவில் குறிப்பிட்டுள்ளபடி அது சம்பந்தமான மற்ற சில விபரங்களையும் விளக்க அதன் தொடர்ச்சியாக இத்தலையங்கம் எழுதுகிறோம்.

பொதுவாகவே இன்றைய உலக கொள்கையானது ஒவ்வொரு நாடும் பெரும் பரந்த ஜனத்தொகை எல்லை ஆகியவற்றின் பிடிப்பினிலிருந்து பிரிந்து சிறு சிறு அளவான சிறு நாடாக இருந்து அந்தந்த எல்லையின் சமுதாயத்தின் தேவைகளையும் முன்னேற வழிகளையும் கவனிப்பதுதான் பொதுஜன சமுதாய முதலிய முன்னேற்

றத்திற்கு அனுகூலமான வழி என்ற கொள்கை (டி சென்றலேஷன்) என்று தெரியவருகிறது.

எப்படி என்பதற்குப் பிரத்தியக்ஷ உதாரணம் கிரேட் பிரிட்டனிலிருந்து அயர்லாந்து பிரிந்து முற்போக்கடைந்து வருவதும், அது ஒரு சமயம் அதிக கஷ்டமான உதாரணமென்றால் இந்தியாவில் இருந்து பர்மா பிரிந்து முன்னேற்றமடைந்து வருவதும் போதுமானதாகும்.

தனி மனிதனுக்கோ ஒரு தனி சமுதாயத்திற்கோ முன்னேற்ற உணர்ச்சி வரவேண்டுமானால் அதை தூண்டும் அவசியம் ஒன்று இருந்தே ஆகவேண்டும். இன்றைய நிலைமையில் இந்தியா முன்னேற்றமடையவேண்டும் என்கின்ற உணர்ச்சி நமக்கு ஏற்பட வேண்டுமானால் அதைத் தூண்டும் அவசியம் நமக்கு என்ன இருக்கிறது? இதுவரை இந்தியா அடைந்த முன்னேற்றத்தில் அல்லது இதுவரை இந்தியாவுக்குக் கிடைத்த லாபகரமான சாதனத்தில் யார் என்ன பலனை அடைந்தார்கள்? குறிப்பாக நமக்கு திராவிடத்துக்கு அதனால் என்ன நன்மை ஏற்பட்டது? அல்லது எந்தவிதமான கஷ்டம் ஒழிந்தது? என்று பார்த்தால் நம் போன்றவர்கள் வெட்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறோமே அல்லாமல் திருப்தி அடையத்தக்க சமாதானமாவது உண்டா என்று கேட்கிறோம்.

## முன்னேற்றம் என்றால் என்ன ?

பொதுவாகவே முன்னேற்றம் என்றால் ஒரு நாட்டு மக்கள் சமுதாய வாழ்க்கையிலும், பொருளாதாரத்திலும் முன்னேறுவதே முக்கியமானதாகும். அதற்கேற்றபடி நாட்டின் தன்மை உயர்த்தப்படுவதேயாகும்.

மற்றும் மனிதன் மற்றவனைவிட தான் மிக மிக கிழான நிலையில் இருக்கிறோமே என்ற அதிருப்தியும்

துக்கமும் படாமையும் ஆகும். அப்படிப்பட்ட நிலைமையில் திராவிடர்களாகிய நாம் நம்மில் மிகப்பெரும்பாலோர் சமுதாய துறையிலாவது, பொருளாதாரத் துறையிலாவது, அதற்கேற்ற கல்வி அறிவிலாவது, முன்னேற்றமோ அல்லது மற்ற மக்களுக்கும் நமக்கும் அதிகமான பேதமில்லாத தன்மையோ பெற்றிருக்கிறோமா?

அப்படி இல்லையானால் கூடி இருப்பதில் என்ன பயன்? கூடி கூட்டுப் பயிர் இடுவதில்தான் என்ன பயன்? நமது பங்காளிகளுக்கு மேலாக நாம் உழைத்து பயிரிட வேண்டும். அதன் பலனை நமக்கு மேல் நமது பங்காளிகளே அனுபவித்துக்கொண்டு நாம் பட்டினியால் செத்துப்போகாமலிருக்க மாத்திரம் (ஏனெனில் செத்துப் போனால் நமது பங்காளிகளுக்கு இம்மாதிரி பாடுபட ஆள்கள் கிடைக்காமல் போய்விடுமே என்கின்ற சுயநல கவலை மீது) உயிர்க்கஞ்சி மாத்திரம்பெற அருகதை உடையவர்கள் என்றால் எப்படி அயலார்களோடு கூடி ஒத்துழைக்க முடியும். ஆதலால்தான் நாம் தனித்து நமது நிலத்தை பிரித்துக்கொண்டு நமது ஏர்களை தனியாய் ஓட்டி ஆழ உழுது பயிரிட்டுக் கொள்ளுகிறோம் என்று சொல்லுகிறோம். இதனால் யாருக்கும் எவ்வித நியாயமான கெடுதியும் ஏற்பட்டுவிடாது.

## கைத்தொழில்.

திராவிடநாடு பழங்கால சரித்திரத்தில் கைத்தொழிலில் மிக மேன்மையுற்றிருந்ததாக சரித்திரங்களால் தெரிகிறது. உதாரணமாக யுத்த விஷயங்களில் இந்தியா பூராவுக்கும் இன்று உள்ள தகுதி உதைப் பவனைக் கண்டால் அஹிம்சை பேசி உதை வாங்கிக் கொள்வதும், இளைபாளியைக் கண்டால் "நாடு அஹிம்சைக்கு லாயக்கில்லை கையில் கிடைத்ததை எடுத்து அடித்து ஒழிக்க வேண்டியது" என்று சொல்லுவதுமான அளவில்தான் இந்த 20-வது நூற்றாண்டு இந்தியா இருக்கிறது.

ஆனால் 3000, 4000 வருடத்துக்கு முந்தின தமிழ் நாட்டுச் சரித்திர இலக்கியத்தில் யுத்த விஷயத்தில் மனிதன் உதவி இல்லாமல் மதிற்சுவர்களே போரிட்டிருக்கின்றன. அதாவது மதில்மேல் இயந்திரப் பொறிமனிதன் நின்றுகொண்டு ஈயக்குண்டுகளை வார்த்து வீசி எதிரிகள் மீது எறிவதும், இயந்திரங்கள் சரமாரிபாய் கவண் கல்லுகளை வீசுவதும், இயந்திரப் பொறியில் மனிதன் பறப்பதும், மயில் போன்ற ஒரு பொறியில் மனிதன் புகுந்துகொண்டு ஆகாய மார்க்கமாகப் பறந்து போவதுமான பல அரிய கைத்தொழில்கள் இருந்திருக்கின்றன. இவை சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை முதலாகிய பழங்கால திராவிட சரித்திர இலக்கிய இலக்கணங்களில் காணலாம்.

இவற்றை நாம் பாட்டி கதையாகக் கூறுவதாக யாரும் கருதிவிடக் கூடாது. ஏனெனில் பாட்டி கதை என்பது ராமாயணம், பாரதம், பெரிய புராணம், சின்னப் புராணம், மச்சப் புராணம், தவளைப் புராணம் ஆகியவற்றில் வரும் தெய்வீக புஷ்ப விமானங்கள் அதாவது மனிதனுடைய அறிவு முயற்சி இல்லாமல் நினைத்த மாத்திரத்தில் நினைத்தபடி தானாகவே ஆகக்கூடியதும் தெய்வலோகத்தில் இருந்து நரகலோகத்துக்கு வரக்கூடியதும் ஆகாயத்தில் மறைந்திருந்து சண்டை போடுவதும் போன்ற மனோ கற்பனை சாதனங்கள் போன்ற கட்டுக் கதை அல்ல—அறிவுக்கும், விஞ்ஞானத்திற்கும் ஏற்ற முறையில் ஒரு மனிதன் செய்தது இருந்ததாகவே சொல்லப்படுகிறது. இன்றும் பொறிகளால் அன்றி மக்கள் கையினால் செய்திருக்க முடியாது என்று சொல்லத் தகுந்த அனேக காட்சிகள் திராவிடத்தில் பிரத்தியட்சத்தில் பார்க்கலாம். இம்மாதிரியான காரியங்கள் இன்று வடநாட்டில் இவ்வளவு இருக்கிறதென்று சொல்ல முடியாது.

## மேனாடும் ஆரியமும்

இப்படிப்பட்ட பழைய சரித்திர உண்மைகள் நம் பப்படா விட்டாலுசரி, தள்ளி வைக்கப் பட்டாலும்சரி, அதைப் பிடித்துக்கொண்டு நம் பெருமையைப் பேச நாம் வரவில்லை. ஆனால் இன்றைய அற்புத பொறிகளும் அதாவது இயந்திரங்களும் புதிய புதிய அதிசயமான கண்டுபிடிப்புகளும் இந்திய மக்கள் நித்திய வாழ்க்கையில் அனுபவித்து இன்புறும் நூற்பு நெசவு முதலிய ஆலைகளும் தந்தி, கம்பியில்லா தந்தி, ஆகாய விமானம், நீராவி வண்டி, எண்ணெய் வண்டி, மிதி வண்டி, கிராமபோன், நடிக்கும்-பேசும் சினிமா, புகைப்படம், எக்ஸ்ரே, ரேடியோ, ரேடியோ மூலம் படம் முதலான பல அற்புதங்கள் மேல் நாட்டாரால், அதுவும் சிறு சிறு நாட்டினரால் கண்டுபிடிக்கப்பட்டு உலகத்திற்கு பயன்பட்டு மக்கள் இன்புறுவதைப் பார்க்கின்றோம்.

'இந்தியா ஒன்றாயிருந்து அந்தராத்மாவுடன் பேச்சு வார்த்தை நடத்தும் மகாத்மாவைத் தலைவராக, வழிகாட்டியாக, ஞானாசிரியராக கொண்ட இந்திய மக்கள் கண்டுபிடித்ததென்ன என்றால் கைராட்டினம், தக்ளி, கட்டைவண்டி, 51 ஜதை மாடுகளைப்பூட்டி இழுக்கும் விசை வேகம், கருப்பட்டி, கைக்குத்து அரிசி, கோணி வேஷ்டி, அதுவும் முழங்காலுக்குமேல் கட்டிக்கொண்டு காட்டு மிராண்டிகளை நினைவூட்டுதல், உலக நிலை கவனிக்காமல் உச்சிக் குடுமியைக் காட்டிக்கொண்டு மழுங்கச் சிரைத்த தலையுடன் ஆபாசமாய் திரிதல் இவைதான் இந்தியா இன்றைய சகாப்த அற்புதங்களாய் கண்டுபிடிக்கப்பட்டு விளங்குகின்றன.

### வடநாட்டாரின் கூலிகள்

அன்றியும் விஞ்ஞானம், புதிய கண்டுபிடிப்பு, யந்திர காரியங்கள் முதலாகியவை இன்றைய இந்தியாவுக்கு

கசப்பாய் இருப்பானேன்? உலகில் இந்தியாவைத் தவிர வேறு எந்த பாகத்திலாவது அபிசீனியாவிலோ, அல்லது இன்னும் பழைய ஆதி மக்கள் போன்றவர்கள் வாழுமிடங்களிலோ இயந்திரம் கூடாதென்று சொல்லுவோருண்டா? ஆனால் இயந்திரம் பிசாசு என்று சொல்லி திராவிட நாட்டில் மாத்திரம் இயந்திரம் தலை எடுக்காமல் செய்துவிட்டு இந்தியாவிற்குள்ளாகவே தன் சுயசாதி உள்ள மற்ற நாடுகளில் இயந்திரங்கள் வைத்து திராவிட நாடு பூராவுக்கும் பயன் படும்படியாக துணிகள், சாமான்கள் அனுப்பி மற்ற மாகாணக்காரர்களை கொழுக்க வைத்து அவர்களிடம் லக்ஷம் பத்து லக்ஷம் பணம் பெற்று திராவிட நாட்டு விபீஷணர்களுக்கும், அனுமார், சுக்ரீவன் அங்கதன்களுக்கும் கூலிகொடுத்து வாலி, ராவணன் போன்ற அவர்களது பெரியார்களையும் வீரர்களையும் சூழ்ச்சியில் கொல்லச் செய்வதும், திராவிட நாட்டில் உள்ள சில இழி மக்களை தேர்தலுக்கு நிறுத்தி மற்ற மாகாணத்தாரிடம் திராவிடத்தைக் காட்டிக் கொடுத்து பெற்றுவந்த பணங்களை செலவுசெய்து வெற்றி தேடிக் கொடுத்து திராவிட மக்கள் ஸ்தாபனங்களை மைனாரிட்டியாகக் காட்டி தங்கள் சிறு ஸ்தாபனத்தை "மெஜாரிட்டி"யாக செய்துகொண்டு திராவிட பாஷை, கலை, நாகரீகம், சரித்திர உண்மைகள், சுதந்திர உணர்ச்சி, முதலியவைகள் மறையச் செய்வதுமான காரியம் செய்வதானது திராவிடம் தனித்து இருந்திருக்குமானால் முடிந்திருக்குமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்கிறோம்.

திராவிடம் தனித்திருக்குமானால் திருநெல்வேலி ஜில்லாவிற்கு தோழர்கள் ஒரு சொக்கலிங்கமும், ஒரு எக்னேஸ்வரசர்மாவும் ஒரு லட்சமி அம்மாளும் (இவர்களது தகுதியும் ,யோக்கியதையும் பொதுமக்கள் அறிந்ததே) ஆகியவர்கள் திராவிடர்களுக்குப் பிரதிநிதியாகவும் மேடை குடும்பமும், சீனா-வானா குடும்பமும், இலஞ்சி குடும்பமும், சாவடி குடும்பமும் இன்று மூலையில் உட்

சார்ந்து கொண்டிருக்கவும் நாலாந்தர ஆள்களுக்குப் பின்னால் கொடி பிடித்துக்கொண்டு திரியவும் நேரிட்டு இருக்குமா? அதுபோல மற்ற ஜில்லாக்களையும் பார்ப்பதற்கு ஆக கோவை ஜில்லாவைக் குறிப்பிடுகிறோம்.

கோவை ஜில்லாவில் அந்த ஜில்லா பெருமக்களின் சமுதாயத் தலைவர்களான இரண்டு பட்டக்காரர்களும் தமிழ்நாடு பிரதிநிதித்துவ சாதியில் இருந்து தள்ளப்பட்டு பொது வாழ்விற்கு லாயக்கில்லை என்று தண்டிக்கப்பட்டு விட்டார்கள். கோவை ஜில்லா பிரமுகர்களான தோழர் ரத்தினசபாபதி முதலியார் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்பட்டு விட்டார். மற்றொரு பிரமுகரான ராமலிங்கம் செட்டியார் மாங்கல்யம் கழட்டப்பட்டு விட்டார். இவர்கள் பொது வாழ்வில் சகுனத்தடையாக மதிக்கும்படி செய்யப்பட்டுவிட்டார்கள். ராஜாக்கள் ஜமீன்தாரர்கள் புறமுதுகிடும்படி செய்யப்பட்டு விட்டார்கள். இவர்களில் யாராவது தோழர் ஆச்சாரியார், சத்தியமூர்த்தியார், குப்புசாமி, அண்ணாமலை,உபயதுல்லா சாயபு, சுப்பையா, சுப்ரமணியர்கள் ஆகியவர்களுடைய தகுதியிலோ, ஒழுக்கத்திலோ, நாணயத்திலோ, தேசாபிமானத்திலோ, குறைந்தவர்கள் என்று சொல்ல முடியுமா? மற்றென்ன காரணம் என்றால் திராவிடம் திராவிடருக்கல்லாமல் ஆரியர்களுக்கும், ஆரிய பனியாக்களுக்கும், ஆரிய புரோகிதர்களுக்கும் ஆக இருப்பதனால் அல்லாமல் வேறு என்ன என்று சொல்ல முடியும்? திராவிட கிறிஸ்தவர்கள், திராவிட முஸ்லிம்கள் என்று சொல்லப்படுபவர்களுடைய யோக்கியதைதான் எப்படி இருக்கிறது.

தமிழ் நாட்டுக்கு முஸ்லிம் பிரதிநிதி தோழர் உபயதுல்லா சாயபு—மற்றொருவர் தோழர் யாகூப் உசேன். இவர் திராவிட நாட்டவர் அல்ல என்பதுயாவரும் அறிந்ததே. கிறிஸ்தவர்களில் யாரோ ஒரு தோழர் வர்க்கியாம். தமிழ் நாட்டில், அல்லது திராவிட நாட்டில் முஸ்லிம்

களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இவர்கள் பிரதிநிதியாய் இருக்க நேர்ந்ததற்குக் காரணம் திராவிடம் திராவிடருக்கு அல்லாமல், ஆரியருக்கும், பனியாக்களுக்கும், மார்வாடிகளுக்கும், புரோகிதர்களுக்கும் ஆதரவுக்காக இருந்தது என்பதல்லாமல் வேறு என்ன என்று யோசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம்.

திராவிடர்கள் எத்தனையோ மேன்மையும், நாகரீகமும், தன்மானமும், வீரமும் பொருந்திய மக்களாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கும் ஆரியர் மிலேச்சர்களாக, காட்டுமிராண்டிகளாக இருந்திருக்கிறார்கள் என்பதற்கும் அவரவர்கள் கலை, சமய நூல்கள் முதலியவைகளே போதுமான சாக்ஷியம் என்றாலும் உலகசரித்திர ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டுபிடித்தெழுதி இருக்கிற உண்மை ஆராய்ச்சி சரிதங்களில் இன்றும் நூற்றுக் கணக்காக, ஆயிரக்கணக்காகப் பார்க்கலாம் என்றாலும் மற்றும் ஆரியத் தன்மையை உணர வேண்டியவர்கள் இந்து சமய சைவ வைணவ சம்பந்தமான, அவற்றின் கடவுள்கள் சம்பந்தமான புராணங்களைப் பார்த்தால் கண்ணாடிபோல் விளங்கும்.

அவை சிறிதும் சம்பந்தம் இல்லாத திராவிடர்கள் நிலை இன்று எப்படி இருக்கிறது? திராவிட நாட்டில் உள்ள தெருப்பெருக்கி, கக்கூஸ் கழுவி, மூட்டை தூக்கி, வண்டி இழுக்கி, பங்கா இழுக்கி, எச்சிலை எடுக்கி இது போன்ற மற்றும் பல தொழில் செய்பவர்கள் 100-க்கு 100 பேரும் திராவிட ஆண் மகனும் திராவிடப் பெண்மணியுமேயாகும். ஆனால் இதே திராவிடத்தில் பிழைக்க வந்துள்ள ஆரியர்கள், குஜராத்திகள், மார்வாடிகள், பார்சிகள், பஞ்சாபியர்கள் முதலிய அந்நியர்கள் திராவிட நாட்டில் 100க்கு 100பேர் எப்படி உயர்ந்த, உன்னத, மேன்மையான நிலையில் 'பூதேவர்களாக' கோடீஸ்வரர்களாக, மகாத்மாக்களாக, ஆச்சாரிய சுவாமி

களாக உலகப் பிரசித்தியான பெரியோராக அறிவாளி யாக விஞ்ஞானியாக விளம்பரப்படுத்தப்பட்டு வாழ்கி றார்கள் என்பது யாரும் அறிந்ததே யாகும்.

இதற்குக் காரணம் திராவிடம் திராவிடருக்கில்லாமல் மேற்கண்ட கூட்டத்தாருக்காக இருப்பதினாலா அல்லது வேறு காரணத்தாலா என்று கேட்கிறோம்.

ஆகவே இவற்றிலிருந்து திராவிடம் தனித்து இருந்து தனது பண்டைய பெருமைகளில் உள்ள மேன்மைகளை யும் உலக முற்போக்கில் தகுதியானதும் முன்னேற்ற மானதுமான பெருமைகளையும், ஸ்தானத்தையும் அடைய வேண்டியது அவசியமா? அல்லது ஜட்கா வண் டிக்காரன் மூலமாகத்தான் குதிரைகள் மோட்சமடைய வேண்டுமென்பது போலும், செக்கோட்டியின் மூலமாகத் தான் மாடுகள் மோட்சமடைய வேண்டுமென்பது போல வும், ஆரியர்கள், பனியாக்கள், மார்வாடிகள் முதலியவர் கள் மூலமாகத்தான் திராவிடர்கள் மோட்சமடைய முடியுமென்று கருதிக்கொண்டு 'இந்தியா'' உடன் கலந் திருப்பதா? என்பதை யோசித்துப் பார்க்கும்படி வேண்டு கிறோம். மற்றும் திராவிடர்-அன்னியர் வாழ்க்கை முறை முதலியவைகளைப்பற்றி பின்னால் எழுதுவோம்.

## III

நேற்றும் முன்தினமும் தமிழ்நாடு தமிழருக்கே என்ற தலைப்பின் கீழ் அதன் கருத்தையும், அவசியத்தையும், முறையையும் விளக்கி எழுதியிருந்ததுடன், மறுபடியும் அதைப்பற்றி தொடர்ந்து திராவிடருக்கும் அன்னியருக் கும் உள்ள வாழ்க்கை முறைப்பேதம்பற்றி எழுதப்படும் என்று குறிப்பிட்டிருந்தோம். அதன்படி இன்று எழுதப் போகும் இந்த 3-வது தலையங்கத்தில் முதலாவதாக திரா

விடர்கள் ஆரியர்கள் என்பவர்கள் எப்படிப்பட்டவர்கள், அவர்களிருவருக்கும் எப்படி சம்பந்தமேற்பட்டது, அவர்களுடைய வாழ்க்கை முறை பேதம் எப்படிப்பட்டது என்பவைகளை எடுத்துக்காட்ட இதை எழுதுகிறோம்.

திராவிட நாட்டுக்கு ஆரியர்கள் குடியேறி திராவிடர்களை அடக்கி கீழ்மைப்படுத்தியவர்கள் என்பதைப்பற்றி நாம் விளக்கவேண்டியதில்லை. ஆரியர் திராவிட நாட்டுக்கு வருவதற்கு முன் திராவிடநாடு கலைகளிலும், நாகரீகத்திலும் தலை சிறந்து விளங்கி வந்தது என்பதுபற்றியும் நாம் விளக்கவேண்டியதில்லை என்றாலும் இவ்விரண்டுக்கும் ஆதாரமாக இரண்டொரு சரித்திராசிரியர்கள் அபிப்பிராயங்களை எடுத்துக் காட்டுவது பொருந்துமென நினைக்கிறோம்.

"மேற்கு திபேத்தையும் ஆப்கானிஸ்தானத்தையும் தாண்டி ஆரியர்கள் இந்தியாவுக்கு குடியேறியவர்களாவார்கள். அவர்களது பாஷை சமஸ்கிருதம்போன்றது. இந்தியாவுக்கு வந்ததும் தங்கள் கொள்கைகள், பழக்க வழக்கங்கள், மத நம்பிக்கைகள் முதலியவற்றை தங்கள் இஷ்டப்படி தங்கள் பாஷையிலேயே எழுதிவைத்துக் கொண்டார்கள்."

என்று சர் என்றி ஜான்ஸ்பட்டளர் என்கின்ற பிரசித்திபெற்ற ஆராய்ச்சியாளர் "இந்தியாவில் அன்னியர்கள்" என்ற புத்தகத்தில் 19-வது பக்கத்தில் ஆதாரங்களோடு எடுத்துக்காட்டி இருக்கிறார்.

"ஆரியர்கள் மதுவருந்துவதும் சூதாடுவதுமான ஒழுக்க ஈனமான காரியங்களில் பற்றுடையவர்கள்."

இது ராகேஸ் என்னும் பேராசிரியர் "வேதகால இந்தியா" என்பதில் எடுத்துக்காட்டி இருக்கிறார்.

"வட இந்தியாவில் இருந்த திராவிட கலை நாகரீகம் முதலியவைகள் யாவும் ஆரியர்களால் அடியோடு அழிக்கப் பட்டு விட்டன—ஆனால் தென்னிந்தியாவில் அவ்விதம் செய்யமுடியவில்லை."

இது "பண்டைத் தமிழரின் வரலாறு" என்கின்ற ஆராய்ச்சி புத்தகத்தில் 4-ம் பக்கத்தில் இருக்கிறது. இந்த ஆராய்ச்சிக்குறியானது நாம் முன் தலையங்கத்தில் குறிப் பிட்ட, அதாவது திராவிடம் இன்னமும் ஆரியமயமாக வில்லை எனபதற்கு ஆதரவளிப்பதாகும்.

"ஆரியரல்லாத இந்நாட்டு திராவிடப் பழங்குடி மக்கள் ஆரியர்களால் துன்புறுத்தப்பட்டு காடுகளுக்குத் துரத்தப்பட்டார்கள். இதுவும் போதாதென்று அவர் களை ராட்சதர்கள், அசுரர்கள் என்றும் நூல்கள் எழுதிக்கொண்டார்கள். இதுவும் போதாதென்று கருதி திராவிடர்களுக்கு தஸ்யூ என்றும் ஆரிய எதிரி என்றும், பெயரிட்டு அவற்றையே நாளாவட்டத்தில் பேய் என்றும், பூதம் என்றும், ராட்சசர் என்றும் பெயர்களாக மாறச் செய்துவிட்டார்கள்."

இது சர்வில்யம் வில்ஸன் ஹெணர் டாக்டர் கே. சி. எஸ். ஐ., சி. ஐ. ஈ. எல்–லய–டி எழுதின "இந்திய மக் களின் சரித்திரம்" 41-வது பக்கத்தில் இருக்கிறது.

"பிராமணர்கள் கல்வியைத் தங்களுக்கே ஆக்கிக் கொண்டு அந்த நிலைமையைத் துஷ்பிரயோகப் படுத்தித் தங்கள் இஷ்டம்போல் தங்களுக்கு அனுகூலமாக சகல விஷயங்களையும் உட்படுத்திக்கொண்டு அதற்கு ஏற்றபடி கதைகளை உற்பத்தி செய்து எழுதி வைத்துக்கொண் டார்கள். இந்தக் கற்பனைக் கதைகள் அனைத்தும் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன் திராவிடரை அழுத்தி, அடிமைப்படுத்தித் தங்களை உயர்த்திக்கொள் ளுவதற்கு ஆகவே எழுதிக்கொள்ளப் பட்டவைகளாகும்",

இது பிரபல சரித்திராசிரியரானஎன்றி பெரிட்ஜ் என்பவரால் 1865ம் வருஷத்திலேயே எழுதப்பட்ட விரிவான இந்திய சரித்திரம் முதல் பாகம் 15-ம் பக்கத்தில் இருக்கிறது.

"பாரத ராமாயணங்கள் முதலிய இதிகாசங்களில் காட்டுமிராண்டிகள், அசுரர்கள், ராட்சதர்கள், தஸ்யூக்களும் வசிக்கும் நெருக்கமான காடு என்பதெல்லாம் தென்னிந்தியாவை (திராவிடத்தை) பற்றியேயாகும்."

இது ராலின்சன் சி. ஐ. ஈ. யால் எழுதின 'இந்தியா' என்னும் புத்தகத்தில் 155 வது பக்கத்தில் இருக்கிறது.

"நம்மைச் சுற்றி 4 பக்கங்களிலும் தஸ்யூக்கள் (திராவிடர்கள்) இருக்கிறார்கள். அவர்கள் யாகங்கள் செய்வதில்லை. ஒன்றையுமே நம்புவதில்லை. அவர்கள் பழக்க வழக்கங்களே வேறாய் இருக்கின்றன. ஓ இந்திரனே! அவர்களைக் கொல்லு"

என்பது ஆரியர்களின் பிரார்த்தனையாகும். இது ரிக் வேதம் 10ம் அதிகாரம் சுலோகம் 22-8ல் இருக்கிறது.

"இந்தியாவில் இருந்த ஆரியர்களிடம் மனிதர்களைக் கொன்று யாகம் செய்யும் வழக்கம் இருந்திருக்கிறது என்று நிச்சயமாய் சொல்லலாம்."

இம்பீரியல் இந்தியன் கெஜட்டில் 1909ம் வருஷ வால்யம் 1பக்கம் 405ல் இருக்கிறது.

"தென்னிந்தியாவில் வசித்து வந்த ஆரிரல்லாதார்களையே குரங்குகள் என்றும், அசுரர்கள் என்றும் ராமாயணக் கதையில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது."

இது ரோமேஸ்சந்திரடட் சி. ஐ. ஈ. ஐ. சி. எஸ். எழுதிய "புராதன இந்தியா" என்னும் புத்தகத்தில் 52-வது பக்கத்தில் இருக்கிறது.

"திராவிடர்கள் தங்கள்மீது படை எடுத்துவந்த ஆரியர்களோடு கடும்போர் புரியவேண்டி இருந்தது. இந்த விஷயம் ரிக்வேதத்திலேயே அநேக சுலோகங்களாக இருக்கின்றன."

இது டாக்டர் ரோமேஷ் சந்திர மஜூம்தார் எம். ஏ. யின் "பூர்வீக இந்திய சரித்திரமும் நாகரீகமும்" என்னும் புத்தகத்தின் 22-வது பக்கத்தில் இருக்கிறது.

"ராமாயணக்கதை என்பது ஆரியர்கள் தென் இந்திய தஸ்யூக்கள் அல்லது திராவிடர்கள்மீது படை எடுத்து வெற்றி பெற்றதை சித்தரித்துக்காட்டுவதாகும்."

இது பி. சிதம்பரம் பிள்ளை எழுதிய 'திராவிடரும் ஆரியரும்' என்னும் புத்தகத்தின் 24-வது பக்கத்தில் இருக்கிறது.

"ராமாயணக் கதையானது புரோகித வகுப்பாருக்கும், யுத்த வீரர்களுக்கும் நடந்த போரைக்குறிப்பதாகும். ராமாயணத்தில் குறிக்கப்பட்டுள்ள குரங்குகள், கரடிகள் என்பவை தென் இந்தியாவில் உள்ளவர்களை—ஆரியரல்லாதவர்களை குறிப்பதாகும்."

இது ரோமேஷ் சந்திரடட் எழுதிய "பண்டைய இந்தியாவின் நாகரீகம்" என்ற புத்தகத்தின் 139–141-வது பக்கங்களில் இருக்கிறது.

"தென்னிந்தியாவில் இருந்த மக்களேதான் இராமாயணத்தில் குரங்குகள் என்றும் அரக்கர்கள் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்."

இது "சுவாமி விவேகானந்தா அவர்களது சொற்பொழிவுகளும், கட்டுரைகளும்" என்ற புத்தகத்தில்

"ராமாயணம்" என்னும் தலைப்பில் 587-589 பக்கங்களில் இருக்கின்றது.

"ஆரியன் என்கிற பதம் இந்தியாவின் புராதன குடிமக்களிடமிருந்து தங்களை பிரித்துக்காட்டுவதற்காக ஆரியர் ஏற்படுத்திக்கொண்ட பதம்."

தஸ்யூக்கள் என்பது இந்திய புராதன குடிமக்களுக்கு அவர்கள் (ஆரியர்கள்) கொடுத்த பெயராகும்.

இது 1922-ம் வருஷம் பிரசுரிக்கப்பட்ட கேம்ரிட்ஜ் "பழைய இந்தியாவின் சரித்திரம்" என்னும் புத்தகத்தில் இருக்கிறது.

## பகைமைக்குக் காரணம்.

"ஆரியரல்லாதவர்களை ரிக் வேதத்தில் தாசர் (சூத்திரர்)கள் என்றும், தஸ்யூக்கள் அசுரர்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆரியருக்கும் ஆரியரல்லாதாருக்கும் இருந்துகொண்டிருந்த அடிப்படையான பகைமையைப் பற்றி ரிக் வேதத்தில் பல இடங்களில் காணலாம். இருவகுப்பாருக்கும் இருந்த கலை வேற்றுமையும், அரசியல் வேற்றுமையுமே இந்தப் பகைமைக்கு காரணமாகும்."

இது டாக்டர் ராதா குமுத்மூக்கர்ஜீ எம். ஏ., பி. எச். டி. எழுதிய "இந்து நாகரீகம்" என்னும் புத்தகத்தில் 69-வது பக்கத்தில் இருக்கிறது.

"ராமாயணக் கதையின் உள் பொருள் என்னவென்றால் ஆரிய நாகரீகத்துக்கும், திராவிட நாகரீகத்துக்கும் (அவற்றின் தலைவர்களான ராமன் ராவணன் ஆகியவர்களால்) நடத்தப்பட்ட போராகும்."

இது ராதாகுமுத் மூக்கர்ஜீ எழுதிய "இந்துநாகரீகம்" என்னும் புத்தகத்தின் 141-வது பக்கத்தில் இருக்கிறது.

"தமிழர்கள் என்பவர்கள் இந்தியாவின் தென் கிழக்கிலும், லங்கையின் சில பாகத்திலும் வசிக்கும் ஆரியரல்லாத திராவிட மக்கள் ஆவார்கள். தமிழ் என்பது மேற்படியார்களால் பேசும் பாஷை."

இது சர் ஜேம்ஸ்மர்ரே எழுதிய புதிய இங்கிலீஷ் அகராதியின் பக்கம் 67 டி-யில் இருக்கிறது.

"ஆரியர்கள் தங்கள் மொழியை ஆரியரல்லாதாருக்குள் புகுத்த முயற்சித்து முடியாமல்போனதால் ஆரியரல்லாதாருடைய பாஷைகளைக் கற்றுக்கொண்டு அவர்களது நாகரீகத்தையும் பின்பற்றவேண்டி வந்தன."

இது பண்டர்காரின் கட்டுரைகள் வால்யம் 3, பக்கம் 10-ல் இருக்கிறது.

"தமிழர்கள் ஆரியர்களை வடவர், வடநாட்டார் என்று அழைத்தார்கள். ஏனெனில் ஆரியர்கள் வடக்கே இருந்து வந்தவர்களானதால்"

இது டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார் எம். ஏ., பி. எச். டி அவர்கள் எழுதிய "தென் இந்தியாவும் இந்திய கலையும்" என்ற புத்தகத்தின் 3-வது பக்கத்தில் இருக்கிறது.

"ராமாயணத்தில் தென் இந்தியா (திராவிட தேசம்), தஸ்யூக்கள் என்ற ராக்ஷதர்களுக்குச் சொந்தமாக இருந்தது.

இவர்கள் (தென் இந்தியர்கள்) வட இந்தியாவில் இருந்து வந்த ஆரியர்களைப்போலவே நாகரீக மடைந்தவர்களாய் இருந்தார்கள்."

இது பி. டி. சீனிவாசய்யங்கார் எழுதிய இந்திய சரித்திரம் முதல் பாகம் என்னும் புத்தகத்தில் 10-வது பக்கத்தில் இருக்கிறது.

"திராவிடர்களை ஆரியர்கள் வென்றுவிட்ட அகங்காரத்தால் குரங்குகள் என்றும், கரடிகள் என்றும், ராக்ஷகள் என்றும் எழுதிவைத்தார்கள். ஆனால் இந்தப்படி இழிவு படுத்தப்பட்ட வகுப்பாரிடமிருந்தே (திராவிடர்களிடமிருந்தே) பல நாகரீகங்களை இந்த பிராமணர்கள் கற்றுக்கொண்டார்கள்"

இது வேஷாஷி சந்தர்டட் எழுதிய "இந்தியா அன்றும் இன்றும்" என்னும் புத்தகத்தில் 105-வது பக்கத்தில் இருக்கிறது.

ஆரியக் கடவுள்களை பூசித்தவர்களும், அவர்களைப் பின்பற்றியவர்களும் தேவர்கள் என்று சொல்லிக்கொண்டார்கள், இந்த ஆரியக் கடவுள்கள் வணக்கத்தை எதிர்த்தவர்களை அசுரர்கள் என்று அழைத்தார்கள். இந்த இரு கூட்டத்தாருக்கும் விடாப்பகை இருந்துகொண்டே வந்தது"

இது எ. வி. தாஸ் எம். ஏ., பி. எல்., எழுதிய "ரிக் வேதகாலத்து இந்தியா" என்னும் புத்தகத்தில் 151-ம் பக்கத்தில் இருக்கிறது.

ஆரியர்கள் தங்களால் தோற்கடிக்கப்பட்ட எதிரிகளாகிய திராவிடர்களை தங்களுடைய புத்தகங்களில் திராவிடர்களை தஸ்யூக்கள் என்றும் தானவர்கள் என்றும் ராக்ஷசர்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"ஆரியக் கவிகள் திராவிடர்கள் மீது கொண்டிருந்த வெறுப்பை இது காட்டுகிறது. ஏனெனில் ஆரியர்கள்

திராவிட நாட்டில் சிறுகச் சிறுக நுழைந்து ஆதிக்கம் பெறுவதில் அடைந்த கஷ்டத்தினால் இப்படி எழுதினார்கள்''

இது சி. எஸ். சீனிவாசாச்சாரி எம். ஏ., அண்டு எம். எல். ராமசாமி அய்யங்கார் எம். ஏ., ஆகிய சரித்திர போதகர்கள் எழுதிய "இந்திய சரித்திரம் முதல் பாகம்'' என்னும் புத்தகத்தில் "இந்து இந்தியா'' என்னும் தலைப்பில் 16, 17-வது பக்கங்களில் இருக்கிறது.

"ஆரியர்களில் சமஸ்கிருதம் பேசியவர்கள் மட்டும் இந்தியாவின் மேற்கு கணவாய் வழியாக நுழைந்து வட இந்தியாவை அடைந்தார்கள்; அங்கு தங்களைவிட முன்னேற்றமான திராவிடர்களை கண்டு அவர்களிடமிருந்து பல நாகரீகங்களை கற்றுக்கொண்டார்கள்''

இது எச். ஜி. வெல்ஸ் எழுதிய "உலகத்தின் சிறு சரித்திரம்'' என்னும் புத்தகத்தின் 105-ம் பக்கத்தில் இருக்கிறது.

"ஜாதிப் பிரிவுகள் நான்கில் அதாவது பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என்பவர்களில் முதல் மூன்று பிரிவினர்கள் ஆரிய சம்பந்தப்பட்டவர்கள். கடைசி வகுப்பார் (சூத்திரர்கள்) இந்தியாவின் புராதன குடிகள்.''

இது "New Age Encyclopedia, (நியூ எஜ் என்சைக்ளோபீடியா Vol. II 1925) பக்கம் 237-ல் இருக்கிறது.

"ராமாயணம் தென்னிந்தியாவில் ஆரியர் பரவியதையும் அதைக் கைப்பற்றியதையும் உணர்த்தும் நூல்''

இது இப்போது கல்வி மந்திரியாய் இருந்த சி. ஜே. வர்க்கி எம். ஏ. எழுதிய "இந்திய சரித்திர பாகுபாடு'' என்னும் புத்தகத்தின் 15-வது பக்கத்தில் இருக்கிறது.

"விஷ்ணு என்கின்ற கடவுள் ஆரியக் கூட்டத்தாருக்கு வெற்றி தேடிக்கொடுக்கவும் யோசனை கூறவும் அடிக்கடி அவதாரம் செய்வதாகக் கருதப்பட்டது"

இது இ. பி. ஹாவெல் 1918-ல் எழுதிய "இந்தியாவில் ஆரியர் ஆட்சியின் சரித்திரம்" என்னும் புத்தகத்தின் 32-வது பக்கத்தில் இருக்கிறது.

"பாரதத்தில் இடும்பி என்று ஒரு ஆரியால்லாத பெண்மணியைப் பற்றி எழுதிய பார்ப்பன கவி தனக்குள்ள ஜாதி துவேஷத்தால் ராக்ஷசி என்று எழுதி இருக்கிறான். ராக்ஷதர் என்கிற பயங்கர புரளி வார்த்தை வைதீகப் பார்ப்பனனின் மூளையில் தோன்றிய கற்பனையேயாகும்."

இது நாகேந்திரநாத் கோஷ் பி. ஏ., பி. எல். எழுதிய "இந்திய ஆரியரின் இலக்கியமும், கலையும்" என்ற புத்தகத்தின் 194-வது பக்கம்.

"ராமாயணக் கதையானது ஆரியர்களை மேன்மையாகக் கூறவும், திராவிடர்களை இழிவு படுத்திக் காட்டவும் எழுதப்பட்ட நூலாகும்."

இது பண்டிதர் டி. பொன்னம்பலம் பிள்ளையால் எழுதப்பட்ட "மலபார் குவார்ட்டர்லி ரிவ்யூ" என்னும் புத்தகத்தில் இருக்கிறது.

"இந்திய ஐரோப்பியர்களால் (அதாவது ஆரியர்களால்) தோற்கடிக்கப்பட்ட கறுப்பு மனிதர்களை (திராவிடர்களை) தஸ்யூக்கள் என்றும், கொள்ளைக்காரர்கள் என்றும் அடிக்கடி பிசாசுகளாக மாறக் கூடியவர்கள் என்றும் வேத இலக்கியங்களில் கூறப்பட்டிருக்கின்றது."

இது பால்மாசின் அவர் செல் எழுதிய "புராதன இந்தியாவும், இந்தியாவின் நாகரிகமும்" என்ற புத்தகத்தில் 19-வது பக்கத்தில் இருக்கிறது.

இவையும், இவை போன்றனவுமாகிய பல விஷயங்கள் பெயர்பெற்ற ஆராய்ச்சியினர்களுடைய ஆராய்ச்சியிலும், பல ஆரியப் பார்ப்பனர்களுடைய ஆராய்ச்சியிலும் ஆரிய வேத புராண இதிகாசங்களிலும் இருந்தே கண்டு பிடிக்கப்பட்டிருப்பவைகளாகும்.

ஆனால் ஆரியர் வருவதற்குமுன் திராவிட நாடு எப்படி இருந்தது என்பதற்கு ராமாயணத்திலேயே ஆதாரங்கள் இருக்கின்றன.

அதாவது:- ராமாயணம் கிட்கிந்தா காண்டத்தில் சீதையை தேடுவதற்கு தென்பாகத்திற்கு அனுப்பப்பட்ட அனுமானுக்கு சுக்ரீவன் சொல்லி அனுப்பப்பட்ட வழிக் குறிப்புகளில்,

"காவேரி நதியைத்தாண்டி பொருநை நதியைக் கடந்து அப்பாற் சென்றால் பாண்டியனுடைய பொற்கதவமிட்ட மதிலரணைக் காண்பாய்" என்று சொன்னதாக வால்மீகியார் ராமாயணத்தில் கூறுகிறார்.

மற்றும் அவர் கூறுவது விந்தியமலைக்கு அப்பாலுள்ள திராவிட நாட்டில் தண்டகாருண்யம் கடந்தால் பிறகு,

"ஆந்திரம், சோழம், கேரளத்தோடு கூடியபாண்டிய நாடுகளை காண்பீர்கள்"

"அதில் தேவரம்பையர் வந்து நீராடும்படியான தெளிந்த நீரையுடைய திவ்யமான காவேரி நதியைக் காண்பீர்கள்".

"பிறகு முதலைகள் நிரம்பிய தாம்பிரபரணியைக் காண்பீர்கள்"

"பிறகு பொன்னிறத்ததாயும், முத்து மயமானதாயும், பாண்டியர்க்கு யோக்கியமானதாயுமுள்ள கபாடபுரத்தை காண்பீர்கள்"

"அப்புறம் சமுத்திரத்தைக் காண்பீர்கள், அங்கு சென்று உங்கள் காரிய நிச்சயத்தை செய்யுங்கள்" என்று கூறியிருப்பதாக வடமொழி ராமாயணத்தில் காண்கிறோம். ஆகையால் திராவிட நாடு ஆரியர் இந்நாட்டிற்கு வருவதற்கு முன் மேன்மையாயும், நாகரீகத்துடனும், செல்வத்துடனும் தனிப்பட்ட அரசாட்சி உடையதாயும் இருந்து வந்திருக்கிறது என்பது விளங்குவதோடு, இப்படிப்பட்ட திராவிடமும், திராவிட மக்களும் ஆரியர் ஆதிக்கமும் கொடுமையும் ஏற்பட்டபிறகே திராவிடர்கள் குரங்குகளாகவும், ராட்சதர்களாகவும் கற்பிக்கப்பட்டதோடு சூத்திரன் அடிமை, மிலேச்சன், சண்டாளன், என்பது போன்ற இழிமொழிகளுக்காளாகி சூத்திரர்களுக்கு (திராவிடர்களுக்கு) ஒரு நீதியும், ஆரியர்களுக்கு ஒரு நீதியும் கற்பிக்கப்பட்ட மனுதர்ம நீதி வழங்கப்பட்டிருக்கிறது.

அம்மனு நீதியில் சூத்திரர்களுக்கு (திராவிடர்களுக்கு) விதித்திருக்கும் தர்மங்களையும் பற்றி ஒரு சிறிது மாத்திரம் எடுத்துக்காட்ட ஆசைப்படுகிறோம்.

அதாவது, பிராமணனுக்கு தலையை முண்டிதம் செய்வது கொலைத் தண்டமாகும். மற்ற வருணத்தாருக்குக் கொலைத் தண்டமுண்டு. மனு. அத். 11. 379

அந்தணன் பூனை, அணில், காடை, தவளை, நாய், உடும்பு, கோட்டான், காகம் இவைகளைக் கொன்றால்

ஒரு சூத்திரனைக் கொன்றதற்குச் செய்ய வேண்டிய பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

மனு. அத். 9. 132

வைதீக கருமமாயிருந்தாலும், லெளகீக கருமமாயிருந்தாலும் அக்கினி எப்படி மேலான தெய்வமாயிருக்கிறதோ, அப்படியே பிராமணன் ஞானியாயிருந்தாலும், மூடனாயிருந்தாலும் அவனே மேலான தெய்வமாவான்.

மனு. அத். 6. 317

பிராமணன் துர்ச்செய்கை யுள்ளவனாயிருந்த போதிலும் சகலமான சுபா சுபங்களிலும் பூசிக்கத்தக்கவன் அவன் மேலான தெய்வமாதலால்.

மனு. அத். 7. 318-19

கருமானுஷ்டமில்லா பிராமணனேனும் அவன் அரசன் செய்ய வேண்டிய தீர்ப்புகளைச் செய்யலாம். சூத்திரன் ஒருபோதும் செய்யக்கூடாது.

மனு. அத். 8. 20

சூத்திரன் விலை கொடுத்து அடிமையாக வாங்கப்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும் அவனைப் பிராமணன் நிர்ப்பந்தப்படுத்தி வேலை வாங்கலாம். ஏனென்றால் கடவுள் சூத்திரனைப் பிராமணனுக்கு வேலை செய்யும் ஒரே நிமித்தமாகவே படைத்திருக்கிறார்.

மனு. அத். 8. 413

பிராமணன் சூத்திரனுடைய பொருளை முழுமனச் சமாதானத்துடன் (சற்றாயினும் பாவமென்றெண்ணாமல்) கைப்பற்றிக் கொள்ளலாம்; ஏனெனில் அவனுக்குச் சொந்தமான தொன்றுமில்லையாதலாலும் அவன் சொத்தை அவன் எஜமான் எடுத்துக்கொள்ளலாமாதலாலும்.

மனு. அத். 8. 417

ஒரு பிறப்பாளன் (சூத்திரன்) இருபிறப்பாளரை (பிராமணரை)த் திட்டினால் அவன் நாவை அறுத்தெறிய வேண்டும்.

மனு அத். 8. 270

அவன் அவர்கள் பேரையாவது, சாதியையாவது தூஷித்தால் பத்துவிரல் நீளமுள்ள பழுக்கக் காய்ச்சிய இரும்பை அவன் வாய்க்குள் செலுத்தவேண்டும்.

மனு அத். 8. 271

அவன் அகந்தையால் குருமாருக்கு அவர்களுடைய கடமைகளைப்பற்றிப் போதிப்பானானால் அவன் வாய்க்குள்ளும், காதுகளுக்குள்ளும் கொதிக்கிற எண்ணெயை ஊற்றுப்படி செய்வது அரசன் கடமை.

மனு அத். 7.272.

அவன் உயர்குலத்தானை அடிப்பதற்குக் கையையாவது தடியையாவது உயர்த்தினால் அவன் கையைவெட்டியெறிந்துவிடவேண்டும். அவன் கோபத்தினால் அவனை உதைத்தால் அவன் காலை வெட்டியெறிந்து விடவேண்டும்.

மனு. அத். 8. 280

தாழ் குலத்தான், உயர்குலத்தானோடு சமமாக உட்கார வெத்தனித்தால் அவனை இடுப்பிற் சூட்டுக்கோல்கொண்டு சுட்டுத் தேசத்தைவிட்டுத் துரத்திவிடவேண்டும். அவன் பின்பக்கத்தை வெட்டியெறிந்து விடலாம்.

மனு. அத். 7. 281.

அவன் அகந்தையால் அவன்மேல் உமிழ்ந்தால் அவன் உதடுகளிரண்டையும் அரசன் வெட்டியெறியும்படி செய்ய வேண்டும். மனு அத். 8. 282.

இதுவரை எழுதிவந்தவை ஆரியர்-திராவிடர் யார் என்பதும், அவரவர்கள் வாழ்க்கை முறை, தன்மை என்ன என்பதும், ஆரியரால் திராவிடம் இன்றைய இழி நிலை அடைந்ததற்குக் காரணம் விளங்கும்படி விளக்கப்பட்டவைகளாகும். இனி ஆரிய திராவிட சமய சம்பந்தமான விஷயங்கள் முதலியவைபற்றி அடுத்த தலையங்கத்தில் விளக்குவோம்.

## IV

"தமிழ்நாடு தமிழருக்கே" என்னும் தலைப்பில் இதற்குமுன் மூன்று தலையங்கங்கள் எழுதி இருப்பதுடன் அடுத்தபடி ஆரிய திராவிட சமயசம்பந்தமாக எழுதப்படும் என்று நேற்றைய தலையங்க முடிவில் குறித்திருந்தோம்.

அந்தப்படி இன்றைய தலையங்கத்தின் கீழ் ஆரிய திராவிட சமயங்கள் என்ன? சமய ஆதாரங்கள் என்ன? என்பவைகளைப்பற்றி எழுதப்புகுகின்றோம். இப்படி எழுதுவதில் நாம் பெரிதும் தற்காலம் பிரத்தியட்ச அனுபவத்தில் உள்ளனவற்றையே பெரிதும் ஆதாரமாய் கொண்டு எழுதுகிறோமே ஒழிய நூல் ஆராய்ச்சியை அடிப்படையாய்க்கொண்டே எழுதப்புகவில்லை. அவ்வாராய்ச்சி விஷயங்களை பண்டிதர்களுக்கு விட்டு விடுவோம். இன்றைய பிரத்தியக்ஷ காட்சிக்கும் கருத்துக்கும் ஆதாரங்களோ ஆராய்ச்சிகளோ விரோதமாய் இருக்குமானால் அதற்கேற்றபடியாகிலும் அனுபவத்தை மாற்றிக்கொள்ளவாவது நாம் எழுதுவது பயன்படட்டும் என்று கருதியே இதில் தலையிடுகிறோம்.

இதற்கு முக்கிய காரணம் என்னவெனில் சமயத் துறையில் ஏற்பட்ட கேடுகள்தான் பெரிதும் ஆரியர்களுக்கு இந்நாட்டில் ஆதிக்கம் வளர்ந்து நிலைத்திருப்பதற்

குக் காரணம் என்றும் அதுவேதான் திராவிடர் வீழ்ச்சிக்கும் காரணம் என்றும் நாம் கருதுகிறோம். ஆதலால் ஆரிய திராவிட சமய சம்பந்தமான காரணங்கள் மக்களுக்கு விளங்கவேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

## திராவிட சமயம்

திராவிடர்க்கு ஆதியில் என்ன சமயம் என்பது இட்டமாய் விவகாரத்திற்கு இடமில்லாமல் கண்டுபிடிப்பது கஷ்டமான காரியமாய் இருந்தாலும் திராவிடருக்கு முன் பின் பிறவியோ, பிறவியின் பயனாக மேல் கீழ் ஜாதியோ, ஜாதிக்கேற்ற உலகமோ, விக்கிரக உருவமோ, பல கடவுள்களோ அக்கடவுள்களின் முகத்திலோ காலிலோ மக்கள் தோன்றியதோ முதலான கோட்பாடுகள் இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே அவற்றைப் பொருத்தவரை அவை சம்பந்தமான சமயமும் கடவுள்களும் சமய நூல்களும் திராவிடருக்கு உடன்பாடானவை அல்ல என்பது உறுதியான உண்மையாகும்.

இந்த உறுதியை வைத்துக்கொண்டு பார்த்தால் பெரியார் முகம்மது நபி பெருமான் அவர்கள் கடவுளைப் பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும் கூறியுள்ள கருத்துக்களே தமிழர் கடவுளுக்கும் சமுதாயத்துக்கும் பொருத்தமானதென நினைக்கலாம். நபி அவர்கள் கடவுளுக்கு உருவம் இல்லை, பெயர் இல்லை என்று சொன்னதோடு இணையும் இல்லையென்றும் இணையே வைக்கக்கூடாது—சொல்லக்கூடாது என்றும் நிர்ப்பந்தமான திட்டம் செய்திருப்பதோடு அப்படி யாராவது உருவம், இணை முதலியவை கற்பித்தால் அப்படிப்பட்டவர்கள் கடவுள் கொள்கைக்கு மாறானவர்களாவார்கள் என்றும், இஸ்லாமானவர்களாக மாட்டார்களென்றும் கண்டித்துக் கூறியிருக்கிறார்.

ஆகையால் திராவிடர்கள் கடவுளுக்கு உருவம் இல்லை இணை இல்லை என்ற அளவாவது ஒப்புக் கொள்வார்களே ஆனால் இன்று பெரும்பாகமான திராவிடர்கள் அனுஷ்டிக்கும் கடவுள் கொள்கைகள் தப்பானதென்றே உணருவார்கள். தப்பானதென்று சொல்லுவது மாத்திரமல்லாமல் திராவிடர்கள் இந்தத் தப்பான கொள்கையாலேயே ஆரியர்களுக்கு சர்வத்திலும் அடிமைப்பட நேர்ந்தது என்றும் சுலபத்தில் உணருவார்கள்.

ஏனெனில் இன்று திராவிடர்கள் மீது சுமத்தப்பட்டிருப்பதும் பெரும்பான்மை திராவிடமக்கள் ஏற்றுக் கொண்டிருப்பதும் ஆரிய மதமாகிய இந்துமதம் என்று சொல்லப்படுவதே யாகும். அதுபோலவே திராவிடர்கள் கடவுள்களும் இந்துமத கடவுள்களேயாகும். சமுதாயத் துறையிலும் திராவிடர்கள் பின்பற்றுவது இந்துசமய முறையே யாகும்.

## இந்து மதம்

உண்மையில் வெளிப்படையாக மனம் திறந்து பேச வேண்டுமானால் இந்துமதம் என்பதாக ஒரு மதமே இருந்ததில்லை என்பதோடு இருக்கிறதாக சொல்லுவதற்கும் வகை இல்லை.ஆனால் பின்எப்படி இந்துமதம் என்று ஒரு சொல் இருந்து வருகிறது என்றால் ஆரியர்களுடைய மேன்மைக்கு ஆகவும், அவர்கள் மற்ற மக்களை அந்தகாரத்தில் வைத்துத் தங்களுக்கு அனுகூலமாக ஆண்டு கொள்வதற்கு ஆகவும், மற்றும் திராவிடர்களை சமயம் போல் சௌகரியம்போல் பயன்படுத்திக் கொள்வதற்காகவும் ஏற்படுத்திக்கொண்ட சில சூழ்ச்சி முறைகளே இன்று இந்து மதமாய் இருக்கிறது.

ஏனெனில் இந்துமதம் என்கின்ற வார்த்தையே ஆரியர்களுக்குள்ளாகவாவது எப்போதாவது இருந்துவந்த

தாக சொல்வதற்கு இல்லை. ஆரிய சம்பந்தமான எந்த பழைய ஆதாரங்களிலும், அவர்கள் சமயாதாரமாக சமீப காலம் வரை ஏற்படுத்திக்கொண்ட எந்த ஆதாரங்களிலும் கூட இந்து மதம் என்கின்றவார்த்தை இருந்ததாக தெரிய வில்லை.

அன்றியும் இந்துமதம் என்றால் என்ன? அதன் கொள்கை என்ன? என்று நிர்ணயித்து சொல்லக் கூடிய தாகவும் ஒன்றும் இல்லை. எப்படிப் பட்டவன் இந்து? எப்படிப்பட்டவன் இந்து அல்லாதவன்? என்று சொல்லு வதற்கும் ஒரு நியதி இல்லை. இந்தியாவில் உள்ள ஒரு முகமதியனையோ ஒரு கிறிஸ்தவனையோ ஒரு பார்சி யையோ ஒரு சீக்கியனையோ ஒரு பிரமசமாஜக்கார னையோ ஒரு மதமும் ஒரு கடவுளும் இல்லாத பகுத் தறிவு வாதியையோ இந்து அல்லாதவன் என்று சொல்ல ஒரு ஆதாரமும் இல்லை. இந்து மதம் என்று சொல்ல இன்று ஒரே ஒரு ஆதாரம்தான் அனுபவத்தில் பயன்பட்டு வருகிறது. அதாவது ஆரியர் மேன்மைக்கும் அவர்களது நலனுக்கும் மாறாக பேசுவதும் இருப்பதும் எல்லாம் தான் இன்று இந்து மதமல்லாததாய் இருக்கிறதே தவிர இந்து மதம் என்பதற்கு ஒரு குறிப்பிட்ட கொள்கையும் திட்டமும் இல்லை. ஆரியர்களின் மேன்மையையும், அவர்களது மேன்மைக்கு ஆதரவான ஆதாரங்களையும் குறித்து வாதம் புரியாமல் ஒருவன் கடவுளே இல்லை, வேதங்கள் பொய், சாஸ்திரங்கள் பொய், புராணங்கள் பொய் என்று சொன்னாலும்கூட "அவர் ஒரு பெரிய வேதாந்தி அல்லது ஒரு துறவி'' என்று சொல்லப்பட்டு விடுவான்.

ஆனால் ஜாதி ஏது, பார்ப்பான் ஏது, பறையன் ஏது, எல்லாம் பித்தலாட்டம் என்றும், கடவுள் பேரால் மதத்தின் பேரால் ஆரியர்கள் மக்களை ஏமாற்றிப் பிழைக்கிறார்கள் என்றும் சொல்லிவிட்டால், அவன் எப்படிப்பட்ட பக்திமானானாலும் நாஸ்திகனாய்விடு வான்.

## ஆராய்ச்சி முடிவு.

பொதுவாகவே இந்து மதம் என்பதுபற்றிய பல ஆராய்ச்சிக்காரர்கள் அப்படி ஒரு மதமே இல்லை என்று முடிவு கட்டி மெய்ப்பித்து இருக்கிறார்கள். இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்று ஐரோப்பியர்களாலும் இந்நாட்டுப் பெரும் புலவர்களாலும் எழுதப் பட்ட ஆராயச்சிப் புத்தகங்கள் எத்தனையோ இன்றும் இருக்கின்றன.

இந்து என்கின்ற வார்த்தையே திருடன், அயோக்கியன், தொல்லை கொடுப்பவன், நம்பிக்கைத் துரோகக்காரன், அடிமை—கூலி, காட்டு மிராண்டி என்கிறதான கருத்துகளைக் கொடுப்பது என்று பல பாஷைகளில் பரிச்சயமுள்ள அநேகர் எழுதி இருப்பதோடு இதை மெய்ப்பிக்க இன்னும் பல இங்கிலீஷ் அகராதிகள் இருக்கின்றன.

பொதுவாகவே இந்துமதம் என்றால் ஆரியர் கொள்கை என்றும் புரோகித சமயம் என்றும் பார்ப்பனர்களை உயர்வாய் கொண்டதென்றும் இந்து என்றால் பார்ப்பனர்களைப் பின்பற்றுகிறவன் என்றும் விந்திய மலைக்கு வடக்கே உள்ள மக்களைக் குறிப்பதென்றும் ஆதிகால மனிதத் தன்மையைக் குறிப்பிடுவதென்றும் அகராதிகளிலும் சகல கலாநிதி என்னும் பழங்கால முதல் நாளது வரையில் ஆராய்ச்சி செய்த அறிவு நூல்களிலும் பரக்கக் காணலாம்.

## திராவிடர் இந்துக்களா?

அவை எப்படியோ இருக்கட்டும். நாம் இன்று அம்மாதிரியான ஆராய்ச்சியில் புகவில்லை. ஆனால் திராவிட மக்கள் பிறவியில் சாதி பேதத்தையும், பல கடவுள்களையும், உருவ வழிபாட்டையும் கொண்ட 'இந்து' மதத்தில்

சேர்ந்தவர்கள் ஆவார்களா என்பதே நமது பிரச்சினை யாகும்.

திராவிட நாட்டில் உள்ள வைணவர்கள் "நாங்கள் ஆரியக் கடவுளை வணங்குகிறவர்கள் அல்ல, திராவிடக் கடவுளாகிய திருமாலை வணங்குகிறவர்கள் என்றும், சைவர்கள் "நாங்கள் ஆரியக் கடவுளை வணங்குகிறவர் அல்ல, திராவிடக் கடவுளாகிய சிவனை வணங்குகிறவர் கள்" என்றும் மற்றும் சிலர் "நாங்கள் சிவனையும் திருமாலையும் கூட வணங்குகிறவர்கள் அல்ல. முருகன் என்கின்ற இயற்கை அழகையும் இளமையையும் வலி வையும் குணமாகக்கொண்ட இயற்கையை வணங்கு கிறவர்கள் என்றும், மற்றும் சிலர் "எந்த குணத்தையும் குறியாய்க்கொண்டு வணங்குகிறவர்கள் அல்ல. கந்தழி என்கின்ற உருவம் குணம் இல்லாத தூய்மையின் தன்மையை வணங்குகிறவர்கள்" என்றும் பல மாதிரி நம்மால் புரிந்து கொள்ள முடியாத விஷயங்களை, ஏன் அவர்களுக்குமே சிலருக்கு புரிந்திராத விஷயங்களை அந்தந்த சமயத்தவர்களிலேயே ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக வாயில் சொல்லாம்.

ஆனால் திராவிடத்தில் உள்ள மக்களில் கடவுள் வழிபாடுடையவர்களான பெரும்பான்மையோரும் தங்கள் வழிபாட்டை எப்படி நடத்துகிறார்கள் என்பதிலிருந்து தான் திராவிடர்கள் திராவிட சமயத்தவராய், திராவிட தத்துவ கடவுள் வழிபாடுடையவர்களாய், அதற்கு ஏற்ற ஆதார நூல்களுடையவர்களாய் இருக்கிறார்களா என்று பார்க்க ஆசைப்படுகிறோம். இன்று பிரத்தியக்ஷத்தில் வைணவர்கள், சைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் பெரும்பாலும் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்கின்ற மும் மூர்த்திகளையும் அவைகளுக்கு ஆரியக் கற்பனைப்படி உருவமும் குணமும் பெண்டுபிள்ளை வாழ்க்கைத் தன் மைகளுடன்தான் வணங்கி வருகிறார்கள். ஆனால் விவ காரம் வரும்போது காந்தியார் பேசுவதுபோல் அதா

வது எப்படி "என் வருணாச்சிரமம் வேறு" "என் ராமன் வேறு" "என் இந்து மதம் வேறு" என்று சொல்லி தப்பித்துக்கொண்டு காரியத்தில் மனுதர்ம வருணாச்சிரமத்தையும், ராமாயண ராமனையும், ஆரிய மேன்மைக்கு உரித்தான இந்து மதத்தையும் நிலைநிறுத்தத்தக்க வண்ணமே நடந்து வருகிறாரோ அதுபோல், ஆரிய கற்பனையான பிர்மா விஷ்ணு சிவன்களைத்தான் திராவிடர்கள் சேர்ந்தோ தனித்தோ வணங்கி வருகிறார்கள். திராவிடர்களை ஆரியர்களுக்கு அடிமையாக ஆக்கி அவர்களிடமிருந்து தப்பித்து வரமுடியாதபடி திராவிடர்களை பிணைத்திருப்பது இந்து மதத்தைவிட இந்துமத ஆரியக் கடவுள்களேயாகும்.

## நம் பண்டிதர்கள்.

நம் பண்டிதர்கள் பெரும்பாலும் கடவுள் சமயம் ஆகியவற்றில் பண்டிதர்களாக இருக்கிறார்களே ஒழிய பொது அறிவில் இயற்கை அறிவில் இயற்கை சக்தியில் பாண்டித்யம் பெற்ற பண்டிதர்கள் வெகு அருமையாய் இருக்கிறார்கள். ஆரியக் கடவுள்களுக்கும் சமயத்திற்கும் ஆக்கம் அளித்து திராவிடர்களை ஆரியர்க்கடிமையாக்கியவர்கள் நம் சைவ வைணவ சமயப் பண்டிதர்கள்தான் என்றால் அவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது என்று தான் கேட்டுக்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஏனெனில் ஆரியக் கடவுள்கள் சம்பந்தமான திராவிட பாஷை நூல்கள் எல்லாம் உண்டாக்கியவர்கள், பரப்பினவர்கள், பிரசாரம் செய்தவர்கள் இன்றும் செய்பவர்கள் நம் பண்டிதர்களேயாவார்கள்.

திராவிட மக்கள் 100-க்கு 95 பேர்கள் கல்வி அறிவில்லாதவர்கள்—எழுத்து வாசனை அற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களிடம் சமயத்தையும் கடவுளையும்பற்றி பேசும்போதும் இவர்கள் அறியும்படி

சமயக்கதைகள், சமயப்பெரியார்கள் கதைகள், கடவுள் கதைகள் எழுதி பிரசங்கம் செய்தால்தான்—கடவுளுக்கு பெண்டு பிள்ளை வைப்பாட்டி கற்பித்து சாதம் நகை படைத்து கல்யாணம் உற்சவம், பூசை, அபிஷேகம் ஆகியவைகள் செய்தும் காட்டினால்தான் புரியும் என்று சொன்னால், இது அறிவுள்ள அல்லது திராவிட ரத்த கலப்பில்லாத தனித் தமிழ் மகன் கூற்று என்று யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கவேண்டி இருக்கிறது.

முஸ்லிம்களுக்கு ஒரு சமயம் இருக்கிறது; கடவுளும் இருக்கிறது. அந்த முஸ்லிம்களும் 100-க்கு சுமார் 90 பேர்கள் எழுத்து வாசனை இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களுக்கு சமய உணர்ச்சியும் கடவுளுணர்ச்சியும் வருவதற்கு இப்படித்தான் செய்கிறார்களா? அப்படி செய்யாததால் அவர்களுக்கு கடவுள் உணர்ச்சியும் மதஉணர்ச்சியும், மனிதத்தன்மை உணர்ச்சியும் இல்லையென்று யாராவது சொல்லக்கூடுமா? இப்போதைய உணர்ச்சி முஸ்லிம்கள் பெற்றதற்கு கடவுளுக்கு பெண்டு பிள்ளை, வைப்பாட்டி, சோறு, சாறு, அபிஷேகம், கல்யாணம், உற்சவம் செய்தும் அதுசம்பந்தமான கதைகள் எழுதிப்படிக்கச் செய்தும்தான் அவர்கள் உணர்ச்சி பெற்றார்களா? என்பதை யோசித்தால் அப்படி சொல்லுகிறவர்கள் எண்ணம் சுத்தமானதா? அசுத்தமானதா? என்பது விளங்காமல் போகாது.

ஆரியர்களிடமிருந்தும், அவர்களுக்கு அனுகூலமானதும் நமக்கு கேடானதுமான அவர்களுடைய சமயம், கடவுள்கள் ஆகியவைகளிடமிருந்தும் திராவிட மக்கள் பிரிக்கப்பட்டால் ஒழிய ஆரியர்களுக்கு அடிமைப்பட்ட திராவிடர்களது மானமும் அறிவும் ஆத்மார்த்த போலி உணர்ச்சியும் விடுபடாதென்ற காரணத்திற்காகவே இவைகளைக் கூறுகிறோம்.

ஆகையால்தான் சைவ வைணவ பண்டிதர்கள் தங்கள் சுயநலத்தையே பிரதானமாகப் பாராமல் மக்கள் நலத்தைச் சிறிதாவது கருதி பாமரமக்களின் அறிவின்மையையும் மூடபக்தியையும் போக்க முயலவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். தங்களின் குரங்குப்பிடியான சமயம் போனால் பண்டிதத் தன்மையே போய்விடும் என்றும் வாழ்க்கை போய்விடும் என்றும் சிலர் பயப்படுகிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

இது இப்பண்டிதர்களின் பாமரத்தன்மையேயாகும். ஷேக்ஸ்பியரும், ஷெல்லியும், பர்னாட்ஷாவும், வெல்சும், வில்சனும் புராணங்களுக்குப் பொழிப்புரையும் கருத்துரையும் புதுஉரையும் எழுதித்தானா வாழ்ந்தார்கள்—வாழ்கிறார்கள்? உலகில் விளம்பரமானார்கள்? என்பதையே சிந்தித்துப்பார்க்க இப்பண்டிதர்களை வேண்டுகிறோம். ஏன் நாம் இப்படி சொல்லுகிறோம் என்றால் திராவிடர்களை ஆரியருக்கு அடிமையாக்கினதில் நம் பண்டிதர்களுக்கும் பெரும் பங்கு இருக்கிறது. இப்போது அவர்களை மீட்கவேண்டிய பொறுப்பும் சக்தியும் நம்பண்டிதர்களிடம்தான் இருக்கிறது என்பதை நாம் உணருவதாலேயாகும். மற்றொருபுறம் அது முடியவில்லையானால் ஆரியர்களுடனும் அவர்களது ஆயுதங்களுடனும் போராடுவது போலவே இப்பண்டிதர்களுடனும் போராட வேண்டிய தொல்லையும் ஏற்பட்டுவிடுமே என்கிற பயத்தினாலேயுமாகும்.

ஆகவே பண்டிதர்கள் திராவிடர்களுடைய சமயம் இன்னது, அவர்களுடைய கடவுள் இன்னது, அவற்றின் கோட்பாடு இன்னது என்று துலக்கமாக வரையறுத்துவிட வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். அதற்கு ஏற்ற கலைகளையே உற்பத்தி செய்ய வேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறோம். இதுவிஷயமாகப்பல திராவிட பண்டிதர்கள் நம் கருத்துக்கு அனுகூலமாக சொல்லி

இருக்கும் பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன என்றாலும் அவைகளைச் சமயம்வந்தபோது வெளிப்படுத்திக்கொள்ளுகிறோம். இன்றைய நமது ஆசையெல்லாம் நாம் பரிசுத்தமாக ஆரியர்கள் சமய கடவுள்கள் அவற்றின் கொள்கைகள் ஆகியவற்றிலிருந்து பிரிந்து கொள்ளவேண்டும் என்பதே அல்லாமல் வேறொன்றும் இல்லை என்பதை பண்டிதர்கள் நம்பவேண்டுமென்று மறுபடியும் வேண்டிக் கொள்ளுகிறோம்.

அரசியலில் நமது நாடு ஆரியர்களிடமிருந்து பிரிந்து கொள்ள பிரிட்டிஷார் தயவு எப்படி வேண்டி இருக்கிறதோ அப்படியே சமயம் கடவுள், சமுதாயம் ஆகியவைகளிலும் நமதுநாடு ஆரியர்களிடம் இருந்து பிரிந்துகொள்ள நம் பண்டிதர்களுடைய தயவு வேண்டி இருக்கிறது.

நிற்க, திராவிடர் பூரண விடுதலை அடைகிறவரை மானமே மதமாகவும் அறிவே கடவுளாகவும் அதற்கு ஆன ஆராய்ச்சியே பிரார்த்தனையாகவும் இருக்கவேண்டும்.

பிறகு எந்த சமயமானாலும் எந்தக் கடவுளானாலும் எப்படிப்பட்ட பிரார்த்தனையானாலும் வைத்துக் கொள்ளலாம்; அவை திராவிடனை ஒன்றும் செய்து விடாது.

வியாதியஸ்தனாக, ஜெயில் கைதியாக, கவிழப் போகும் ரயிலில் பிரயாணக்காரனாக, முழுகப்போகும் கப்பலில் பயணக்காரனாக, சண்டையில் போர் வீரனாக இருக்கிற காலங்களில் எப்படிச் சிற்சில நித்தியவாடிக்கைகளையும் பற்றுக்கோடான எண்ணங்களையும், சில ஆச்சார அனுஷ்டானங்களையும் லட்சியம் செய்யாமலும் ஒத்திவைத்தும் நடந்து கொள்கிறோமோ அதுபோல் திராவிடமும் திராவிடரும் விடுதலை பெறுகிறவரை அவைகளில் சிலவற்றை ஒத்திவைத்து அல்லது சிறிது தளர்த்தி

விட்டு விடுதலையில் கவலை கொள்ள வேண்டுமென்று முஸ்லிம் கிறிஸ்தவர் உள்பட எல்லா திராவிட மக்களையும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

## மற்ற சமயக்காரர்

கிறிஸ்தவ சமய உணர்ச்சியையும் முஸ்லிம்கள் சமய உணர்ச்சியையும் பார்த்தாவது திராவிடர்கள் நடந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்தவ சமய உணர்ச்சி கிறிஸ்தவர்களை இன்று உலகப் பார்வையில் எவ்வளவு உயர் நிலையை அடையச்செய்திருக்கிறது. அதுபோலவே இஸ்லாமியர்களை அவர்களது சமய உணர்ச்சி உலகத்திற்கு முன்பு எவ்வளவு மேன்மை நிலையை அடையச் செய்திருக்கிறது. ஜப்பானியர்களின் சமய உணர்ச்சி உலகத்தின் முன்பு அவர்களை எவ்வளவு மேல் நிலையை அடையச் செய்திருக்கிறது என்பவைகளை திராவிட மக்களில் பண்டிதர்களும் பாமரர்களும் எண்ணிப் பார்க்கவேண்டும், இவர்களது சமயங்களை இச்சமூகத்தார் எழுத்து காமா, புள்ளி தவறாமல் பின்பற்றி இருந்தால் இவர்களும் திராவிடர்களைவிட மிகக் கேவலமான நிலையில் தான் இருந்திருப்பார்கள். இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நாட்டார் சமூகத்தார் மானத்தோடும் மேன்மையாயும் மற்றவர்க்கு எவ்விதத்திலும் அடிமைகளாய், எத்துறையிலும் தாழ்மையாய் இல்லாமலும் வாழவேண்டும் என்பதையே சமயமாய் கொண்டு மற்றதையெல்லாம் கொஞ்சம் தியாகம் செய்து மூபற்சித்து வந்திருக்கிறார்கள். அதனாலேயே இன்று அவர்கள் தனித் தனி மானமுள்ள சமூகமாக சுதந்திரர்களாக வாழுகிறார்கள்.

எல்லோரும் கிறிஸ்தவர்களாகவே வாழும் மேல் நாட்டில் பைபிளுக்கு கருத்துரையும் புது வியாக்கியானமும் எழுதிக்கொண்டு அதன்படியே தான் நடந்துதீர

வேண்டும் என்று கிறிஸ்தவப் பண்டிதர்களோ பாதிரிமார்களோ செய்து வந்திருப்பார்களேயானால் இன்று கிறிஸ்தவர்களில் ஒருவருக்காவது வாயில் பற்களே இருந்திருக்காது. இடுப்பில் துணியே இருந்திருக்காது. ஏனெனில் அவர்களது சமயம் ஒரு கன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டச் சொல்லுகிறது. மேல் வேஷ்டியை கேட்டால் இடுப்பு வேஷ்டியையும் அவிழ்த்துக்கொடுக்கச் சொல்லுகிறது. அப்படிப்பட்ட சமயக்காரர்கள் இன்று அவரவர்கள்நாட்டையும் அன்னியர்நாட்டையும் ஆளுகிறார்கள். உலக நாகரீகத்துக்கும் அற்புதங்களை கண்டுபிடிப்பதற்கும் வழிகாட்டிகளாய், வாத்தியார்களாய் இருக்கிறார்கள். மேல் நாட்டில் நித்திய வாழ்க்கையில், வாழ்க்கை நடவடிக்கையில் சிறிதுகூட சங்கடமோ தாக்ஷணியமோ மனக்கசப்போ ஏற்படுவதற்கு இல்லாத மாதிரியில் திட்டங்கள் வகுத்துக்கொண்டு சுதந்திர வாழ்க்கை வாழ்கின்றார்கள். வாழ்க்கையின் சகல படிகளுக்கும் திட்டம் வகுத்து கடிகாரம் நடப்பதுபோல் நடந்து கொள்ளுகிறார்கள்.

அதுபோலவே இஸ்லாமியரும் குரானுக்கு வியாக்கியானம் செய்துகொண்டு தாடி எத்தனை அங்குலம், தலைமயிர் எப்படி, குல்லா எப்படி, சட்டை எப்படி என்பதைத் துருவிக்கண்டுபிடிப்பதை விட்டுவிட்டு, எப்படியிருந்தால் மனிதனாக வாழலாம் என்பதில் கவலைகொண்டு துருக்கி, ஆப்கானிஸ்தானம், பர்ஷியா, ஈஜிப்ட் முதலிய நாடுகள் மற்ற சமூகத்திற்கு அடிமையாகாமல் நாடு வாரியாய் சுதந்தரத்தோடு வாழுகிறார்கள். இந்தியாவிலும் ஒரு "தாடி இல்லாத இஸ்லாமே" தலைவராய் இருந்து தாங்கள் மைனாரிட்டியென்று சொல்லிக்கொள்ளக் கூடிய பயம் இல்லாமல் சுதந்திரத்தோடு தன்மானத்தோடு வாழ நிபந்தனை விதிக்க மற்றவர்களை திகைக்கச் செய்ய வசதியோடு இருக்கிறார்கள்.

அதுபோலவே ஜப்பான்காரரும் திராவிடத்தைவிட சிறிய நாடாயும் திராவிடர்களைவிட குறைந்த ஜனத்தொகைகொண்ட சமூகமாயும் இருந்தும் இன்று தனி அரசாங்க உலக வல்லரசுகளில் ஒன்றாக இருந்துகொண்டு தனக்கு நாற்புறமும் அதைவிட 3 பங்கு 4 பங்கு விஸ்தீரணமும் ஜனத்தொகையும் கொண்டதாக உள்ள நாடுகளை விரட்டி நடுக்கிக்கொண்டு சகல துறைகளிலும் முன்னேறிக்கொண்டு வருகிறது. ஒருபுறம் 18 கோடி ஜனமும், 81 லக்ஷம் மையில் விஸ்தீரணமும் கொண்ட ரஷியாவும், மற்றொருபுறம் 12 கோடி ஜனத்தொகை கொண்ட இரண்டு அமெரிக்கா கண்டமும் மற்றொருபுறம் 45 கோடி மக்களுக்கும் பலதேசத்துக்கும் கண்டத்துக்கும் சக்கரவர்த்தியாய் இருக்கும் பிரிட்டனும், தன்னை அடுத்தார்போல் 45 கோடி ஜனத்தொகையும் பரந்த நாடும் கொண்ட சைனாவும் எதிரிகளாக இருக்க சிறிதும் பயமில்லாமல் தலை நிமிர்ந்து நடக்கிறது; தற்காப்பில் வல்லரசாய் இருக்கிறது. இப்படிப்பட்ட இந்த நாடு தங்கள் சமயமாகிய புத்தர் சொன்ன அஹிம்சையைப் பிடித்துக்கொண்டு ஜாதகக் கதைகளுக்கு புது உரை எழுதிக்கொண்டு சின்னத்தோடு இருந்திருக்குமானால் அதன் கதி என்னவாயிருக்கும் என்பதை சொல்ல வேண்டியதில்லை அப்படி இருக்க திராவிடம் இவைகளைப் பார்த்து படிக்கவேண்டியவைகளை படித்துக்கொள்ள வேண்டாமா என்று யோசித்துப் பார்க்கும்படி மறுபடியும் பண்டிதர்களையும் பாமர மக்களையும் வேண்டிக்கொள்ளுகிறோம்.

இம்மாதிரியான ஒரு திராவிடர் ஆரியர் உணர்ச்சி என்று ஒன்று ஏற்பட்டிருக்கவில்லையானால் இப்பண்டிதர்கள் கதிதான் என்னாகி இருக்கும் என்பதையும் தயவு செய்து சிறிது சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக்கொண்டு இதை முடிக்கிறோம்.

இனி அடுத்த தலையங்கத்தில் ஆரியர் சமயம் என்பதுபற்றி விளக்குவோம்.

## V

தமிழ்நாடு தமிழருக்கே என்னும் தலைப்பில் இதற்கு முன் 4 தலையங்கம் எழுதியிருக்கிறோம். இது 5-வது தலையங்கமாகும். இதில் 'ஆரியர் சமயம்' என்பதுபற்றி எழுதுவதாக முன் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தபடி அதைப்பற்றிச் சிறிது எழுதுவோம்.

ஏன் எனில் ஆரியர்கள் இன்று 'இந்திய' நாட்டை எடுத்துக் கொண்டாலும் அல்லது திராவிட நாட்டை எடுத்துக் கொண்டாலும் 100க்கு மூன்று பேர்களாக ஜனத்தொகையில் இருக்கும் ஒரு வெகு சிறுபான்மைக் கூட்டத்தாராகிய அவர்கள் (ஆரியர்) எப்படி மற்ற உண்மையான 100க்கு 97 பேரான பெரும்பான்மை சமூகத்தாரையும் பெரும் பழம் வீரம் பொருந்திய அவர்களது நாட்டையும் சிறுபான்மையாக்கி அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று யோசித்துப் பார்த்தால் ஆரியர்களது சமயமும் சமயத்தின் மூலம் ஒற்றுமையும் தான் அவர்களுக்கு அதற்கு வேண்டிய சௌகரியத்தைக் கொடுக்க ஆதாரமாய் இருந்து வந்திருக்கிறது என்பதுடன் இன்றும் இருந்து வருகிறது. ஆதலால் அதை விளக்க ஆசைப்படுகிறோம்.

### ஆரியருடைய சமயம் என்ன?

ஆரியருக்கு சமயம் என்பதாக ஒரு குறிப்பிட்ட கொள்கை கொண்ட சாதனம் ஒன்றுமில்லை யென்பது யாவரும் அறிந்ததேயாகும் என்பது ஒருபுறமிருக்க, "ஆரியசமயம் இந்துமதம்" என்று சொல்லப்படுமானாலும், இந்து மதம் என்பதற்கும் ஒரு குறிப்பிட்ட கிளிப்த்தமான கொள்கையோ ஆதாரமோ கிடையாது என்பதும் ஆராய்ச்சியாளர் கண்டமுடிவாகும். ஆரியத் தந்திரசாலிகளும் ஆரியரல்லாதார் மீது த்வேஷம் கொண்டவர்களும்

அனாரியர்களை இழிவுபடுத்தியும், அடக்கியும் ஏமாற்றியும் கீழ்மைப்படுத்துவதற்கு ஆதாரமாக அவ்வப்போது சொல்லி வந்ததையும், எழுதி வந்ததையும் தொகுத்து கால தேச வர்த்தமானத்திற்கு ஏற்றபடி திருத்தியும், சில விஷயங்களை எடுத்தும், சில விஷயங்களைப் புகுத்தியும் அமைத்துக்கொண்டிருக்கும் ஆதாரங்கள் தான் இன்று ஆரியர்களின் சமய ஆதாரங்களாய் இருக்கின்றன. அவை பெரிதும் வேதம், சாஸ்திரம், சுருதி, ஸ்மிருதி, புராணம் இதிகாசம் முதலிய பெயர்களோடு இருந்தாலும் அவைகளில் பல ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமலும், ஒன்றுக்கொன்று முரண்பட்டதாயும் ஆபாசங்களும் அசம்பாவிதங்களும் அசாத்தியங்களும் நிறைந்ததாயும், புத்திக்கும் ஆராய்ச்சிக்கும் பகுத்தறிவுக்கும் பொருந்தாததாயுமே பெரிதும் இருந்து வருவதைக் காணலாம்.

இந்தக் காரணத்தாலேயே தான் ஆரியர்கள் தவிர மற்றவர்கள் அவைகளை படிக்கக்கூடாது என்றும், படித்தால் கொடிய தண்டனைகள் விதிக்கவேண்டும் என்றும், அவ்வாதாரங்களை எவனாவது படித்துவிட்டோ, கேட்டுவிட்டோ விவகாரம் தர்க்கம் செய்வானானாலும், நம்பாவிட்டாலும் அவனை நாஸ்திகன் என்று சொல்லி அரசன் தண்டித்து சமுதாயத்தை விட்டும், நாட்டைவிட்டும் விரட்டி அடிக்கவேண்டும் என்றும் எழுதி வைத்துக்கொண்டார்கள். இப்படிப்பட்ட நிபந்தனைகளும், தண்டனைகளும் அதை நிறைவேற்றத்தக்க அரசர்களும் வெகு காலம்வரை இருந்து வந்ததாலேயே அப்படிப்பட்ட ஆபாச அக்கிரம அவிவேகமான அவர்களது சமய ஆதாரங்கள் திராவிட மக்களுக்குள் பரப்பப்படவும் அதனால் ஆரியர்களுக்கு மேன்மையும், செல்வாக்கும் பெருகி நிலைத்து வரவும் இடமேற்பட்டதுடன், ஆரியரல்லாத மக்கள் எவ்வளவு பண்டிதர்களானாலும் அந்த ஆரியர் சமய ஆதாரங்களை பிரசாரம் செய்வதினால் மாத்திரமே வாழ முடியும்படியாகவும் இருந்து வந்திருக்கிறது.

## ஆரிய சமய ஆதாரம்.

உண்மையில் ஆரியர்களின் சமய ஆதாரங்களில் பெரும்பாலும் எதைப்பார்த்தாலும் ஒரு மனிதனால் சொல்லப்பட்டதாகவோ, உற்பத்திசெய்யப்பட்டதாகவோ காண்பது முடியாததாயிருந்தும் ஒவ்வொரு ஆதாரத்துக்கும் அதன் கர்த்தா தெய்வத் தன்மை பொருந்தியவனாகவும், அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமில்லாத அற்புத சக்தி பெற்றவனாகவும்தான் கற்பிக்கப்பட்டு இருப்பான்.

ஏனெனில் அப்படிக் கற்பிக்கப்பட்டால்தான் அந்த ஆபாச புளுகுக் களஞ்சியங்கள் நிலைநிற்க முடியும். அப்படிக்கில்லாமல் சாதாரண மனிதனால் செய்யப்பட்டதென்றால் "அது அவனுக்கு எப்படித் தெரியும், அது எப்படி முடியும்" "அத்தனை நாட்களாய் அவன் எப்படி இருந்திருக்கமுடியும்" என்பனபோன்ற கேள்விகள் பிறக்குமே என்கின்ற எண்ணத்தினால் "எழுதினவனும் சொன்னவனும் தெய்வத்தன்மை பொருந்தியவனானதால் அவனால் எழுதமுடிந்தது; ஆதலால் அதைப்பற்றி யாரும் தர்க்கிக்கப்படாது" என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள சொல்லலாம். அதிலும் திருப்திப் படுவதற்கு முடியாத கஷ்டம் ஏற்படுகிற விஷயங்களாய் இருந்தால் "கடவுளே சொன்னார், அசரீரியாய் பேசினார்" என்று தப்பித்துக் கொள்ள வசதியாயிருக்கும். ஆதலால் தான் ஆரிய சமய ஆதாரங்கள் முழுவதும் மனித சக்திக்கு மேம்பட்டவர்களால் சொல்லப்பட்டதாகவே அவற்றில் சொல்லப்பட்டு இருக்கும்.

புத்த மதமோ, கிறிஸ்துவ மதமோ, இஸ்லாம் மதமோ சம்பந்தப்பட்ட ஆதாரங்கள் அந்தப்படி இருக்காது என்பதோடு கூடுமானவரை மானுஷீகத்திற்கு உட்பட்டதாகவே இருக்கும். ஒன்று இரண்டு விஷயங்க

ளுக்கு தெய்வீகம் கற்பிக்கப் பட்டிருந்தாலும் அவை விவரிக்கக்கூடாது என்கின்ற நிர்ப்பந்த மிருக்காது.

குறிப்பாக இஸ்லாத்தில் முகமது நபி அவர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அவர் சொன்னவற்றிலோ, அவரது செய்கையிலோ மனிதத் தன்மைக்கு மீறியகாரியம் ஒன்றும் இருந்ததாகக் காணமுடியாது. குரான் வாக்கை கடவுள் உத்திரவால் தான் வெளியிடுவதாக சொல்லி இருக்கிறார். அது ஒரு சாதாரண விஷயம். ஏனெனில் ஒரு மனிதன் தான் செய்கிற, பேசுகிற, நினைக்கிற காரியம் எல்லாம் கடவுள் செயலால்தான் என்று கருதுவது ஆஸ்திகர்களுக்கு சர்வ சாதாரணமான காரியமே யாகும். ஆதலால் நபிபெருமான் தான் சொல்லும் விஷயங்களை கடவுள் அருளால் சொல்லுகிறேன் என்று சொன்னதில் அற்புதம் ஒன்றும் இருப்பதாக நாம் நினைக்கவில்லை. மற்றபடியும் அவர் எப்போதும் தன்னை மனுஷத்தன்மைக்கு மேம்பட்டவர் என்று சொல்லிக்கொண்டதாகவும் தெரியவில்லை. ஆரிய சமய ஆதாரம் பூராவுமே மனுஷத்தன்மைக்கு மேம்பட்டதாகவே காணப்படும்.

## புராண இதிகாசங்கள்

இவை தவிர ஆரியர்களுக்கு அவர்களது வாழ்வுக்கு வேத சாஸ்திர, ஸ்மிருதி சமய ஆதாரமென்று சொல்லிக் கொண்டாலும் அவர்களது வாழ்வுக்கு வழிகாட்டியாகவே அவைகளும் மற்றும் அவர்களது புராணங்கள் இதிகாசங்கள் ஆகியவைகளும் இருந்து வருகின்றன. இப்புராணங்களைத் தான் தங்களது சமய ஆதாரங்களாகக் கருதி ஆரியர்கள் நடந்து வருகிறார்கள்.

ஆரியப் புராண இதிகாசங்கள் ஒரு பெரும் சமூகத்தாரை சிறு சமூகத்தார் எப்படி ஏமாற்றிப் பிரித்து, சிறுபான்மையோராக்கி, தாங்கள் ஆதிக்கம் செலுத்துவது

என்பதற்கு ஏற்ற வழிகளேயாகும். அதைப் பின்பற்றி நடந்தே தான் இன்று ஆரியர்கள் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

எப்படி எனில் அப்புராண இதிகாசங்களில் ஒழுக்கம் இருக்காது. மானாபிமானம் இருக்காது, நாணயம் இருக்காது. எவ்வளவு இழிவான காரியத்தையும் செய்து காரியத்தை சாதித்துக்கொள்ள மார்க்கங்கள் இருக்கும், "பத்தியமே" கிடையாது. ஆனால் அவைகள் மகா நீதியாகவும் நேர்மையாகவும் உத்தமோத்தம ஒழுக்கமாகவும் பாசாங்கு செய்துகொள்ளும்.

உதாரணமாக ஆரியர்களின் காப்புக் கடவுளான அல்லது தலைவரான இந்திரனை எடுத்துக்கொள்ளுவோம். அவனிடத்தில் எங்காவது, எப்பொழுதாவது, ஏதாவது, ஒரு ஒழுக்கமோ, நாணயமோ இருந்ததாகச் சொல்ல முடியுமா? மற்றும் அந்தப் பதவிக்கு வா முயற்சித்தவர்களை எவ்வளவு அக்கிரமமான இழிவான காரியங்கள் செய்து தோற்கடிக்கப்பட்டு இருக்கிறது. வெளிப்படையாய் சொல்லவேண்டுமானால் பெண்டுகளைவிட்டு காமமூட்டி ஏமாற்றச் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி எல்லாம் எந்த ஆரியராவது வெட்கப்படுகிறார்களா? அதற்கு பதிலாக பண்டிகை அல்லவா கொண்டாடுகிறார்கள்.

ஆகவே ஆரியர்கள் தங்கள் காரியங்களை சாதித்துக் கொள்ள இப்பேர்ப்பட்ட மற்றும் எப்படிப்பட்டவுமான காரியங்களை கையாடலாம் என்பதற்கு அவர்களது கடவுள்களும், அக்கடவுள்களின் செய்கைகளும் கொண்ட கதைகளே ஆதாரமாகும். மற்றும் அக்கடவுள்களும் செய்கையும் எவ்வளவு ஒழுக்க ஈனமாய் இருந்தாலும் அதை குறைகூறக்கூடாது, வெட்கப்படக் கூடாது என்கின்ற கட்டுப்பாடு அவர்களுக்கு மற்றொரு நல்ல வழிகாட்டியாகும்.

ராமாயணத்தை எடுத்துக் கொள்வோம். அதில் ஆரியர்கள் எதிரியாகிய ராவணன் எவ்வெவ்வகையில் ஏமாற்றப்பட்டிருக்கிறான், வஞ்சிக்கப்பட்டிருக்கிறான், ஆரியத் தலைவனான ராமன் எவ்வளவு தந்திரம், சூழ்ச்சி, கொடுமை முதலியவைகள் செய்திருக்கிறான் என்பவை ஆரியர்கள் வாழ்வுக்கு மற்றொரு வழிகாட்டியாகும். அதில் தான் எதிரியை எப்படி எப்படி ஒழிப்பது என்பதற்கு நல்ல மார்க்கங்கள் காட்டப் பட்டிருக்கின்றன. அதைப் பின்பற்றுவதாலும், அவர்கள் எவ்வளவு பெரிய எதிரியானாலும் சுலபத்தில் அடக்கி வெற்றி கொள்ள முடிகிறது.

ஆரியத் தலைவர்கள் பெரியார்கள், ரிஷிகள், முனிவர்கள் முதலியோரது நடவடிக்கைகள் எப்படி இருந்திருக்கின்றன என்று பார்த்தால் அதுவும் ஒரு ஆபாசக் களஞ்சியமாய்த்தான் இருக்கிறது. அவர்கள் ஆதாரப்படி எது விபசாரம், எது கற்பு என்பது கண்டுபிடிக்க முடியாததாகவே காணப்படும். இன்னும் பார்க்கப் போனால் அனேக ஆரியப் பெரியார்கள் மனிதர்களுக்கு மக்களாயில்லாமல் மிருகங்கள், பக்ஷிகள், மச்சங்களுக்கு பிறந்திருப்பார்கள். மற்றும் பார்க்கப்போனால் ஆணுக்கு ஆண் சங்கமத்தின் மூலம் சந்ததியும், சங்கமமே இல்லாமல் சந்ததியும், உற்பத்தியும் ஆகிய இவைகளும், இது போன்ற இன்னும் பலவும் கடிவாளம் இல்லாத குதிரை மாதிரி, அவர்கள் எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ள அனுமதியளிப்பதாகக் காணப்படுவதை பார்க்கலாம். இவை நடந்திருக்காது என்பது நமது துணிவானாலும், அவர்களது வாழ்க்கை மேன்மைக்கு ஆக கற்பித்துக்கொண்ட கற்பனைகளில் இந்த ஆபாசங்களையும், அசம்பாவிதங்களையும் லக்ஷியம் செய்யாமல் காரியமே கண்ணாயினர் என்பதற்கு அனுகூலமான வழிகாட்டி ஆதாரங்கள் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்

பதைக் காட்டவாவது இவைகளை குறிப்பிடுகின்றோம். இதனாலேயே ரிஷி மூலம் நதி மூலம் பார்க்கக்கூடாது என்கின்ற நிபந்தனையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஆரிய சமய ஆதாரங்கள் ஆரியர்களுக் காரியம் சாதித்துக்கொள்ள ஆரியர்களால் பயன் படுத்திக்கொள்ளப் படுவதாலேயே ஆரியர் மேன்மைக்கு அவர்களது சமய ஆதாரங்கள் மிகுதியும் வழிகாட்டியாய் இருந்து பயனளித்து வருகின்றன.

ஆனால் ஆரியரல்லாத திராவிட மக்களாகிய நாம் ஒரு பாவமும் அறியாமல்இந்த ஆபாசச் சூழ்ச்சி ஆதாரங்களைத் தலைமேல் போட்டுக்கொண்டு நாமும் அதற்குக் கட்டுப்பட்டவர்கள் என்றும், நமக்கும் அது பொருத்தமானது தான் என்றும் சொல்லிக்கொண்டு, நம்முடைய நன்மைகளையும், மேன்மைகளையும் சிறிதும் லக்ஷியம் செய்யாமல் நமது காரியங்களுக்கு நாம் அப்படியெல்லாம் நடக்க பயப்பட்டுக்கொண்டு, வெட்கப்பட்டுக் கொண்டு ஆரியர்களுக்கு நாம் பயன்பட்டு நாட்டையும் அவர்கள் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் முன்னேற்றமும் மேன்மையும் அடையும்படியாக நடந்து கொள்ளுகிறோம்.

இவை கூடாது என்பதற்கு ஆகத்தான் சகல துறைகளிலும் திராவிடம் திராவிடர்க்கே என்கின்றோமே ஒழிய வேறில்லை.

இந்த, தலையங்கத்துடன் தமிழ்நாடு தமிழருக்கே என்ற தலைப்பில் 5 தலைப்புகளும் ஆகிவிட்டன. வாசகர்களுக்கு சலிப்புத்தட்டி இருக்கலாமோ என்கின்ற பயம் ஏற்பட்டுவிட்டதால் இப்போதுஇத்துடன் முடித்துக் கொள்ளுகிறோம்.

இனி இது விஷயமாய் வெளியிடப்பட வேண்டிய விஷயங்கள், இத்தலைப்புச் சேதி விளக்குவதற்கென்றே விடுதலையில் ஒரு பக்கம் ஒதுக்கி வைக்க உத்தேசித்திருப்பதால் அதில் அடிக்கடி எழுதி வரப்படலாம்.

முடிவாக ஒன்று சொல்லி இதை முடிக்கிறோம். அதாவது "திராவிடம் திராவிடருக்கே" என்று திராவிட எல்லையுடன் திராவிட மக்கள் ஆதிக்கத்தில் இருந்திருக்குமானால், அரசியலில் இன்று சென்னை மாகாண சர்க்காரிலே மாதம் 35ரு சம்பளத்துக்கு கீழ்ப்பட்ட கீழ்த்தர வேலை உத்தியோகம் 49995-ல் ஆரியர்களுக்கு 1513 போக பாக்கி 48482 அடிமை சேவக உத்தியோகங்களுக்கு திராவிடர்கள் ஆளாக இருக்கவும், மேல்தர உத்தியோகம் அதாவது மாதம் 1000, 5000 சம்பளம் பெறும் அதிகார நிர்வாக உத்தியோகம் 1000-ல் 600 உத்தியோகம் ஆரியருக்குக் கிடைத்திருக்கவும் முடியுமா? இவ்வுத்தியோகங்களைக் கொண்டு ஆரியர் வகுப்புக்கு ஆதரவு காட்டி ஆரியர்கள் அத்தனைபேரும் உயர் நிலையிலும் திராவிடர்கள் அத்தனைபேரும் கீழ் நிலையிலும் ஆரியருக்கு பயந்தும், ஆரியருக்கு அடிமையாகவும் இருந்திருக்க முடியுமா என்பதை சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொண்டு முடிக்கிறோம்.

**தமிழ் நாடு தமிழருக்கே!**

# தமிழர்கள் என்பதுபற்றி
# பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள்
# சொற்பொழிவு.

11—1—42-ல் ஞாயிற்றுக்கிழமை திருவள்ளூர் நன்னெறிக் கழகத்தில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் செய்த பிரசங்கத்தின் சாராம்சம்.

தலைவர் அவர்களே! தோழர்களே!!

இன்று இங்கு "தமிழர்" என்பதுபற்றிப் பேசக் கிடைத்த சந்தர்ப்பத்தைப்பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நன்னெறிக் கழகத்தில் வகுப்பு சம்பந்தமாகவும் அரசியல் சம்பந்தமாகவும் பேசக்கூடாது என்ற நிபந்தனை இருப்பதாக தலைவரும், காரியதரிசியும், தெரிவித்தார்கள். வகுப்புப் பேச்சும், அரசியல் பேச்சும் அவ்வளவு கெட்ட பேச்சு என்று அவர்கள் கருதி இருக்கிறார்களோ அல்லது அது இரண்டும் நன்னெறிக்குச் சம்பந்தமில்லாதது என்று கருதி இருக்கிறார்களோ தெரியவில்லை. அன்றியும், வகுப்புப் பேச்சும், அரசியல் பேச்சும் இல்லாததால்தான் இந்த நன்னெறிக் கழகம் இந்த பதினொரு வருஷங்களாக உயிர் வைத்துக்கொண்டு இருக்கிறதோ என்றும் தெரியவில்லை.

ஆனால், இன்று நாட்டில் எங்கு பார்த்தாலும் வகுப்புப் பேச்சாகவும் அரசியல் பேச்சாகவும்தான் இருக்கிறது. அதிலும் சமீபகாலம் தொட்டு அரசியலைவிட வகுப்புப் பேச்சே எங்கும் தீவிரமாய் நடைபெறுகிறது. நானோ வகுப்புப் பேச்சிலும், அரசியல் பேச்சிலுமே பெரிதும் ஈடுபட்டிருப்பவன். இந்நிலையில் நான் இந்த

கிபந்தனையில் சொற்பொழிவாற்றுவது எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும், என்றாலும் நான் பேசவேண்டு மென்று கேட்டுக்கொண்ட விஷயமும், நான் ஒப்புக் கொண்ட விஷயமும், "தமிழர்கள்" என்பதுபற்றி ஆத லால், அந்தத் தலைப்பே வகுப்பு சம்பந்தமானதாயிருக் கிறது. என்பதோடு,

இப்போது ஆண்டு விழாத் துவக்கத்தில், தமிழர் வணக்கம் கூறிய தோழர் "ஆரியம்போல், உலக வழக் கழிந்தொழிந்து சிதையா? உன் சீர் இளமைத் திறம் வியந்து" என்று கூறினார்.

அன்றியும், காரியதரிசி அவர்கள் படித்த வருடாந் திர அறிக்கையில், தமிழர்கள், தமிழ்மொழி, தமிழர் கலை, தமிழ் இசை, தமிழர் வாழ்க்கை முதலியவைகளைப்பற்றி இச்சங்கத்தில் சுமார் பத்து, இருபது சொற்பொழிவு இந்த ஒரு வருஷத்தில், பல அறிஞர்களால் நடத்தப்பட் டிருப்பதாகவும் தெரிந்தது.

தலைவர் அவர்களும், நான் "தமிழர்கள்" என்பது பற்றிப் பேசுவேன் என்று சொன்னார். ஆகவே இவற்றி லிருந்து தமிழர், ஆரியர், மற்றவர் அவர்களது தன்மை என்று பேசுவது வகுப்பு சம்பந்தமான பேச்சு அல்ல என்பதாகத் தெரிகிறது.

குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி எனக்குப்பட்டதைச் சில சொல்லுகிறேன்.

## "திரு இடம்" — "திராவிட"மாக மாறியது!

தோழர்களே! நான் "தமிழர்கள்" என்பது பற்றிப் பேசுவது, திராவிடர்கள் என்பது பற்றியேயாகும். திரா விடம் என்றாலும் தமிழ்நாடு என்றாலும் ஒன்றுதான்!

இது சரித்திர ஆராய்ச்சிக்காரர் முடிவாகும். திராவிடம் என்கின்ற பேச்சே தமிழ் வார்த்தையாகும். எப்படி எனில், திரு இடம் என்பதுதான் திருவிடமாகி, திராவிடம் என்பதாக ஆகிவிட்டது. தமிழர்கள் திரு என்கின்ற வார்த்தையை ஒரு மேன்மை அணியாக ஒவ்வொன்றுக்கும் உபயோகிப்பது வழக்கம்.

வடவர்கள் எப்படி ஸ்ரீ என்பதை ஒவ்வொரு வார்த்தைக்கும் முன்னால் உபயோகிக்கிறார்களோ அதுபோல் தென்னவர்கள் திரு என்பதை உபயோகிக்கிறார்கள். திருப்பதியை திருமலை என்கிறோம். ஆரூரை திருவாரூர் என்கிறோம்; ஐயாறை திருவையாறு என்கிறோம். அது போல் தமிழர் வாழ் இடம் முழுமையும் திருஇடம்—திருவிடம் என்கிறோம். இது வடமொழி உச்சரிப்பால் திராவிடமாகிவிட்டது. தமிழ் என்றால் இனிமை. இனிமைக்கு மேன்மை தருவது இயற்கையல்லவா! ஆதலால் நான் யோசித்தவரை இதைத்தவிர திராவிடம் என்கின்ற வார்த்தைக்குக் காரணம் எனக்குத் தோன்றவில்லை.

நமது பண்டிதர்கள் பலர், “தமிழ் என்பது த்ரமிளமாகி, திரமிழமாகி, திராவிடமாகி விட்டது” என்று சொல்லுவதுண்டு. ஆனால் ஒரு வார்த்தையானது 4, 5, தடவை மாறி இருக்கும் என்பதைவிட, நான் சொல்லுகிறபடி ஒரே மாற்றம் தான் ஆகியிருக்கலாம் என்பது மிகப் பொருத்தமாக இல்லையா? அது எப்படி இருந்தாலும் சரி; திராவிட நாடு, திராவிட மொழி, திராவிட மக்கள் என்பவற்றை தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ் மக்கள் என்ற கருத்தில் தான் வழங்குகிறார்கள். ஆதலால் திராவிடர் என்பவர் தமிழரே ஆவார்கள். அதனாலேயே திராவிடர்கள் என்று பேசுகிறேன்.

## திராவிட நாட்டின் எல்லை—சரித்திரம் கூறும் உண்மை.

திராவிடர் என்பது நாட்டைப் பொறுத்தே ஏற்பட்ட பெயராகும். ஒவ்வொரு மக்களுக்கும் நாட்டைப் பொறுத்தும் மொழியைப் பொறுத்தும் தான் பெயர் வருகிறது-மலையாளிகளுக்கு மலைப்பாங்கைப் பொறுத்து அந்தப் பெயர் வந்தது. இந்த முறையில் பார்த்தோமானால், திராவிடநாடு, தமிழ்நாடு என்பது மேன்மையையும், இனிமையையும்பொறுத்து ஏற்பட்ட பெயராகும். ஆனால் நம் திராவிட நாடானது நாம் இன்று கூறும் எல்லையை மாத்திரம் கொண்டதல்ல! இட்லர் சொல்லுகிறபடி நாட்டு எல்லை, கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதல்ல; மக்களால் சிருஷ்டிக்கப்படுவது. திராவிட மக்கள் ஒரு காலத்தில், திராவிடநாட்டு விஸ்தீரணமாக இன்றைய இந்தியா முழுவதையும் கொண்டு இருந்தார்கள். திராவிட நாட்டுக்கு வட எல்லை இமயமலை! மற்ற மூன்று புறத்துஎல்லை பெரிதும் சமுத்திரம்!! இப்படி இருந்ததற்கு ஆதாரம் *இதோ பாருங்கள், இந்த இந்திய சரித்திர பூகோள படப் புத்தகத்தில்!! இன்றுள்ள இந்தியா படத்தை போட்டு இதற்கு திராவிடம் என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள்!!! இது கிறிஸ்து பிறப்பதற்கு 2,500 வருஷங்களுக்கு முன் வரையில் இருந்து வந்த பெயராகும். சரித்திரக்காரர்கள் இன்றைக்கு 8000 வருடத்துக் காலம்வரைதான் சரித்திரம் கண்டுபிடித்து இருக்கிறார்கள். அதில் கிறிஸ்து பிறப்பதற்கு 2000-வருடத்துக்கு முன் முதல் கி. மு. 6000-வருடம்வரை கண்டு பிடித்த சரித்திரப்படி, "இந்தியா" திராவிட நாடாக இருந்திருக்கிறது. இதில் இருந்த மக்கள் திராவிடர்களாகவே இருந்திருக்கிறார்கள். இதோ ஆராய்ச்சியா

---

* An Atlas of Indian History என்னும் பூகோளப் படப்புத்தகம்.

ளச் குறிப்புப் பாருங்கள். மற்றும் ஹரப்பா—மகஞ்சோ தாரோ முதலிய இடங்களில் ஏற்பட்ட, புதிய கண்டு பிடிப்புகள் மூலமும், இந்தியா முழுவதும் திராவிட எல்லைக்கு உள்பட்ட விஸ்தீரணம் என்பது கல்லுப்போல் உறுதியாகிவிட்டது.

## "திராவிடம்" அழிந்த அநீதி.

இப்படிப்பட்ட இந்த திராவிடம் அன்னியர்கள் பிரவேசத்தால், சிறிது சிறிதாக மாற்றமடைந்து குறுகி வந்திருக்கிறது. அதுவும் ¶ இதோ இந்த சரித்திரம் பார்த்தால் தெரியும்.

முதலில் திராவிட நாட்டில் புகுந்த அன்னியர், ஆரியர்களே ஆவார்கள். இதை நான் என் உத்தேசப்படி சொல்லவில்லை. இன்று எல்லோராலும் ஒப்புக்கொண்டதும், ஆரியர்களாலேயே எழுதப்பட்டதுமான அனேக ஆதாரங்களைக் கொண்டே சொல்லுகிறேன்.

### சரித்திரம்.

நீங்கள், இன்று உலக சரித்திரம் அல்லது இந்திய தேச சரித்திரம் என்கின்ற எந்தப் புத்தகத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். அது ஐரோப்பியன் எழுதியிருந்தாலும் சரி, இந்தியன் எழுதியிருந்தாலும் சரி, அல்லது ஆரியன் எழுதியிருந்தாலும் சரி, திராவிடன் எழுதியிருந்தாலும் சரி, * இதோ உங்கள் முன் இந்த 5, 6 சரித்திரப் புத்தகங்களை வைக்கிறேன்; இவைகள் ஐரோப்பாவிலும், இந்தியாவிலும், தமிழ் நாட்டிலும் பிர

¶ Indian Histarical Readders. என்னும் புத்தகம்.

* இந்துதேசச் சரித்திரப் பாட புத்தகங்கள் 5, 6-ஐ. ஆதாரமாகக் காட்டினார்.

சரிக்கப் பட்டவைகளாகும். இவற்றுள் பகுதிக்குமேல் ஆரியர்களே எழுதி, சர்க்கார் ஒப்புக்கொண்டு, ஆரியர்கள் பெரிதும் கொண்ட "டெக்ஸ்ட் புக் கமிட்டி" யினரால் அனுமதிக்கப்பட்டு 1-வது வகுப்பு முதல் எம். ஏ. வகுப்பு வரை பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாட புத்தகங்களாக வைக்கப் பட்டவைகளாகும்.

இவற்றில் எதை எடுத்துக் கொண்டாலும் சரி, இந்தியா என்றால் முதல் பக்கத்தில் அல்லது முதல் பாகத்தில் 'திராவிடர்' என்றும், 2-வது பக்கத்தில் அல்லது 2-வது பாகத்தில் "ஆரியர் என்றும் எழுதியிருப்பதைப் பாருங்கள். இது எதற்காக எழுதப்படுகிறது? ஒரு நாட்டு சரித்திரத்தை எடுத்துக் கொண்டால், அதன் பூர்வ குடிகள்தான் முதலில் குறிக்கப்படுவார்கள்.

எனவே, இந்தியா என்பது முதலில் திராவிடமாய் இருந்தது. அதில் பூர்வ குடிகள் என்பவர்கள் திராவிடர்களாய் இருந்தார்கள் என்பதைக் குறிக்கின்றது.

## இந்தியா என்கின்ற பெயர்.

பிறகு இதற்கு இந்தியா என்றும், இந்தியர்கள் என்றும் பெயர் எப்படி வந்தது? என்பதைப் பாருங்கள்.

இந்த சரித்திரத்தின் அடுத்த பக்கத்தில் பாருங்கள்; "ஆரியர்களும் அன்னியர்களும் திராவிடத்திற்கு ஆப்கானிஸ்தானத்தின் வழியாகவும், பிரம்மபுத்திரா நதியைக் கடந்தும் வந்தார்கள்" என்றும், அவர்கள் வந்ததும் சிந்து நதிக்கரையில் தங்கினார்கள் என்றும், அதனால் அவர்கள் சிந்தியர்கள் என்று அழைக்கப்பட்டு, பிறகு அது இந்தியர்கள் என்று ஆகிவிட்டதென்றும் அதிலிருந்து அவர்கள் இருக்கும் நாட்டையும் இந்தியா என்று சொல்லப்பட்டு

விட்டதென்றும் இந்தப் பெயர்கள் ஆரியரல்லாதவர்களால் கொடுக்கப்பட்டன என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

"பிறகு, ஆரியர்கள், திராவிடர்களைப் பலவிதத்தில் தொல்லை கொடுத்து, அவர்களை வடக்கே இருந்து, தெற்குப் பக்கமாகத் துரத்தினார்கள்" என்றும், திராவிடத்தின் வடபாகம் எல்லாம் ஆரியர்கள் குடியேறி நிரம்பி விட்டார்கள் என்றும், அங்கு எஞ்சியிருந்த திராவிடர்களையும், ஆரியர்களுக்குக் கட்டுப்படும்படி செய்து விட்டார்கள் என்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இவையெல்லாம் பெரிதும் இந்திய சரித்திரமாக கலாசாலைப் பாடப் புத்தகமாக இருக்கின்ற புத்தகங்களே யாகும்.

## சைவக்கடவுள் வெற்றி கொண்டதாம்!

இதோ, இந்த இந்திய *சரித்திரப் புத்தகத்தைப் பாருங்கள்; "முதல் போர்" என்ற தலைப்பில், "கந்த புராணம் ஆரியர்—திராவிடர் சண்டையை சித்தரித்து எழுதிய கதையாகும்" என்றும் "ஆரியர்—திராவிடர் முதல் போரானது "சிவனார் என்கின்ற இமயமலையில் இருந்த ஒருவர், தனது மகன் சுப்பிரமணியன் என்பவனை இலங்கைக்கு நெடுந்தூரத்தில் இருந்த ஒரு தீவில் இருந்த ஒரு சூரன் என்பவனுடனும் அவன் தம்பி தாரகன் என்பவனோடும் சண்டை செய்யச் செய்தார்" என்றும், "சுப்பிரமணியன் வேல் முதலிய ஆயுதங்களால் வெற்றிபெற்றான்" என்றும் எழுதி இருப்பதைப் பாருங்கள்.

## வைணவக்கடவுள் வெற்றி கொண்டதாம்!

அதற்கு அடுத்தாற்போல் இராமாயணப் போரைப் பற்றியும் இதேமாதிரி எழுதியிருக்கிறது. ராமன் என்பவன் ராவணன் என்பவனை வெற்றி கொண்டானாம். இவற்றால் கடைசியாக தென்பாகந்தான் மீதியாகித் தங்களை திராவிடரென்றும், தமிழரென்றும் தங்கள் நாடு

திராவிட நாடென்றும் அறிந்த மக்கள் இன்னமும் சிலர் இருக்கிறார்கள்; இந்த சிறுபாகம்தான் இன்று திராவிட நாட்டையும், திராவிட மக்களையும் நினைப்பூட்ட அடையாளமாக இருக்கிறது. ஆனால், நாம்தான், நம்மைப் பற்றிய சரித்திரமும், யோக்கியதையும் அறியாமல் நம் எதிரிகளைக் குருமார்களாகவும், தலைவர்களாகவும், கடவுள்களாகவும் கருதிக்கொண்டு நமக்கும் நம்நாட்டுக்கும், எதிரிகளாயிருந்தவர்கள் — இருப்பவர்கள் பெயுரைச் சொல்லிக்கொண்டு ஈனத்தனமாய் நடந்துகொண்டு வருகிறோம். அதாவது நம்நாட்டுக்குப் பெயர் பாரதநாடு என்றும், நமக்குப் பெயர் பாரத மக்கள் என்றும் சொல்லிக்கொள்ளுகிறோம். இது நம் எதிரிகள் வைத்துக் கொண்ட பெயராகும்.

இப்படிப்பட்ட மூடமக்கள், உலகில் வேறு எங்கும் இருக்கமாட்டார்கள். இன்றுகூட இவைகளையெல்லாம் படித்தும் தெரிந்தும் உள்ள மக்கள் ஆகிய தமிழர்கள் தங்கள் நாட்டைப் பற்றியோ, சமுதாயத்தைப் பற்றியோ, மொழியைப் பற்றியோ, மானத்தைப் பற்றியோ போதிய கவலை இல்லாமல் பெரிய தேசாபிமானிகள்போல் நடக்கிறார்கள்.

மனிதர்களுக்கு முன்னேற்ற உணர்ச்சி சுதந்திர உணர்ச்சி வேண்டுமானால், அவர்களுக்கு தங்கள் நாடு, சமுதாயம், மொழி, கலை முதலிய உணர்ச்சி இருந்தால் தான் ஏற்படும். அவை ஒன்றும் தமிழனுக்கு இல்லை. தமிழனது நாடு இன்று தமிழ்நாடு ஆகும். தமிழனது சமுதாயம், தமிழர் சமுதாயமாகும். தமிழனது மொழி தமிழாகும். அப்படி இருக்க தமிழ்நாடு என்பது இன்று, சித்திரத்தில் இல்லாமல் செய்யப்பட்டாய்விட்டது. தமிழ் நாளுக்கு நாள் மறைந்துகொண்டே வருகிறது. தமிழர் சமுதாயமோ அடியோடு ஆரியமயமாகி வருகிறது.

## "பாரத நாடு" என்றோம்! "மரபு" சிறப்பை மறந்தோம்!!

இந்நிலையில் தமிழர் கதி எப்படி இருக்கிறது? என்று பாருங்கள். சமுதாயத்தில் தமிழன் சூத்திரனாக வேசி மகனாக ஆகிவிட்டான்; அது மாத்திரமல்லாமல், தமிழன் ஆரியனால் தீண்டப்படாதவனாக, நடத்தப்பட்டு வருகிறான்.

கோவில்களில், ஓட்டல்களில் தமிழனுக்கு சரி உரிமை இல்லை; பல தமிழர்களுக்குப் பிரவேசமே இல்லை. இது எந்தத் தமிழனுக்குத் தெரியாது? எந்தத் தமிழனாவது இதைப்பற்றி கவனிக்கிறானா? என்று பாருங்கள். "பாரத நாடு சுயராஜ்யம் பெற வேண்டும்; பாரத மக்கள் விடுதலை பெறவேண்டும்" என்று கூப்பாடு போடுகிறானே ஒழிய, தமிழன் மனிதனாக வாழ வேண்டாமா? மானத்தோடு வாழ வேண்டாமா? என்கின்ற கவலை இல்லவே இல்லை. தமிழ் மொழியை ஆரியர் தாழ்த்தி அழுத்திவிட்டார்கள். ஆனால் தமிழ் மொழி வல்லுனர்களில் பலர் ஆரியக் கூலிகளாகப் இருக்கிறார்கள்.

பாரத நாடு, பாரத மக்கள், பாரத பாஷை என்பதற்கும் தமிழருக்கும் ஏதாவது சம்பந்த மிருக்கிறதா? எங்காவது சம்பந்த ஆதாரமிருக்கிறதா? தன்னைப் பற்றியோ தனது மரபைப் பற்றியோ, தனது மொழியைப் பற்றியோ, மானாபிமானத்தைப் பற்றியோ கவலை இல்லாத சமுதாயம் எப்படி முன்னுக்கு வரும்?

## ஐரோப்பியனைப் பாருங்கள்! ஆற்றல் உணர்ச்சி கொள்ளுங்கள்!!

இந்தியா என்று பேசுகிறோம், இந்தியர் என்று பாடுபடுகிறோம். ஐரோப்பியனைப் பாருங்கள். ஐரோப்

பாவைப் பற்றி எந்த ஐரோப்பியனுக்காவது கவலை இருக்கிறதா? ஜெர்மனியைப் பாருங்கள்; ஆங்கிலேயரைப் பாருங்கள்; மற்றும் ஐரோப்பிய சிறிய நாட்டாரையும் பாருங்கள்; அவர்களில், எவன் வாயிலாவது ஐரோப்பா, ஐரோப்பியன் என்கின்ற பேச்சோ, உணர்ச்சியோ வந்ததாகக்காட்டுங்கள், பார்ப்போம்! ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்சு என்றுதான் நாட்டுப் பேச்சும், மொழிப் பேச்சும், மக்கள் பேச்சும் பேசுவார்கள். அந்த மாதிரி உணர்ச்சிதான் கொண்டு இருக்கிறார்கள்; அதனால்தான் அந்த நாடுகள் இவ்வளவு பிரசித்தமாகவும், இவ்வளவு மேன்மையாகவும் இருந்து வருகின்றன! அவர்கள் தங்கள் நாட்டில் சுதந்திரத்தோடு இருந்து கொண்டு நம்மை ஆட்கொள்ள ஒருவருக்கொருவர் போரிட்டுக்கொண்டு மடிகிறார்கள். அப்படிப்பட்ட உணர்ச்சி இல்லாமல் இருந்தால் அவர்கள் நம்மைப்போல் மற்ற நாடுகளுக்குள் ஐக்கியப்பட்டு, படத்தில்கூட உருவில்லாமல் போய்விட்டிருப்பார்கள்.

இன்று நடக்கும் பெரிய போர், எதற்காக நடக்கின்றது? தன் தன் நாட்டையும், சமுதாயத்தையும் மொழியையும் காப்பாற்றுவதற்கும் விஸ்தரிப்பதற்குமே யொழிய வேறென்ன? ஐரோப்பாவைக் காப்பாற்றவா?

எனவே ஒரே மதம், ஒரே பழக்க வழக்க நடை உடை பாவனை உணவு உள்ள ஐரோப்பிய மக்கள், இன்று தங்கள் தங்கள் நாட்டின் மொழியின் பேரால், அடியோடு ஒழிந்து போனாலும் சரி என்று போராடி, தங்கள் நாட்டை சமுதாயத்தைக் காப்பாற்றவும் மேன்மைப் படுத்தவும் தங்களைச் சுரண்டுகிறவர்களையும் தங்களை அடக்கி ஒடுக்கி இழிவு படுத்துகிறவர்களையும் ஒழிப்பதற்குப் போராடுகிறார்களே ஒழிய ஐரோப்பியனாயிற்றே, கிறிஸ்தவனாயிற்றே என்று ஐரோப்பியர் எந்த ஐரோப்பிய நாட்டாரிடமாவது இணங்கி இருக்கிறார்களா?

ஜெர்மனியர்களின் வீரத்துக்குக் காரணம், ஜெர்மனி என்கின்ற தேசிய மொழி உணர்ச்சியும், ஜெர்மனியர் என்கின்ற சமுதாய உணர்ச்சியும் தானே? தமிழனுக்கு எங்காவது அந்த உணர்ச்சி இருக்கின்றதா?

## ஜெர்மனி என்றால்—ஜெர்மனி பாஷையை தவிர வேறு என்ன அடையாளம்! தமிழன் என்ன செய்கிறான்?

தமிழர் தமது ஆரிய எதிரிகளையும் தங்கள் சமுதாயத்தை அழித்து ஒழித்த ஈனப்படுத்தியவர்களையும் கோவில் கட்டி கடவுளாக வணங்குகிறார்கள்.

ஜெர்மனியன் தனது சமுதாயத்தை அடக்கிஒடுக்கியவனை, உலகத்தில் இல்லாமல் செய்வது, அல்லது அடிமை கொள்ளுவது அல்லது தானாவது ஒழிந்துபோவது; என்று போராட்டம் செய்கிறான். தமிழனை அன்னியன் செய்ததுபோல் ஜெர்மனியரை, ஐரோப்பியரில் யாரும் அப்படிச் செய்யவில்லை. ஆனால், அவனுக்கு வேண்டிய சவுகரியமில்லை என்றும், ஐரோப்பியரில், மற்றவர்களுக்கு உள்ள சுதந்திரம் தனக்கு இல்லை என்றும் கருதிக் கொண்டு அதற்காக இவ்வளவு செய்கிறான். ஆனால், தமிழன் தன் நாட்டிலே வந்து குடியேறின அன்னியனுக்கு உள்ள உரிமையும், சவுகரியமும் தனக்குஇல்லையே என்கின்ற ரோஷமும், மானமும்கூட இல்லாமல், எதிரிக்கு "அனுமாராக" இருக்கிறான்.

## அன்னியன் சுரண்டிச் செல்லும் நாடு— "தற்குறி" தன்மை வாய்ந்த நாடு தமிழ்நாடு!

தமிழன், ஏன் சமுதாயத்தில் 4வது 5வது ஜாதியாக இருக்கவேண்டும்? தமிழ் மகள் ஏன் சூத்திரச்சியாய்,

தாசியாய், அன்னியனுக்கு வைப்பாட்டியாய் இருக்க வேண்டும். தமிழன் ஏன் 100-க்கு 90-பேர் தற்குறிக ளாக இருக்கவேண்டும். தமிழன் ஏன் பியூன் உத்தி யோகத்திலும், தெருக் கூட்டும் வேலையிலும், கக்கூசு எடுக்கும் வேலையிலும் 100-க்கு 100-பேர்கள் தமிழர்க ளாகவே இருக்கவேண்டும்? தமிழ்நாட்டில் எல்லா செல் வங்களும் இருந்தும் தமிழன், ஏன் இந்த நாட்டில் பிழைப்பு இல்லாமல் வெளி நாட்டுக்குக் கூலிகளாகப் போகவேண்டும்? தமிழ் நாடு ஏன் மற்ற எல்லா நாட்டா னும் வந்து சுரண்டிக்கொண்டு போகும் கேள்வி கேட்பா ரற்ற மடமக்கள் நாடாக இருக்கவேண்டும்?

இந்த நிலை உள்ள நாடு உலகத்தில் எங்காவது இருக்கிறதா? இந்தியாவில் எங்காவது இருக்கிறதா? தமிழர்களுக்கு இது தெரியவில்லை என்றால், தமிழ் "தேசிய" வாதிகளுக்கும் இது தெரியவில்லை என்றால், தமிழனுக்கு மானம், அறிவு, தேசாபிமானம், சமூகாபி மானம், மொழி அபிமானம் இருப்பதாக எப்படிச் சொல் லிக்கொள்ள முடியும்?

## கடவுள், மதம் என்று கருத்தை இழந்தோம்!

எல்லாவற்றையும் விடக் கேவலமானது, தமிழ னுடைய சமய அபிமானமும், கடவுள் அபிமானமுமே யாகும். தமிழனின் சமய அபிமானம், தமிழனை இழிவு படுத்திய கதைகளே சமய வேதங்களாகும். தமிழ்ப் பண் டிதர்கள் வெட்கமில்லாமல் நாலாயிரப் பிரபந்தம், தேவா ரம், கந்த புராணம்,ராமாயணம் முதலிய ஆரியர்-திராவிடர் போர்க் கதைகளை தமிழர் வேதங்கள் தமிழர் சமய ஆதாரங்கள் என்கிறார்கள். ஜெர்மனி யுத்தத்தையும், ஜெர்மனியன் இங்கிலாந்தை வெடிகுண்டு போட்டுச் சின்னாபின்னப் படுத்தியதையும், ஆங்கிலேயரையும் ஆங்கிலேயர் தலைவர்களையும் வைததையும் சரித்திரமாக

எழுதிவைத்ததை, ஆங்கிலேயர் வேதமாகக்கொள்வார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஹிட்லருக்குக் கோயில் கட்டி வணங்குவார்களா? ஜெர்மனியரின் கூலிகளை, படைகளை அவர்கள் ஆழ்வார்களாக, நாயன் மார்களாகக் கொள்வார்கள் என்று நினைக்கிறீர்களா? ஆனால் தமிழர் கள் என்ன செய்கிறார்கள்? இன்று தமிழனுக்கு அப்படிப் பட்ட கதைகள் சரித்திரங்கள்தானே மத ஆதாரங்களாக இருக்கின்றன. அவற்றில் வந்தவர்கள்தானே கடவுள் களாக இருக்கின்றனர்? அவர்கள் ஒற்றர்கள்-அடிமைகள் தானே ஆழ்வார்களாக நாயன்மார்களாக இருக்கின் றார்கள்? இதுவா தமிழர் சமயப்பற்று—கடவுள்பற்று— இனப்பற்று-மொழிப்பற்று? மானப்பற்று?

இப்படிப்பட்ட கடவுள்களுக்கு கோயில் கட்டின வர்கள் யார்? எல்லாம், தமிழர்கள்! அக்கோயில்கள், அதன் சித்திரங்கள் சிற்பங்கள், அதன் பூசை உற்சவங்கள் எல்லாம் ஆரியர்களுடைய கதைகளும், ஆரியர்களின் மேன்மைக்கு ஏற்றவைகளுமாய் இருப்பதல்லாமல் வேறு என்ன இருக்கிறது? இதற்காகச் செய்யப்பட்ட செலவு களும், செய்யப்படுகிற செலவுகளும், தமிழனுடையதல் லாமல் வேறு யாருடையதாவது ஒரு காசு இருக்கிறதா? தமிழனை ஆரியன் குத்துகிறதும், வெட்டுகிறதும், காலில் மிதிக்கிறதுமான அந்த சித்திர உருவங்கள் தமிழ்க் கடவுள் உருவமாக வீரமாக வணங்கப்படுகின்றன.

## தமிழர்.

தமிழர் மதமானது, தமிழன் ஈனஜாதி, தொடக் கூடாதவன், என்று செய்திருப்பதல்லாமல், வேறு என்ன செய்திருக்கிறது? தமிழன் இன்று வணங்கும் கடவுள்கள், தமிழனிடத்திலிருந்தே எல்லா செலவுகளையும், சவுகரி யங்களையும் பெற்றுக்கொண்டு, தமிழன் உள்ளே வரக் கூடாது, கிட்டவரக்கூடாது; பூசை செய்யக்கூடாது

தமிழ்மொழியில் தோத்திரம் கூடாது என்று செய்திருக்கிறதல்லாமல் வேறு என்ன செய்திருக்கிறது? இவைகளை எல்லாம் தமிழ்மக்கள் யோசித்துப் பார்க்க வேண்டாமா? தமிழர் என்ற தலைப்பில் இதைத்தவிர வேறு என்ன பேசுவது "முந்திய பெருமையை நினைக்காதே இன்றைய இழிவைப்பார்" என்ற முழுமொழியைக் கவனியுங்கள்.

## சமுதாயம்.

## தமிழனை தமிழனே இழிவுபடுத்துகிறான்!

சமுதாயத்தில் தமிழன் ஒரு வகுப்பாக இல்லையே, இதற்கு என்ன காரணம்? தமிழனே, தமிழனை இழிவு படுத்துகிறான்; ஒருவர் தொட்டதை ஒருவர் சாப்பிடுவதில்லை; ஆசாரி வீட்டில் செட்டியார் சாப்பிடுவதில்லை; செட்டியார் வீட்டில் ஆசாரி சாப்பிடுவதில்லை. கோமட்டிச்செட்டியார் வீட்டில், வாணியச் செட்டியார் சாப்பிடுவதில்லை, வாணியச் செட்டியார் வீட்டில் மேல்கண்ட மூவரும் சாப்பிடுவதில்லை. இவர்கள் நால்வர்களும் முதலியார், பிள்ளை, நாயக்கர் வீட்டில் சாப்பிடுவதில்லை. அவர்களும் இந்த நால்வர் வீட்டில் சாப்பிடுவதில்லை. அன்றியும் இவர்கள் இத்தனை பேரும் ஒருவருக்கொருவர் கீழ் ஜாதி—மேல் ஜாதி என்று பேசிக்கொள்ளப்படுகிறார்கள். தமிழர்களில் பாடுபடும் மக்கள் எல்லாம் கீழ் ஜாதியாக மதிக்கப்படுகிறார்கள். பழந்தமிழர்கள் பறையர், பள்ளர், சக்கிலியர் சண்டாளர்களாக இருக்கிறார்கள்.

இப்படி நூற்றுக்கணக்கான ஜாதியாய் தமிழர்கள் பிரிந்து ஒருவரை ஒருவர் இழிவு படுத்திக்கொண்டிருக்கிறார்கள். அதனாலேயே ஐரோப்பியனுக்கோ—ஆரியனுக்கோ—முஸ்லிமுக்கோ இருக்கும் சமுதாயப்பற்றும், ஒற்றுமையும் தமிழ்நாட்டில் தமிழனுக்கு இல்லை. இதை எல்லாம் தமிழர்கள் இன்று சிந்திக்க வேண்டாமா?

## இழிநிலை போகவேண்டும்! சிந்தனா சக்தி அடையவேண்டும்!!

உலக சரித்திரத்தில் முதன்மை ஸ்தானம் பெற்ற திராவிடமும், திராவிடர்களும், திராவிட மொழியும், திராவிட நாகரீக மேன்மையும், திராவிட ஆட்சியும், திராவிட மானமும் இன்று எக்கதியில் இருக்கின்றன? இதற்கு என்ன காரணம்? என்பதை யோசிக்கா விட்டால் என்றைக்காவது திராவிடர் இன்றைய இழிநிலையில் இருந்து மாற்றமடைய முடியுமா? அதற்குத் தக்கபடி நடந்துகொள்ள வேண்டாமா? என்பனவாகியவைகளை சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக்கொண்டு, காலம் அதிகமானபடியால் எனது சிற்றுரையை முடித்துக்கொள்ளுகிறேன் என்பது ஆகப்பேசினார்.

குறிப்பு:— * ஸ்டார் போட்டுள்ள இடங்களில் 'இதோ பாருங்கள் என்று' சொன்னதானது அநேக அறிஞர்களால் எழுதப்பட்ட பூகோளப் படப் புத்தகங்களையும், இந்துதேச சரித்திரப் பாடப் புத்தகங்களையும், ஆதாரங்களாக எடுத்து நேரில் காட்டிப் பேசினார் என்பது கருத்தாகும்.

# தமிழ் இசை

## நடிப்புக் கலைகள்

தமிழ் இசை நடிப்புக் கலைகள் பற்றி "இனி என்ன செய்ய வேண்டும்?", என்ற தலைப்பில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும், சேலம் சென்டிரல் தியேட்டரில் 'இன்ப இரவு' என்னும் நாடகத்திலும், சென்னை மாவட்ட நீதிக்கட்சி மாநாட்டிலும், திருச்சி பொதுக்கூட்டத்திலும், பிப்ரவரி திங்களில் 7, 9, 13, 20 ஆகிய நான்கு நாட்களில் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் தொகுப்பு:

"தமிழ் இசைக்கு கிளர்ச்சி செய்ததானது வீணாக வில்லை. தமிழிசைத் தொழிலாளர்கள் தமிழில் இசை கற்று வருகிறார்கள். பெரும்பாலும் தமிழில் பாடுகிறார்கள். இசையை நுகர்வோரும் தமிழில் இசை வேண்டுமென்று விரும்புகிறார்கள். இனி இந்த உணர்ச்சி குன்றி விடாது. இசை விருந்தளிக்கும் செல்வவான்களும், நுகர்வோர்களும் தமிழுணர்ச்சி உள்ளவர்களாக இருக்கும்வரை இந்த உணர்ச்சி வலுத்துக்கொண்டே போகும்.

### இனி என்ன செய்யவேண்டும்?

"தமிழ் இசை நமது நல்வாழ்வுக்குப் பயன்படும்படி செய்ய வேண்டியது நமது கடமை. இன்று இதுவரை தமிழல்லாத வேறு மொழியில் இருந்த இசை (பாட்டுகள்) தமிழில் பாடவேண்டியதாக ஏற்பட்டதற்குக் காரணம், நமக்குத் தமிழினிடம் ஏற்பட்ட உணர்ச்சியேயாகும். இது ஒரு பெரிய மாறுதல் தான்.

"இசை, நடிப்பு ஆகியவை எதற்குப் பயன்படுகின்றன? ஏதாவது ஒரு கருத்தை, ஒரு சேதியைக் காட்டுவ

தற்கும், அவை மனத்தில் பதிய வைப்பதற்கும் அவை வெறும் வாக்கியத்தில் இருப்பதை இசை இன்பத் தோடும், நடிப்பு இன்பத்தோடும் மனத்திற்குள் புகுத்துவ தற்கும் ஆகவே முக்கியமாய் இருந்து வருகின்றன. அடுத்தபடியாக, இரண்டாவதாகத்தான் அவற்றில் இன்ப நுகர்ச்சி இருந்து வருகின்றது. ஆகவே இசைக்கும், நடிப்புக்கும் கருத்தும் செய்திகளும் பிரதானமாகும்; அடுத்ததாகவே சுவை பிரதானமாகும். அதன் உண்மை யான அனுபவமும் அப்படியேதான் இருந்து வருகிறது. ஆனால் நுகர்வோரும், இசைத்து நடிப்போரும் செய்தி யையும், சுவையையும் பற்றிக் கவலை இல்லாமல் நுகர் வோர்களின் நேரப்போக்குக்கும், வேறு பல காட்சி இன்பத்திற்கும் அதை சாக்காக வைத்து நுகர்வதாலும் இசைத்து நடிப்போர்கள் பொருளுக்கும் வேறு சுயநலத் துக்கும் பயன்படுத்துவதாலும், அதனால் ஏற்படவேண் டிய பயன் ஏற்படாமல் போய்விடுகிறது.

"நம் நாடும் நாமும் எவ்வளவோ குறைபாடுகள் உடையவர்களாக இருக்கிறோம். அக்குறைபாடுகள் ஒழிக்கப்படுவதற்கு எவ்வளவோ முயற்சிகள் செய்கி றோம். இம்முயற்சியின் மூலம் எவ்வளவோ கஷ்ட நஷ் டங்கள் அனுவிபத்து வருகிறோம். இவற்றை யாராலும் மறுக்கமுடியாது. அப்படியிருக்க நம்முடைய கலைகள், நாம் அனுபவிக்கும் நுகரும் சாதனங்கள், இன்பத்தன் மைகள் ஆகியவை எப்படியிருக்க வேண்டும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். சாதாரணமாகப், பொருள் நட் டமோ, கால நட்டமோ, ஊக்க நட்டமோ இல்லாமல் நடைபெறும் காரியங்கள்கூட நம் நலத்துக்கு ஏற்றதாக வும், தீமை ஒழியத்தக்கதாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புவது அறிவுடைய மக்களின் தலையாய பண் பாகும். அவற்றில் நமக்குப் போதிய கவலை இல்லாத தாலேயே, நம் நலத்துக்கு மாறான சேதிகளும் உணர்ச்சி களும் கொண்ட காரியங்கள் வளர்ந்துவர ஏற்பட்டுவிட்ட

துடன் இவைகளையே பொருள் கொடுத்தும், காலத்தை யும், ஊக்கத்தையும் செலவழித்தும் நுகர்ந்து அறிவும், மானமும் கெட்டு, முற்போக்கும் தடையும் உற்று கீழ் நிலைக்கு வரவேண்டியவர்களானோம்.

"இன்றைய நம் நிலை என்ன? முதலாவது சமுதா யத்தில் நாம் கீழான நிலையில் இருக்கிறோமா, இல்லையா? இந்தக் கீழான நிலை ஏழைகளுக்கும், மடையர்களுக்கும், இரந்துண்போர்களுக்கும், சோம் பேறிகளுக்கும், கயவர்களுக்கும் இருந்தால் நமக்குக் கவலையில்லை (ஏனெனில் இது தனி உடமை நாடு). ஆனால் கோடீசுவரரும், கோணாத கை கொடை வள்ள லும் மிக்க மதிவாணருமான இராஜா சர் அண்ணாமலை அவர்களும் பேரறிஞரும், மலையாடும்படியான வாயாடி களும், கருத்தாளர்களும் மெச்சும் மதி அரசர் சர் சண் முகம் அவர்களும், நம் சமுதாயத்தில் 4-ஆம் ஜாதி, 5-ஆம் ஜாதியாக மதிக்கப்படவும், அவ்வாறே பெரிதும் நடத்தப்படவும் காரணம் என்ன? ஏன் நடத்தப்பட வேண்டும்? சம மனிதராய்க் கருதப்படாததற்கு இவர் களிடம் உள்ள குறைகள் என்ன?, குற்றம் என்ன?, என்று கேட்கிறேன். இந்தக் கொடுமை இன்றா நேற்றா? இந்நிலையில் இவர்களுக்குள்ள பொருள், செல்வாக்கு, மதி, திறமை, ஊக்கம், உணர்ச்சி ஆகியவை உண்மையில் எதற்காகச் செலவிடப்பட்டு வரவேண்டும்? எதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்? இப்படிப்பட்டவர் கள் பிறந்த நாட்டிலே, இவர்கள் இருக்கும் காலத்திலே மனித சமுதாயத்துக்கும் (ஏன்) இவர்களுக்குமே, சமுதா யப்பிறவி இழிவும், குறைபாடும் நீக்கப்படவில்லையா னால் நீக்கப்பட இவர்கள் உழைக்கவில்லையானால், நீக்கப்பட இவர்களது அறிவு, ஆற்றல், உணர்ச்சி, ஊக்கம், செலவழிக்கப்படவில்லையானால் மற்றும் வேறு யாருடைய காலத்தில் நாம் எதிர்பார்க்க முடியும், என்று கேட்கிறேன்.

"சென்ற மாதம் சென்னையில் நடந்த தமிழ் இசை மாநாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். 10 நாட்கள் ஒரு பெரிய திருநாள் போல் நடந்தது. பல பதினாயிரம் ரூபா செலவு செய்யப்பட்டுப் பல ஆயிரக்கணக்கான மக்கள் தினம் 4, 5 மணி நேரம் செலவழித்து வந்து அமர்ந்து இருந்துவிட்டுப் போனார்கள். வள்ளல் அண்ணாமலையார் உணர்ச்சியும், ஊக்கமும், ஆழ்ந்த சிந்தனையும், அவர்களது பந்துமித்திரக் குழாங்களும், அறிஞர் சண்முகம் அவர்களது அறிவுரைகளும், ஆற்றல்களும் எல்லையின்றிப் பயன்படுத்தப் பட்டன. எதிரிகளுக்கு ஆணித்தரமான விடை அளித்து அவர்களது வாய்க்கு ஆவிகூட வெளிப்பட முடியாதவாறு ஆப்புகள் சம்மட்டியால் அறையப்பட்டன. வெற்றிக்கொடி ஆகாயத்தை அளாவிப் பறந்தது. சென்னை நகர் முழுவதுக்கும் ஒரு புத்துணர்ச்சி கிளம்பியது. சரி, இவை பாராட்டத்தக்கன, போற்றத்தக்கன.

ஆனால் விளைந்த பயன் என்ன,? ஏற்பட்ட படிப்பினை என்ன? இம்மாநாடு பண்டிதர்களை தமிழில் பஜனைப் பாட்டுகளைத் தொடக்க வைத்தது. இசைவாணர்களை (பாட்டுத் தொழில்காரர்களை) வீட்டில் தனிமையில் உட்கார்ந்து, இப்பஜனைப் பாட்டுக்களைப் பாடிப்பாடிப் பழக்கம் செய்துகொள்ளச் செய்தது. இந்தப்படியான தமிழ்ப் பஜனைப் பாட்டுப் பாடத் தெரிந்தவனையே இசை விருந்துக்கு அழைக்கவேண்டும் என்கின்ற உணர்ச்சியை நமது செல்வவான்கள் பலருக்கு ஊட்டியது. இசை நுகரச் செல்லும் மக்கள் பலருக்கும் (இந்த இசைவாணர்) தமிழில் இசை இசைக்கிறாரா, அல்லது வேறு மொழியில் இசைக்கிறாரா, வேறு மொழியில் இசைத்தால் கலவரம் செய்யலாமா, என்கின்ற சிந்தனையை சிலருக்கு ஊட்டிய, ஆகிய இவை ஏற்பட்டன; சரி என்றே வைத்துக் கொள்ளலாம். இவற்றால் சகல உயர்வும், தகுதியும் இருந்து ஒரு சிறு கீழ் மக்கள் குழு

வால் இழி மக்களாய்க் கருதப்பட்டு சாண்டப்பட்டு, மானமற்று நடைப்பிணங்களாய்க் கிடக்கும் தமிழ் மக்களுக்கு இந்த நிலை மாற ஏதாவது ஒரு ஊசி முனை அளவு இவற்றால் பயன் ஏற்பட்டதா, என்று வணக்கத்தோடு கேட்கிறேன். நலம் பெறுவதற்கு வழி சிறிதும் இல்லாவிட்டாலும், கேட்டிற்காவது சரிவு வழி ஏற்படாமல் போயிற்றா என்று கேட்கிறேன்.

"என்மீது ஒரு சிலர் முனிவு கொள்ளலாம், ஆத்திரப்பட்டு வஞ்சினம்கூடக் கூறலாம்; அதை நடத்துவிக்கவும் முனையலாம். இவற்றால் பொதுநலம் என்ன ஏற்படக்கூடும்? தனி நலம் தான் என்ன ஏற்படக்கூடும்? இப்பெரியார்களிடத்தில் இந்த விண்ணப்பம் கொடுக்க எனக்கு உரிமை இல்லையா?

"சர் சண்முகம் அவர்கள் ஒரு பெரிய பொருளாதார நிபுணர். இவ்விஷயத்தில் அரசர்களும் மதிக்கத் தகுந்தவர், எதிரிகளும் கண்டஞ்சத் தகுந்தவர்; வள்ளல் அண்ணாமலையார் பொருளாதார நிபுணத்துவத்தையே உருவாய்க் கொண்டவர். இவ்விருவரின் பொருளாதார நிபுணத்துவம் இந்தத் தமிழ் இசை மாநாட்டில், தமிழ் இசைக் கிளர்ச்சியில் எப்படிப் பயன்படுகிறது என்று பாருங்கள்.

"தமிழிசைக் கிளர்ச்சிக்காக இவர்கள் செலவழித்த பொருளும், மற்ற தமிழ் மக்கள் செலவழித்த பொருளும் தமிழ் நாட்டுப் பொருளல்லவா, தமிழர்களுடைய பொருளல்லவா? நிலை குலைந்து தரித்திரர்களாய், வயிற்றுப் பசிக்கு எச்சக்கலையைத் தேடித்திரியும் ஈனமக்களாய்க் கருதப்படும் தமிழ் உயிர்களுடைய செல்வமல்லவா? இதற்குச் செலவழித்த உணர்ச்சியும், ஊக்கமும், ஆற்றலும், காலமும்கூட இவர்களுடையது அல்லவா, என்று கேட்பதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

"இவ்வளவு பொருளும், ஆற்றலும், மதியும், மற்றும் செலவழித்ததற்கு நாம்கண்ட பயன் என்ன? நண்பர்களே, சிந்தித்துப் பாருங்கள். நாட்டிலுள்ள நல்ல, உயர்ந்த இசைவாணர்களுக்குப் பொருள் தந்து வரவழைத்து ஒரு காலைத்தூக்கி ஆடிக்கொண்டிருக்கும் நடராஜ உருவத்தின் முன் தீபதூப நைவேத்தியத்துடன் உட்கார வைத்து, பல ஆயிரக்கணக்காக மக்களை வரவழைத்துப் பஜனைப் பாட்டுகள் பாடச்செய்வதும், அதன் மூலம் மக்களுக்குப் பக்திபுகட்டுவதும் தானா? இந்தப் பக்திக்கு ஆக ஏற்கனவே நம் நாட்டில் இருந்துவரும் சாதனங்களும், முயற்சிகளும், செலவுகளும், மற்றவையும் போதாதா? இது யார் செய்யவேண்டிய காரியம்? எதற்காக இவர்களும் இந்தக் காரியம் செய்ய வேண்டும்? இதனால் ஏற்படும் பலன் யாருக்கு நலனைத்தரும்? நிலைகுலைந்து, இழிவடைந்து தரித்திரர்களாய், மடையர்களாய், கீழ் மக்களாய், சுரண்டப்பட்டவர்களாய் வாடும் மக்களுக்கு இவை என்ன பலனைத்தரும்? அவர்கள் குறையைப் போக்கிக்கொள்ள ஏதாவது உணர்ச்சி ஏற்படுமா?, அல்லது முயற்சியைத் தடுக்குமா? மறுமுறையும் சிந்தித்துப்பாருங்கள், இதில் பொருளாதார ஞானம் இருக்கிறதா? சீர்திருத்த ஞானம் இருக்கிறதா என்று! பஜனைப் பாட்டுகள் தமிழில் இருந்தால் என்ன, தெலுங்கில் இருந்தால் என்ன, இந்தியில் இருந்தால் என்ன, அல்லது ஜப்பான், ஜெர்மனி மொழியில் இருந்தால்தான் என்ன? கடவுளுக்கு எந்த மொழி தெரியாது?

"ஆகவே, நாட்டினுடைய செல்வம், அறிவு, ஊக்கம், உணர்ச்சி இந்தப் பஜனைக்காகவா இப்படி செலவழிக்கப்படவேண்டும்? இதைக்காணும் அயலான் எவனாவது இந்த நாட்டு மக்களுக்குத் தன்மான உணர்ச்சியோ, இழிவையும் கீழ்மையும் கண்டு உடல் துடிக்கும் சொரணையோ இருக்கிறது என்று கருதமுடியுமா? நாட்டு மக்களுக்கு, இதில் பிரவேசித்து இந்தத் தன்மானத்துக்குக்

கேடு செய்யும் தன்மையைப்பற்றி சிந்திக்கவோ, விளக்கவோ, தடுக்கவோ, உரிமை இல்லையா என்று கேட்கிறேன்.

"தமிழிசைக் கிளர்ச்சிக்குச் செலவாகும் பணத்தையும், நேரத்தையும், ஊக்கத்தையும் பார்த்தால் அதன் பயன் இந்தப் பஜனையில் முடிவதானால், மானமும் அறிவும் உள்ள எவனுக்குத்தான் வயிறு எரியாது என்று கேட்கிறேன்.

## ஒரு கதை

"பல் விளக்கச் சோம்பேறித்தனப்பட்ட மருமகனைப் பார்த்து ஒரு மாமியார் பல் விளக்கும்படி மருமகனுக்குச் சொல்ல வெட்கப்பட்டுக் கரும்பு சாப்பிட்டால் பல் வெள்ளையாகும் எனக்கருதி மறைமுகமாய் "மாப்பிள்ளை!, இந்த ஊர்க் கரும்பு நல்ல ருசியாக இருக்கும்; ஒரு துட்டுக்குக் கரும்பு வாங்கிச் சாப்பிடுங்கள்" என்று சொல்லி, காசு கொடுத்தால், மாப்பிள்ளை அதை வாங்கிக் கொண்டுபோய் எள்ளுப் புண்ணாக்கை வாங்கிச் சாப்பிட்டுவிட்டுப் பல்லை இன்னும் கேவலமாக்கிக்கொண்டு கரும் எண்ணெய்ப் பசையுடன் வந்தால், மாமியாருக்கு எப்படி இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். அதுபோலல்லவா, இந்தத் தமிழிசை நாடகக் கிளர்ச்சிகள் இந்நாட்டில் நடந்து வருகின்றன என்று கருத வேண்டியிருக்கிறது.

## சினிமா நாடகம்

"இது போலவே நம் தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் மாபெருங்கேடாய் இருந்துவரும் மற்றொரு காரியம் சினிமா, நாடகம் முதலிய நடிப்புக் காட்சிகளாகும். இவை இசையைவிட கேடானவைபாகும் என்பது

என் கருத்து. நம் தமிழ்நாடு மானமுள்ள நாடாக, மானத்தில் கவலையுள்ள மக்களைக் கொண்ட நாடாக இருந்திருக்குமானால் இந்த நாடகம் சினிமா முதலியவை ஒழிந்து கல்லறைகளுக்குப் போயிருக்கும். இதை நான் வெகு காலமாகச்சொல்லி வருகிறேன். இசையினால், காது மூலம் உடலுக்கு விஷம் பாய்கிறது. நடிப்பினால் காது, கண் ஆகிய இரு கருவிகள் மூலம் உடலுக்குள் விஷம் பரவி இரத்தத்தில் கலந்து போகிறது. இவ்வளவு பெரிய குறைபாடும், இழிவும் உள்ள நாட்டுக்கும், மக்களுக்கும் இன்று கடவுள் பஜனையும், கடவுள் திருவிளையாடல் நடிப்பும்தானா விமோசனத்துக்கு வழியாய் இருக்கவேண்டும்?

"நாடகம் எதற்கு? அது படிப்பிக்கும் படிப்பினை என்ன? அதற்காக ஏற்படும் செலவுகள் எவ்வளவு? புராணக் கதைகளை நடிப்பதினால் அனுபவிப்பதால் மூடநம்பிக்கை, ஒழுக்க ஈனம், கட்டுத்திட்டமற்ற காம உணர்ச்சி, கண்ட மாத்திரத்தில் காம நீர் சுரக்கும்படியாகப் பெண் மக்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளுதல் முதலியன பிடிபடுவதல்லாமல் வேறு என்ன ஏற்படுகிறது.

"இரணியன் நாடகத்தில் விஷ்ணு தூணிலிருந்து வெளிவரும்போது கூத்துப் பார்க்கும் மக்கள் கைகூப்பிக் கும்பிடுகிறார்கள்.

"வள்ளித் திருமண நாடகத்தில் வள்ளியைச் சுப்பிரமணியன் காதலித்து காதல் சேட்டை செய்யும்போது, பல ஆண்கள் பெண்கள் பக்கமும், பல பெண்கள் ஆண்கள் பக்கமும் திரும்பிப் பார்த்து கண்ணோடு கண்ணை முட்ட வைப்பதுபோல் பார்வையை முட்டவைத்துக் கொண்டு அரைமூர்ச்சையாகி விடுகிறார்கள்.

"ஒரே கதை, நாடகமும், சினிமாவுமாக ஒரு ஊரில் ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதம் நடப்பதற்

குக் காரணம் என்ன? முதலிரண்டு மூன்று நாட்களி லேயே பல பெண்களும், ஆண்களும் நாடகக் கொட்ட கையை தங்கள் சங்கேதஸ்தலம் (அதாவது பார்வையால், சந்திப்பால் ஒரு அளவு காதலைத் தீர்த்துக் கொள்ளவும், காதல் குறியைக்கண்டு அனுபவிப்பதால் ஒரு அளவு இன் பங்கொள்ளவும் அனுகூலமான இடம்) ஆக ஆக்கிக் கொள்ளுகிறார்கள். வெறும் சாதாரண நிலையில் ஆண், பெண் சந்தித்துக் கொள்வதைவிட நல்ல உடை, நல்ல நடை, நல்ல அலங்கரிப்பு, நல்ல சாயலோடு செல்ல உரிமை இருக்கிற இடங்கள், இவைகளோடு அதற்கேற்ற சைகைகள் நடக்கும் சமயத்தில் சந்திப்பு வைத்துக்கொள் ளுவது, உண்மையிலேயே யாருக்கும் எந்தவயதினருக்கும் ஒரு இன்பத்தையும், குஷாலையும், திருப்தியையும் கொடுத்துத் தான் தீரும். இது இயற்கையே ஆகும். ஆனால் நாம் இதை வளர்க்கச் செய்யலாமா? இளம் வய தாகவும், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளப் போதிய சக்தி இல்லாதவர்களாகவும் இருக்கிற சிறுவர் சிறமிக் கும் மனோ பலமற்றவர்களுக்கும் இதை ஒரு பழக்க மாகச் செய்யலாமா, என்று பாருங்கள். மக்களுக்கு இந்த இன்பம் அவசியம் என்று மனோதத்துவ நிபுணர் கள் சொல்லக்கூடும். அப்படிச் செய்வதானாலும், அதி லிருந்து சிறிது அறிவும் மானமும் பெறும்படியாகவாவது அந்த நடிப்பைத் திருப்பவேண்டாமா? அதை விட்டு விட்டுக் காட்டு மிராண்டிகள்போல் மூடநம்பிக்கையும், காமமும், காதலுமே நமது கலைகளை நிரப்பிவருவதா னால் கலையினால் மனிதன் அறிவாளியாவானா?, மடையனாவானா?, சிந்தித்துப் பாருங்கள்.

நந்தனார் சரித்திரத்தால் தீண்டாமை ஒழியுமா, நிலைக்குமா யோசித்துச் சொல்லுங்கள், பார்க்கலாம்.

கிருஷ்ண லீலையால் விபசாரித்தனம் வளருமா, குறையுமா சொல்லுங்கள், பார்க்கலாம்.

திருவிளையாடல் புராண சிவலீலையால் ஒழுக்க ஈனங்களும், அயோக்கியத்தனங்களும் வளருமா, குறையுமா என்று கூர்ந்து பாருங்கள்.

இராமாயணத்தினால் அடிமைத்தனமும் சூழ்ச்சிகளும் வளருமா, குறையுமா, என்று பாருங்கள். இப்படிப்பட்ட புராண சம்பந்தமான கதைகளின் நடிப்பு ஏதாவது ஒரு நல்ல காரியத்துக்குப் பயன்படுகிறதா என்று கேட்கிறேன். இப்படியே ஒவ்வொரு புராணக் கதையிலும் கேடு இருப்பதோடு நாட்டுக்குப் பெருமித நட்டமும், முன்னேற்றத் தடையும் இருந்து வருகின்றன; பொருள் நட்டத்தைப் பாருங்கள்.

## பொருளாதாரக் கணக்கு.

"இந்த நடிப்புக்காக நம் நாட்டில் ஏற்படும் செலவை பொருளாதாரக் கண்கொண்டு சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு படம் எடுக்க (சராசரி) ரூ. 50,000 செலவாகிறது. இப்படியாக தமிழ் நாட்டில் சுமார் 300 படங்கள் ஓடுவதாகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கலாம். இதற்கு ரூ. 1,50,00,000 ஒன்றரைக் கோடி ரூபா செலவாகி இருக்கலாம் அல்லவா? இவற்றை ஓட்டிக் காட்டுவதற்குத் தமிழ் நாட்டில் கொட்டகைகளும் கூடாரங்களுமாக தினமும் சுமார் 300 இடங்களில், தினமும் இரண்டு காட்சிகள் நடப்பதாகவும், ஒவ்வொரு காட்சிக்கும் ரூ. 125 மாத்திரமே சராசரி வசூலாவதாகவும் கணக்கு வைத்து, 600- காட்சிகளுக்கு கணக்குப் போட்டால் தினம் ஒன்றுக்கு ரூ. 75000 (எழுபத்தி ஐயாயிரம்) ரூபா ஆகிறது. இத்துடன், இந்த சினிமா பார்க்கும் ஆண் பெண் குழந்தைகளின் போக்குவரத்துச் செலவு, சில்லரைச் (வெற்றிலை பாக்கு, சோடா, சிகரெட், தண்ணி

முதலிய) செலவு மூன்றில் ஒரு பாகம் போட்டாலும் அது ரூ. 25,000 ஆகும். ஆகவே தினம் ஒன்றுக்கு காட்சி பார்க்கப் போகிறவர்கள் செய்யும் செலவு டிக்கட் உள்பட ஒரு லட்ச ரூபா ஆகின்றது. ஆகவே ஒரு வருடத்துக்கு மூன்று கோடியே அறுபது லட்ச ரூபாய் ஆகின்றது. இப்பணத்தின் பெரும்பகுதி ஏழை மக்கள், கல்வி அறிவற்ற பாமர மக்களுடையதல்லவா, என்று பொதுவுடமைக்காரர்களையும் சேர்த்துப் பொருளாதார நிபுணர்களையும், சீர்திருத்தம் செய்யப் புறப்பட்டிருக்கும் பெரியோர்களையும் கேட்கின்றேன்.

இனி இதற்காக என்றே கொட்டகை கட்டிவைத்து மாதம் 100-க்கு 5- ரூபா முதல் 20- ரூபா வரை வீதம் வட்டி கட்டும்படி இலாபம் சம்பாதிக்கும் கொட்டகை முதலாளிகள் போட்ட கொட்டகை முதலைப் பாருங்கள். கொட்டகை ஒன்றுக்கு சராசரி ரூ. 25,000 கொள்முதல் போட்டுக்கொண்டாலும் 200 கொட்டகைகளுக்கு 50,00,000 ஐம்பது லட்சம் ரூபாவும், கூடாரம் (Tent) 100 க்கு இயந்திரம் உள்பட சுமார் 5 இலட்ச ரூபாவும் ஆக 55 இலட்சம் ரூபா இதில் முடங்கிக் கிடக்கின்றது.

## 3-கோடி கைமுதல், 3½கோடி தினச்செலவு.

எனவே, முதல் முடக்கம் சுமார் மூன்று கோடியும், நித்தியச் செலவு வருடத்தில் 3½ கோடி ரூபாவும் எதற்காக செலவாகின்றன என்று சிந்தித்துப் பாருங்கள். இதற்கு, மேலே நான் எடுத்துச் சொன்ன பலனுக்காகவா இவ்வளவு பொருளை செலவழிக்க விட்டுக்கொண்டிருப்பது? இப்படி இருப்பது உங்களுக்கு ஒரு பெரிய 'கிரிமினல்' குற்றமாகத் தோன்றவில்லையா? என்று கேட்கிறேன்.

ஆகவே வாலிபர்களே, நீங்கள் ஆண்களும், பெண்களும் முன் வந்து இந்தக்கேட்டை ஒழிக்கவேண்டும்;

நாடகங்களில் போய் உட்கார்ந்துகொண்டு முன்சொன்ன காதல் வரும் சந்தர்ப்பங்கள் வரும்போது "வெட்கம் வெட்கம், மானங்கெட்ட பெண்கள் தாம் இதைப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள், மானமும் ஒழுக்கமும் உள்ள பெண்கள் இந்த நாடகங்களை எட்டிக்கூடப் பார்க்கமாட்டார்கள்" என்றும், மூடநம்பிக்கை வரும் சந்தர்ப்பங்களில் "வெட்கம் வெட்கம், பகுத்தறிவற்றவர் களும், காட்டுமிராண்டிகளும்தான் இந்தக் காட்சிகளைக் காண வருவார்கள். அறிவும் மானமும் உள்ளவன் இதைத் திருத்தத்தான் முற்படுவான்" என்றும் சொல்ல வேண்டும். "அதுபோலவே இசையரங்குகளிலும் பஜனைப் பாட்டுகள் வரும்போது அவை காதுகளில் கேட்காதபடி "யாயாயாயாயா" என்று கூப்பாடுபோட்டு, அந்தச் சப்தம் மற்றவர்கள் காதுகளில் கேட்காமல் இருக்கும்படி செய்யவேண்டும். யுத்தத்தின் காரணமாக நமது சர்க்கார் ரேடியோவில் ஜப்பான், ஜெர்மன் பேச்சுகள் வரும்போது வேறு யாரோ ஒருவர் அப்பேச்சு கள் நம் காதுகளில் விழாமல் இருப்பதற்கு ஆக 'யாயா யாயா' என்று சொல்லச் செய்கிறார்கள் அல்லவா, அதுபோலத்தான் நானும் சொல்லுகிறேன்.

"நாம் நம் சமுதாய முன்னேற்றத்திற்கு எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுடன், எவ்வளவு நாட்களாக, எவ்வளவு பாடுபட்டு வருகிறோம்? அந்தப் பலன்கள் நாம் செய்த சிறு காரியத்தையும் கெடுக்கவும், யாரோ சுயநலக்காரர் சுரண்டுவதற்கும்தானா பயன்பட வேண்டும்? நமக்கு ஒரு வர் உதவி செய்யாவிட்டாலும், நம் காரியம் கெட்டுப் போகாமல் இருக்கும்படியாகவாவது பார்த்துக்கொள்ள நமக்கு உரிமை இல்லையா, என்று கேட்கிறேன். இந்தப் பஜனைப் பாட்டும், இந்தப் புராண நாடகமும் இருக்கும் வரை நம் முட்டாள்தனமும், இழிவும், மானமற்ற கீழ்மையும், ஒழுக்க ஈனமும் ஒழிக்கப்பட முடியவே முடியாது என்பேன்.

## வாலிபர் கடன்

"இந்த வருடம் ஏப்ரல் விடுமுறையில் நம் வாலிபர்களுக்கு நல்ல வேலை இருக்கிறது. 2, 3, செட்டுகளாகப்பிரிந்து தமிழ் நாட்டில் சுற்றி இந்தப் புராண இசை, நடிப்பு, இலக்கியம் ஆகியவைகளை மக்கள் வெறுக்கும்படி பிரசாரம் செய்ய வேண்டும். 'காலேஜ் மாணவர்கள் ஒரு கூட்டம் வருவதற்கு இசைந்துள்ளார்கள். இளம் பண்டிதர்கள் ஒரு கூட்டம் கிளம்பவேண்டும். இது தக்கதொரு சமயமாகும். வாலிபர்களே, இது உங்களால்தான் ஆகவேண்டும். உங்கள் நலனுக்கு ஆகத்தான் இந்த முயற்சி செய்கிறோம். என்காலம் கிட்ட நெருங்கி விட்டது; எதிர்காலப் பெரியார்கள் நீங்கள்தாம். நீங்கள் முயற்சி செய்யவில்லையானால், நாடு மறுபடியும் கீழே போய்விடும். அப்போது நீங்கள் உண்மைச் சூத்திரர்கள் மாத்திரமல்ல, உண்மை இயற்பகை நாயனார்களாக ஆகி விடத் தக்கவர்களாவீர்கள். ஏன் என்பீர்கள்! கலைப் பிரசாரம், ஸைவப் பிரசாரம், இராமாயணப் பிரசாரம் பாருங்கள். 'தேவஸ்தான பரிபாலன போர்டார்' பணம் கொடுத்து ஆட்களுக்குச் சம்பளம் ஏற்படுத்தி கிராமம் கிராமமாய்ப் புராணப் பிரசாரம் நடத்துவிக்கிறார்கள். சைவப் பண்டிதர்கள் ஊர் ஊராய்ச் சென்று மதப் பிரசாரம் செய்கிறார்கள். இவை போதாதென்று நம் பெரும் பிரபுக்கள், கலைவாணர்கள், பண்டிதர்கள், அறிஞர்கள் பஜனை, இசைப் பிரசாரமும், புராண நாடகப் பிரசாரமும் செய்கிறார்கள். இப்படியே விட்டு விட்டால் இது எங்குபோய் முடியும் தெரியுமா?

"எனவே உங்கள் பங்கு என்ன? இந்தச் சமயத்தில் சும்மா இருக்க, வேடிக்கை பார்க்க உங்களுக்கு மனம் வருகிறதா? இப்போது சும்மா இருந்து விட்டுப் பின்னால் நீங்கள் வாழ்ந்துதான் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்கள் சரீரம் பெருத்தால் போதுமா? உங்கள் தனிப்

பட்ட வாழ்வு, வாயில் சீட்டி அடித்துக்கொண்டு கைப் பிரம்பைச் சுழற்றிக்கொண்டு உல்லாசநடை நடக்கும்படி யாக இருந்தால் போதுமா? நாம் இருக்கும் நிலையை நிர்வாணமான கண்ணைக்கொண்டு நிர்வாணத் தன்மை யில் பாருங்கள்; அப்பொழுது தெரியும், உங்கள் கடமை என்ன என்பது. வாலிபர்களே, இன்னமும் சிறிது நாள் நான் வேலை செய்ய உற்சாகத்தைக் கொடுக்கிறீர்களா? அல்லது இந்த அக்கிரமங்களைப் பார்த்து மனமுடைந்து உட்காரச் செய்கிறீர்களா?, என் முயற்சி, என் உற்சாகம், ஏன்?, என் வெற்றிகூட உங்கள் கையில் இருக்கின்றன. இதுவரையிலும்கூட உங்கள் கையில் தான் இருந்து வந்தன. என்ன சொல்லுகிறீர்கள்?''

## கலை வளர்ச்சி

(29-1-44 "குடி அரசு'' தலையங்கம்)—

தமிழ் மக்களுக்குக் கலை வளர்ச்சியைப் பற்றிய கவலை பண்டிதர்களைத்தவிர மற்ற கலை உணர்ச்சியே இல்லாத பொது மக்களுக்கும், கலை என்றால் என்ன என்று அறிந்திராத செல்வச் சீமான்களுக்கும் கலை இன்னது என்றே உணர்ந்திராமல் கலையின் பேரால் வயிற்றுப்பாட்டுக்குத் தொழில் நடத்தின தொழிலாளி களுக்கும் இன்று திடீரென்று ஏற்பட்டு, கலை வளர்ப்பு முயற்சியில் இறங்கத் தோன்றின காரணம் என்ன என்பதை முதலில் யோசித்துப் பார்க்கும்படி வாசகர் களை வேண்டிக்கொள்ளுகிறோம். அதாவது இந்தியின் ஆதிக்கத்தை ஒழிக்க மக்கள் 'தமிழ், தமிழ்' என்று செய்த தமிழ்க் கிளர்ச்சியேயாகும்.

தமிழ் நாட்டில் ஆரியர் ஆதிக்கம் பெற்று எல்லாத் துறைகளையும் தம் வயப்படுத்திக் கொண்டு தங்கள் இன நலத்துக்கும் சுயநலத்துக்கும் ஏற்றவண்ணம் அவை களைப் பெருக்கிக் கொண்டார்கள். மேலும், அவற்றின்

மூலமே தமிழர் செல்வத்தைக் கொள்ளைகொண்டு வாழ்வதல்லாமல் சமுதாயம், சமயம் ஆகிய துறைகளிலும் தங்களது ஆதிக்கத்தையும், தமிழர்களுடைய இழிவையும் அடிமைத்தனத்தையும் பெருக்க முயற்சிக்கிறார்கள். இவை சுயமரியாதை உணர்ச்சியுள்ள தமிழர்களுக்குத் தோன்றி அவர்கள் ஒவ்வொரு துறையிலும் உள் புகுந்து தடவிப்பார்த்து உள் இரகசியங்களை வெளிப்படுத்தியதன் பயனாகவே கலை, மொழி, முதலிய இன்றையக் கிளர்ச்சிகள் தோன்றவேண்டியதாயிற்று. இக்கிளர்ச்சிகளுக்குச் செல்வாக்கு ஏற்பட்டவுடன் பண்டிதர்கள், கலைத்தொழில் வாழ்வுக்காரர்கள், பிரபுக்கள் முதலியவர்கள் இவற்றில் கவனம் செலுத்திப் பயனும், பொது நலத்தொண்டு புகழும் பெற முயலவேண்டியவர்களானார்கள். இது மிக்க நியாயமும், பாராட்டத்தக்க காரியமும் ஆகும், என்பதில் எள்ளளவும் ஆட்சேபணை இல்லை.

## இசைக் கலை

ஆனால் இந்த முயற்சியினால் இம்மாதிரியான கிளர்ச்சி தோன்றவேண்டிய உட்கருத்து என்ன இருந்ததோ அதற்கு அனுகூலம் ஏற்பட வேண்டாமா என்றும், அனுகூலம் ஏற்படாவிட்டாலும், கேடாவது ஏற்படாமல் இருக்கவேண்டாமா என்றும் கேட்கிறோம். உதாரணமாக "இசை (சங்கீத)க் கலைக்கு மொழி முக்கியமில்லை. குரல் இனிமை, ஒலி இனிமை, தாள இனிமைதான் முக்கியமானவை. மொழி இனிமை முக்கியமல்ல" என்று இருக்குமேயானால் நமக்கு இந்த இசைக்கலை வளர்ச்சி முயற்சியில் இன்று கலந்து கொள்ளவேண்டிய அவசியமே இல்லை என்று சொல்லலாம். அப்படிக்கில்லாமல் இசையில் மொழி இனிமையே முக்கியமானது, அம்மொழி தமிழ் மொழியாய்

இருக்கவேண்டும் என்று நாம் சொல்லுவதானால் அம் மொழிக்குப் பொருள் வேண்டாமா? அப்பொருளுக்கு பலன் வேண்டாமா? அப்பலன்நாம் செய்யும் கிளர்ச் சியின் குறிக்கோளுக்கு ஏற்றதாக, நலந்தரத்தக்கதாக இருக்கவேண்டாமா?, என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுமாய் வாசகர்களை வேண்டுகிறோம்.

உதாரணமாக சென்னைத் தமிழ் இசை மாநாட்டில், இசைவாணர் தியாகராஜ பாகவதர் பாடினார். அவற்றுள் மாதிரிக்கு இரண்டு பாட்டுகளின் தன்மையைப் பாருங்கள்.

ஒரு பாட்டு:

(ராகம்: ஷண்முகப்பிரியா)
பல்லவி
'பார்வதி நாயகனே பரமசிவா கருணாகர சம்போ
அநுபல்லவி
சர்வ பௌமனே சங்கரனே கைலாசனே சந்திரசேகரா'
என்பதாகும்;

மற்றொரு பாட்டு:

(ராகம்: லலிதாங்கி)
பல்லவி
'ஸ்ரீஜகதாம்பிகையே தீனதயாபரி சங்கரி
அனுபல்லவி
ஓ ஜனனி நீயே அபயம் சரணுன் உபய சரணம்',
என்பதாகும்.

இப்படியேதான் அங்கு நடந்த 100-க்கு 97 மற்ற பாட்டுகளும் இருந்தன. இந்தப் பாட்டுகளைத் தெலுங்

லோ, சமஸ்கிருதத்திலோ, இந்தியிலோ, ஜப்பான், ஜெர்மனி மொழியிலோ பாடி இருந்தால் என்ன குடி முழுகிப்போய் இருக்கும்?

இந்த மாதிரிப் பாட்டுகள் பாடச் செய்வதற்கு ஆகவா இரு கோடீசுவரர்கள் கூடி உலகத்தைத் திரட்டிப் பலபதினாயிரக்கணக்கான ரூபாய்கள், பல அறிஞர்களின் அருமையான நேரங்கள், ஊக்கங்கள், செலவழித்து என்றும் கண்டிராத ஓர் உயர்ந்த திருவிழா இராப் பத்து பகல் பத்து போல் நடத்துவது? என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

இதுதான் தமிழிசைக் கிளர்ச்சி என்றால் இதற்கு (பார்ப்பனர்களில் ஐகோர்ட் ஜட்ஜுகள், ஐ. சி. எஸ். கலெக்டர்கள் முதல்) இத்தனை "பெரியவர்கள்" விரோதம்தான் இப்பெரியோர்களுக்கும், தமிழிசைக் கிளர்ச்சி இயக்கத்திற்கும் எதற்கு ஏற்படவேண்டும், என்று யோசித்தால், இது ஒரு பைத்தியக்காரத்தனமான வேலை என்றே தோன்றும்.

## நாடகக் கலை

இசைக் கிளர்ச்சியின் தன்மை இப்படி இருக்க, இனி, நாடகக் கலையைப்பற்றிச் சிறிது சிந்திப்போம். நாடகக் கலை என்றால் என்ன? "ஆட்டமும் பாட்டும் இரசபாவமும் சுவையும்" என்று மாத்திரம் முடியுமானால், மொழிக் கிளர்ச்சியின் நிழலில் இதைப் புகுத்த வேண்டிய அவசியமே இல்லை. மொழிக் கிளர்ச்சியென்பது மொழியினால் மொழியாளர்களது நற்பழக்கம், வழக்கம், அவர்களது அறிவு மேன்மை, விடுதலை, முற்போக்கு, சுயமரியாதை முதலிய காரியங்களுக்கும் நாடகக் கலையில் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் அவர்களது மானத்திற்கும், சுதந்திரத்துக்கும் ஏற்பட்டிருந்துவரும்

கேடுகள் நீங்குவதற்கும், மொழியைப் பயன்படுத்தவும், அதற்கேற்ற, அதற்குப் பயன்படக்கூடிய மொழியை வளர்க்கவுமே யாகும்.

அதைவிட்டு ஒருவன் நம்மை வடமொழியில் இழிவு படுத்தினால் அல்லது அதற்காக வடமொழியை உபயோகப்படுத்திக் கொண்டால், "நீ இழிவு படுத்துவதைப் பற்றியோ எங்களை அடிமைப்படுத்தி மடையர்கள், இழி மக்கள் ஆக்கி அடிமை கொண்டிருப்பதைப் பற்றியோ கவலை இல்லை. ஆனால் அவற்றை எங்கள் மொழியில் செய்" என்று சொல்லி அதை அவன் கேட்காமல் போனதின் பின், அவற்றை நாமே நமது மொழியில் செய்துகொண்டோமே யானால் அதற்கு என்ன பெயர் இடுவது, என்பது நமக்கு விளங்கவில்லை.

ஆகையால் இம்மாதிரி நமக்குக் கேடான கருத்துக்கள்கொண்ட நாடகம், சினிமா ஆகியவைகளை வெறுக்க வேண்டும்; அழிக்கவேண்டுமென்பதும், இந்த மாதிரி மக்களுக்கு எந்த வழியிலாவது புத்தி புகட்டி அவர்களை வேறுவழியில் வயிறு வளர்க்கச் செய்யவேண்டும், என்பதுமே கலை வளர்ச்சியாளர்களின் முக்கிய கடமையாகும்.

அப்படி இருக்க "குதிரை கீழே தள்ளியதல்லாமல் குழியும் பறித்தது" என்பதுபோல் நாட்டில் இன்று ஒரு சிலர் தமிழர் சமூகத் துரோகமான முட்டாள்தனமான காரியங்களைச்செய்து மக்களைப் பாழாக்கி பணம் சம்பாதிப்பதுமல்லாமல் இதற்காக—இந்தப் பிழைப்பை வளர்ப்பதற்காக ஒரு 'கலை வளர்ச்சி மாநாடா' என்று நினைத்தால் யாருக்குத்தான் இரத்தம் குமுறாமல் இருக்கும்?

நாடகக் கலையைப்பற்றி பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் இன்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு

நாடகத்தில் தலைமை வகித்தபோது, தமிழ் மக்களுக்குக் கொடுத்த ஒரு எச்சரிக்கைப் பேச்சைக் கீழே குறிப்பிட்டு இதை முடிக்கின்றோம்.

அதாவது,

"ஆரியப் புராணங்களில், அநேகம் முத்தமிழ்க் கலை இலக்கியம் ஆகியவைகளுக்குள் புகுந்து நமக்குச் செய்திருக்கும் கேட்டை ஒழிக்க......மானத்தில் கவலையுள்ள நாம் எதைப் பலி கொடுத்தாவது இந்த நிலையை பாற்றியாக வேண்டும்; அடியோடு ஒழித்தும் ஆக வேண்டும்.

ஏனெனில் இப்படிப்பட்ட முன்னேற்றமான காலத்திலும்கூட தமிழர்கள் மனிதத்தன்மை பெறாததற்கும், அதைப்பற்றிச் சரியான கவலை கொள்ளாததற்கும் இந்தப் புராண இதிகாச கதைகளின் தத்துவங்கள் நமது கலைகளுக்குள் வந்து புகுந்து கொண்டிருக்கும் சேதிகளை அறியாத மூடநம்பிக்கையே முதற்காரணம்.

கலையின் மூலம் புகுத்தப்பட்ட இந்த மூட நம்பிக்கைகளேதான் தமிழர்களாகிய நமக்கு மதமாகவும், பக்தியாகவும், கடவுளாகவும் இருப்பதோடு மாத்திரமல்லாமல், இவைகளே கலையாகவும், நாடகமாகவும், சங்கீதமாகவும், சினிமாவாகவும், இலக்கியங்களாகவும், மக்களை மேன்மையாகவும் கீழ்மையாகவும் கருதவும், வாழ்க்கை நடப்பதற்கு நீதியாகவும், உபமான உபமேயமாக எடுத்துச் சொல்லுவதற்கு ஆதாரமாகவும் இருக்கின்றன.

அன்றியும் அறிவாளிகள், கவிகள், பண்டிதர்கள், மேதாவிகள், மகாத்மாக்கள், மகான்கள் என்பவர்களுக்கும் அவர்களது வாழ்வுக்கும், மேன்மைக்கும், விளம்பரத்துக்கும் மூலப்பொருள் பொக்கிஷங்களாயும் இவைகளே இருக்கின்றன.

ஆதலால் மொழி, சமுதாயம் ஆகிய துறைகளிலும் அறிவு, கலை, இலக்கியம் சமயம் முதலாகிய துறைகளி லும் நம் மக்களுக்கு இன்று இருந்துவரும் இழிவுகள் ஒழிந்து மேன்மைகள் ஏற்பட வேண்டும் என்று உண்மை யாய் கருதுகிறவர்கள் இதுபோன்ற பெருத்ததொரு புரட்சிகரமான முயற்சிகள் செய்யவேண்டும்.

உண்மையாகச் சொல்லுகிறேன், வடமொழி சாஸ்திர புராண இதிகாசங்கள் (தமிழர்களாலேயே ஆனவைகளா னாலும்) அவை எந்த ரூபத்தில் நுழைக்கப்பட்டு இருந் தாலும், அல்லது தானாகவே நுழைந்திருந்தாலும் அவை யாவும் அடியோடு ஒழிக்கப்பட்டால் ஒழிய, தமிழன் மனித உரிமையோடும், மானத்தோடும் வாழ்ந்து சமநிலை அடைய முடியவே முடியாது என்பதை உணருங்கள்.

......மற்றும் அவைகள் வடமொழியில் இருப்பதை விட தமிழில் இருப்பவைகளே நமக்கு மிகுதியும் கேடு செய்யக் கூடியவையாகும். அன்றியும் அவை வெறும் கதை, காவியம் புராணம் ஆகிய உருவில் இருப்பவை களைவிட கலை உருவில் இருப்பதும்; இலக்கியம், நாட கம், இசை (சங்கீதம்) ஆகியவற்றின் உருவில் இருப்பதும் மிகமிகக் கேடு செய்பவையாகும் என்பதே எனது அறி வுக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டிய முடிந்த முடிவாகும்.

......எப்படியாவது அந்தப் புராண, இதிகாச, தேவார பிரபந்தம் ஆகியவை கூறும் இராமன், கிருஷ்ணன், சிவன், சுப்பிரமணியன், ஷண்முகன், காளி, கௌரி முதலிய கடவுள்களையும் அவர்களைப்பற்றிய கலை, இலக்கியம், நாடகம், சினிமா, சங்கீதம், பஜனைப் பாட்டுகள் முதலானவைகளையும் அடியோடு ஒழிக்க வேண்டியதே நமது முக்கியமும் முதன்மையும்ஆன கட மையாகும் என்று உறுதி கொள்ளுங்கள்.

இக்காரியங்களில் சமய, புராண, இதிகாச பண்டி தர்களையும், சமயாச்சாரிகளையும், கலைவாணர்களை யும் துச்சமாகக் கருதுங்கள்.

உங்கள் மனோ வேகம் கொண்ட மட்டும் அவர் களை வெறுத்துத் தள்ளுங்கள்.

இவர்களை, ஆரியர்களைவிட மோசமான உங்கள் விரோதிகளாகக் கருதுங்கள்''

என்று அந்தக் காலத்திலேயே பெரியார் பேசியிருப் பதை நினைவு கொள்ள வேண்டுகிறோம்; இப்போதாவது உங்கள் கடமை என்ன என்பதை உணருங்கள்.

# இனி வரும் உலகம்

## முன்னுரை.

இன்றைய உலகமானது பழங்கால உலகம் என்பதிலிருந்து நாளுக்குநாள் எப்படி மாறுதலடைந்து வந்திருக்கிறது? இனிச் சில நூற்றாண்டுகளில் எப்படிப்பட்ட மாறுதலை அடையும்? என்பனவாகிய விஷயங்கள் பகுத்தறிவுவாதிகளுக்குத்தான் ஏதாவது தெரியக்கூடுமே தவிர புராண இதிகாசப் பண்டிதர்கள் என்பவர்களுக்கு, அதுவும் நம் "கலைகாவிய"ப் பண்டிதர்களுக்கு தெரிவது சுலபமான காரியமல்ல.

ஏனெனில், நமது பண்டிதர்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாத புராணங்களையும், ஆராய்ச்சிக்குப் பொருந்தாத இலக்கியங்களேயும், பிரத்தியட்ச அனுபவத்திற்குச் சம்பந்தப்படுத்தமுடியாத கலை காவியங்களையும் படித்து, உருப்போட்டு, அவைகளிலிருப்பவைகளை அப்படியே மனதில் பதியவைத்துக் கொண்டிருப்பதோடல்லாமல், அவைகளில் சம்பந்தப்பட்ட கதை கற்பனைகளை உண்மையாக நடந்தவைகள் என்றும் நம்பிக்கொண்டிருப்பவர்களாவார்கள்.

பகுத்தறிவுவாதிகள் அந்தப்படிக்கல்லாமல், அனுபவத்தையும், தங்கள் கண்களில் தென்படும் காட்சிகளையும், வஸ்துக்களின் குணங்களேயும், அவற்றின் மாறுதல்களையும், இயற்கையின் வழிவழித்தன்மைகளையும், அவற்றால் கண்டுபிடிக்கப்பட்டுவரும் புதுமை அதிசயங்களையும், மனிதனுக்கு முன்காலத்தில் இருந்துவந்த அறிவாற்றலையும் சிந்தித்து, இன்று உள்ள அறிவையும், ஆற்றலையும், இனி ஏற்படும் அறிவாற்றலையும், சாதனங்களையும், மற்றும் இவைபோன்றவைகளையும், ஆராய்ச்சிக் கண்களோடு நடுநிலையில் இருந்து பார்ப்பவர்களாவார்கள்.

பண்டிதர்கள், பழங்காலத்தையே சரியென்று கருதிக்கொண்டு அதற்கே புது உலகம் என்று பெயர் கொடுத்து

அங்கே செல்லவேண்டுமென்ற அவாவுடையவர்கள். பகுத்தறிவுவாதிகள் எவரும் ஒவ்வொரு விநாடியையும் புதியகாலமாகக் கருதிப் புதிய உலகத்திற்குப்போவதில் ஆர்வமுள்ளவர்கள். பண்டிதர்கள் என்பவர்கள் "எந்த நாட்டிலும் இப்படித்தான் இருப்பார்கள்" என்று நாம் சொல்ல வரவில்லை. நம்நாட்டுப் பண்டிதர்கள் என்பவர்களில் பெரும்பாலோர்களைக் கருதித்தான் நாம் இப்படிச் சொல்கிறோம். ஏனெனில் நம் நாட்டுப் பண்டிதரென்பவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படவோ, அது வளர்ச்சியடையவோ முடியாமல் தடைசெய்யத் தகுதியான மாதிரியிலேயே அவர்களது படிப்பும் பரிட்சையும் இருக்கிறது. ஆதலால் நம் பண்டிதர்கள் என்பவர்களுக்குப் பகுத்தறிவு ஏற்படுவதற்குத் தடையாக இருப்பது அவர்களது படிப்பே ஒழிய அவர்களது அறிவுக் குறைவன்று. தவறிக் கீழே விழுந்த பிள்ளைக்கு அரிவாள் எதிரில் இருந்தால் எப்படி அதிக காயம் ஏற்படுமோ, அதுபோல் புராண இதிகாசக்கலைச் சேற்றில் விழுந்த நமது பண்டிதர்களுக்கு, இயற்கை வாசனை அறிவால் ஏற்படக்கூடிய பகுத்தறிவையும் பாழ் படுத்தத்தக்க வண்ணம், மூடநம்பிக்கைச் சமய (மத)ங்கள் என்னும் விஷப்பாம்புகள் அவர்களைக் கரையேறவிடாதபடி சுற்றிக்கொண்டிருக்கின்றன.

நம் மதவாதிகள், சிறப்பாக "இந்து" மதவாதிகள் என்பவர்கள் பண்டித மதவாதிகளைவிட மோசமானவர்கள். பண்டிதர்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால் இருந்த உலகத்துக்குப் போகவேண்டுமென்றால், மதவாதிகள் பதினாயிரக்கணக்கான வருஷங்களுக்கும், பல 'யுகங்களு'க்கும் முன்னால் இருந்த உலகத்துக்குச் செல்லவேண்டுமென்பவர்கள். இவர்கள் இருவருக்கும் பகுத்தறிவுக்குப் பொருத்தமில்லாததும், மனித சக்திக்கு மீறினதுமான காரியங்களிலும், அசாத்தியமான கற்பனைகளிலுந்தான் நம்பிக்கையும் பிரியமும் இருக்கும். ஆகவே இப்படிப்பட்ட இவர்களால் கண்டறியப்படும்

புதுஉலகம் காட்டுமிராண்டிகள் வசிக்கும் உலகமாக இருக்கும் என்பதையும் அவர்களை மதிக்கும் மக்கள் பெரும்பாலும் மூடநம்பிக்கையில் மூழ்கிய காட்டுமிராண்டிகளாய் இருப்பார்கள் என்பதையும் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஆதலால்தான் "பழையவைகளுக்கே மதிப்பும் மரியாதையும் வைத்திருப்பவர்களால் மாறுதலின் சக்தியும் அம்மாற்றத்தின் தன்மையும் அதனால் ஏற்படும் பயனும் உணர்ந்து கொள்ளவோ, எதிர்பார்க்வோகூட முடியாது என்று சொல்ல வேண்டியதாயிற்று.

பழையவைகளை ஏற்ற அளவுக்கும் நற்பயன் தர வேண்டிய அளவுக்கும் உபயோகித்துக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை நாம் வலியுறுத்துவதில் பின்வாங்கமாட்டோம். ஆனால் புதியவற்றிலேயே முயற்சியும் ஆராய்வதில் ஆர்வமும் இருக்கவேண்டியது அவசியமாகும். ஏனெனில் அவற்றினால்தான், இயற்கையைப் படிப்பது என்பதோடு புதியவற்றை கண்டுபிடிப்பதும் முற்போக்கு அடைவதும் (இன்வென்ஷன், ப்ராக்ரஸ்) சுலபத்தில் சாத்தியமாகலாம்.

இன்று உலகத்தின் வேறு பல பாகங்களில் உள்ளவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பல அற்புதங்களும் அப்பாகங்கள் அடைந்துள்ள முற்போக்குகளும் முதலாகியவை எல்லாம் அந்நாட்டவர்கள், பழையவற்றோடு திருப்தி அடைந்து, அதுவே முடிவான பூரண உலகம் என்று கருதி, அப்பழையவற்றையே தேடிக்கொண்டு திரியாமல், புதியவற்றில் ஆர்வங்கொண்டு, நடுநிலைமை அறிவோடு, முயற்சித்ததின் பலனாலேயே ஏற்பட்டவைகளாகும். அவை இன்று எல்லா மக்களாலும் ஆதரவோடு அனுபவிக்கப்படுகின்றன.

ஆகவே, இதை உணர்ந்தவர்கள் தான் இனிச் சில நூற்றக்கணக்கான ஆண்டுகளில் எப்படிப்பட்ட உலகத்தைக்காணலாம், அதற்கு என்ன முயற்சி செய்யலாம் என்பதை ஒருவாறு கற்பனைச் சித்திரமாகவாவது தீட்ட முடியும்.

ஈ. வெ. ரா.

# இனி வரும் உலகம்

——:(*):——

உலகத்தை ஒருவாறு படித்தறிந்த பல பெரியார்களின் அபிப்பிராயங்களையும் உலகின் பல பாகங்களில் இதுவரை ஏற்பட்டு வந்திருக்கும் காரியங்களையும் ஊன்றிப் பார்ப்போமானால், இனிவரும் உலகமானது அரசனது ஆட்சி அற்றதாகவே இருக்கும். ஏனெனில், இனிவரும் உலகம் தங்கம், வெள்ளி முதலிய (உலோக) நாணயங்களும், தனிப்பட்டவர்களுக்கென்று சொத்து உடைமையும், உரிமையும் கொண்டு இருக்காது. ஆதலால் அப்படிப்பட்ட உலகத்துக்கு அரசனோ இன்றுள்ளது போன்ற ஆட்சியோ எதற்காக வேண்டியிருக்கும்! மக்கள் உயிர் வாழ்க்கைக்கும் ஓய்வுக்கும் அனுபவிப்புக்கும் இன்றுள்ள உழைப்புகள், கஷ்டங்கள், கட்டுக்காவல்கள் இருக்காது.

இன்றுள்ள பெருவாரியான மக்கள் கஷ்டப்பட்டு உழைத்து வேலை செய்யும் நேரம் அதிகம், பயன் அனுபவிக்கும் நேரமும் குறைவு.

உண்ணும் உணவுப்பொருள்களுக்கும் அனுபவிக்கும் போகப்பொருள்களுக்கும் வசதி அதிகம். போதிய உணவில்லாமலும் குறைந்தபட்ச சுகபோக அனுபவமில்லாமலும் பட்டினி கிடக்கும் மக்களும், வறுமையை அனுபவிக்கும் மக்களும் அநேகம்!

சுயேச்சைக்கு வசதியும் சுய நிர்ணயத்துக்கு மார்க்கமும் தாராளமாய் இருக்கிறது. சுயேச்சையோடு இருப்பவர்களோ, தன்னம்பிக்கையோடு இருப்பவர்களோ மிகக் குறைவு.

பொருள் செய்வகைகளும், அவற்றிற்கு வேண்டிய மூலப்பொருள்களும் ஏராளமாயிருக்கின்றன. குறைந்த

அளவு, அதாவது, இன்றியமையாத, தேவையான பொருள்கூட இல்லாமல் கஷ்டப்பட்டும், வேதனையுற்றும்வருகிற மக்கள் அநேகர்.

நிலப்பரப்பு ஏராளம்; நிலமில்லாதவர்கள் என்பவர்கள் அநேகர். இப்படிப்பட்ட, சர்வ செல்வமும் நிறைந்துள்ள உலகில் பட்டினி, வறுமை, மனக்குறை, வாழ்வுக்கே போராட்டம் ஏன் உண்டாகவேண்டும்?

இவைகளுக்கும், கடவுளுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?

இவைகளுக்கும், மதங்களுக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா?

அல்லது இவைகளை கடவுளர்களுக்கும் சம்பந்தப்படுத்திக்கொண்டிருக்கும் மக்களில் எந்தக் கடவுளையாவது, எந்த மதத்தையாவது நம்பிப் பின்பற்றி, வழிபடுகிற மக்களில் யாருக்காவது மேலேகண்ட குறைபாட்டுணர்ச்சி இல்லை என்று கூற முடியுமா?

அல்லது கடவுள், மதம் முதலியவைகளைப்பற்றி இலட்சியப்படாவிட்டாலும், மனிதனுக்கு மேற்கண்ட குறைகளை நீக்கிக்கொள்ள அறிவு இல்லை என்றாவது சொல்லமுடியுமா?

உலக சீவராசிகளுக்குள்ளே மனிதனே அதிக அறிவு பெற்றவன். "கடவுள்களையும், மதங்களையும், ஞானமார்க்கங்களையும், ஆத்மார்த்த அரிய தத்துவங்களையும் மனிதன்தான் கண்டுபிடித்திருக்கிறான். எத்தனையோ மனிதர்கள் 'தெய்வீக சக்தி பெற்று' தெய்வத்தோடு கலந்தும், தெய்வமாகியும்' இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களாலும் மேற்கண்ட

குறைபாடு, பட்டினி, அவரவர் உணவுக்கே கஷ்டப் படுவது முதலாகிய சாதாரண தன்மைகள்கூட நீங்கப்பட வில்லை என்றால், இவற்றிற்கு முக்கிய காரணம், மேலே குறிப்பிட்ட கடவுள் மதம், ஞானமார்க்கம், நீதி, ஒழுக் கம், அரசாட்சி என்பவைகளும், மக்கள் தங்களுக்கு ஏற் பட்ட அதிக அறிவை மேற்கண்டவற்றின் கட்டுப்பாடு களிலிருந்து வேறுபடுத்தித் தனித்திருந்து சிந்தித்துப் பார்க்காததும் தான் காரணங்களாகும் என்பது விளங்க வில்லையா?

இப்போது மக்களில் ஒரு சிலர், மேற்கண்ட "ஆத் மார்த்தம்" முதலிய "சூட்சுமங்களில்" உள்ள கவலையை யும் மூடநம்பிக்கையையும் விட்டுத் தம் அறிவையும் அனு பவத்தையுமே நம்பிச் சிந்தித்ததன் காரணமாகவே பல அற்புதங்களும் அதிசயங்களும் காணமுடிந்தபின், மேல் நாடுகளிலே அதிகம்பேர் அந்தப்படி சிந்திக்க முன்வந்து விட்டார்கள். பழைய உலகம் இனி நிலைக்காது என்று முடிவு கட்டுகிறார்கள். புதிய உலகத்தைப்பற்றியே சிந் திப்பதும், எதிர்பார்ப்பதுங்கூட இன்று பல அறிஞரின் கவலையாகப் போய்விட்டது.

ஏன் பிறக்கவேண்டும்? சகல சவுகரியங்களுமுள்ள இப்பரந்த உலகில் உணவுக்காக என்று ஒருவன் ஏன் பாடுபடவேண்டும்? ஏன் சாகவேண்டும்? என்கின்ற பிரச் சினைகள் சிந்தனைக்கு மயக்கமளித்து வந்து சிக்கலான பிரச்சினைகளாக இருந்தவை, இன்று தெளிவாக்கப் பட்டுப் பரிகாரம் தேடப்பட்டும் வருகிற காலம் நடக் கிறது. இந்தப் போக்கு சீக்கிரத்தில் மக்களின் பொது வாழ்விலேயே பெரியதொரு புரட்சியை உண்டாக்கும்படி யான புதிய உலகத்தை உண்டாக்கித்தான் தீரும். அப்போதுதான் நான் முன்சொன்ன பணம், காசு என்ற உலோக நாணயமே இருக்காது, அரச ஆட்சி இருக்காது, கடினமான உழைப்பு என்பது இருக்காது, இழிவான

வேலை என்பது இருக்காது, அடிமைத் தன்மை இருக்காது, ஒருவரை ஒருவர் நம்பிக்கொண்டு வாழவேண்டிய அவசியம் இருக்காது, பெண்களுக்குக் காவல், கட்டுப்பாடு, பாதுகாப்பு என்பவையான அவசியம் இருக்காது.

காந்தியாரைப் போலவும், மடாதிபதிகளைப் போலவும், அரசர்கள், ஜமீன்தாரர்கள் முதலிய பெரும்பெரும் செல்வவான்கள், போகபோக்கியம் அனுபவிப்போர்கள் போலவும், பார்ப்பனர்கள் போலவும், உலக மக்கள் யாவரும் உயர் வாழ்வு வாழவேண்டுமானாலும், அவ்வாழ்வு வாழ்வதற்கு வேண்டிய சவுகரியங்கள் ஏற்படவும், நிலைக்கவுமான காரியங்கள் ஏற்பட ஒரு மனிதனுக்கு ஒரு நாள் ஒன்றுக்கு ஒரு மணிநேரம், அல்லது இரண்டுமணி நேரத்துக்குமேல் வேலை செய்யவேண்டிய அவசியமே இருக்காது. ஒரு மனிதன் தனது காலுக்கோ, காதுக்கோ, நாசிக்கோ, நயனத்துக்கோ, வயிற்றுக்கோ, எலும்புக்கோ வலி இருந்தாலும், அவன் "எனக்கு வலிக்கிறது" என்று சொல்லுவதுபோல், உலகில் வேறு எந்தத் தனிப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் சங்கடத்தையும், குறைபாடுகளையும், ஒவ்வொருவரும் (சமூகமே) தங்களுக்கு ஏற்பட்டது போல் நினைக்கும்படியும் அனுபவிப்பதுபோல் துடிக்கும்படியும், அவ்வளவு கூட்டு வாழ்க்கையும், ஒற்றுமை உணர்ச்சியும் ஏற்படும்.

உலகில் எந்த பாகத்திலும் இன்றைய மாதிரியான போர் நடக்காது. மக்கள், மக்களால், யுத்தம், கொள்ளை, கொலை முதலியவற்றின் பேரால் மடியமாட்டார்கள். உணவுக்காக வேலை செய்யவேண்டிய வேலையில்லாத் திண்டாட்டம் இருக்காது. மக்கள் "உடற்பயிற்சிக்காக வேலை செய்யவேண்டுமே" என்கின்ற கவலைகொண்டு உழைப்பு வேலைக்காக அலைவார்கள்.

அதிசயப் பொருளும், அற்புத காட்சிகளும், அவற்றின் அநுபவங்களும் மக்கள் எல்லோரும் ஒன்றுபோல்

அனுபவிப்பார்கள். இலேவாதேவிக்காரர்கள், தனிப்பட்ட வியாபாரிகள், தொழிற்சாலை, இயந்திரசாலை, முதலாளிகள், கப்பல், இரயில், பஸ் சொந்தக்காரர்கள், கமிஷன் ஏஜண்டுகள், இன்ஷியூரன்ஸ் ஏஜண்டுகள், தரகர்கள், விளம்பரங்கள், மற்றும் வேறு எவ்விதமான தனிப்பட்ட இலாபமடையும் மக்களும், தொழில்களும் எவையுமே இருக்காது. சண்டைக்கப்பல், யுத்தப்படை, யுத்த தளவாடங்கள் வேண்டி இருக்காது என்பதோடு, மக்களைக் கொன்று குவிக்கும் சாதனமோ, அவசியமோ எதுவுமே இருக்காது.

வாழ்வுக்காக எப்படி எப்படி உழைப்பது என்கின்ற கவலையும், முயற்சியும் மிகச்சிறிய அளவுக்கு வந்துவிடும். சுகம் பெறுவதிலும், போகபோக்கியமடைவதிலும், நீண்ட நாள் வாழ்வதிலும், ஆராய்ச்சியும் முயற்சியும் வளர்ந்துகொண்டே போகும். மக்களின் தேவைகள் எவ்வளவு வளர்ந்தாலும், அவற்றை உற்பத்தி செய்வதற்காக மனிதன், செலவழிக்கவேண்டிய நேரம் மிகமிகக் குறைவாகவே இருக்கும்.

உதாரணமாக மக்கள் முன்பு கொஞ்சமான உடை அணிந்து கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் துணி நெய்பவர்கள், ஒரு நிமிடத்துக்குச் சுமார் 150 இழைகள் தான் கோர்த்து வாங்க (நெய்ய) முடிந்தது. இன்று மக்கள் முன்னைவிட பல மடங்கு அதிகமாகத் துணியை அணிகிறார்கள் என்றாலும், அவ்வளவும் கிடைக்கும்படியான அளவுக்கு மேலே நெசவுத் துறையில் விஞ்ஞானம் அபிவிருத்தி அடைந்து, ஒரு நிமிஷத்துக்கு 45000 இழைகள் கோர்த்து வாங்கும்படியான இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

சிகரெட்டுகளைப்பற்றிச் சிந்திப்போமானால் அக்காலத்தில் ஒரு நிமிடத்துக்கு இரண்டு மூன்று சிகரெட்டு

கள்தான் சுற்ற முடிந்திருக்கும். ஆனால் இன்று ஒரு நிமிடத்துக்கு 2500 சிகரெட்டுகள் ஒரு இயந்திரத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதுவும் ஒரு பக்கம் புகையிலையைப் போட்டால் மறுபக்கம், ரயிலில் ஏற்றும் படியான மாதிரியில் சிகரெட்டுப் பேக்குகள் கொண்ட பெட்டிகள் கட்டாகக் கட்டப்பட்டு விடுகின்றன என்பதோடு அந்தச் சிகரெட்டுக் கம்பெனியின் பெயர் அந்த ஒவ்வொரு சிகரெட்டின் மீதும் சரியாய்ப் பதியவில்லையானால், பதியாத சிகரெட்டை இயந்திரம் கீழே தள்ளி விடுகிறது. இப்படிப்பட்ட நுட்பமான இயந்திரங்கள் இப்போதே கண்டுபிடிக்கப்பட்டிருக்கும்போது, இனி வருங்கால இயந்திர உலகம் எப்படி இருக்கும் என்பதை விளக்கவும் வேண்டுமோ! இம்மாதிரியாகவே வாழ்வுக்கு வேண்டிய எல்லாத் தேவைத் துறைகளிலும் இயந்திர சாதனங்கள் பெருகும்போது, நாட்டு மக்களில் ஒவ்வொருவரும் வருஷத்திற்கு இரண்டு வாரம் வேலை செய்வதனாலேயே மக்களுக்கு அவசியமான எல்லாத் தேவைகளும் பூர்த்தியாகி விடலாம்.

## வேலை இல்லாமல் போகாது.

ஆகவே ஒரு ஆண்டில் மீதியுள்ள 50-வாரங்களும் மக்களைச் சும்மா. சோம்பேறிகளாய் இருக்கச் செய்யுமே என்று யாரும் பயப்படவேண்டியதில்லை.

வாழ்க்கைச் சாதனங்களுக்கு எப்படிக் காலமும் யோசனையும் கண்டுபிடிப்புகளும் தேவை இருக்கிறதோ, அதுபோலவே மக்களின் ஓய்வுக்கும், உடற்பயிற்சிக்கும், மகிழ்ச்சிக்கும், போகபோக்கியத்திற்கும் யோசனைகளும் ஆராய்ச்சிகளும், சாதனங்களும், அவைகளைச் சுலபமாகச்செய்ய வசதிகளும் கண்டுபிடிப்பதும், அவை நாளுக்குநாள் மாற்றமடைவதும் ஆகிய காரியங்களில் மீதி நாட்கள் செலவழிக்கப்படவேண்டி இருக்கும்.

அக்கால நிலை நாம் வரையறுக்கமுடியாத அற்புதங்களையும், அதிசயங்களையும் கொண்டிருக்குமென்று சொல்லுவது மிகைபடச் சொன்னதாக ஆகாது. ஆதலால் மக்கள், குறிப்பாக அறிவாளிகள் சிந்தனையாளர்கள் முற்போக்கில் கவலை உள்ளவர்கள் ஆகியவர்களுக்கு இவற்றின் மூலம் சதா வேலை இருந்துகொண்டே இருக்கும். அப்படிப்பட்ட வேலைகள் இன்று உள்ளதுபோல் கூலிக்கு வேலை செய்வதுபோலவோ, இலாபத்துக்கு வேலை செய்வதுபோலவோ இல்லாமல் உற்சாகத்துக்காகவும், போட்டிப்பந்தய உணர்ச்சிபோன்ற தூண்டுதலுக்காகவும் ஊக்கத்துடன் வேலைசெய்வதாக இருக்கும்.

இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் தனது வாழ்நாளில் தன்னை என்ன காரியத்தைச் செய்து முடித்து உலகுக்கு பயன்படச்செய்து கொள்ளுவது என்ற கருத்தே வளரும்.

## சோம்பேறிகள்

இப்படியானால் சோம்பேறிகள் வளர்ந்துவிட மாட்டார்களா? என்று கேட்கலாம். இப்படிப்பட்ட காலத்தில் சோம்பேறிகள் இருக்கமுடியாது; இருப்பார்கள் என்றே வைத்துக்கொண்டாலும், இவர்களால் சமூகத்துக்குத் தேவையான எந்த வேலையும் குறைந்து போகாது. அதனால் ஒரு கெடுதியும் ஏற்பட்டுவிடாது. ஆதலால் அப்படிப்பட்ட இவர்கள் வேலையில் ஈடுபடுவதைவிட சும்மா இருந்து சாப்பிடுவது அவர்களுக்கே கஷ்டமாயிருக்கும்.

பொதுவாகவே அந்தக் காலத்தில் மனிதர்கள் உண்மையிலேயே தங்களுக்கு "வேலைசெய்யச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே" "வீணாக நேரம் கழிகிறதே"

என்று வேலைக்கு போராடிக்கொண்டு இருப்பார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு இச்சோம்பேறிகளால் அனுகூலம் ஏற்படுமே தவிர, யாருக்கும் கவலை இருக்காது. எல்லா மக்களுக்கும் அவர்கள் ஆசைதீர வேலை கொடுக்க முடியாத காலமாக இருக்குமே ஒழிய, அந்தக் காலம் வேலைக்கு ஆள்தேட வேண்டியதாகவோ, 'அவன் வேலை செய்யவில்லை,' இவன் வேலை செய்யவில்லை என்று கருதுவதாகவோ, குறை கூறுவதாகவோ இருக்காது.

## "இழிவான" வேலை

"இழிவான" வேலைகளுக்கு ஆள் கிடைக்குமா? என்ற கேள்வி பிறக்கலாம். இழிவான வேலை என்பது வருங்காலத்தில் இருக்கமுடியாது. சரீரத்தால் செய்யப்படவேண்டிய எல்லாக் காரியங்களும் அனேகமாக இயந்திரங்களாலேயே செய்யும்படியாக ஏற்பட்டுவிடும். கக்கூசு எடுக்கவேண்டியதும், துலக்கவேண்டியதும், வீதி கூட்ட வேண்டியதும்கூட இயந்திரத்தினாலேயே செய்து முடிந்துவிடும். மனிதன் பாரம் எடுக்கவேண்டியதோ இழுக்கவேண்டியதோ ஆன காரியங்கள் இருக்கவே இருக்காது. அக்காலத்தில் கவுரவம் வேண்டும் என்பவர்கள் பொது ஜன நன்மை சவுகரியம் ஆகியவைகளைச் செய்யவேண்டி இருக்கும் என்பதோடு, அதில் ஏற்படும் போட்டியினால் 'இழிவான' வேலைக்கும் எப்போதும் கிராக்கி இருந்து கொண்டே இருக்கும்.

கவிகளும், இதர சித்திரக்காரர்களும், நாவலர்களும் சிற்பிகளும், போட்டி போட்டுக்கொண்டு புதிய உலகை (தோற்றத்தை) உண்டாக்குபவர்களாகவே இருப்பார்கள். திறமையானவர்களுக்குத்தான் வேலையும் மதிப்பும் கிடைக்கும், மற்றவர்கள் அலட்சியப் படுத்தப்படுவார்கள்.

## "ஒழுக்கக்குறைவு"

அக்காலத்தில் 'ஒழுக்கக்குறைவு' என்பதற்கு இடமே இருக்காது. ஒழுக்கக்குறைவாய் ஒருவன் நடக்கவேண்டுமானால், அதனால் அவனுக்கு ஒழுக்கமாய் நடப்பதன் மூலம் கிடைக்கப்படாத ஏதாவது லாபமோ, திருப்தியோ, ஆசைப் பூர்த்தியோ ஏற்படவேண்டும். புதிய உலகில் தனிப்பட்டவர் தேவைக்கும், தனிப்பட்டவர் மனக்குறைக்கும், எங்சித்திரியும் ஆசைக்கும் இடமே இருக்காது. தன்னிலும் மேலாகவோ தன்னிடமிருப்பதைவிட அதிகமாகக் கொண்டோ, வேறொருவன் இருக்கிறான், அனுபவிக்கிறான் என்கின்ற உணர்ச்சி ஏற்படும்போதுதான் அதிருப்தியும், மனக்குறையும் ஏற்படும். அதை நிவர்த்தித்துக் கொள்வதற்குத்தான் எந்த மனிதனும் ஒழுக்கக்குறைவாய், நியாய விரோதமாய், கட்டுத்திட்டத்துக்கு மீறி நடக்கவேண்டியவனாகலாம். பொதுவாக இன்று ஒழுக்கம், நியாயம், கட்டுத்திட்டம் என்பவைகளே பெரிதும் உயர்வு தாழ்வுகளையும், தனிப்பட்டவர்கள் உரிமைகளையும், சவுகரியங்களையும் நிலைநிறுத்தஏற்படுத்தப்பட்டவைகளேயாகும். ஆகையால், இவை இரண்டும் இல்லாத இடத்தில் அவை இரண்டுக்கும் இடமிருக்காது. அதுபோலவே திருட்டுக்கும் இடமிருக்காது. கங்கைக்கரை ஓரத்தில் குடியிருப்பவர்கள் கங்கை நீரைத் திருடவேண்டிய அவசியம் ஏற்படுமா? அல்லது அவர்களது தேவைக்குமேல் அதிகமாக எடுப்பார்களா? "நாளைக்கு வேண்டுமே," என்று சேகரித்து வைக்க முயற்சிப்பார்களா? ஆதலால் தேவை உள்ள சாமான்கள் தாராளமாய் வழிந்தோடும்போது திருட்டுக்கு இடமே இருக்காது, அதிகமாய் எடுத்துக்கொள்ள அவசியமும் இருக்காது. பொய் பேச வேண்டிய அவசியமும் இருக்காது. அதற்கும் ஏதாவது இலாபம் இருந்தால்தானே பொய் பேச நேரிடும். குடியினால் மக்களுக்கு எவ்விதக் கெடுதியும் ஏற்பட இடமிருக்காது. கொலை செய்யும்

படி தூண்டத்தக்க காரியமும் இல்லாமல் போய்விடும். சூது ஆடுவது என்பதும், பந்தயப்போட்டியாய் இருக்கலாமே தவிர பண நஷ்டமாக இருக்காது.

## விபசாரம்.

விபசாரம் என்பதும் இருக்க நியாயமில்லை. ஏனெனில் பணத்துக்காகவும், பண்டத்துக்காகவும் விபசாரம் என்பது அடியோடு மறைந்தேபோகும். மக்களுக்குத் தன்மான உணர்ச்சி ஏற்பட்ட காலத்தில் ஒருவரை ஒருவர் அடக்கி ஆளமுடியாது. ஒருவர் தயவைக் கோரி ஒருவர் இணங்கிவிட முடியாது. ஒருவரை ஒருவர் அதாவது ஆணும் பெண்ணும் மனப்பூர்வமான சமவிருப்பமின்றி காதல் அநுபவிக்கமாட்டார்கள். கலவி விஷயத்தில் யாவருக்கும்தேர்ந்த அறிவும்,கல்வியும் ஏற்படும். ஆனதால் மனமொத்த உண்மைக் காதல் வாழ்க்கை என்பதைத் தவிர, புதுமைக்காக, மாறுதலுக்காக, அடிக்கடி மாறும் தன்மை சுலபத்தில் ஏற்பட்டுவிடாது. அன்றியும் உடல் நலம் பற்றிய அறிவும் கவலையும், ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கும். தன்மான உணர்ச்சியும் இருக்கும். "விருப்பம் இல்லாத இடத்தில், சம்மதமில்லாத இடத்தில் இச்சைவைப்பது தனது சுயமரியாதைக்குக் குறைவு" என்றே ஆண் பெண் இருபாலரும் கருதுவார்கள். பெண் அடிமையோ ஆண் ஆதிக்கமோ இல்லாமலும், பலாத்காரமோ வற்புறுத்தலோ உடல் நலத்திற்கு கேடோ இல்லாமலும், ஒத்த காதல் ஒத்த இன்பம், ஒன்றுபட்ட உள்ளம்கொண்ட கலவியால் சமுதாயத்துக்கோ தனிப்பட்ட நபர்களுக்கோ எவ்விதக்கெடுதியும் ஏற்பட்டுவிடாது. ஆதலால் விபசாரம் என்பதற்கு இடமில்லாதுபோகும்.

மூளைக்கோளாறான குணங்கள் என்பவைகளை இயற்கையாக உடையவர்கள் யாராவது இருந்தால் அதற்கு மாத்திரம் பரிகாரம் தேடவேண்டிய அவசிய

மிருக்கலாம். அதுவும் அப்படிப்பட்டவர்களால் பிறருக்கோ, தங்களுக்கோ கேடு ஏற்படுவதாய் இருந்தால் மாத்திரம்தானே? ஆதலால் பஞ்சேந்திரியங்களும் ஒரே துறையில் ஒரே சமயத்தில் இன்பந்தரக்கூடிய இவ்வின்பத் துறையில் இயற்கைக்கேடு, சமுதாயக்கேடு அல்லாமல் வேறு காரியத்திற்குக் கட்டுப்பாடு இருக்காது.

## மற்ற சவுகரியங்கள்.

போக்குவரவு எங்கும் ஆகாயவிமானமும் அதிவேக சாதனமுமாகவே இருக்கும்.

கம்பியில்லாத் தந்திச்சாதனம் ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும்.

ரேடியோ ஒவ்வொருவர் தொப்பியிலும் அமைக்கப் பட்டிருக்கும்.

உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் எங்கும் மலிந்து, ஆளுக்காள் உருவம் காட்டிப் பேசிக் கொள்ளத்தக்க சௌகரியம் ஏற்படும்.

மேற்கண்ட சாதனங்களால் ஒரு இடத்தில் இருந்து கொண்டே பல இடங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி கற்றுக்கொடுக்கச் சாத்தியப்படும். உணவுகளுக்குப் பயன் படும்படியாக உணவுச் சத்துப்பொருள்களாகச் சுருக்கப் பட்டு ஒரு வாரத்திற்கு ஒருசிறு குப்பியில் அடக்கக்கூடிய உணவு ஏற்பட்டுவிடும்.

மனிதனுடைய "ஆயுள் நூறு" வருஷமென்பது இரட் டிப்பு ஆனாலும் ஆகலாம். இன்னும் மேலே போனா லும் போகலாம்.

பிள்ளைப்பேற்றுக்கு ஆண் பெண் சேர்க்கை என்பது கூட நீக்கப்படலாம். நல்ல திரேகத்துடனும், புத்தி நுட்பமும், அழகும் காத்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும்படியாகப் பொலிகாளைகள்போல் தெரிந்தெடுத்த மணிபோன்ற பொலிமக்கள் வளர்க்கப்பட்டு அவர்களது வீரியத்தை இன்ஜெக்ஷன்மூலம் பெண்கள் கருப்பைகளுக்குள் செலுத்தி நல்ல குழந்தைகளைப் பிறக்கச் செய்யப்படும். ஆண் பெண் சேர்க்கைக்கும் குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்.

மக்கள் பிறப்பு கட்டுப்படுத்தப்பட்டு ஒரு அளவுக்குள் கொண்டுவந்து விடக்கூடும்.

## போகப்பொருள்கள்

போகப்பொருள்களும் வெகுதூரம் மாற்றமடைந்துவிடும். அதற்காக ஏற்படும் செலவும் அதை அனுபவிக்கும் முறையும் வெகுசுருக்கமாக மாற்றமடைந்துவிடும்.

ஒரு டன்னுள்ள மோட்டார் கார் ஒரு அந்தர் வெயிட்டுக்கு வரலாம். பெட்ரோல் செலவு குறையலாம். பெட்ரோலுக்குப் பதில் மின்சார சக்தியே உபயோகப்படுத்தப்படலாம். அல்லது விசைசேகரிப்பாலேயே ஓட்டப்படலாம்.

மின்சாரத்தின் உபயோகம் எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய விதமாகவும், மக்கள் வாழ்க்கை வசதிகளுக்குத் துணைசெய்யும் விதமாகவும் விரியும்—பெருகும். விஞ்ஞானம், வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்கப் பயன் படும்படியான அதிசயப் பொருள்களும்; கண்டுபிடிப்புகளும், தனிப்பட்டவர்களின் இலாபத்துக்காக என்று முடங்கிவிடக்காமல் சகல மக்களுக்கும் சௌகரியம்தருகிற பொதுச் சாதனங்களாக அமையும்.

இவ்வளவு மாறுதல்களோடு இனிவருங்காலம் இருக்குமாகையால், இன்றைய உலக அமைப்பிலே உள்ள, அரசு, உடைமை, நீதி, நிர்வாகம், கல்வி முதலிய பல துறைகளிலும், இப்போது எவை எவை பாதுகாக்கப்பட என்னென்ன முறைகள் கையாளப்பட்டு வருகின்றனவோ, அம்முறைகளுக்கெல்லாம் அவசியமில்லாமற் போய்விடும் என்பதோடு அவை சம்பந்தமாக இன்று நிலவும் பல கருத்துக்கள் அர்த்தமற்றதாகவும் போய்விடும்.

## கடவுள்

இனி வரும் உலகத்தில் கடவுள் தன்மை எப்படி இருக்கும் என்று அறிய மக்கள் கண்டிப்பாக ஆசைப்படாமல் இருக்கமாட்டார்கள்.

கடவுள் தானாக யாருக்கும் தோன்றுவதில்லை. பெரியோர்களால் சிறியோர்களுக்கு போதிக்கப்பட்டும் காட்டப்பட்டுமே தோற்றமான எண்ணமும் உருவமுமாகும். ஆனதால் இனிவரும் உலகத்தில் கடவுளைப்பற்றி போதிக்கிறவர்களும், காட்டிக்கொடுப்பவர்களும் மறைந்துவிடுவார்கள். யாராவது இருந்தாலும் அவர்களுக்கும் கடவுள் மறக்கப்பட்டுப் போகும். ஏனெனில் கடவுளை நினைக்க ஒரு மனிதனுக்கு ஏதாவது ஒரு அவசியம் இருந்தால்தான் நினைப்பான்—சகல காரண காரியங்களுக்கும் மனிதனுக்கு விபரம் தெரிந்து விடுவதாகவும், சகல தேவைகளும் மனிதனுக்குக் கஷ்டப்படாமல் பூர்த்தியாவதாகவும் இருந்தால் ஒரு மனிதனுக்குக் கடவுளைக் கற்பித்துக்கொள்ளவோ நினைத்துக்கொள்ளவோ அவசியம் என் ஏற்படும். மனிதன் உயிரோடு இருக்கும் இடமே அவனுக்கு மோட்சமாய்க் காணப்படுமானால் விஞ்ஞானத்துக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமில்லாத மோட்சம் ஒன்றை ஏன் கருதுவான். அதற்கு ஏன்

ஆசைப்படுவான். "தேவை அற்றுப்போன இடமே கடவுள் செத்துப்போன இடமாகும்" என்பது அறிவின் எல்லையாகும். விஞ்ஞானப் பெருக்கம் ஏற்பட்ட இடத்தில் கடவுள் சிந்தனைக்கு இடம் இருக்காது.

சாதாரணமாக மனிதனுக்கு இன்று கடவுள் நிச்சயத்திற்கு ஒரே ஒரு காரணம்தானே இருந்து வருகிறது. அக்காரணம் என்னவென்றால் "இந்த உலகத் தோற்றத்திற்கு காரணம் என்ன? காரண பூதமாய் இருப்பது எது? அதுதான் கடவுள்" என்று சொல்லப்படுகிறது. இது விஞ்ஞானிகளுக்குச் சுலபத்தில் அற்றுப்போன விஷயம். நம்முடைய வாழ்வில் நாம் எதை கடவுள் செயல் என்று உண்மையாய்க் கருதுகிறோம்? நம் அனுபவத்திற்கு வந்த ஒவ்வொன்றுக்கும் நாம் சமாதானம் தெரிந்து கொள்ளுகிறோம். தெரியாதவற்றைத் தெரியாது என்று ஒப்புக்கொள்ளுகிறோம், தெரிந்ததைத் தெரிந்தது என்று சொல்லுகிறோம். இதுவேதான் உலகத்தோற்றத்துக்கும் உலக நடப்புக்கும் கொள்ளவேண்டிய முறையாகும். ஒரு சமயம் உலக நடப்புக்குக் காரணம் தெரியாவிட்டாலும் அதற்காக ஒரு காரியத்திற்கும் தேவை இல்லாத கடவுளை எவனும் வணங்கமாட்டான்.

## மோட்ச நரகம்

புதிய உலகத்தில் மோட்ச நரகத்துக்கு இடம் இருக்காது. நன்மை தீமை செய்ய இடமிருந்தால்தானே மோட்சமும், நரகமும் வேண்டும்; எவருக்கும் யாருடைய நன்மையும் தேவை இருக்காது. புத்திக்கோளாறு இருந்தால் ஒழிய ஒருவனுக்கு ஒருவன் தீமை செய்யமாட்டான். ஒழுக்கக்கேட்டுக்கும் இடமிருக்காது. இப்படிப்பட்ட நிலையில் மோட்ச நரகத்துக்கு வேலை ஏது? ஆள் ஏது?

எனவே இப்படிப்பட்ட நிலை புதிய உலகத்தில் தோன்றியேதீரும். தோன்றாவிட்டாலும் இனி வரும் சந்ததிகள் இந்த மாறுதல்களைக் காணவேண்டுமென்றும், இவைகளால் உலகில் மக்களை இப்போது வாட்டி வரும் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, வாழ்கை என்றால் பெருஞ்சுமை என்று சலித்துக்கொண்டும் வாழ்க்கையென்றால், போராட்டம் என்று திகைத்துக்கொண்டும் இருக்கிற நிலைமை போய், வாழ்க்கை என்றால், மக்களின் இன்பஉரிமை என்ற நிலைமை உண்டாக வேண்டுமென்றும், ஆவலுடன் பணியாற்றி வருவார்கள்.

"நம்மால் என்ன ஆகும், அவனன்றி ஓரணுவும் அசையாதே'' என்று வாய்வேதாந்தம் பேசமாட்டார்கள். நம் கண் முன் காணப்படும் குறைபாடுகளைப் போக்க நாம் எப்படி உழைக்க வேண்டும் என்பதே அவர்களின் கவலையாகவும் அவர்களின் எண்ணமாகவும் இருக்கும். என்றோ, யாரோ, எதற்காகவோ, எழுதிவைத்த ஏட்டின் அளவோடு நிற்கமாட்டார்கள். சுயசிந்தனையோடு கூடியதாகவே அவர்களின் செயல்கள் இருக்கும். மனித அறிவீனத்தால் விளைந்த வேதனைகளை மனித அறிவினாலேயே நீக்கிவிட முடியும் என்ற ஆசையும் நம்பிக்கையுங்கொண்டு உழைப்பார்கள். அவர்களின் தொண்டு, மனித சமுதாயத்தை நாளுக்குநாள் முன்னுக்குக் கொண்டு வந்த வண்ணமாகவே இருக்கும். சுயசிந்தனைக்கு இலாயக்கற்றவர்களே இந்த மாறுதல்களைக்கண்டு மிரள்வதும், 'காலம் வரவரக் கெட்டுப்போச்சு,' என்று கதறுவதுமாக இருப்பார்கள். இன்றைய மக்களிலே பலருக்கு, பழமையிலே இருக்கும் மோகம், அறிவையே பாழ் செய்துவிடுகிறது. புதிய உலகத்தோற்ற— வேகத்தைத் தடை செய்து விடுகிறது. பழைய முறைப்படி உள்ள அமைப்புகளால் இலாபமடையும் கூட்டம், புதிய அமைப்பு ஏற்படுவதைத் தடுக்க முயற்சிப்பது இயற்கை. ஆனாலும் பாமரரின் ஞானசூன்யம்' சுயநலக்காரரின்

எதிர்ப்பு எனும் இரண்டு பெரிய விரோதிகளைக்கண்டு கலங்காமல், வேலை செய்வோரே, இனிவரும் உலகச் சிற்பிகளாகமுடியும். அந்தச் சிற்பிகளின் கூட்டத்திலே நாமும் சேர்ந்து நம்மாலான காரியத்தைச் செய்யவேண்டு மென்று, வாலிபர்கள், பகுத்தறிவாளர்கள் ஆசைப்பட்டு உழைக்க முன்வரவேண்டி இதை முடிக்கிறேன்.

# இராமாயணப் பாத்திரங்கள்

திராவிட மக்களை ஆரிய வலையில் விழச் செய்து அவர்களைத் தன்மானமும் பகுத்தறிவுமற்றவர்களாக ஆக்கி மனிதத்தன்மையை இழக்கச் செய்த ஆரியப் பிரசாரக் கதைகளில் முதன்மையானவை இராமாயணமும் பாரதமுமாகும்.

இவை முறையே இராமன், கிருஷ்ணன் என்னும் மிகச் சாதாரணத் தன்மை உடைய இரண்டு ஆரிய மக்களைக் கதாநாயகர்களாகக் கொண்ட கதைகளேயாகும்.

இக்கதைகள் இக்கதாநாயகர்களையும் இவர்களது பந்து மித்திரர்களையும் இவர்களுக்கு அனுகூலமாயிருந்தவர்களையும் பொதுமக்கள் கடவுள்களாகவும், மனிதத் தன்மைக்கு மேற்பட்ட அசாதாரண மனிதர்களாகவும் கருதவேண்டும் என்கின்ற நோக்கத்துடனே கற்பனை செய்யப்பட்டவைகளாகும்.

ஆனால் இக்கதைகளின் மூலப்பிரதிகள் என்பவைகளைச் சரியாய் கவனமாய் ஆராய்ந்து நோக்குவோருக்கு அவற்றில் காணும் விஷயங்கள் பெரிதும் மிகமிக அநாகரீகமானதும் காட்டுமிராண்டித்தனமானதும் வெகு சாதாரணமானதுமாகவே காணப்படும் என்பதோடு இவைகளில் இருந்து மக்கள் குறிப்பாக நம் தமிழ் மக்கள் கற்றுக் கொள்ளக்கூடிய படிப்பினையோ, பாராட்டத்தக்க தத்துவங்களோ ஏதும் இல்லை என்பதும் புலனாகுவதல்லாமல் அவையாவும் பார்ப்பனர் உயர்வுக்கும், பெண்மக்கள் தாழ்மைக்கும் ஆரியர் கொள்கைகளை வலியுறுத்தி திராவிட மக்களை இழிவுபடுத்துவதற்கும் ஆகவே கற்பனை செய்யப்பட்ட கட்டுக்கதைகள் என்பதும் எளிதில் விளங்கும்.

இப்படிப்பட்ட இக்கதைகளின் மூலங்கள் என்பவை கள் எல்லாம் வடமொழிகளில் இருப்பதால் ஆரியப் பார்ப்பனர்கள் அவற்றை சமயத்திற்கு ஏற்றவண்ணமும் கேட்கும் மக்கள் அறிவு ஆற்றலுக்குத் தக்கபடியும் அவற்றின் உண்மைகளையும் கருத்துக்களையும் மாற்றியும் திருத்தியும் கற்பனைசெய்தும் கூறி, அக்கதைகளையே வேதம் என்றும், உலகத்தை இரட்சிக்கவந்த கடவுள்களின் அவதாரங்களினது செய்கைகள் என்றும், மக்கள் நடந்து கொள்ளவேண்டிய வாழ்க்கை முறைகளைச் சித்தரித்துக் காட்டும் தெய்வீகத் தன்மை பொருந்திய தர்ம சாஸ்திரங்கள் என்றும், ஐந்தாம்வேதம் என்றும் மற்றும் பலவாறாகப் பெரும் புளுகுகளுடன் பெருமைப் படுத்திக்கூறி வருவதோடு அவைகளையே மத ஆதாரங்கள் என்று சொல்லி மதத்தில் புகுத்தி பாமரமக்களையும் படித்த அறிவாளிகள் என்பவர்களையும்கூட மயக்கி பள்ளிப்படிப்பிலிருந்தே மக்களுக்குள் இரத்தத்தில் கலக்கும் படியான அளவுக்குப் பரப்பிவிட்டார்கள்.

தமிழர்கள் 100-க்கு 90-பேர்கள் கல்வியில்லாதவர்களாகவும் பெரும்பாலோர் பகுத்தறிவைப் பயன்படுத்தாத மூடநம்பிக்கைக்காரர்களாகவும் பார்ப்பனர்களின் "இகபர" அடிமைகளாகவும் ஆக்கப்பட்டவர்களாக இருப்பதால் அப்படிப்பட்ட தமிழர்கள் பார்ப்பனப் புரட்டுகளான மேற்கண்ட ஆரியக்கதைகளைப் பார்ப்பனர்கள் சொல்லுகிறபடியெல்லாம் நம்பி அப்படியே ஏற்றுக்கொண்டும் வருவதோடு அவற்றிற்கிணங்க நடக்கிறவர்களாகவும் ஆகிவிட்டார்கள். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் நீங்கிய தமிழர்களில் இராமாயணத்துக்கு ஆட்படாத மக்களைக் காண்பது மிகமிக அரிதென்றே கூறவேண்டும்.

ஆகையால் தமிழ் மக்களின் அறிவுக்கண்கள் திறக்கப்பட்டு அவர்களது முட்டாள்தனமும் மூடநம்பிக்கையும்

ஒழிந்து தன்மான உணர்ச்சி ஏற்பட்டு ஆரியவலையில் இருந்து அவர்கள் மீட்சி அடையவேண்டுமானால், முதலாவதாக அவர்களுக்கு இவ்வாரியக் கதைகள் புராணங்கள் முதலியவைகளின் கருத்தையும் தன்மையையும் உண்மையும் உள்ளது உள்ளபடி எடுத்துக்காட்டி நன்றாய் உணரும்படி செய்யவேண்டியது அவசியமாகும்.

இக்காரணத்தாலேயே மேற்சொன்ன இரண்டு ஆரியக் கதைகளில் ஒன்றான இராமாயணத்தின் மூலமாகிய வால்மீகி இராமாயணத்தை, அதன் வடமொழி மூலத்தில் இருந்து ஆரியப்பார்ப்பனர்களாலேயே தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட பிரதிகளை ஆதாரமாய் வைத்து சந்திர சேகரப் பாவலர் என்னும் புனைப்பெயர் கொண்ட ஒரு நற்புலவரால் ஆராய்ச்சி செய்து தொகுத்து ஈரோடு "குடிஅரசு"ப் பதிப்பகத்தாரால் ஏழு காண்டங்களாகப் பிரசுரிக்கப்பட்டு காண்டம் ஒன்றுக்கு நாலணா வீதம் அடக்க விலைக்கும் குறைவாகவே விற்று உதவப்பட்டு வருகிறது.

இப்படி விற்கும் புத்தகங்கள் ஏழும் சுமார் 800-பக்கங்களுக்கு மேலாகவும் விலை ரூ. 1—12—0 ஆகவும் இருப்பதால் படிப்போருக்குப் படிப்பில் சலிப்புத் தோன்றாமலும் விலையில் மலைப்புத் தோன்றாமலும் படித்து முடியக் காலம் நீளாமலும் படிக்கப் படிக்க ஊக்கம் தோன்றும்படியாகவும் இருக்கத்தக்க வண்ணம் மேற்படி ஏழு காண்டங்களையும் மிகச்சுருக்கி முக்கியமான விஷயங்களைப் பொறுக்கி 140-பக்கங்களுக்குள் அடங்கும் படியாகவும் சேதிகள் கருத்துக்கள் எல்லாம் சம்பாஷணை ரூபமாகவும், மூலத்துக்கு மாறுபாடு இல்லாமலும், எளிய நடையாகவும் "வால்மீகி இராமாயண சம்பாஷணை" என்னும் பேரால் ஒரு புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது.

இப்படியாக வெளியிடப்பட்ட இந்த இராமாயணக் கதையை அக்கதைப்படி சம்பவங்கள் நடந்ததாக நாம்

நம்புவதில்லை. உண்மையில் நடந்திருக்கவும் முடியாது. அப்படியிருக்க அக்கதையை ஏன் இவ்வளவு தூரம் ஆராய்ச்சி செய்து அதன் தன்மையை வெளியிடுந் தொண்டினை மேற்கொண்டோம் என்றால், ஆரியர்கள் இக்கதையை நம் மக்களிடம் சொல்லிப் பரப்பி வருவது போலும், நம் மக்கள் அவர்கள் பேச்சை நம்பி ஏற்றுப் போற்றி நடந்துவருவது போலும், இராமாயணக் கதையினது மூலத்தில் பாராட்டிப் போற்றத்தக்க விஷயம் ஒன்றும் இல்லை என்றும் அதில் எவ்வித உண்மையான தெய்வீகத்துவமோ, நீதியைப் போதிப்பதோ, படிப்பினைக்கேற்றதோ அல்லது பகுத்தறிவுக்காவது ஒத்ததோ என்று சொல்லும்படியான காரியம் ஒன்றும் இல்லையென்றும் மக்கள் உணர்ந்து ஆரியப் புரட்டின் மோசத்தில் இருந்து விடுபடவேண்டும் என்கிற ஆசையாலும்,

மற்றும் நம்நாட்டில் தங்களை பிறவியிலேயே மேன் மக்கள் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு சிறு கூட்டத்தாராகிய ஆரியர் தங்களை அப்படி மேன்மக்கள் என்று சொல்லிக் கொள்ளவும் மற்றவர்களும் அவர்களை அப்படி நினைக்கவும் ஆதாரங்களாக இக்கதைகளையே பெரிதும் பயன்படுத்திக் கொள்ளுவதால் இப்படிப்பட்ட இவ்வாரியர்களின் பூர்வீக யோக்கியதை என்ன? அவர்களில் மேன்மக்கள் என்பவர்களாகிய அரச குடும்பத்தினர் என்பவர்களது ஒழுக்கம், நாணயம், நடத்தை, எண்ணம் எப்படிப்பட்டது? இவ்வாரியர்களில் தெய்வீகத் தன்மை பொருந்தியவர்கள் தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள், தேவேந்திரர்கள் என்பவர்களின் தன்மை யாவை? என்பனவற்றை நம் மக்களுக்கு எடுத்துக்காட்டுவதற்கும்,

மற்றும் இவ்வாரியர்கள் திராவிட நாட்டில் புகுந்த காலையில் இந்நாட்டுப் பழங்குடி மக்களாகிய திராவிடர்

களோடு போர் புரிந்து திராவிட மக்களைக் கொடுமைப் படுத்தி இழிவுபடுத்திய சில சரித்திர உண்மைகளைத் தங்கள் ஆத்திரம் தீரும்படியான அளவுக்குக் கற்பனை செய்துகாட்டி சித்தரித்திருப்பதே இராமாயணமாக மிளிருகிறது என்று ஆராய்ச்சி வல்லோர் கண்டுபிடித்துக் கூறியிருப்பதையும், இராமனாதியோர் ஆரியர் என்றும் இராவணனாதியோரான "இராக்ஷதர்" "அரக்கர்" "அசுரர்" என்பவர்களும், அனுமான், வாலி, சுக்ரீவனாதியோரான "குரங்குகள்" என்பவர்களும் திராவிடர்கள் என்றும் ஆராய்ச்சிவல்லோர்கள் கூறியிருப்பதையும், இன்றைய ஆராய்ச்சி நூல்களும் இதை வலியுறுத்துவதையும் மக்கள் உணரவேண்டுமென்பதுமாகும்.

அன்றியும், இவ்விராமாயணக் கதையில் ஆரியர்களை எவ்வளவுதூரம் உயர்த்தியும் ஆரியர் அல்லாத மற்றவர்களை எவ்வளவுதூரம் தாழ்த்தியும் இழித்தும் அக்கதையில் காணப்படும் உண்மைக்கு விரோதமாகக்கூட மக்களுக்குள் பரப்பப்பட்டிருக்கிறது என்பதையும், அதற்கேற்ப தமிழ் மக்கள் எவ்வளவு முட்டாள்தனத்தோடும் தன்மானமற்ற தன்மையோடும் இவ்விராமாயணக் கதையில் வரும் ஆரியப் பாத்திரங்களையும் திராவிட இனத் துரோகப் பாத்திரங்களையும் கடவுள்களாகவும் ஆழ்வார்களாகவும் வைத்துப் பூஜை, உற்சவம் முதலியவை செய்து வழிபட்டு வருகிறார்கள் என்பதையும் தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டவுமாகும்.

மேலே காட்டிய இக்காரணங்கள் எல்லாவற்றையும் விட வேறு ஒருதலையாய காரணம் என்னவெனில், தமிழர்களில் பெரும்பாலோரும் அதிலும் படித்த கூட்டத்தினர் என்பவர்களில் பலரும் இராமாயணம் என்றால் கம்பராமாயணத்தையே கருதுவதும் அதையே படிப்பிப்பதும், படிப்பதும், அதிலுள்ளவற்றையே நம்புவதும், தமிழ்ப் புலவர்களில் பலர் தங்களைப் பண்டிதர் என்று

காட்டிக் கொள்வதற்கும் தங்கள் வாழ்க்கை நடப்புக்கும், பெருமைக்கும் கம்ப இராமாயணப் பிரசங்கத்தையே கையாளுவதுமாய் இருப்பதால் வால்மீகி இராமாயணத்தின் உண்மையும் தன்மையும் இன்னது என்றும், கம்ப இராமாயணத்தின் புரட்டும் கயமையும் இன்னது என்றும் மக்கள் தெள்ளத்தெளியக் கண்டு கம்பஇராமாயணப் புலவர்களின் தன்மானமற்ற தன்மையை மக்கள் உணரும்படி செய்யவேண்டும் என்பதுமாகும்.

கடைசியாய் குறிப்பிட்ட காரணத்துக்குஆக என்று தனியே கம்ப இராமாயணத்தையும் வால்மீகி இராமாயணத்தையும் ஆராய்ச்சிசெய்து "குடி அரசு"ப் பதிப்பகத்தாரால் "வால்மீகியின் வாய்மையும்,கம்பரின் கயமையும்" என்று ஒரு தனி ஆராய்ச்சி நூல் பதிப்பிக்கப்படுகிறபடியால் அதைப்பற்றி இதில் விவரிக்காமல் குறிப்புமாத்திரம் காட்டப்படுகிறது. எனவே இன்னோரன்ன பல காரணங்களுக்குஆக "வால்மீகி இராமாயண சம்பாஷணை" என்னும் புத்தகம் வெளியிடப்படுவதாகும்.

இப்படி வெளியிடப்படும் மேலே குறிப்பிட்ட ஆராய்ச்சி நூல்களாகிய இராமாயண ஆராய்ச்சி, இராமாயண சம்பாஷணை, இச்சம்பாஷணையின் முகவுரை, வால்மீகியின் வாய்மையும் கம்பரின் கயமையும் என்று சொல்லப்படுபவையான புத்தகங்களில் காணப்படும் விஷயங்களில் அவைகளை விருப்பு வெறுப்பின்றி வாசிக்கும் நடுநிலை நண்பர்களுக்கு ஏதாவது விஷயம் அவர்கள் இதுவரை கேட்டிராத புதுமையாகவோ நம்பமுடியாததாகவோ கற்பனையாகவோ காணப்படுமானால் அவர்கள் தயவுசெய்து 1877-ம் வருஷத்தில் வடமொழி இராமாயணத்தை தமிழில் மொழிபெயர்த்த திரு. அனந்தாச்சாரியாருடையவும் மற்றும் நேற்றுவரை மொழிபெயர்த்த மொழிபெயர்ப்பாளர்களாகிய திருவாளர்கள் பண்டித நடேச சாஸ்திரியார், சி. ஆர். சீனிவாசய்யங்கார், நரசிம்

மாச்சாரியார், கோவிந்தராஜர், அண்ணங்காச்சாரியார் முதலிய பார்ப்பனர்களுடைய தமிழ் மொழிபெயர்ப்புகளையும் வங்காள ஆராய்ச்சி நிபுணரும் வடமொழிப் பண்டிதருமாகிய பண்டிதர் மன்மதநாத் தத்தரும், ஆங்கில ஆராய்ச்சி நிபுணர் வில்சன் துரைமகனாரும் மொழி பெயர்த்த ஆங்கில மொழிபெயர்ப்புகளையும் மற்றும் பல உண்மை மொழிபெயர்ப்புகளையும் கூர்ந்து பார்த்து உண்மைகண்டு தெளிவார்களாக.

## கதையின் தன்மை.

இராமாயணம் என்னும் கதையில் காணப்படும் விஷயங்கள், சம்பவங்கள் முதலியவை பெரிதும் அராபியன் னைட், ஷேக்ஸ்பியர், மதனகாமராஜன், பஞ்ச தந்திரக் கதைகள் முதலிய கட்டுக்கதைகளைப் போன்று இயற்கைக்கும் மனித ஆற்றலுக்கும் பொருத்தமற்றதும் அனுபவத்தில் சாத்தியப்படாததுமான அசாதாரணமானவைகளாயிருப்பதால் இக்கதை உண்மையாய்நடந்த சம்பவங்களைக் குறிப்பிடுவதில்லை என்று உறுதியாய்க் கூறலாம்.

“அசாதாரண சம்பவங்களால்தான் கடவுள் தன்மை, அவதாரத்தன்மை முதலிய தெய்வீகத்தன்மைகளைக் கற்பிக்க முடியும்” என்று சொல்லப்படுமானால் இக்கதையில் காணப்படும் அசாதாரண விஷயங்கள் பெரிதும் பொருத்தமற்றதும், தேவையற்றதும், நீதியற்றதுமாய் இருப்பதோடு பொது நடத்தையில், தேவை உள்ள சந்தர்ப்பங்களில் அதாவது உயர்குணமும் முன்யோசனையும், கருணையும், சத்தியமும், தூரதிருஷ்டியும், நல்லெண்ணமும் காட்டப்படவேண்டிய சாதாரணக் காலங்களில் அசாதாரண சம்பவத்தில் காட்டப்படும் தெய்வீகத் தன்மையோ அல்லது மிக மிக சாதாரணத்தன்மையில் காட்டப்படும் சராசரி மனிதத்தன்மையோகூட இல்லாமல் இருக்கின்றன.

கதாநாயகனாகிய இராமனை கடவுளின் அவதாரம் என்று மக்கள் கருதவேண்டும் என்பதாகக் கருதியே கற்பனை செய்திருக்கும் இந்த இராமாயணக் கதையில் இராமனுடைய எண்ணம் பேச்சு நடத்தை ஆகியவைகளில் வஞ்சகம், பொய், சூது, வன்னெஞ்சம், பேராசை, கொலை, மதுவருந்தல், மாம்சம் புசித்தல், மறைந்திருந்து கொல்லுதல், அபலைகளை குற்றமற்றவர்களை கொடுமை செய்தல் முதலிய தீயகுணங்களும் கூடா ஒழுக்கங்களும் ஏராளமாகக் காணப்படுகின்றன. இதனாலேயே இராமனும் இராமாயணக்கதையும் தெய்வீகத்தன்மை பொருந்தியவை அல்ல என்பதும் அவை சராசரித்தன்மையை விடக் கீழ்ப்பட்டவை என்பதும் தெள்ளென விளங்கும் என்பதோடு மற்றும் இராமனுடையவும் இராமாயணத்தினுடையவும் எந்தக்காரியமும் எண்ணமும் தமிழ் மக்களுக்கு படிப்பினைக்கோ பின்பற்றுதலுக்கோ ஏற்றதல்ல என்பதையும் தெளிவுபடுத்தும்.

## கதைத் தோற்றம்

இராமாயணக்கதை தோற்றத்திற்கு ஆக அதில் கூறப்படும் காரணங்கள் பெரிதும் பகுத்தறிவுக்கும் தெய்வீகத் தன்மைக்கும் ஒத்ததாகச் சிறிதும் காண்பதற்கில்லாமல் இருக்கிறது. அதாவது:—

"தேவர்கள் தாங்கள் செய்யும் யாகத்தை இராவணன் முதலிய இராக்ஷதர்கள் வந்து அழிப்பதாய் நான்முகனிடம் வந்து முறையிடுகின்றார்கள். நான்முகன் தன் தந்தையாகிய திருமாலிடம் சென்று முறையிடுகிறான். திருமால் தாம் பூமியில் இராமனாகப் பிறந்து இராவணனைக் கொல்லுவதாக ஒப்புக்கொள்ளுகிறார்" இதுவே இராமயணக்கதை தோன்றக் காரணம்.

திருமால் மனிதனாகப் பூமியில் பிறந்து பல சங்கடங்களை அனுபவிக்கக் காரணம் என்னவெனில், முன்பு

அவர் செய்த பாபச் செயல்களுக்கு ஆக அவருக்கு ஏற்பட்ட சில சாபக்கேடுகள் என்பதாக தெய்வீகப் புராணங்கள் சொல்லுகின்றன. அவையாவன:— திருமால் பிருகு முனிவரின் மனைவியைக் கொன்ற பாபத்திற்காக ஏற்பட்ட சாபம் என்றும், திருமால் ஜலந்திராசூரன் மனைவியை வஞ்சகமாய்க் கூடின பாபத்திற்கு ஆக ஏற்பட்ட சாபம் என்றும், திருமால் திருமகளைப் பகல் காலத்தில் பிறர் அறியக் கலவி செய்த பாவத்திற்காக ஏற்பட்ட சாபம் என்றும், இன்னும் இப்படிப் பலவாறாகப் புராணங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

இக்காரணங்கள் ஒருபுறமிருக்க இவற்றினுள் கூறப்பட்ட தேவர்கள் என்பவர்கள் யார்? அசுரர்கள், அரக்கர்கள் என்பவர்கள் யார்? இராக்ஷதர்கள் என்பவர்கள் யார்? யாகம் என்றால் என்ன? கடவுளாகிய திருமாலுக்கு கொலை, களவு, காமம், விபசாரம் ஆகிய தீய காரியங்கள் செய்யும் குணங்கள் ஏன் ஏற்பட்டன? இக்காரியங்களைச் செய்பவர்கள் கடவுளர்கள் ஆவார்களா? தேவலோகத்துக்கும் பூலோகத்துக்கும் சம்பந்தம் என்ன? தேவர்கள் யாகம்செய்ய பூலோகத்துக்கு ஏன் வரவேண்டும்? ஜீவப்பிராணிகளைச் சித்திரவதைசெய்து கொன்று, பக்குவப்படுத்தி, மந்திரம் சொல்லி, மதுவோடு உண்பது தானா யாகம்? இப்படிப்பட்ட காரியங்களுக்கு மகிழ்ந்து தானா கடவுள் தேவர்களுக்கும் யாகம்செய்யும் மற்றவர்களுக்கும், உயர்பதவியும் மேன்மையும் அளிக்கவேண்டும்? இப்படிப்பட்ட கொடுமையும் கொலையுமான பாதகச் செயல்களை நடைபெறாமல் தடுப்பது கெட்டகாரியமா? கொலை செய்கிறவர்கள் தேவர்களாகவும் அதைத் தடுக்கிறவர்கள் இராக்ஷதர்களாகவும் கருதப்படுவதுதான் கடவுள் நீதியா? என்பவை போன்ற நீதிகள் அறிஞர்களால் யோசிக்கப்பட வேண்டியனவாகும்.

இன்றைய நாட்களிலேயே ஜீவப் பிராணிகளை ஹிம்சிப்பதும், மதுவருந்துவதும், முதலாகிய காரியங்கள்

கூடாதகாரியம் என்று பொதுமக்களும் அரசாங்கமும் கருதி, பழிப்பும் ஆக்கினையும் தண்டனையும் விதிக்கப் பட்டு இருக்கும்போது அக்காலத்தில் அதைத் தடுப்பது ஒழுக்கமாகவும் நீதியாகவும் இருந்திருக்காதா? அதிலும் சிவபக்தனான இராவணனுடைய நாட்டிலும், ஆட்சி யிலும், ஹிம்சையும் உயிர்க்கொலையும் கொண்ட யாகத் தைக் குற்றமானதென்றும் தடுக்கப்பட்ட காரியம் என்றும், சட்டமும் ஆக்கினையும் செய்யவேண்டியது கடமையாக இருந்திருக்காதா? இந்தத் தடுத்தல் கடமையை ஒரு அரசன் செய்ததினாலேயே, அந்த அரசனையும் அவனது குலத்தையும் குடிபடைகளையும் நாட்டையும் அடியோடு ஒழிப்பதற்குஆக அவதாரம் எடுத்து வரவேண்டியது கடவுள் தன்மையா? என்பனவும், இவைபோன்ற பிறவுமே, இராமாயணக் கதையின் தோற்றமும் அதன் காரணங்களும் ஆபாசக் களஞ்சிய மாய் இருந்து வருவதை விளக்கும்.

## மகப்பேறு யாகம்.

இராமாயணக் கதையின் முதல் காண்டம் என்னும் பாலகாண்டம், அயோத்தி அரசனாகிய தசரதன் தனக்கு மகப்பேறு உண்டாக யாகம் செய்கிறான் என்றும், அந்த யாகத்திற்குக் கொன்று பலியிடுவதற்குஆக, ஆடு மாடு குதிரை பறவை பாம்பு ஆமை முதலிய, நடப்பன பறப் பன ஊர்வனவாகிய பல ஜீவப் பிராணிகளைக் கொண்டு வந்து வைத்திருந்ததாகவும் கூறுகிறது. ஒருவனுக்குப் பிள்ளை உண்டாக, இத்தனை ஜீவன்கள் பலியால் மாள வேண்டுமா? இந்தப்பலிகளை ஏற்றுத்தான் கடவுள் ஒரு வனுக்குப் பிள்ளை கொடுக்கவேண்டுமா என்பது ஒருபுற மிருக்க, இதைக்கண்டு தேவர்கள் திருப்தி அடையலாமா? இப்படிப்பட்ட தேவர்களுக்கு ஒரு அரசன் இருக்கிறா னாம். அவன் பெயர் தேவேந்திரனாம். இவனது கொடுஞ் செயலையும் கூடா ஒழுக்கத்தையும் இவன்

சம்பந்தப்பட்ட கதைகளில் பார்ப்போமானால், அவை பல இராமாயணமாகலாம்.

பிறகு, தசரதன் செய்யும், இந்த யாகத்தில், யாகப் பசுவாகிய குதிரையை தசரதன் மனைவிகளில் ஒருத்தியாகிய கௌசலை என்பவள் ஒரேவெட்டில் வெட்டிக் கொன்று, அந்த செத்த குதிரையுடன் ஒரு இரவு முழுவதும் கட்டிஅணைந்து படுத்துக்கொண்டிருக்கிறாள். (இதுதான் தெய்வீகத் தன்மைபோலும். இது இவர்களது மானுஷீகத்தன்மை, எப்படி இருக்கும் என்பதை நினைக்கவே நம்மால் முடியவில்லை. இவ்வளவுதானா? இன்னும் இந்த யாகத்தின் யோக்கியதையை, யாக சாஸ்திரப்படி பார்ப்போமானால் அது நினைப்பதற்கே உடல் துடிக்கும். அந்த ஆபாசங்கள் ஞானசூரியன் என்னும் மற்றொரு "குடி அரசு" பதிப்பில் காணலாம்.) இரவு முடிந்தவுடன், இந்த கௌசலையும் தசரதனின் மற்றும் இரு மனைவிகளாகிய சுமித்திரை கைகேசி ஆகியவர்களையும், யாகப் புரோகிதர்களாகிய ருக்வித்துக்களுக்கு தசரதன் தக்ஷணையாகக் கொடுத்து விடுகிறான். இந்தப் புரோகிதர்கள் மூவரும் இப்பெண்களைக் கைப்பற்றித் தங்கள் இஷ்டம்போலெல்லாம் கூடித்திரிந்து அனுபவித்து விட்டுப் பிறகு, அதற்கு ஆகக் கூலியோ, கிரையமோ தசரதனிடம் வாங்கிக்கொண்டு திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள். அதன்பிறகே இம்மனைவிகள் கர்ப்பவதிகளாகக் காணப்படுகிறார்கள். (ஆங்கில மொழி பெயர்ப்பாளராகிய மன்மதநாத் தத்தர், இந்த இடத்தில், "அரசனது மனைவிகளை ஹோதா, அத்வர்யு, உத்தா ஆகிய மூவரும் புணர்ந்தார்கள்" என்று எழுதுகிறார்.) இதுதான் தசரதன் செய்த புத்திரகாமேஷ்டி யாகத்தின் தத்துவம்.

இந்த யாகத்தின் முறைகளையும், அங்கு நடந்த காரியங்களையும், சாஸ்திரப்படியும், கதைப்படியும், பகுத்

தறிவைக் கொண்டு நன்றாய் ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் இந்த மூன்று மனைவிமாருக்கும் பிறந்ததாகச்சொல்லப்படும் நான்கு குழந்தைகளும் தசரதனுக்குப் பிறந்த குழந்தைகளாக இருக்கமுடியாது என்றும், அவை அந்த யாகப் புரோகிதர்களுக்குத்தான் பிறந்திருக்கவேண்டும் என்றும் விளங்கும். இதை விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் யாகம் செய்யும்போது தசாதனுக்கு வயது அறுபது ஆயிரம். அவனுக்கு மனைவிமார்களோ அறுபது ஆயிரம் பேர்கள் என்று கம்பன் சொல்லி இருந்தாலும்; முன்னூற்று ஐம்பது மனைவிகள் என்று வால்மீகி கூறுகிறார். இதிலிருந்து தசரதன் படுகிழவன் என்பதும், அவன் பல நூற்றுக்கணக்கான மனைவிகளை மணந்து, கலந்து வாழ்ந்த காமாந்தகன் என்பதும் நன்கு விளங்கும். இப்படிப்பட்டவன் தனக்கு ஆண்மை இழந்து பிள்ளை உண்டாகும் சக்தி இல்லாமல் போவதும், வெறும் சபலத்தால் பெண்களுடன் கூடிக்குலாவித் திரிவதும் இயற்கையேயாகும்.

ஆகவே இந்தக் காரணங்களால், இத்தனைகாலம் கர்ப்பமடையாதிருந்த இவனது மனைவிமார்கள் அந்த யாகம்செய்த அன்று ஒருநாளில் மூன்றுபேரும் ஏககாலத்தில் கிழவனாகவும் ஆண்மையற்றவனாகவும் இருந்த தசரதனால் கர்ப்பம் அடைந்திருக்கமுடியுமா? என்பதும் யோசிக்கத்தக்கதாகும்.

அன்றியும், அப்பெண்கள் மூவரும் "யாகப் புரோகிதர்கள் மூவருக்குக் கொடுக்கப்பட்டு அவர்கள் மூவரும், இப்பெண்களை இஷ்டப்படி அனுபவித்துவிட்டு, அதற்கு ஆக அரசனிடம் பணம் வாங்கிக்கொண்டு திரும்ப ஒப்படைக்கப்பட்டார்கள்" என்றால் அப்பெண்களின் கர்ப்பத்திற்கு தசரதன் நாதனாக இருக்கமுடியும் என்று யார் தான் சொல்லமுடியும்?

உண்மையிலேயே இராமன், இலக்ஷ்மணன், பரதன், சத்துருக்கன் என்கின்ற நான்கு பிள்ளைகளும் தசரதனுக்கே பிறக்காமல், யாகப் புரோகிதர்களுடைய கருவுக்கே பிறந்திருந்தாலும், ஆரிய தர்மப்படி அதில் குற்றம் சொல்லவோ இழிவு கற்பிக்கவோ இடம் இல்லை. ஏனெனில், ஆரியரில் ஒருவன் அல்லது ஒருத்தி தனக்குப் பிள்ளை இல்லாவிட்டால், சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு வேறு ஒருவனிடம் கூடிப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று, தர்ம சாஸ்திரங்களும் ஸ்மிருதிகளும் கூறுகின்றன. இதற்கு அனுபவ பூர்வமாய் ஆதாரம் வேண்டுமானால் மற்றொரு ஆரியக் கதையாகிய பாரதத்தில் பார்க்கலாம். அதில் யாகம் என்கிற (சாக்கு) காரணம்கூட இல்லாமல், பல விதவைகள் தமது குலகுருவாகிய வியாசனிடம் கூடி, பல பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். திருதராஷ்டிரன், பாண்டு முதலியவர்கள் அந்தப்படி பிறந்தவர்களே யாவார்கள். இன்னும் அநேகம்பேர்கள் பாரதத்தில் இதுபோலவே காணப்படுகிறார்கள். மற்றும் சீதையின் பிறப்பைப் பார்த்தாலும் அவளது தாய், யாராலோ சீதையைப்பெற்று காட்டில் எறிந்து, புழுதியில் கிடந்த பெண்ணாகவே கிடைத்திருக்கிறாள். இந்தக்காரணத்தால் சீதைக்குத் திருமணம்கூட வெகுநாள் தடைப்பட்டிருக்கிறது. இதைச் சீதையே சொல்லுகிறாள்.

மற்றும், ஆரியர்களின் இதிகாச புராண சாஸ்திரங்களைப்பார்த்தால், அதில்வரும் மக்களுக்குக் கருவு உண்டாக்கியவர்கள், அல்லது பெற்றவர்கள், மனிதர்களாகக்கூட இருந்திருக்கவில்லை யென்பது தெரியவரும். ஆதலால் இந்த யாகத்துக்கும் மகப்பேற்றுக்கும் சம்பந்தமில்லை என்பதும், யாகம் என்றால் மதுவருந்தி மாமிசம் சாப்பிட்டுக் கோலாகலமாய்த் திரியும் பண்டிகை என்பதும்; அதனால் மதிக்கத்தக்க பலன் இல்லை என்பதும் இனிது விளங்கும்.

## தசரதன்

இராமாயணத்தில், யாகத்துக்கு அடுத்தாற்போல் தசரதன் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யும் சேதி குறிப்பிடத்தக்கதாகும். இதில் தசரதன், அவனுடைய பிள்ளைகள், மனைவிமார்கள், மந்திரி, குரு முதலானவர்களுடைய தன்மைகள் இன்னவை என நன்கு விளங்கும்.

1. தசரதன் கைகேயியை மணக்கும்போதே, "கைகேசியின் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே அயோத்தியைக் கொடுக்கிறேன்" என்பதாக வாக்குக் கொடுத்து இருக்கிறான். மற்றும் கதை வாசகப்படி பார்த்தால், தசரதன் தனது விவாகத்தின்போதே கைகேசி வசம் நாட்டை ஒப்புவித்துவிட்டு, கைகேசிக்குப் பிரதிநிதியாய் இருந்து நாட்டை ஆண்டுவந்தானெனவே தெரிகிறது.

2. அதாவது, கைகேசிக்கு தசரதன் அயோத்தியை "சுல்கமாக"க் கொடுத்துவிட்டான் என்று மூலத்தில் இருக்கிறது.

3. இந்த சங்கதி இராமனுக்கும் கோசலைக்கும் தெரியும். "என்றைக்குப் பரதன், அவன் மாமன் வீட்டுக்குப் போனானோ அன்றுமுதல் உன் பட்டாபிஷேகத்துக்குத் தக்க காலம் என்பது எனது கருத்து" என்று, இராமனிடம் வெளிப்படையாய் தசரதன் சொல்லுகிறான். பரதனை நாடுபெறச் செய்யாமல் ஏமாற்றுவதற்காகவே, அவனை அவனது பாட்டனார் வீட்டில் தசரதன் பத்து வருஷகாலம் விட்டுவைக்கிறான்.

4. திடீரென்று ஒருநாள் நினைத்துக்கொண்டு, குடிகளுக்குச் சமாதானம் சொல்லி, அடுத்தநாளே இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்கிறான்.

5. இந்தத் துரோகமான காரியத்துக்கு மந்திரிகளும், வசிட்டன் முதலிய குருமார்களும், இராமனும் சம்மதிக்கிறார்கள்.

6. கோசலையும் இராமனுக்குப் பட்டம் கிடைக்கச் சதா தபசுசெய்கிறாள்.

7. பரதனுக்கும், சத்துருக்கனனுக்கும், ஜனகனுக்கும், கேகய மன்னனுக்கும், கைக்கேயிக்கும் தெரிவிக்காமலும், இவர்களுக்கு அழைப்புக்கூட அனுப்பாமலும், இவ்வளவு முக்கியமான முடிசூட்டை அவசரம் அவசரமாக நடத்த ஏற்பாடு செய்கிறான்.

8. இராமனிடம் தனிமையில் பேசும்போது, "பட்டாபிஷேகம் நடைபெறாமல் தடைசெய்யவேண்டிய அவசியம் பரதனுக்கு இருந்தாலும், அது முடிந்துவிடுமாயின் பிறகு பரதன் வந்தாலும் தகராறு செய்யாமல் அதற்குச் சம்மதித்து சும்மா இருந்துவிடுவான். ஏனெனில், பரதன் சாது, நல்லவன், நடந்துவிட்ட காரியத்தை ஒத்துக்கொள்ளுவது உயர்ந்த குணம்படைத்தவர்களின் கடமை. ஆதலால் சீக்கிரம் முடியவேண்டும்" என்கிறான்.

9. இந்தப் பட்டாபிஷேகச் சேதியறிந்து, கைகேசி இராஜ்யத்தை தன்மகன் பரதனுக்கு முடிசூட்டவேண்டுமென்றும், அந்த முடி பரதனுக்கு நிலைக்கச்செய்ய இராமன் காட்டுக்குப் போகவேண்டுமென்றும் சொல்லும் போது, கைகேயியை ஏமாற்ற தசரதன் அவள் காலில் விழுந்து கெஞ்சுகிறான்.

10. "எவ்வளவோ ஏற்பாட்டுடன் செய்த காரியத்தை கெடுத்துவிட்டாயே" என்கிறான். ஆனால், நாடு மூத்த மகனாகிய இராமனுக்குத்தானே உரிமை என்று ஒரு வார்த்தைகூடச் சொல்லவே இல்லை. தசரதனுக்குக்

கைகேயி இணங்காமல் போனபின்பு தசரதன் இராமனை அழைத்து, "இராமா, நான் புத்தி சுவாதீனம் இல்லாத சமயத்தில் பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்வதாக ஒப்புக்கொண்டு விட்டேன்; என்றாலும், நீ அதற்குக் கட்டுப்பட வேண்டியதில்லை. என்னைப் பட்டத்திலிருந்து தள்ளிவிட்டு நீ இராஜ்யத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்துகொண்டு இரு" என்று துர்யோசனை சொல்லிக் கொடுக்கிறான்.

11. இவையெல்லாம் பயன்படாமல் போகவே, தசரதன் சுமந்திரனை அழைத்து, "இராமனுடன் நாட்டிலுள்ள பொக்கிஷம், தானியக் களஞ்சியம், குடிகள், படைகள், வியாபாரிகள், வேசையர்கள் ஆகிய எல்லாவற்றையும் காட்டிற்கு அனுப்பிக் கொடுத்துவிடு" என்கிறான்.

12. இதைக் கைகேயி ஆட்சேபித்தவுடன், தசரதன், "நீ, நாடுதான் கேட்டாயே ஒழிய இவைகளை எல்லாம் சேர்த்துக்கொடு என்று கேட்கவில்லையே" என்று அடாவழக்குப் பேசுகிறான்.

13. பிறகு பொக்கிஷத்தில் உள்ள நகைகளையெல்லாம் வாரி சீதைக்குக் கொடுத்துவிடுகிறான்.

14. தனது மற்றொரு மகன் இலட்சுமணன் காட்டுக்குப் போவதைப்பற்றித் தசரதன் துக்கப்படவில்லை.

## இராமன்

இனி இராமன் தன்மையைச் சற்று ஆராய்வோம்.

1. கைகேயியை மணம் செய்துகொள்ளும்போதே, தசரதன் நாட்டைக் கைகேயிக்கு சுல்கமாகக் கொடுத்து விட்டதும், அதனால் நாடு பரதனுக்குச் சொந்தமாக

வேண்டியது, என்பதும், இராமனுக்கு நன்றாய்த் தெரியும்.

2. நாட்டைக் கைப்பற்றவே, இராமன் தகப்பனுக்கும் கைகேயிக்கும் குடிகளுக்கும் நல்ல பிள்ளையாக நடந்து வந்திருக்கிறான்.

3. பரதன் ஊரில் இல்லாத சமயத்தில், பட்டாபிஷேகம்செய்ய தசரதன் செய்யும் சூழ்ச்சிகளுக்கெல்லாம் சம்மதித்து முடிசூட்டிக்கொள்ள முனைகிறான்.

4. இலட்சுமணன் பொறாமைப்பட்டு ஏதாவது கெடுதிசெய்து விடுவானோ என்று கருதி, இலட்சுமணனை ஏய்க்க, "இலட்சுமணா, உனக்காகத்தான் நான் முடிசூட்டிக் கொள்கிறேன், நீதான் நாட்டை ஆளப்போகிறாய்" என்று தாஜாசெய்கிறான்.

5. பட்டாபிஷேகம் நடக்குமோ நடக்காதோ என்று ஒவ்வொரு நேரமும் கவலைப்பட்டுக் கொண்டே இருந்திருக்கிறான்.

6. "நாடு உனக்கு இல்லை". "நீ காட்டுக்குப்போக வேண்டும்" என்று தசரதன் சொன்னவுடன் மனதுக்குள் துக்கப்படுகிறான்.

7. "நாட்டை இழந்து, சுகத்தை இழந்து, நல்ல மாம்சப் பட்சணங்களை இழந்து, காட்டிற்குச் சென்று காய்கறிகளைப் புசிக்க வேண்டியவனாய் விட்டேனே" என்று தாயாரிடம் சொல்லி சங்கடப்படுகிறான். (ஆனால் காட்டில் மாமிசத்தையே பெரிதும் சாப்பிட்டிருக்கிறான்)

8. "என் கைக்குக் கிடைத்த இராஜ்ஜியம் போனதோடல்லாமல் நான் காட்டுக்கும் போகவேண்டியதா

கிற்றே'' என்று தாயிடத்தும், மனைவியிடத்தும் சொல்லி துயரப்படுகிறான்.

9. "எந்த மடையனாவது தன் இஷ்டப்படியெல்லாம் நடந்துவரும் மகனைக் காட்டுக்கனுப்பச் சம்மதிப்பானா'' என்று இலட்சுமணனிடம் தன் தகப்பனைக் குறைசொல்லித் துயரப்படுகிறான்.

10. இராமன் பல மனைவிகளை மணந்து இருக்கிறான். (இதை மொழிபெயர்ப்பாளர்களான திரு சி. ஆர். சீனிவாசய்யங்காரும், திரு மன்மதநாத் தத்தரும் தெளிவாக எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். இராமாயணத்தில் பல இடங்களில் "இராமனின் மனைவிமார்கள்'' என்றே வாசகங்கள் வருகின்றன)

11. இராமனிடம் கைகேயி எப்பொழுதும் சிறிதும் சந்தேகிக்க முடியாத அன்போடு இருந்தும், இராமன் அவளிடம் வஞ்சகமாக இருந்து வருகிறான்.

12. "கைகேயி தீய குணமுடையவள்''.

13. "அவள் என் தாயைக் கொடுமை செய்வாள்''

14. "என் தகப்பனைக் கொன்றாலும் கொன்று விடுவாள்'' என்று சொல்லி இருக்கிறான்.

15. காட்டில் தனக்கு ஆபத்து நேரிடும் என்று கருதக்கூடிய சம்பவம் ஏற்படும்போதெல்லாம், கைகேயி எண்ணம் ஈடேறிற்று, கைகேயி திருப்தி அடைவாள்''. என்று பல தடவை சொல்லி இருக்கிறான்.

16. தனக்கு ஆபத்து வரப்போவதாக நினைத்த மற்றொரு சமயத்தில், "இனி பரதன் ஒருவனே அவனது

மனைவியுடன் எந்தவித எதிர்ப்புகளும் இன்றி சுகமாய் அயோத்தியை ஆளுவான்'' என்றெல்லாம் தனதுகெட்ட எண்ணமும், நாட்டு ஆசையும், பொறாமையும் விளங்கும் படி பேசி இருக்கிறான்.

17. கைகேயி இராமனிடம், "இராமா! அரசர் நாட்டை பரதனுக்கு முடிசூட்டுவதாகவும், நீ காட்டுக்குப் போகவேண்டும் என்பதாகவும் உன்னிடம் சொல்லச் சொன்னார்'' என்று சொன்னபோது, இராமன், "அரசர் நாட்டைப் பரதனுக்குக் கொடுப்பதாக என்னிடம் சொல்லவில்லையே'' என்று சொல்லுகிறான்.

18. தந்தையை "மடையன், புத்தி இல்லாதவன்'' என்று சொல்லுகிறான்.

19. தந்தையை, "நீ யாருக்கும் பட்டம் கட்டாமல் நீயே ஆண்டுகொண்டு இரு. நான் காட்டுக்குப்போய் வந்துவிடுகிறேன்'' என்று சொல்லிப் பரதனுக்கு முடி சூட்டுவதைத் தடுக்கிறான்.

20. "எனக்குக் கோபம் வந்தால், நான் ஒருவனே எதிரிகளைக்கொன்று என்னை அயோத்திக்கு அரசனாக் கிக் கொள்ளுவேன். உலகத்தார் பழிப்பார்களே என்று தான் சும்மா இருக்கிறேன்'' என்கிறான். இதனால் இவன் தர்மத்தையோ சத்தியத்தையோ லட்சியம் செய்ய வில்லை என்பதைக் காட்டிக் கொள்ளுகிறான்.

21. தன் மனைவி சீதையைப்பார்த்து, "நீ பரதன் மனங்கோணாமல் அவனிஷ்டப்படி நடந்துகொள். அத னால் நமக்குப் பின்னால் லாபம் ஏற்படும்'' என்கிறான்.

22. இராமன் காடுசென்ற சேதிகேட்டு, மனம் வருந்தி பரதன் இராமனைக் கூப்பிடக் காட்டிற்குச்

சென்று இராமனைக் கண்டபோது, "பரதா! குடிகள் உன்னை விரட்டிவிட்டார்களா? தந்தைக்குப் பணிவிடை செய்ய இஷ்டமில்லாமல் வந்துவிட்டாயா?" என்று கேட்கிறான்.

23. மற்றும், "உன் தாய், அவளது எண்ணம் நிறைவேறி சுகமாய் இருக்கிறாளா?" என்றும் கேட்கிறான்.

24. பரதன் இராஜ்பத்தை இராமனுக்கு கொடுத்து விட்டதாக காட்டில் வாக்குக் கொடுத்தபிறகே, தசரதன் நாட்டைக் கைகேயிக்கு ஏற்கனவே சுல்கமாக கொடுத்து விட்ட சேதியை பரதனுக்குச் சொல்லுகிறான்.

25. பரதன் இராஜ்பத்தைக் கொடுத்துவிட்டு, இராமனுடைய பாதரக்ஷையை வாங்கிவந்து, சிம்மாசனத்தில் வைத்து, தான் துறவியாக 14-வருஷகாலம் இருந்து, குறிப்பிட்டகாலத்தில் இராமன் வரவில்லையே என்று ஏங்கி, நெருப்பில் விழத் தயாராயிருப்பவனை, இராமன் சந்தேகப்பட்டு அனுமானைவிட்டு, "நான் படைகளோடும், விபீஷணன், சுக்ரீவன் ஆகியவர்களோடும் வருகிறேன் என்று சொல்லு, அப்போது அவன் முகம் எப்படி இருக்கிறது? இதைக் கேட்டவுடன் அவன் என்ன நடவடிக்கை செய்கிறான் என்பவைகளைக் கவனித்து வந்து சொல்லு. ஏனெனில் எல்லாவகை இன்பங்களும் போக போக்கியங்களும் நிரம்பியிருக்கும் நாட்டின்மீது யாருக்குத்தான் ஆசை இருக்காது" என்று சொல்லிப் பார்த்துவிட்டு வரச்சொல்லுகிறான்.

26. மனைவியிடம் சதா சந்தேகமுடையவனாகவே இருக்கிறான். மனைவி நெருப்பில் குளித்துவிட்டுவந்த பிறகும் பாமரமக்கள்மீது சாக்குப்போட்டு அவள், கர்ப்பமானதைப்பற்றிச் சந்தேகப்பட்டு அவளிடம் பொய்

சொல்லிக் கர்ப்பத்தோடு காட்டில் கொண்டுபோய்க் கண்ணை கட்டிவிட்டுவிடச் செய்கிறான்.

27. சீதை கற்புடையவள் என்று வால்மீகி சத்தியம் செய்தும், இராமன் நம்பவில்லை. அதனாலேயே அவள் சாகவேண்டியதாயிற்று.

28. தமையனைக் கொல்லச் செய்து,ராஜ்ஜியத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று கருதி துரோக சிந்தனையோடு வந்த சுக்ரீவன், விபீஷணன் ஆகிய அயோக்கியர்களை அவர்கள் அயோக்கியர்கள் என்று தெரிந்தே நண்பர்களாகச் சேர்த்துக்கொள்ளுகிறான்.

29. தனக்கு யாதொரு குற்றமும் புரியாத வாலியை சகோதர துரோகிக்காக வேண்டி மறைந்து இருந்து திடீரென்று கொல்லுகிறான்.

30. விபீஷணனை ஏற்கும்போது தன்னை அறியாமலே தனது கெட்ட எண்ணத்தையும் வஞ்சகத்தையும் தானே வெளிப்படுத்திவிடுகிறான். அதாவது, "தனக்கு மூத்தவன் தீயவனாக இருந்தாலும் அவனுக்குக் கீழ்ப்பட்டு நடக்கவேண்டும் என்கின்ற அறத்தை எல்லோரும் கைக்கொள்ளமாட்டார்கள். உடன் பிறந்தவர்கள் எல்லோரும் பரதனைப்போல் ஆவார்களா"? என்கிறான். இதில் தான் தீயவன் என்பதை ஒருவாறு ஒப்புக்கொள்கிறான்.

31. வாலியைக் கொன்றதற்குத் சமாதானமாக, "மிருகங்களிடத்தில் தர்மத்தை அனுசரிக்கவேண்டியதில்லை" என்று வாலிக்குச் சொல்லிவிட்டு, அதே வாலி மனிதர்களைப்போல் தர்மத்தை அனுசரிக்கவில்லை என்பதற்குஆகவே அவனைக் கொன்று இருக்கிறான். வாலி மீது சுமத்தப்பட்ட குற்றத்திற்குக்கூட வாலியை சமாதா

னம் கேட்காமல், இராமன் தன்னலம்கொண்ட சுக்ரீவன் பேச்சைக்கேட்டே கொன்று இருக்கிறான்.

32. இராமன், பல பெண்களை மூக்கு, முலை, காது ஆகியவைகளை அறுத்து, அங்க ஈனமாக்கி கொடுமை செய்யச் செய்திருக்கிறான்.

33. பல பெண்களைக் கொன்று இருக்கிறான்.

34. பெண்களிடம் பொய் பேசி இருக்கிறான்.

35. பெண்களை கேவலமாய் மதித்து இருக்கிறான். "பெண்களை நம்பக்கூடாது" என்கிறான். "மனைவியிடத்தில் ரகசியத்தைச் சொல்லக்கூடாது என்கிறான்.

36. அதிக காமாந்தகாரனாக இருந்திருக்கிறான்.

37. அனாவசியமாக உயிர்களைக் கொன்றும், தின்றும் இருக்கிறான்.

38. தான் அரக்கர்களைக் கொல்லுவதற்கென்றே காட்டிற்கு வந்ததாகவும், அரக்கர்களைக்கொன்று மடிவிப்பதாக தான் யாருக்கோ வாக்கு கொடுத்துவிட்டு காட்டிற்கு வந்ததாகவும் சொல்லி இருக்கிறான்.

39. அரக்கர்களோடு வலிய சண்டைக்குப் போக வேண்டும் என்கின்ற ஏற்பாட்டுடனே, சீதை தடுத்தும் வலிய இராவணனது எல்லைக்குள் சென்று இருக்கிறான்.

40. கரனோடு போர் புரியும்போது, "உங்களை எல்லாம் கொல்லுவதற்கே நான் காட்டுக்கு அனுப்பப் பட்டேன்" என்கிறான்.

41. ஒருவித யோக்கியதையும் இல்லாத துரோகி யாகிய சுக்ரீவனிடம் இராமன் தன்னலத்துக்கு ஆக சரண மடைகிறான். "என்னை ஆட்கொள்ள வேண்டும்", "கருணை காட்டவேண்டும்" என்கிறான்.

42. இலங்கையை விபீஷணனுக்குப் பட்டம்கட்டிய இராமன், சீதையை விட்டுவிட்டால் இராவணனுக்கு இலங்கையை விட்டுவிடுவதாக அங்கதனிடம் சொல்லி அனுப்புகிறான். இதிலிருந்து இராவணன்மீது வேறு குற்றமில்லை என்று தெரிகிறது.

43. பரதனும் கைகேயியும் குடிகளும் குருவும் காட்டுக்கு வந்து, இராமனை நாட்டுக்கு வரும்படி வருந் தியும், "சத்தியாக்கிரகம்" செய்தும் அழைத்தபோது, "தந்தை சொல்லைக் காப்பாற்றுவேனே ஒழிய வேறு யாருடைய பேச்சையும் கேட்கமாட்டேன்" என்று சொல்லி, நாட்டுக்கு வர மறுத்துவிட்ட இராமன், அதே தந்தை சொல்லுக்கு விரோதமாய், அயோத்தியை பட்டம் கட்டிக்கொள்ள மாத்திரம் எப்படி சம்மதிக்கிறான்?

44. சம்மதித்ததுமாத்திரமல்லாமல், தந்தை இரா மனைக் காட்டுக்குப் போகச்சொன்ன நேரம் முதல், திரும்பி அயோத்திக்கு வந்து முடிசூட்டிக் கொள்ளுகிற வரை அதே கவனமாக, ஆசையாக, நம்பிக்கையாக இருந்திருக்கிறான்.

45. தபசு செய்ததற்கு ஆக சூத்திர வாலிபனைக் கொன்று இருக்கிறான்.

46. கடைசியாக சாதாரண மனிதர்களைப் போலவே, இராமன் இலட்சுமணனையும் தள்ளிவிட்டு, தானும் ("எமனால்") ஆற்றில் விழுந்து சாகிறான். பிறகு உப இந்திரனாக ஆகிறான்.

குறிப்பு:—(தோழர் சி. ஆர். சீனிவாசய்யங்கார் தமது மொழிபெயர்ப்பு அயோத்தியா காண்டம் சருக்கம் 8, பக்கம் 28-ல் "இராமன் பட்டமகிஷியாக சீதையை விவாகம் செய்துகொண்டாலும், அரசர்களுடைய வழக்கத்தை அனுசரித்து போகத்துக்கு ஆக பலரை விவாகம் செய்துகொண்டிருக்கிறான்" என்று வெள்ளையாகவும் காட்டி இருக்கிறார்.)

## சீதை

அடுத்தாற்போல் சீதையின் யோக்கியதையைப்பற்றி சிறிது ஆராய்வோம். இராமாயணக்கதை முழுவதிலுமே சீதையைப் போற்றத்தகுந்த இடம் மிக அரிதாகவே இருக்கிறது.

1. சீதையின் பிறவியே சந்தேகத்திற்கு இடமானது. (இராமனைவிட மூத்தவள்)

2. சீதை "நான் புழுதியில் கிடந்தவளானதால், என் குலம் தெரியாததால், நான் பக்குவமடைந்த பிறகும் என்னை மணம்செய்துகொள்ள பலநாள்வரை யாரும் வரவில்லை" என்று சொல்லுகிறாள்.

3. கல்யாணமான சிறிது நாட்களிலேயே பரதனால் வெறுக்கப்பட்டு விட்டாள்.

4. இதை இராமனும், "நீ பரதனால் போற்றத் தகுந்தவளல்ல," என்று சொல்லிவிட்டான்.

5. இதை, சீதையும், "என்னை வெறுக்கும் பரதனிடம் நான் இருக்கமாட்டேன்" என்று சொல்லுவதன் மூலம் ஒப்புக்கொள்ளுகிறாள்.

6. கணவனை "அற்பன்" என்கிறாள்.

7. "நீ வேஷத்தில் ஆணே ஒழிய, காரியத்தில் உம்மிடம் ஆண்மை இல்லை" என்கிறாள்.

8. "உன்னிடத்தில் ஒரு சக்தியும், ஒரு தன்மையும், தேஜசும் இல்லை" என்கிறாள்.

9. "தன் மனைவியை பிறனுக்குவிட்டு அதனால் பிழைக்கும் கூத்தாடியைப்போல், நீயாகவே என்னை பிறருக்குக் கொடுத்துப் பயன் பெறக்கருதுகிறாயே" என்கிறாள்.

10. இராமன் சீதைமேல் அடிக்கடி சந்தேகப்படுவதாக அறிந்து, "இராமா, நான், 'நீயேகதி' 'உன்னிடத்திலேயே அன்பாய் இருக்கிறேன்' என்று எத்தனை தரம் சத்தியம் செய்தாலும், என்னை நம்பமாட்டேன் என்று என்மீது சந்தேகப்படுகிறாயே" என்கிறாள்.

11. இராமன் "உன்னை சோதித்துப் பார்த்தேன்" என்கிறான்.

12. இராமன் சீதையின் ஆடம்பரத்தையும், பேதைமைத் தன்மையையும் பார்த்து, "நீ காட்டுக்கு வருவதாய் இருந்தால் உன் நகைகளைக் கழற்றிவிட்டு, வா" என்று சொல்லியிருக்கிறான்.

13. சீதை முதலில் கழற்றிவிட்டு, மறுபடியும், வேறு நகைகளைப் பூட்டி அலங்கரித்துக் கொள்ளுகிறாள்.

14. இதைப் பார்த்த கோசலை சீதையைப் "பதிவிரதையைப்போல் நடந்துகொள்," "புருஷன் வார்த்தையை அலட்சியம் செய்யாதே" என்று சொன்னால், சீதை, "இதெல்லாம் எனக்குத் தெரியும்" என்று மாமியை அலட்சியமாய் பேசுகிறாளே ஒழிய நகையைக் கழற்றவில்லை.

15. இராமலட்சுமணர்கள் மரஉரி உடுத்திக்கொண்டபோது, சீதை உடுத்திக்கொள்ள இஷ்டப்படவில்லை.

16. இதைக்கண்ட பெண்கள், பரிதாபப்பட்டு, சீதையை விட்டுவிட்டுபோங்கள்'' என்று சொல்ல கைகேயி அதை அனுமதிக்காததாலேயே, இராமன் சீதைக்கு, வலிய மரஉரி உடுத்தி அழைத்துக்கொண்டு போகிறான்.

17. அப்பொழுதும் சீதை அதை ஏற்காமல் நல்ல ஆடைகள் ஆபரணங்களுடனேதான் காட்டுக்குப் போகிறாள். ஆகவே, சீதை காட்டுக்குப் போனதற்கு, பரதன் வெறுப்புக்கொண்டதும் கைகேயி சீதையை காட்டில் இருப்பதற்கு அனுமதிக்காததும்தான் முக்கிய காரணங்களாய் காணப்படுகின்றன.

18. சீதை நதியைக் கடக்கும்போது, "திரும்பவும் அயோத்தி வந்து சேர்ந்தால், ஆயிரம் பசுவும் ஆயிரம் குடம் கள்ளும் வைத்து பூசிக்கிறேன்'' என்று நதியை பிரார்த்தனை செய்கிறாள்.

19. சீதையும் தங்களுக்குக் காட்டில் ஆபத்து வரும் என்று பயந்தபோதெல்லாம், "கைகேயி மனம் குளிரும், கைகேயி திருப்தியடைவாள்'' என்று மனதில் கைகேயி மீதுள்ள வெறுப்பைக் காட்டிக்கொள்ளுகிறாள்.

20. சீதை காணாமல் போய்விட்டதற்கு ஆக, இராமன் வருந்தும்போது, "ஒரு சாதாரணப் பெண்ணுக்கு ஆக இப்படி வருந்தலாமா'' என்று இலக்குவன் அலட்சியமாய் சொல்லுகிறான்.

21. இலக்குவன் சீதையை, "கெட்ட நடத்தை உள்ளவள்'' என்று சொல்லி இருக்கிறான்.

22. சீதைக்கு ஆபத்து வந்துவிடுமே என்று கருதி அவளை தனியே விட்டுப்போகத் தயங்கிய இலட்சுமணனை, "அடபாவி என்னைக் கைப்பற்றக் கருதி இரா

மன் சாகட்டும் என்று போகாமல் இருக்கிறாயா? இதற்கு ஆகத்தான் எங்கள் கூட யோக்கியன்போல வந்தாயா? அட சண்டாளா, நீ என்மீது ஆசைவைத்து இராமனைக் கொல்ல நினைக்கின்றாய். பரதன் உன்னை எங்களோடு இதற்கு ஆகவே அனுப்பினானா? நீயாவது பரதனாவது என்னை அனுபவிக்க நான் ஒப்பமாட்டேன்'' என் கிறாள்.

23. இலக்ஷுமணன், ''தாயே இப்படியெல்லாம் பேசக் கூடாது'' என்று வணக்கமாகச் சொல்லும்போது, அதற் கும் சீதை, ''ஏ வஞ்சகா! இப்படியாவது பேசிக்கொண்டு இன்னும் சற்றுநேரம் என்னைப் பார்த்துக்கொண்டு இருக்கலாம் என்று பார்க்கிறாயா?'' என்கிறாள்.

24. இராவணன் சீதையைத் தூக்கிப்போக வந்த போது, சீதையைப் பார்த்துக் காதலித்து, அவள் அழகில் மயங்கி சீதையின் கொங்கை தொடை முதலிய உறுப்புக் களை வர்ணித்து சல்லாபம் பேசும்போது, அவனை அலட்சியம் செய்யாமல், கடிந்து பேசாமல், அவனுக்கு உபசாரம் செய்து தன்னுடைய பெருமையையும் இளமை யையும் மிகைப்படுத்தி, தனது வயதைக் குறைத்துமே சொல்லுகிறாள்.

25. இராவணன் தன்னை அரக்கர் தலைவனென் றும், இராவணன் என்றும் சொன்ன பிறகே அவனை வெறுக்கிறாள்.

26. இராவணன் சீதையை தூக்கி மடியில் வைத்து அணைத்துக்கொண்டு போகும்போது, தனது மேலா டையை எடுத்து எறிந்துவிட்டு அரை நிர்வாணமாய் இருக்கிறாள்.

27. இராவணன் மாளிகைக்கு சென்ற போது மோகம் கொண்டுவிட்டாள்.

28. அங்கு அவன், "என்னோடு கூடிக் களிக்க வா" என்கிறான்..................சீதை கண்ணை மூடிக்கொண்டு கண்ணீர் விடுகிறாள்.

29. உடனே இராவணன், "சீதா, உனக்கு என்னோடு ஏற்பட்ட இந்த சம்பந்தம் தெய்வகதியால் ஏற்பட்டது. இது முனிவருக்கு சம்மதமானது" என்று சொல்லுகிறான்.

30. இந்த சமயத்தில், "நீ என் உடலை எப்படியானாலும் கட்டிக்கொள். எனக்கு இந்த தேகத்தை காக்க வேண்டிய அவசியமில்லை. நான் தவறி நடந்தேன் என்கின்ற அபவாதம் மாத்திரம் வரக்கூடாது" என்கிறாள். இதிலிருந்து சீதை இராவணனிடம் கலவிசெய்ய தானாக சம்மதிக்கவில்லை என்றுதான் கருத முடிகிறது.

31. இதை உறுதிப்படுத்தும் தன்மையாகவே, சீதை இராமனுக்குச் சொல்லும் பதிலும் இருக்கிறது. அதாவது, இராமன் சீதையைப்பார்த்து, "இராவணன் உன்னை அனுபவிக்காமல் விட்டு இருப்பானா" என்ற போது,

32. "உண்மைதான். நான் என்ன செய்வேன். பலம் இல்லாதவள். என் சரீரம் அவன் வசம் பட்டிருந்தது. நான் மனவிருப்பத்தோடு பிசகு செய்யவில்லை. மனம் உன் இடம்தான் இருந்தது. தெய்வ சங்கல்பத்தால் நேர்ந்து விட்டது" என்று சொல்லி இருக்கிறாளே ஒழிய, "இராவணன் என்னை அனுபவிக்கவில்லை" என்றுகூட சொல்லவே இல்லை.

33. சீதை கர்ப்பமாயிருப்பதைக்கண்டு, மறுபடியும் சந்தேகித்து, ஊரார் மீது சாக்குப்போட்டு சீதையை இலட்சுமணனால் காட்டில் விடச் செய்கிறான். அப்

போது சீதை இலட்சுமணனுக்கு தனது வயிற்றைக் காட்டி, "நான் கர்ப்பமாயிருக்கிறேன் பார்" என்று சொல்லுகிறாள்.

34 காட்டில் சீதைக்கு இரண்டு குழந்தைகள் ஏற்படுகின்றன.

35. கடைசியாக, இராமன் சத்தியம் கேட்கின்ற போது, சீதை சத்தியம் செய்யாமல் இறந்து போகிறாள்.

## இலட்சுமணன்

இலட்சுமணனைப்பற்றி ஆராய்ந்து பார்த்தால், இவனிடமும் குறிப்பிடத்தக்க மேலான விஷயமாக ஒன்றுகூட கிடைப்பதில்லை. இராமனுடன் கூடவே இருக்கிறான், என்கின்ற ஒரு விஷயத்தினால்தான் இலட்சுமணன் பெயர் ராமாயணத்தில் அடிபடுகிறது. இலட்சுமணன் பொதுவாக சராசரி மனிதத்தன்மைக்கு மேம்பட்டவனாக எங்கும் காணக்கிடைப்பதில்லை. இவன் எப்படித் தான் இளையாள்வார் ஆனானோ தெரியவில்லை.

1. இராமன் பரதனுடைய இராஜ்ஜியத்தை அபகரிக்கச் செய்த சூழ்ச்சிக்கெல்லாம் இலட்சுமணனும் உடந்தையாகவே இருந்திருக்கிறான்.

2. இராமன் இலட்சுமணன் மீது சந்தேகப்பட்டு, "இலட்சுமணா, பட்டாபிஷேகம் எனக்கு ஆனபோதிலும் நீதான் நாட்டை ஆளப்போகிறாய்" என்று சொன்னவுடன், நாட்டை இராமன் கைப்பற்ற எல்லாவிதமான அக்கிரமங்களையும் செய்யத் துணிகிறான். சுமத்திரையின் மக்களான இலட்சுமணன், சத்துருக்கனன் இருவரும் எந்தக் காரணம் கொண்டும் நாடு தங்களுக்குக் கிடைக்காதென்று கருதித்தான் இலட்சுமணன் இராமன்

பக்கமும், சத்துருக்கன் பரதன் பக்கமும் சேர்ந்திருந்தார் கள் போலும்.

3. இலட்சுமணன் தன் தந்தையாகிய தசரதனை வைகிறான். அவனை "அயோக்கியன்" என்கிறான்.

4. தந்தையை "சிறையில் வைக்கவேண்டும்" என் கிறான்.

5. "தகப்பனை கொல்லவேண்டும்" என்கிறான்.

6. "தந்தையைக் கொல்லுவது மனுதர்மம்" என்று கூடச் சொல்லுகிறான்.

7. "பரதனையும் பரதனுக்கு வேண்டியவர்கள ளும் பூண்டில்லாமல் அழித்து விடுகிறேன்" என்கிறான்.

8. இராமன் தனக்கு "நாடு கிடைக்காமல் போன கடவுள் செயல்" என்று வருந்துகிறபோது, இலட்சு ன் பேடிகளும் மடையர்களும்தான் கடவுள் செயலை பற்றி பேசுவார்கள்" என்கிறான்.

9. "கைகேசியும் தசரதனும் முன்னதாகவே பே வைத்துக்கொண்டு உன்னை ஏமாற்றவே இந்தப்ப அபிப்பிராய பேதப்பட்டவர்கள்போல் நடிக்கிறார்கள்" என்கிறான்.

10. "தசரதனையும் கைகேசியையும் இப்போதே காட்டுக்குத் துரத்திவிட்டு நான் உனக்கு பட்டம் சூட்டு றேன் பார்" என்கிறான்.

11. "உனக்குப் பட்டம் சூட்டிக்கொள்ள இஷ்ட மில்லையானால், நான் நாட்டைக் கைப்பற்றி நானே அர சாளுகிறேன்" என்கிறான்.

12. நாட்டைவிட்டுப் போகும்போது "வேசையர் களால் அலங்கரிக்கப்பட்ட அயோத்தியை ஆளுபவர்களே பாக்கியசாலிகள்" என்றும்,

13. "நாம் திரும்பவும் அயோத்திக்கு வருவோமா" என்றும் பிரலாபிக்கிறான்.

14. வணங்கியும் பிரார்த்தித்தும் இராமனை முடி சூட்டிக்கொள்ள காட்டுக்கழைத்துப் போக காட்டுக்கு வந்த பரதனைக் கண்டவுடன் "இதோ நான் அவனைக் கொல்லப் போகிறேன்" என்கிறான்.

15. காட்டில் விராதன் என்கின்றவனைக் கண்டவுடன் "இராஜ்ஜியம் போய்விட்டதற்கு ஆக பரதன் மீது இருக்கும் ஆத்திரத்தை இவன்மீது காட்டுகிறேன் பார்" என்று சொல்லுகிறான்.

16. சூர்ப்பனகையிடம், "சீதை கெட்ட நடத்தையுள்ளவள் வயிறு (கொங்கை) சரித்தவள்" என்று சொல்லுகிறான்.

17. சீதை சந்தேகிக்கும்படியாகவும் அவளை அனுபவிக்க காதல் கொண்டிருப்பவனாகவும் கருதும்படி நடந்து வந்திருக்கிறான்.

18. "சீதையை எவன் எடுத்துப் போனால் தான் என்ன? அவள் செத்தால்தான் என்ன? கேவலம் ஒரு பெண்ணுக்காக நாம் வருந்தலாமா?" என்று தமையன் மனைவியை அலட்சியமாய் பொறுப்பில்லாமல் அண்ணனிடமே பேசுகிறான்.

19. தாடகை, சூர்ப்பனகை, அயோமுகி ஆகிய பெண்களை காது, மூக்கு, முலை ஆகியவைகளை கொய்து கொடுமைப்படுத்தினான்.

20. சுக்கிரீவனிடம், "சோகத்தால் புத்தி தடுமாறி இருக்கும் இராமன் உன்னை சரணமடைய வந்திருக்கிறான், கருணைகாட்டவேண்டும்" என்று சொல்லி அடைக்கலம் புகுகிறான்.

21. பிறகு அந்த சுக்ரீவனையே, "கொன்றுவிட லாம்" என்று இராமனிடம் அனுமதி கேட்கிறான்.

22. இராமன் பேச்சைக்கேட்டு சீதையை பொய் சொல்லி வஞ்சித்து கர்ப்பத்துடன் அழைத்துப்போய் கண்ணைக்கட்டி காட்டில் விட்டு விட்டு வருகிறான்.

23. இட்சுமணனுக்கு, இராமனும், பரதனும் இரு வரும் அண்ணன்மார் ஆவார்கள். அப்படி இருக்க, இராமனுக்கு அடிமையாகவும் பரதனுக்கு எதிராகவும் நடந்து கொள்கிறான். அதுபோலவே கௌசலை இடம் அன்பாகவும் கைகேயி இடம் வெறுப்பாகவும் நடந்து கொள்கிறான். இதன் காரணம் நாட்டாசையல்லாமல் வேறு என்ன?

## மற்றவர்கள்

இனி பரதன், சத்துருக்கன், கோசலை, சுமித் திரை, கைகேயி, சுமந்திரன், வசிஷ்டன், அனுமான், வாலி, சுக்ரீவன், அங்கதன், விபீஷணன், இராவணன் ஆகியவர்களின் சேதிகளை சுருக்கமாகக் கவனிப்போம்.

## பரதன்

பரதனிடத்தில் எவ்விதப் பெருங்குணமும் காணப் படவில்லை.

1. பாட்டன் வீட்டில் 10-வருஷ காலம் விளை யாட்டுப் பிள்ளையாய் இருந்துகொண்டான்.

2. கூட்டிவர ஆள் அனுப்பப்பட்ட பிறகே அயோத் திக்கு வருகிறான். தாய், தந்தை, வீடு ஆகியவைகளைப் பற்றி கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

3. பாட்டன் வீட்டில் இருந்து வந்தவுடன் இரா மன் காட்டுக்கு அனுப்பப்பட்டான் என்று கேள்விப்பட்

டதும், "இராமன் எந்தப் பெண்ணையாவது கற்பழித்து விட்டானா" என்று கேட்கிறான்.

4. பரதனுக்கு நியாயமான முறையில் கிடைக்க வேண்டிய இராஜ்ஜியத்துக்கு ஆக எவ்வளவோ பாடுபட்டு இராஜ்ஜியம் தேடிவைத்த தன் தாயாரை விஷயம் தெரிந்து கொள்ளாமல் மடத்தனமாக "சண்டாளி, பாவி, தீயவளே தகாத ஒழுக்கமுள்ளவளே, பேயே, நீ கெட்ட நடத்தை உள்ளவள், நீ செத்துப்போ, இராஜ்ஜியத்தை விட்டு ஓடிப்போ, உன்வயிற்றில் பிறந்தேனே" என்று முட்டாள் தனமாகவும், அயோக்கியத்தனமாகவும் பேசி கடிந்து கொண்டு மிகக் கேவலமாக நடத்துகிறான்.

5. தன் தந்தையை 'கொடியவன்' என்று சொல்லு கிறான்.

6. இராமனிடம் காட்டில் பேசும்போது, "அந்தப் புரப்பெண்கள் களிக்கும்படி முடிசூட்டிக்கொள்" என் கிறான்.

7. பரதனுக்குப் பல மனைவிகள் இருந்திருக்கிறார் கள்.

## சத்துருக்கன்

### சத்துருக்கன் மகா மூடன்.

1. தனது சிற்றன்னையாகிய கைகேயியை வைகி றான்.

2. உண்மையை ஆதிமுதல் தெரிந்து தனது எஜ மானியாகிய கைகேயிக்கு நியாயம் செய்யவேண்டுமென்று பாடுபட்ட மந்தரையை, கீழே தள்ளி, கால்கள் முறியும் படி அடித்துக் கொடுமை செய்கிறான்.

குறிப்பு:—

தகப்பனையும் தாயையும் இவ்வளவு இழிவாய்ப் பேசி கேவலப்படுத்திய பரத சத்துருக்கன்கள், தமையனி

டத்தில் மாத்திரம் இவ்வளவு பக்தி காட்டியிருப்பது பொருத்தமற்றதாகும்.

## கோசலை

கோசலை ஒரு கீழ்த்தரக் குடும்பத்து சக்களத்தி போலவே நடந்துகொண்டு இருக்கிறாள்.

1. எப்படியாவது தன்மகனுக்குப் பட்டம் கிடைக்க வேண்டுமே என்கின்ற ஆத்திரம் சதா இருந்து வந்திருக்கிறது.

2. கைகேயி மீது பொறாமையும், துவேஷமும் இருந்துகொண்டே இருக்கிறது.

3. "நான் கிழவி ஆகிவிட்டேனே, என் சரீரம் தளர்ந்து விட்டதே, அரசர் என்மீது பிரியமாய் இருக்க மாட்டாரே" என்று துக்கப்படுகிறாள்.

4. கணவனை மிகக் கேவலமாகவும் அலட்சியமாகவும் பேசி இருக்கிறாள்.

## சுமித்திரை

சுமித்திரை ஒரு அனாமதேயமாகவே இருந்திருக்கிறாள்.

1. இவளுக்கு தன் மகனுக்குப் பட்டம் கிடைக்காது என்பது தெரிந்ததால் இராமனுக்கு நாடு கிடைக்க வேண்டுமென்ற ஆசை அதிகம்.

2. "இராமன் 14 வருஷம் பொறுத்து நாட்டுக்கு வந்து ஒரு நொடிப்பொழுதில் பரதனை வென்று இராஜ்ஜியத்தை பிடுங்கிக் கொள்வான், கவலைப்படாதே" என்று கோசலைக்குச் சொல்லுகிறாள். ஆகவே பரதனை மோசம் செய்யவேண்டுமென்கின்ற கெட்ட எண்ணம் இருவருக்கும் இருந்திருக்கிறது என்பது இதனால் விளங்குகிறது.

## கைகேயி

1. கைகேயி வீரமுடையவள், அழகுள்ளவள், பட்டத்து அரசியாய் இருந்தவள்.

2. இரண்டுதடவை புருஷனின் உயிரைக்காத்தவள்.

3. புருஷன் உயிரைக்காத்தவளாதலாலும், தசரதன் தனது கல்யாணத்தின்போதே நாட்டைக் கைகேயிக்குக் கொடுத்துவிட்டதாலும், ஆகிய இரண்டு காரணத்தாலும், நாடு கைகேயிக்குச் சொந்தமாகி இருக்கிறது.

4. அப்படி இருந்தும் பரதன் நாட்டை, "இராமனுக்கு கொடுத்து விடுகிறேன்—கொடுத்துவிட்டேன்" என்று சொன்னபோதெல்லாம் கைகேயி சிறிதும் ஆட்சேபிக்கவே இல்லை.

5. தனக்கு உள்ள பாத்தியதையைக் காப்பாற்றப் பாடுபட்டாளே தவிர, வேறு யாதொரு கெட்ட எண்ணமும் கொள்ளவில்லை, கெட்ட காரியமும் செய்யவில்லை.

## சுமந்திரன்

மந்திரியாகிய சுமந்திரன் யோக்கியமாய் நடந்து கொள்ளவில்லை.

1. தசரதனின் சூழ்ச்சிக்கு அனுகூலமாக நடந்து துர்மந்திரியாகவே இருந்திருக்கிறான்.

2. அரசன் மனைவியான கைகேயியை கேவலமாய்ப் பேசி இருக்கிறான்.

3. பொய்யும் பேசி இருக்கிறான்.

## வசிஷ்டர்

குருவான வசிஷ்டர் சாதாரண புரோகிதன் போலவே நடந்து கொண்டிருக்கிறார்.

1. நாடு பரதனுக்கு பாத்தியப்பட்டு விட்டது என்பது இவருக்கு தெரிந்திருந்தும், இராமனது முடி சூட்டுக்கு இசைந்து சூழ்ச்சி செய்கிறார்.

2. அவசரம் அவசரமாக பொய்யான முகூர்த்தம் வைத்துக்கொடுக்கிறார்.

3. இவர் பட்டாபிஷேகத்துக்கு வைத்த முகூர்த்தம் வனவாசத்துக்கு முடிந்தது.

## அனுமான்

இவன் ஒரு சாதாரணமான ஆள். புத்திசாலித்தனமான காரியம் ஒன்றும் செய்துவிடவில்லை. இவனது பெருமையெல்லாம் பகுத்தறிவுக்கு ஒவ்வாததும், அசாத்தியமானதுமான காரியங்கள் பல செய்ததாக சொல்லப்படுவதே யாகும். ஒரு நல்ல பரிசுத்தமான அடிமைபோல் நடந்துகொண்டு இருக்கிறான். மற்றும் நீதிக்கு ஒவ்வாததும், தகுதிக்கு ஒவ்வாததுமான காரியங்கள் பலவும் செய்திருக்கிறான்.

1. அக்கிரமமாக நடு இராத்திரியில் இலங்கைக்கு தீ வைத்து, நிரபராதிகளைக் கொன்றும் நஷ்டப்படுத்தியும் இருக்கிறான்.

2. சீதையிடம் கெட்ட வார்த்தைகளை (ஆண் குறியைப்பற்றிக்கூட)ப் பேசி இருக்கிறான்.

## வாலி

வாலி எவ்விதக் குற்றமும் செய்யவில்லை.

1. தம்பியைக் கொல்லவேண்டும் என்றும் கருதவில்லை.

2. சுக்கிரீவனே வாலியிடம் வலிய சண்டைக்கு வந்திருக்கிறான்.

3. சுபாவத்திலும் வாலியிடம் குற்றம் இருந்ததில்லை.

4. தம்பியைக் கொல்வதில்லை என்று மனைவியிடம் வாக்குக் கொடுத்துவிட்டு போருக்கு வந்தான்.

5. மிகப் பொறுமையும் வலிமையும் உடையவன்.

6. மிக்க நீதிமான்.

7. நியாயமான முறையிலோ, யோக்கியமான முறையிலோ இவனை யாரும் வெல்லமுடியாது.

8. இவன் அநேக பெரியோர்களுக்கு நண்பன்.

9. இராமனை யோக்கியன் என்று நம்பினவன்.

10. இவன் செத்தபிறகு சுக்கிரீவன், வாலியின் பெருமையைக்கூறி, "இப்படிப்பட்ட தமையனை இழந்தபின் நான் உயிர்வாழமாட்டேன், நெருப்பில் விழுந்து சாவேன்" என்கிறான்.

இப்படிப்பட்டவனைக் கொன்றதற்கு இராமன், "மிருகங்களைக் கொல்லுவதில் நீதியைக் கவனிக்க வேண்டியதில்லை" என்கிறான். இவனா மிருகம்?

## சுக்ரீவன்

தமையனுக்கு துரோகம் செய்தவன்.

தமையனைக் கொல்வதற்கு ஆகவே இராமனுக்கு அடிமையானான்.

## அங்கதன்

தகப்பனை அகாரணமாய்க் கொன்ற இராமனிடம் அடிமைப்பட்ட மானமற்றவன்.

1. தன் சிற்றப்பனாகிய சுக்கிரீவனிடம் இவனுக்கு அன்பு இல்லை, நல்ல எண்ணமும் இல்லை.

2. சுயபுத்தி இல்லாத அடிமையாகவே நடந்து கொண்டிருக்கிறான்.

## விபீஷணன்

1. தமையனைக் கொல்லுவித்து இலங்கைக்கு தானே அரசனாக வேண்டும் என்கின்ற பேராசையால், தன் குல எதிரிக்கு அடிமையானவன்—தமையனைக் காட்டிக் கொடுத்தவன்.

2. இதை அனுமான் சுக்ரீவனாதியார் இராமனுக்கு எடுத்துச் சொல்லுகிறார்கள்.

3. ராமனும் இந்த விஷயம் தெரிந்தே, "அப்படிப் பட்ட அயோக்கியன்தான் நமக்குத் தேவை" என்கிறான்.

4. இராவணன் உயிரோடு இருக்கும்போதே, இராமன் இலங்கையை இவனுக்கு பட்டம் சூட்டுவதை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளுகிறான்.

5. அதன் பிறகே அநேக இரகசியங்களை இராமனுக்குச் சொல்லுகிறான்.

6. இவன் இராவணன் சீதையை எடுத்து வந்ததை சாக்காக வைத்து, நாட்டாசையால் தமையனைக்காட்டிக் கொடுத்தவனே தவிர உண்மையில் நியாயத்தை அனுசரித்து எதிரியிடம் சரண் புகுந்தவனல்ல.

எப்படியெனில்:—

7. இராமன் இராவணனது காட்டில் அக்கிரமமாகப் பிரவேசித்தது பற்றியோ, காடுகளில் உள்ள மிருகங்களை வேட்டையாடிக் கொன்றதைப்பற்றியோ இவன் கவலை கொள்ளவேயில்லை.

8. தன்னுடைய சகோதரியையும் மற்ற உறவினப் பெண்களையும் மூக்கையும், காதையும், முலையையும், முடியையும் அறுத்து பங்கப்படுத்திய கொடுஞ்செயலைப் பற்றியும், சிலரைக் கொன்றதுபற்றியும் இவன் சிறிதும் ஆத்திரமடையவில்லை.

9 பெரிய தப்பிதங்களைச் செய்த இராமனை யோக்கியன், நீதிவான், வீரன் என்று புகழ்ந்து கூறுவதும், இப்படிப்பட்ட இராமனது மனைவியைக்கொண்டு வந்து மரியாதையாய் வைத்திருந்த தன் தமையன் செய்கையைக் குற்றமாகக் கருதுவதும், சுயநலத்தால் நாட்டாசையால் விபீஷணனுக்கு ஏற்பட்ட கீழ்மைக் குணம் என்பதல்லாமல் வேறு என்ன சொல்லமுடியும்?

## இராவணன்

1. இவனை,

1. மகா கல்விமான்.
2. தவசிரேஷ்டன்.
3. வேதசாஸ்திர விற்பனன்.
4. குடிகளையும், சுற்றத்தாரையும் இரக்கத்துடன் ஆதரித்தவன்.
5. தைரியசாலி.
6. அதிபலசாலி.
7. சுத்த வீரன்.
8. மிகுந்த பக்திமான்.
9. கடவுள்களுடைய பிரீதிக்கு பாத்தியமானவன்.
10. அநேக வரங்களைப் பெற்ற வரப்பிரசாதி.

என்பதாக இந்த பத்து குணங்களையும் பல சமயங்களில் எடுத்துச் சொல்லி வால்மீகியே இராவணனைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்.

2. இராவணனைக் காட்டிக் கொடுத்து கொல்லச் செய்த நாட்டாசை பிடித்த வஞ்சகனான விபீஷணனே, இராவணன் மாண்டவுடன், அவன் மேல் விழுந்து, "நீதி தவறாதவனே, பெரியோர்களிடத்தில் மரியாதையுள்ளவனே" என்பதான பல உயர்ந்த குணங்களை எடுத்துச் சொல்லி புரண்டு புரண்டு அழுது இருக்கிறான்.

3. தன்னுடைய தங்கையாகிய சூர்ப்பநகையை காட்டுமிராண்டித்தனமாய் கொடுமைப்படுத்தி பங்கப்

படுத்தின ஆத்திரத்தைப் பொறுக்கமாட்டாமல், பழிவாங்கும் எண்ணத்துடன் இராவணன் சீதையைத் தூக்கிவந்தானேயல்லாது, சீதைமீது காதல்கொண்டோ, அல்லது மற்றொருவர் மனைவியை அனுபவிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணங்கொண்டோ தூக்கிவரவில்லை.

4. இராவணனது காதல் நேர்மையைப்பற்றி அனுமான்,

"இராவணனது அந்தப்புரத்திலுள்ள பெண்கள் அத்தனை பேரும் இராவணன் மீது உண்மையான காதல் கொண்டு தாங்களாகவே வந்தவர்களேயல்லாது இராவணன் ஒரு பெண்ணையாகிலும், அவள் இஷ்டமில்லாது வலிந்தோ, பலாத்காரம் செய்தோ கொண்டு வந்தவன் அல்ல" என்று (அனுமானே) விளக்கமாகக் கூறுகிறான்.

5. "தேவர்களையும், ரிஷிகளையும், முனிவர்களையும் இராவணன் வெறுத்தான்" என்றால், யாகம் என்னும் பெயரால் ஜீவன்களை வதைத்துக் கொன்று செய்யும் கொடிய கொலைபாதக காரியங்களுக்காகவே வெறுத்திருக்கிறானே தவிர வேறு காரணம் இல்லை. இதைவால்மீகியே, "இராவணன்மிகவும் நல்லவன். அவன் பெருமை உடையவனாகவும் பேரழகு உடையவனாகவும் விளங்கினான். ஆனால் பிராமணர்கள் யாகம் செய்வதையும் சோமரசம் அருந்துவதையும் கண்டால் மட்டும் அவர்களை கண்டிப்பான்" என்று கூறுகிறார்.

6. எவ்வளவு கோபமும், ஆத்திரமும், பழிவாங்கும் உணர்ச்சியும் கொதித்தெழுந்த காலத்திலும், சூர்ப்பநகை இடத்தில் இராமனும் லட்சுமணனும் நடந்துகொண்ட மாதிரி சீதையிடத்தில் அவளது காது, மூக்கு, முலை ஆகியவைகளை அறுக்கவோ அறுக்க சிறிதாவது எண்ணியதாகவோ கூட வால்மீகி குறிப்பிடவில்லை.

7. அவனது அரசுமுறை, மிகுதியும் நாகரீக முடையதாகவே இருந்திருக்கிறது என்பதற்கு அவனது மந்திராலோசனை சபையும், அங்கு நடந்ததாகச் சொல்லும் வாதப்பிரதி வாதங்களுமே தக்க சான்றாகும்.

## குறிப்பு

மேலே குறிப்பிட்டதான இராமாயணப் பாத்திரர்களின் குணாதிசயங்கள், யோக்கியதைகள் ஆகியவை வால்மீகி இராமாயணத்தில் அதிலும் பார்ப்பனர்களால தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ஆதாரங்களிலிருந்தே எடுத்து எழுதப்பட்டவையாகும். எனவே இவற்றைப் பார்க்கும்போது பொதுஜனங்கள் அப்பாத்திரர்களைப் பற்றி எண்ணிக்கொண்டிருக்கும் எண்ணம் முழுவதும் தவறு என்பது எளிதில் புலப்படும்.

சுருக்கமாக விளக்கவேண்டுமானால் இராமாயணத்தில் காணப்படும் யோக்கியமான பாத்திரங்கள் பெரிதும் அயோக்கியர்களாகவும், அயோக்கியத்தனமாய் இழி தன்மையாய் நடந்துகொண்ட பாத்திரங்கள் பெரிதும் யோக்கியர்களாகவும் தெய்வீகத்தன்மை பொருந்தியவர்களாகவும், தெய்வங்களாகவும் மதிக்கப்படுகிறார்கள், போற்றப்படுகிறார்கள், வணங்கப்படுகிறார்கள், என்பதை விளக்கவே இந்நூல் எழுதப்பட்டதாகும்.

---

தமிழன் பிரஸ், ஈரோடு.

நலம் வாழ்க

தமிழன் பிரஸ், ஈரோடு.